

சித்தாந்த வித்யா சிரோமணி

ஸ்ரீமான் ஏ. நாராயண தேசிகர்.

மகாமகோபாத்தியாய,
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

# அநுபவாநந்த தீபிகை.

## மூன்றாந் திருமுறை.

பராத்பரவிளக்கம்.

இது

ஸ்வச்சியானந்த யோகிகளென்னும்

பொதிகைமலைச் சித்தர் பொன்னடிக்காளாகிய

ஞானாநந்த நாதமுனிஸ்வாமிகளவர்கள்

[illegible]ருள்,

பெங்களூர் - இராயபகதூர்

ஆ. நாராயணசாமி முதலியாரவர்கள்

திருவெவ்வுளூர்

திருவூர் இராஜா அவர்கள்

ஹைஸ்கூல்களில் தமிழ்ப்பண்டிதராயிருந்தவருமாகிய

ஸ்ரீமத் - ஸ. நாராயணசாமி நாயகர் அவர்களால்

இயற்றப்பட்டு,

ஷை நாயகரது பிரதம மாணாக்கர்.

ஸ்ரீமத் - ஜயராமப்பிள்ளை அவர்களால்

பார்வையிடப்பட்டு,

ஷை நாயகர் பாரியாள்

ஸ்ரீமதி - சுப்பம்மாளவர்களால்

சென்னை,

கோமளேசுவரன் பேட்டை,

சச்சிதாநந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

*Copy-Right Reserved.*

# முகவுரை

அகண்ட பரிபூரண சச்சிதாநந்த விந்துநாத கலாதீத ஆன்ம சிவ பரமென்னும் பிரஹ்மமன்றி, அதற்கு வேறாக ஜகஜீவபரம் தோன்றியதும், தோன்றுகிறதும், தோன்றுவதும் வாஸ்தவமாயில்லை எனத் திண்ணமாயுணர்த்தும் உபநிடத முதலியவற்றைத் தக்கோர்பா லடுத்துக் கேளாது மடமை மதிப்பால் ஜகஜீவபரம் வாஸ்தவமென்னும் பிராந்தர்க்குப் பிராந்தியகல வறிவுறுத்துமாறு பரமேசுவரனே குருமூர்த்தமாய்த் திருவுருக்கொண்டுவந்து முதனூலாகிய சதுர்வேதங்களுக்கு மாறின்றி, வழிநூல்களாகிய ஷட்சாஸ்திரங்களையும், அஷ்டாதச ஸ்மிருதிகளையும், சார்புநூல்களாகிய பதினெண் புராணங்களையும், இராமாயண பாரதாதி இதிகாசங்களையும், யுக்தியனுபவத்திற்கு ஒவ்வுமாறு இயற்றியருளினரென்பது பிரசித்தமாம். அந்த நூல்களிலும் பிரவிர்த்தி மார்க்கத்தைக் கர்மம் பக்தியென இரண்டு காண்டங்களாகவும் நிவிர்த்தி மார்க்கத்தை ஞானகாண்டமாகவும் அமைத்தனர். கர்மகாண்டம்: பிதுர்யானமார்க்கஞ்செல்லுவதற்கேதுவாகிய நித்திய நைமித்திய கர்மங்களைச் செய்பவர் சந்திரலோகத்தைக் கடந்து சென்று இந்திரபதவிபெற்றுப் புண்ணியங்கரைந்ததே மறுபடியும் பூலோகத்திற்குத் திரும்பிவந்து ஜனனமெடுப்பரென்றும், பக்திகாண்டம்: தேவயானமார்க்கஞ்செல்லுவதற் கேதுவாகிய பகிர்பக்தி அந்தரங்கபக்தி ஆங்கிய பக்திகளைச் செய்பவர் சூரியமண்டலத்தைக் கடந்துசென்று பிரமலோகஞ்சென்று அதையே தத்தம் உபாசனைக் கேற்றவாறு வைகுண்டங் கைலாயமாக வறிந்து சத்திநிபாதத்தால்சிவசாயுச்சியமும், ஜாயுமான கடாட்சத்தால்விஷ்ணுசாயுச்சியமுமாகிய பதமுத்திகளைப்பெற்றுப்புண்ணியங்கரைந்ததே மறுபடியும்பூலோகத்திற்குத் திரும்பிவந்து புனர்ஜன்மம் எடுப்பார்களென்றும் கூறும். இப்பத்திகாண்டம் இவருட்சிலர் பிரமாவோடு முத்திபெறுவாரென்றும் கூறும்.


நிவிர்த்திமார்க்கமாகிய ஞானகாண்டம்: மோக்ஷத்திற்குப் பரம்பராசாதனம் வாமதேவ மார்க்கமென்றும், நேர்சாதனம் சுகமார்க்கமென்றும் மார்க்கத்தை இரண்டாய்ப் பிரித்து, அவற்றுள், எறும்புகள் ஊர்ந்து செல்வதுபோல் சரியையாதிநான்கால் கிரமக்கிரமமாய் உத்தம ஜனனங்களைப் பெற்றுக் கடைசியில் பரமுத்தியடைவது வாமதேவ மார்க்கமென்றும், குறித்த விடத்திற்சேரும் பட்சியைப்போல் நித்தியா நித்தியாதி நான்கு சாதனங்களால் ஆன்மானுபவமுற்று இத்தேக முள்ளபோதே பரமுத்தியடைவது சுகமார்க்கமென்றும் கூறும்.

மேற்கூறிய முதனூல் வழிநூல் சார்புநூல்களைச் செய்த அவதார புருஷர்களாகிய முனீசுவரர் ரிஷீசுவரர்களின் சொரூபமே மானிடவடி

னாக அவதரித்த பிரம்மஸ்ரீ பொதிகைமலைச்சித்தர் பொன்னடிக்காளாகிய ஞானானந்த நாதமுனி குருவின் சிஷ்யரான ஸ்ரீ-ல நாராயணசாமி தேசிகரவர்கள் இருக்கு முதலிய பதினொன்று வித்தைகளையும் செவ்விதினாராய்ந்து, அந்த வித்தைகளின் தத்துவசாரங்களைத் திரட்டி அனுபவானந்ததீபிகை குருவருட்பேறு என்னுமிரண்டு திருமுறைகளையுங் கவிரூபமாய்ச் செய்தார்கள். பின் சிறுவரும் எளிதிலுணரும்பொருட்டு வசனநடையாக இம்மூன்றாம் திருமுறையாகிய பராத்பர விளக்கத்தை முழுதும் இயற்றி ஐந்து பாகங்கள் அவரது சிஷ்யருள் ஒருவராகிய சென்னை ஸ்ரீ-கோ-முனிசாமி பிள்ளையின் உதவியைக்கொண்டு அச்சிட்டுவைத்துவிட்டுவிதேக முத்தியடைந்தனர். மற்றப்பாகங்களை அவரது சிஷ்யர்களுள் ஒருவனாகிய யான் மூலப்பிரதியோ டொத்திட்டுப் பார்த்துக் கொடுத்தேன். இஃது அவரது பத்தினியார் ஸ்ரீமதி சுப்பம்மாள் அவர்களால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. குற்றமுளதேல் உலகம் பொறுக்க.

பு. ஜயராம் பிள்ளை,

ஆன்மநேசன்.



ஸ்ரீ சற்குருவே நமஃ.

# சிறப்புப்பாயிரம்.

திருவருட் பிரகாச வள்ளலார் மரபினரும்

மோக்ஷ சாதன முதலிய நூல்களினாசிரியருமாகிய

காஞ்சீபுரம்

## ஸ்ரீமத், நிச்சல இராமாநந்த சுவாமிகளால்

இயற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

உலகுபுகழ் பொதிகைமலைச் சித்தர்தம் மரபொளிர வுயர்வுற் றெங்கு
மிலகருண்ஞா னாநந்த நாதமுனி குருபான்றா ளிறைஞ்சி நாளுங்
கலகமுறு துவிதமயக் கறவொழித்துத் தனைத்தன்னுட் கண்டு தேறி
நிலைகொளுமே வதாந்தியெனும் ல-நாரா யணசாமி விமலன் மாதோ.

பூங்கமலத் தயன்முதலாந் தேவர்கட்குத் தெரிவரிதாம் புகழ்ம லிந்தே
யோங்குபிர மான்மைக்ய சுகாசாம் ருதமுண்டிங் குயிர்க ளுய்யப்
பாங்குறவான் சொரிந்தவனந் திருமுறைமூன் றுய்வருத்துப் பண்பி னோ
டேகசுரூப வானந்த தீபிகையாய் விளங்க வைத்தான் றெளிவின் மிக்கான்.

அந்நாண்மூன் றுமுறையை யவன்மனைவி யருந்ததியை யனைய மாதாம்
பொன்னுமணி யிடையாள்சுப் பம்மாளிவ் வவையகத்துள் போக்க தேர்ப்ப
முந்நூலி னோர்நூலா மெய்ஞ்ஞான மூதுலகின் முதலா யோகத்
தத்துவா யச்சியற்றிப் புவிக்களித்தா ளவளீகையைச் சாற்றற் பாற்றே.

ஷை மரபு-ஸ்ரீ-இராமாநந்த சுவாமிகளின்

மாணாக்கர்களு ளொருவராகிய

## பிரஹ்மஸ்ரீ-சொருபானந்தமணி சுவாமிகளியற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்பூத்த பொதிகைமலைச் சித்தர்கடம் மரபிலகச் செறியு மோனப்
பேர்பூத்த வருண்ஞான னந்தமுறு நாதமுனிப் பெம்மான் றனி
னேர்பூத்த மணமலரா லர்ச்சித்துத் தாளுநிலைதெருஞ் ஞான்றுந்
தார்பூத்த மெய்ஞ்ஞான மாலையினைச் சாற்றியிசை தழைக்குஞ் சேவன்.

அற்புதஞ்சே ரத்துவிதக் கோளரியென் றறிஞரெலா மகத்துட் கொள்ளுநர், தற்பரனும் ல-நாரா யணசாமித் தேசிகனிச் சகத்தோ செல்

லாஞ், சிற்பரத்திற் சேர்ந்தொளிரத் திருமுறைமூன் றுயததுநாட்டித் மதனை தேனூட்டிக், கற்பகஞ்சேரநுபவானந்ததீபிகையெனவே கனிந்தளித்தான்.

அன்னவன்றன் மனைவியவ ளருந்ததியை நிகர்த்தசுப்பம்மா ளென்பாள், சொன்னயமும் பொருணயத்தோ டருணயமுந் தெருணயமுந் துலங்கியோங்கு, நன்னயஞ்சேர் நூலிற் றிகழ்மூன்றாந் திருமுறையை நயந்து மேலாந், தன்னலமிங் கடைந்திடவே யச்சியற்றி யளித்தவருள் சாற்றற் பாற்றே.

இராமாநந்த யோகிகளென்னுஞ் சிறப்புப் பெயர்வாய்ந்த

மஹாவித்வான்

## காஞ்சீபுரம், இராமசாமி நாயுடு அவர்கள்

## இயற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திருவோங்கு நாதமுனி முனிவனடிக் கன்பார்ந்த சீட னாகு
மருவோங்கு நாராய ணசாமி நாவலவன் வயங்கி னானல்
குருவோங்கு தன்னனுப வந்தன்னைக் கத்தியத்திற் குறித்திங் கின்று
தருவோங்கு தன்மையினா னனுபவா நந்தமெனுஞ் சார்பு கொண்டே.

ஸ்வகீயாநந்தயோகிகளென்னும்

பொதிகைமலைச்சித்தர் பொன்னடிக்காளாகியவரும்

இந்நூலாசிரியருமாகிய

## ஞாநாநந்த - ல. நாராயணசாமி நாயகரின்

## பிரதமமாணாக்கர்

## பு. ஜயராம்பிள்ளை அவர்களியற்றிய

### எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மறைநான்குஞ் சட்சாத்ரப் பிரிவாய் நிற்க
மற்றதுவும் புடைநூலாய் மருவக் கண்ட
நிறைநாத முனிக்குரவ னருளாற் பெற்ற
வெழிற்சார தத்துவத்தை யென்போல் வார்க்குத்
துறைகாட்டு மனுபவவா நந்ததீ பிகையைத்
துவிமுறையாய்க் கவிநயமாய்த் துலக்கிப் பின்னர்
முறைமூன்றி லெளியருயக் கத்தியமாக
முனிநாரா யணசாமி மொழிந்தான் மாதோ.

சென்னை "பூலோகவியாஸன்" பத்திராதிபரும்

ஸ்ரீலஸ்ரீ - ல. நாராயணசாமி தேசிகரவர்கள்

மாணவகரு ளொருவருமாகிய

சோடசாவதானம்

## ஸ்ரீமத்-பூஞ்சோலை - முத்துவீர நாவலரவர்கள்

இயற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மும்மையுல குந்துதிக்கு நாதமுனி சற்குரவன் முனரிச் செந்தான்
செம்மைபெறு மிருமுறைகள் கவியாக நவரசமுந் திகழச் செப்பி
யம்மையினு மருந்தலையான் னாராய ணச்சாமி யறிஞன் செய்த
மெய்ம்மைநிறை தருமூன்றாந் திருமுறையாம் பராத்பரமா விளக்க மம்மா.

சகமுடைத்த வெறுமயக்கிற் றயங்குகின்ற சழக்கருக்குச் சதுராஞ் சேர்கற்
பகமுடைத்த வசனமென நிதநிதமுஞ் சிந்தித்துப் படிக்க நிட்டை
பகமுடைத்த வகையன்ன வகமொழிந்தி யத்துவித பாக மென்னுஞ்
சுகமுடைத்த வனுபவத்தாற்சுகித்திருப்பா ரறிஞரெனிற் சொல்வதென்னே.

பண்டைமறை யாகமநன் னெறியனைத்துந் திரட்டியனு பவத்தாற் சொற்ற
கண்டெனுமிக் கத்தியத்தைத் திடமாகக் காணுகின்ற கவர்ச்சி யால்வி
தண்டமிலாப் பெரியரெலாம் பெரிதுவந்து வந்திப்பார் சாரப் பேதங்
கொண்டவர்கள் புறம்பேசி யகமழுந்திப் பிணக்குறுவர் கூறுங் காலே.

சென்னை, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்,

தமிழ்ப் பண்டிதர்.

## ம-ா-ா-ஸ்ரீ, கோ. வடிவேலு செட்டியாரவர்கள்

இயற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நூல்பலவு மாராய்ந்து நுட்பமாம் பொருளனைத்து நனுகி யோர்ந்த
சால்புளநா ராயணசா மிப்பெரிய வேதாந்தி தனையோர் தங்கு
மால்பலவு மகன்றெளிதி னெறிகண்டு வாழிலையை மருவு மாறு
பால்வகையாப் பராத்பரவி ளக்கமெனு நூறந்தான் பண்பின் மாதோ

திருவருட்பிரகாச வள்ளலார் மரபு-கா-சி-இராமானந்தசுவாமிகளின்

மாணாக்கரு ளொருவராகிய

## ஸ்ரீமான்-கா-கன்னியப்பிள்ளை யவர்களியற்றிய

### நிலைமண்டில வாசிரியப்பா.

திருமலி யுலகிற் சிறந்திடு நாணா
தருமலிந் தன்பார்க டழைத்திடு நாட்டின்
மதியணி சங்கரன் மலரடி மறவாப்
பொதிகைம லைச்சித் தன்னிரு பூங்கழ
லுளமுற வமைத்தொளிர் நாத முனிக்குரு
மலர்ப்பத நாளு மனத்திடை யிருத்தி
அத்வைத ஞான மறைபுப திடதஞ்
சுத்தமா யோதி தகளுறு மாந்தர்கள்
பந்தம தகன்று பரமதை யடைய
எந்த மதமு மிடருறா மதமென
அந்தமாஞ் ஞான வருட்பிர சங்கஞ்
சிந்தை தெளிவாய்ச் செய்திடுந் திறன்
வேதாந்த வித்வத் சிரோமணி யெனவே
போதாந்த முற்றோர் புகழ்ந்திடு மேலோன்
பன்னிலை யோர்களும் பரவித் துதிக்குந
தன்னிலை யோனா ராயண சாமிப்
புனிதன் யாவும் பொருளுறத் தன்கரக்
கனியெனக் காட்டுங் கருணைக் கண்ணுதல்
பலபல சமயமும் பகர்ந்திடு முண்மையை
யுலகுளோ ருணர்ந்திட வுரைத்தனன் மூன்று
திருமுறை யனுபவா நந்ததீ பிகையெனத்
தருகலை மூன்றிற் றருதத் தியவடி
வாகிய கலையினை யனைவரு மோதிப்
பாகிய மகன்று பலனதை யடைய
வன்றேன் மனைவி யருந்ததி யனையாள்
மன்னிய மணியாய் வயங்குசுப் பம்மாள்
மோனம தடைந்து முத்தியி லுறவே
தேனென மூன்றாந் திருமுறை யதனை
யச்சினி லேற்றி யவனியி லுள்ளோர்
மெச்சவே தந்த மேதகு கீர்த்தியா
ளுச்சித மாக வுலகுள காலமு
நிச்சல மாக நிலைத்துவா ழியவே.

# இந்நூலாசிரியர் செய்த நூற்கள்

| | | ரூ | அ | பை |
|---|---|---|---|---|
| அநுபவானந்த தீபிகை முதற்றிருமுறை | | 0 | 4 | 6 |
| ஷை இரண்டாந்திருமுறை<br>குருவருட்பேறு | | 0 | 4 | 6 |
| மூன்றாந்திருமுறை<br>பராத்பர விளக்கம் | வசனம் | 0 | 12 | 0 |

தபாற்செலவு பிரத்யேகம்.

இந்நூலாசிரியர் சீடர் ஸ்ரீமான் பு. ஜெயராம்பிள்ளை இயற்றிய
தேசிகநாராயணர் திருவருட்பிதிப்பா 0 4 0

இந்நூலாசிரியர் சீடர் ஸ்ரீமதி பாலாம்பாளம்மையார் இயற்றிய
ஸ்ரீ சத்குருநாராயண ஸ்தவம் 0 2 0
பாலாமிர்தபோதமும், வித்யாவித்யா சரித்திரமும் 0 4 0

## இவை கீழ் குறித்துள்ள விடங்களிற் கிடைக்கும்.

1 ரிப்பன்பிரஸ், தம்புசெட்டிவீதி, சென்னை.

2 கலாரத்நாகரம்பிரஸ், தம்புசெட்டி வீதி, சென்னை

3. சச்சிதாநந்தப்பிரஸ், கோமளேசுவரன்பேட்டை, சென்னை.

4. பூலோகவியாசன்பிரஸ், சென்னை

5- ஸ்ரீமான் பு. ஜயராம் பிள்ளை, தமிழ்ப்பண்டிதர், சீபூச்சுவள் டையார் போஸ்ட், சிவன்வாயல் கிராமம்.

6. ஸ்ரீமான் சா. மு. துரைசாமிபிள்ளை, 202-வது நெம்பர், கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, சென்னை அல்லது

7. ஷை துரைசாமிபிள்ளை 6 நெ, தையப்பமுதலி வீதி சென்னை.

8. ஸ்ரீமான் கோ. முனிசாமிபிள்ளை, 12. குட்டி மேஸ்திரி வீதி. சென்னை

இந்நூலாசிரியர் சீடர்

# சென்னை ஸ்ரீமக் கோ. முனிசாமி பிள்ளை

கூறிய

# குருஸ்துதி.

அறுசீர் விருத்தம்.

தன்னன வாகு மேமி தன்னினை வாகு மீசர்
தன்னெறினு மயலே யில்லை தன்னுரு சுகமே யென்று
நன்னிலை ஞான வாசான் நாராய ணஸ்வா மிப்பே
ரின்னலைத் தீர்த்தா னன்னோ னிணையடி வாழ்த்து வேனே.

# விஷய சூசிகை.

பிரிவுகள் பக்கம்

## சீடன் சற்குருவினைச் சரண்புகுதல்


1 சீடன் தன் வரலாறுரைத்தல் 2.

2. சிலர் சொன்ன சாக்குபோக்குகள் 2.

3. பிராமணஜாதியில் பிறத்தல் மேன்மையென்பார் 3.

4. கற்பயோகம் அவசியமென்பார் கொள்கை 5.

5 பௌத்த நாஸ்திகர் போக்கு 6.

6. கற்றோர்க்கு சமயத்துக்கேற்ற தந்திரம் வேண்டுமென்பார் சாக்கு 6.

7. சீடன் தன்குறையை விண்ணப்பித்தல். 7,


## சத்குருவின் அபயம்.


1. மானிடப்பிறப்பு யாதினும் சிறந்ததெனல் 8.

2. மனிதனுக்கு இன்றியமையாச் சாதனம் கல்வியே 10.

3. சிறப்புக்கல்வி கற்பித குறிபழக்கம் 11.

4. சிலர்க்கே கல்வி யுரியதென்பாரைப் பற்றி 12.

5. பாஷா ஞானம் மனிதர்கட்கு இயற்கையி லுண்டு 12.

6. பேதம் பெரியோர்க்கும் உடன்பாடல்ல 13.

7. தர்மமே சிறந்தது தானமன்றெனல் 14.

8. விசாரணையில்லார் பழக்கம் விபரீதம் 15.

9. பாஷை இயற்கை யன்றென்பதின்மறுப்பு 16.

10. பாஷையைப்போல் கல்வியும் சுதந்தரமே 18.

11. சித்திமுத்திகளின் சிறப்பு 19.

12. கல்வி யாவர்க்கும் இன்றியமையாததே 22.


## சீடனது குறைக்கு சத்குருவின் விடை 23.


1. தெய்வமொன்றே, போலித்தெய்வ பூஜை போர்க்கிடமெனல் 26.

2. உலகத்தைப்பற்றி இயற்கையார் அபிப்பிராயம் 28.

3. இயற்கையென்பார்ஜீவன்கடவுளில்லையென்பதற்கு உதாரணம் 30.

4. ஷியார் தங்கள் கொள்கையைப்பின்னும் ஸ்திரப் படுத்தல். 31

5. பூர்வ கர்ம நிரசனம் 31.

6 ஷியார் பரமான்மாவைப் பற்றிய அபிப்பிராயம் 32

7. ஷியார் விசாரணையில்லா ஆஸ்திகரையும் ஆசா குருக்களையும் பழித்தல் 33.

8 இயற்கைபா கிறிஸ்துமதத்தை இகழ்தல் 34.

9 இயற்கையென்பார் மகம்மதிய மதத்தைப் பற்றிச் சொல்லல். 36.

10. புதிய மதத்தினர் விசாரணையில்லா ஆஸ்திகரினும் மேல் எனல் 39.

உலகம்செயற்கையென்பவர் கருத்து 41

1 புதியச் சேர்க்கையாலாஞ் சக்தியே ஜீவான்மாவென்பதின் மறுப்பு. 50

2. ஞானவடிவ ஈஸ்வர நிலை மண்டனம் 51

3 ஜீவபிரதிபிம்பஉணர்வும்சாட்சியறிவும்வேறெனல் 53.

4. பூர்வகன்மமும் புனர்ஜன்மமும் உண்டென்கைக்கு ஏது. 61.

5. ,, 66.

6. பூர்வ ஜன்ம நோன்றமைக்கேது 69

7. உலகை மாயாத தோற்றமென்பவர் துணிபு 83.

8. பூர்வ சரித்திரம் பொய்யறிதற்காகாமைக் காரணம் 85.

9. பிரத்தியக்ஷத்தில் உலகினிருப்பு 87.

10. தேவர்கள் விஷயத்திற் றீர்மானம் 88.

11. தன்னை விசாரித்தறிவதே சகல வனர்த்த நிவர்த்திக்கு ஏது எனல் 170.

ஓம் தத்ஸத்.

# அநுபவாநந்த தீபிகை.

மூன்றாந் திருமுறை

# பராத்பர விளக்கம்.

என்னும்,

# அபரோக்ஷ ஸ்வாநுபவம்.

## சீடன் சற்குருவினைச் சரண்புகுதல்.

ஸ்வாமி! பலகாலம் பல்நூல்களை இக்காசினியில் திவ் விய தேச திவ்ய க்ஷேத்திரமென்கிற ஆர்யாவர்த்த புண்ய பூமியின்கண் காசியா நகரத்தில், புனித நீராகிய கங்கை யின் கரையிலுள்ள இவ்விருக்ஷ நிழலில், பலதினங் களாகக் காத்திருக்கின்றேன். தங்கள் முன்னிலையில் தங் களது தொண்டுகளைச் செய்வது தக்க காரியமாகையால் அதை விடுத்து, யானடைந்த பெருமையைத் தங்களுக்கு விண் ணப்பஞ் செய்துகொள்வது ஒருபாபமென நினைக்கிறேன். ஆகி லும் ஒருவன் தற்காலத் தானடையவேண்டிய முக்கியவிஷயத் தைமாத்திரம் பிறர்பால் இரந்து கேட்டு அடையவேண்டுமேயல் லாது, அநுபவசித்தமான முன்பின் கதைகளைப் பேசி அதிற் சிலவாக ஆவதிக்கும், பிறரைப் புகழ்ந்தும் காலத்தை வீணாகக் கழித்துவி டுவது தகாதெனத் தாங்கள் நினைப்பீர்களென்பதிற் றடை யில்லை. இது எனக்கே தோன்றுகிறதாயினும் நானென் சித்தத்தை தேவரீருக்கு அறிவியாமலிருக்க என்மனத் தாழாமையால் சொல்லத் துணிந்திருக்கிறேன். தேவரீர் வீண்வார்த்தைகளென் றும், விருதா கண்ட தோஷமென்றும், வெறுத்துக்கொள்ளா மல் மேன்மேல் அடியேன் பிழையைப் பொறுத்து அவ் வுரைகளைக் கேட்கப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறேன்.

**சீடன் தன் வாலாறுரைத்தல்.**

தேவா! நானோர் சேஷத்தாய்பெற்ற சிறுவன். என்பெயரோ ஆதிநாராயணன். எனைப்பெற்ற தந்தையோ எனது சிறுவயதிற்றானே காலத்தின் வயப்பட்டுக் காந்தாராகினர். என்தாயார் என்னைப்போஷித்துவந்தகாலத்தில் ஸ்ரீராமசாமி நாயுடுகாரு அவர்களின் சீடராகிய சுப்பையா செட்டியார் என்பவரிடம் என்னை யொப்பிவித்து, இவனைக் கண்ணுடையனுக்கிக் கரையேற்றவேண்டுமென்றிரந்தாள். அவர் தம்பாலாஞ் சகாயந்தை யெனக்கு மழையொத்துச் செய்தாரேயன்றி மறுபயன் வேண்டினரில்லை. அன்றியும்; தம்மாலாயது செய்தது போதாமல் போன் மூதாதை சொத்துக்குமுரியானென்னும் முறைவழுவாதபடி தங் குருநாயாராகிய ஜக்கூர் ஸ்ரீராமசாமி நாயுடுகாரு அவர்களிடம் என்னை யொப்புவித்தார். இப்படி இவரிருவரானும் இருவித பாஷாப்பியாஸம் சில தினங்கள் செய்து நீங்கத்தக்க காலவேற்றுமையால் அந்நிய தேசவாசியாயினேன். அன்றுமுதல் நான் பலர்பால் இவ்வுலக சிருட்டியைப்பற்றியும், சிருட்டிக் கர்த்தாவாகிய பகவானைப்பற்றியுஞ் சுவர்க்கத்தைப்பற்றியும், நரகத்தைப்பற்றியும், ஜனனம் மரணத்திற்காதாரத்தைப்பற்றியும், மரணமுண்டாகவேண்டிய காரணத்தைப் பற்றியும், மனிதன் செய்யவேண்டிய செய்கைகளைப்பற்றியும், ஒவ்வொரு மனிதனும் தன் ஜன்மத்தால் முடிவாகப்பெறும் பேற்றையும், அறிய அவலுடையவனாகி நெருங்கிப்பார்த்தபோழுது அவர்களும் இவைகளைத் தெளிவாகத்தெரிவிக்க வுணர்வில்லாதவர்களாகவே காணப்பட்டார்கள்.

**சிலர் சொன்ன சாக்கு போக்குகள்.**

அன்றிச்சிலர் இவ்வித ஆராய்ச்சிசெய்ய நமக்குக் காலமில்லை, இது அகால மரணசம்பவமுடைய கலியுக மாகையால் பகவந் நாமோச்சாரண பக்தி மாத்திரத்தால் எவருங் கரையேறவேண்டுமேயல்லாமல் மற்றவைகளை மேற்கொள்ளுதல் விருதாப்பிரயாசை யென்றார்கள். பலர் பக்திசெய்வதிலும் பரத்துவமுடைய தெய்வத்தையறிந்தே செய்யவேண்டுமல்லாது எல்லாத்தெய்வங்களையுந் தொழலாகாதென்றார்கள். சிலர் விஷ்ணுவிற்கே பரத்துவமுண்டு சிவனுக்கில்லவேயில்லை யென்றார்கள்; சிலர் சிவனுக்கே பரத்துவமல்லாது விஷ்ணுவிற்கிலலை என்றதோடு விஷ்ணுவோ பிறந்திறக்கும் உயிர்களில் ஓர் உயர்ந்த ஜீவனென்றார்.

கள்; சிலர் விஷ்ணுவும், பிரமாவும் உயர்ந்த தேவர்களேயானாலும் சிவனடியையும் முடியையும் அறியாமற் போனபடியால் இவர்களனைவரா லறிதற்கரிய சிவனுடைய பரிசைக்குறித்தலால் சிவனுக்கு அவர்களுக்குள்ள உயர்வு என்கிறார்கள். சிலர் நாம் தேவர்களிரண்டு கலந்த வார்ப்பு உயர்வுமென்பார். சிலர் விஷ்ணுவும் நாரணனும் கதியையடைய வர்கள் ஆகாரகளென்று சொல்லியும் பிரசங்கித்தும் வந்தார்கள். சிலர் "நான் செய்வது நல்லோர்கள் செய்யார்கள்" ஆகையால் விரதங்களை செய்யவேண்டிய கிரியைகளுள் முக்கியமென்றார்கள். சிலர் தீர்த்த யாத்திரையும், திவ்யதேச திவ்யக்ஷேத்ர சேவையும் செய்யாமல் மூலையிற் சிவ சிவ ஹரி ஹரி யென்று முணுமுணுத்துக் கொண்டிருந்த மாத்திரத்தில், பாபந் தொலைந்து பரகதியுண்டாகிவிடுமா என்றார்கள். சிலர் குருவினிடம் மந்திர வுபதேசமும் சிவதீக்ஷை விசேஷதீக்ஷை நிருவாணதீக்ஷை சமாஸ்ரயணமும் பெறாமல், நதியாடியும், அரிஹர ஆலய தரிசனஞ் செய்தும் பய னில்லை யென்றார்கள்.

**பிராமண ஜாதியில் பிறத்தல் மேன்மை என்பார்.**

சிலர் பிராம்மண பூஜையே சூத்திராதிய ஜாதிகளுக்கு வேதம் விதித்திருக்கிறதினால் பிராம்மண ஆசீர்வாதத்தைப் பெறுதலே இகபர சௌக்கிய மடைவதற்கு ஏது வென்கிறார்கள். சிலர் இது மெய்யானாலும், பிராம்மணனுகப் பிறவாமல் மோக்ஷமடைவது கூடாதென்றார்கள்; சிலர் சூத்திராதியோர் பசுவாகப்பிறந்து அதன் பின்னர் பிராம்மணனாகி வேதாத்தியயனத்தில் அதிகாரம்பெற்று விப்ரனாகி பிரமஞானம் பெற்று முநியாகி மோக்ஷம் பெறவேண்டுமல்லாது மற்றவர்கள் மோக்ஷமடைய அசக்கியமென்றார்கள். அன்றியும்; பிராம்மணனே வேதவிதிப்படி தெய்வத்தைத்தொழுதற்கும், தேவாராதனை புரிவதற்கும் உரியானல்லது சூத்திராதியோர் சிவாதி பிம்பங்களைத் தொடுதற்கும், பூசிப்பதற்கும் அருகராகாரகளென்றார்கள். சூத்திராதியோர் ஹரியை யல்லது ஹரனை மகிழ்விக்க வேண்டுமானால் பிராம்மணன் மூலியமாக தமது சங்கல்பத்தைத் தெரிவித்து பூஜை, திருவிழாவாதிய புரிவிக்கவேண்டுமல்லாது தாமாகச்செய்யின் அது நற்கருமமானாலும் அதைச் செய்தாக்குத் துற்கதியே பயக்குமென்றார்கள். அன்றியும் உதாரணமாக இராமாயணத்தில் பிராம்மணனுடைய ஆசாரமாகிய ஸ்நாந ஸந்தி ஜப தப.

நியானுதி தவத்தை ஓர்சூத்திரன் செய்ததினால் ஓர்பிராம்மணனு டைய குமாரன் அகால மரணமடைந்ததை அவன் தந்தையால் ஸ்ரீஇராமனறிந்து அச்சூத்திரன் தலையைத்தமது பாணத்திற்கிரை யாக்க இறந்தவிப்பிரன் மகன் பிழைத்தானெனச் சொல்லப்பட்டி ருப்பதால் சூத்திராதியோர் ஸ்நாந ஸந்தி ஜபத்யான பூஜையாதி புரியில் அவர்கள் நரகப் பிராப்தி யடைவதோடு நாட்டில் நல்ல மழையும்பெய்யாது உலகமழியுமென்றார்கள்; அன்றியும்சிலர் இப் பிராம்மண கர்மத்தை மற்றவர்கள் செய்யில் மீளா நரகப்பிராப்தி சித்திக்குமேயென அச்சப்படுகிறோமென்று அஞ்சினார்போற் பா சாங்குங் காட்டினார்கள்; சிலர் துவிஜாளாகிய பிராம்மணன் க்ஷத்திரியன், வைசியனாகிய இவர்களும் கற்றறிந்த பிராம்மண குருமூலமாக பூஜை ஸந்தி ஜப ஓமாதிகள் செய்யலாமென் றும், சூத்திரன் செய்யலாகாதென்றும் சொல்லினர்கள்; சிலர் சூத்திரரும் கல்யாண கருமாந்திராதிகள் செய்யவேண்டியிருத்த லால் அக்காலங்களில்பூணுநூலாதிய தரித்தலும், ஸ்நானஜபஓமா திகள் செய்தலும், பிராம்மணன் மூலமாக சூத்திரர்பொருளும் பெ றவிக்கவும் கூடும், அதனால் சூத்திரரும் மோக்ஷமடையலாமெ ன்றார்கள்; சிலர் தத்தமக்குரிய ஜாதியாசாரந் தவிராமல் நடந் தும், நடத்துவித்தும் வந்தால் அதனால் பாவங்குறைந்து புண் ணிய மதிகரிக்கப்பெற்று சுவர்க்காதிய போகப்பயனை யடைந்து மீளப் பிராம்மணனாகப் பிறந்து வேத முதலிய கலைகளுக் கதி காரியாகி பின்னர் துறவியாய் பிரமஞானம் பெற்று மோக்ஷமடை யலாமென்றார்கள்

சிலர் படிப்பா ஞானம்? அதனாலாமோக்ஷமுண்டாகும்? குரு வானவர் தொட்டுக்காட்டாதவித்தை சுட்டிப்போட்டாலும் புஜத் திற் சுட்டிப்போட்டாலும் வாராதாகையால், சிவவேடம் பூண்டு சிவனடியார் பூஜைசெய்து உபதேசம்பெற்று நிஷ்டை கூடி மனம் நிலைத்தாலல்லது மோக்ஷமுண்டாகா தென்றார்கள். சிலர்பரிபூரண முணர்ந்த குருவானவர் பிரமநிட்டையிலிருந்து கண்விழித்துப் பார்க்கும்போது அருகிருந்து அஞ்சலி செய்யும் சீடனது அஞ்ஞா னம் நீங்கி மெய்ஞ்ஞானம் நிறைய வேண்டுமேயொழிய, சீடன் செய்யுமெவ்விதப்பிரயத்தினத்தினாலும் ஞானம்நிறையப்பெறுதல் எக்காலத்திலும் முடியவே முடியாதென்றார்கள்; சிலர் கன்மமே மோக்ஷ நரக காரணமல்லாதுமற்றயாதுமல்லவென்று என்றார்கள்.

அன்றியும் சிலர் ஜீவனேது, ஈசுரனேது கர்மமேது, விதியேது இவையெல்லாம் வயிறுபிழைக்கக் கற்பித்துக் கொண்ட பொய்க்கதைகளே; ஒருவன் யோகாப்பியாசஞ் செய்யும் புத்திமானாகிய ஒருவன் மேன்பாடு கொள்ளுதல் மதியினால் யோசிக்கில் தேகமே ஆன்மாவாம் இது கிடைத்தால் இந்த தேகத்தை அழிக்காமல் காயகற்பம் புசித்து சாகாமலிருப்பதே சாக்ஷாத் மோக்ஷமாகுமென்றார்கள்; அன்றியும் உதாரணமாக "இறந்துபோனவர்க்கென்ன மெய்ஞ்ஞானங்காண் எச்சு எச்சு இகத்துளோர் துதிப்பர்" எனவும் "எந்தனுக்கு உபதேசித்தவரும் மாண்டார் இவ்வாறே சீடர்களு மாண்டாராண்டே" என்றும் திருவள்ளுவநாயனார் ஞான வெட்டி யென்னும் நூலில் ஞானத்தை வெட்டிப் பேசி மோனத்தையும் தியானத்தையும் பழித்து சாகாமல் தேகத்தை கோடிசூரியப் பிரகாசமாக வைக்கவும் தொண்ணூற்றாறு சட்டைகளைக் கழிக்கவும் பசிதாகமில்லா திருக்கவும் கற்பஞ்சேர்ஷியிருக்கிறார். மனக்காட்டி, பெரியோர்கள் பசிதாகமின்றி அசையாது சமாதி அறையில் அப்பியாசிப்பதனால் நமது கண்ணுக்கு மரணமடைந்ததுபோல காணப்பட்டாலும் அவர்களைசமாதியில்வைத்து மூடினும் அவர்களழியாது பலவிடங்களிற்சென்று சித்தராகிறார்களென்கிறார்கள்; அன்றியும் உலகத்தாருக்குத்தமது தேகந்தெரியாமல்மறைத்து வாழ்வதே மோக்ஷமல்லாதுவேறென்னவிருக்கிறது; இல்லை; சித்தர்களோ இன்றைக்கு மென்றைக்கும் இருப்பவர்கள், மற்றவர்களோசாகிறவர்கள்செத்தபின்பு பிறக்கிறது ஒருக்காலுங் கிடையாது, பலஜென்மமுண்டென்று அறிந்தவர் யார்? பொன் செய்தவனே புண்ணியவான் காயசித்தி செய்தவனே கடவுள்; மஹான்களென்பவரும் பெரியோரென்பவரும் சித்தரேயல்லாது மற்றையோராகார்கள்; இப்படிப்பட்ட புண்ணியவான்களின் தரிசனம் பூர்வ புண்ணியத்தினால் கன்னியாராசி துலாராசியிற்பிறந்த விட்ட குறையானவர்க்கே கிடைக்குமல்லாது மற்றையோர்க்குண்டாகாதென முன்பின் முரணாக மொழிந்து திரிகிறார்கள். இவர்களின்னுஞ் சிலபேர் "[illegible] சாய்ந்து [illegible] உண்பாரில்லாமல் [illegible]" "அழுரிஞ்சல் [illegible]ருமை யா[illegible] [illegible]" [illegible] மற் [illegible] [illegible] [illegible] [illegible]ப்பேசி மிக இரகசியமென்று உபதேசித்[illegible]

திரிவதோடு, பருவப் பெண்களின் மாதாந்திர ஸோணிதங் கிடைக்கில் துருசு சுண்ணமும், அதனால் பொன்னும் தங்கப்பிள்ளை கருவால் காயகற்பமும் மறைப்பு மையும் செய்யலாகுமென எவர்க்கும் சொல்லி "நல்லுபிள்ளை யுண்டவனே நாதனாவான்" என்ற கதை உலகமறியாமற் போனதேயென்றுசொல்லி விசனப்பட்டார்கள்; படுகிறார்கள்.

பௌத்த நாஸ்திகர்போக்கு.

இதன்றி இவ்வுலகம் இயற்கையாம், எல்லாம் சுபாவம், கோயில் குளம் பூசிப்பதும் சுபாவம், பூசியாமலிருப்பதும் சுபாவம். ஆனால் கர்மம் பிரமாணம், அன்றி ஜீவனென்று ஒன்றில்லை கடவுளுண்டோ இல்லையோ தெரியாது. எவர்மனத்திற்கும் கஷ்டமில்லாமல் நீதியாக நடக்கவேண்டும்: இதுவே பௌத்தர் உபதேசமென்று காஷாயாதிகளைப்பூண்டு, மனம் போனபடி நடந்து, அறியாரிடம் சுவாமிகளாகியபலறிந்தோர்து இதுவும் ஒரு சுபாவந்தானென்கிறார்கள். சிலர் உண்டதே உறுதி, கண்டதே காக்ஷி எது உலகத்தில் பிழைப்பிற்கு சாதகமோ அந்த வேஷத்தை கொண்டதே கோலம், விபசார மாதரே தெய்வம், இறந்துபோவதே முக்தி, அல்லாது வேறே பிழைப்பிற்கு உபாயம் யாதிருக்கிறது. எந்த சாமியும், ஆசாமியே எந்த குருவும் தந்திர குருவே, நான் பாராத வைபவமா? நான் கேளாத கேள்வியா? நான் செய்யாத பூஜையா? நான் கல்லாத மந்திரமுண்டா? எத்தனையோ ஏரிகளிலும் குளங்களிலும் மயானங்களிலும், ஜபங்களும் ஓமங்களும் செய்திருக்கிறேன். எல்லாம் வீண்பிரயாசையே, மோக்ஷமேது? நரகமேது? எல்லாம் நம்முடைய சங்கல்பந்தான். உலகத்தாரைப்போல் காலங்கழிக்கவேண்டியதுதான் முடிவு என்கிறார்கள்.

கற்றோர்களுக்குச் சமயத்துக்கேற்ற தந்திரம் வேண்டுமென்பார் சாக்கு.

எது செய்தால் என்ன எது பேசினால் என்ன? உலகம்பொய், வேதாதிகலைகள், தந்திரமாகையால் நாம்பிடி கொடாமல் தந்திரமாகப் பேசி காலங்கழிக்க வேண்டியது. நம திரகஸியத்தை ஒருவருக்கும்காட்டப்படாது. உள்ளது உள்ளபடி பேசலாகாது. காலமும் இடமும் பக்குவமுமறிந்து தந்திரமாகப் பேசி எதிரிகளினுடைய

குணத்திற்குத் தக்கபடி உபதேசித்து நோகாமல் நடந்துகொள்ளவேண்டியதே நல்லவர்கொள்கை என்கிறார்கள். சிலர் விசாரணையென்ன, குருவென்ன, யோகமென்ன, ஞானமென்ன, மஹாமஹா பெரியோரெனப் பேரெடுத்தவரெல்லாம் உண்பதும் உறங்குவதும் முண்டைகளோடு மோகிப்பதும் போகிப்பதும ஆகத்தானே இருக்கிறார்கள்; புசியாமலும் தூங்காமலும் பசியாமலும இருந்தார்களானால் அவர்கள் ஸ்வாமிகள்தான், அப்படியிருந்தாரொருவருமில்லை. ஆகையால் அவரவர்களுக்குத் தக்கபடி பேசி புத்திசாலித்தனமாக பொய்யனிடத்திற் பொய்யாகவும் சூதனிடத்திற் சூதாகவும், அப்படியே வஞ்சனை பொறாமை குரோதம் முதலியனவுடையவர்களிடத்தில் அவ்வாறாகவே நடந்துகொண்டு, காலங்கழிக்கவேண்டியதுதான், இல்லாவிடில் உலக நிந்தகனாகவேண்டி வருமென்றார்கள். இவையன்றிச் சிலர் "உலகத்தோடொத்து வாழாதான் வாழ்க்கை பலகலை கற்றென்ன நற்குணங்கள் பெற்றென்ன? பாழ்." ஆகையால் வேதாந்தங் கற்று பிச்சையெடுப்பதும் கந்தை கட்டிக் காலங்கழிப்பதுமாக இருக்கலாகாது. அப்படிக்கு இருந்தாற்றான் ஞானம்? ஜனக சக்ரவர்த்தி அரசாள வில்லையா? ராஜயோகி யல்லவா? இராஜயோகி எவ்வெவர்களிடம் எப்படி எப்படியிருக்க வேண்டுமோ எவ்வெவர்களிடம் ஏதேதுபேசவேண்டுமோ அவையெலாமறிந்துதம்மபிப்பிராயம்பிறர்க்குக்கொடாமலே அவர்களபிப்பிராயத்தை முன்னே தெரிந்துகொண்டு, அவரவர்களுக்குத்தக்கபடிபேசி, தக்கமரியாதைகள் நடத்தி தாமுமரியாதைபெற்று, கௌரவத்தோடு வாழ்வதே ஞானத்திற்கும் ஞானசாஸ்திரங்களுக்கும் தாழ்வின்றிய கௌரவமல்லாது, உலகோபகார மில்லாத ஏழைகளாய்க் காலங்கழிப்பது சிறிதும் ஞானமல்ல வென்றார்கள்.

**சீடன் தன்குறையை விண்ணப்பித்தல்**

ஸ்வாமீ! இவையெல்லாங்கேட்டு நடந்துவந்த என்மனம் நிலைபெறாமல் மிகுசஞ்சல முடையதாய் மயக்கமொழியா திருக்கின்றது. தங்களைக்கண்ட நாள் முதல் சிறிது ஆனந்தமுடையதாகிக் காணப்படினும் ஒவ்வொரு காலங்களில் பூர்வம்கேட்ட, அல்லது பழகிய வழக்கங்களிலொன்றை நினைந்து, மீளவும் நம்பிக்கைக் குறைவை யடைகின்றது. பூர்வவாஸனையின் பலம் சிறிதும் நிவர்த்தியாகவில்லை யென்று எனக்கே தோன்றுகி

றது, தேவா! தாங்கள் தயாளாபுரிந்து என்மனம் சந்தேகவிபரீத பாவனைகளினிடையில் மீளவீழாத மார்க்கமாக நிர்விகற்ப சாக்ஷாத்கார நிஷ்டையில் நிற்க உபதேசிக்கவேண்டியது. இதுவே என் பிரார்த்தனை. தங்களை நான் பாவமற்றவராகவும், தயாளுவாகவும், முத்தராகவும், நிராசைமுதலியநீரால் நிறைந்த கருணைக் கடலாகவும், என்மனமார அறிந்து வருகின்றேன். நம்பியுமிருக்கின்றேன் தாங்களென் கோரிக்கையை ஈடேற்ற தப்பாமல் சகாயஞ்செய்வீர்களென்பது எனக்குத்தெரிந்தே யிருக்கின்றது; ஆயினும் நல்லார்பால் தங்குறைகளைச் சொல்லி யாசியாது கர்வங்கொள்ளுகிறவன், வெட்கப்படுகிறவன், பேராசையுள்ளவன், கிராச்சப்திதகமுடையவன், கிடைத்ததில் திருப்தியடையாதவன், பொறாமையுள்ளவன், என்றுந்துன்பவாழ்வாகவேயிருப்பானென்கிறநீதி வாக்கியபரிபாலன நிமித்தம் எனதபிப்பிராயத்தை யறிவித்தேன். தேவரீர் இயற்கையாகவே மைத்திரி, கருணை, முதிதை, உபேக்ஷை என்னுங் குணங்களால் பிரகாசிக்கிறீர் என்பது பிரசித்தமாகவே விளங்குகிறது. மன்னிக்கவேண்டுகிறேன். நான் தங்களோடு சம்பாஷிக்க நேர்ந்த சந்தோஷத்தால் என்னை மறந்து அறியாமையால் ஏதேதோ பிதற்றி விட்டேன். க்ஷமிக்கவேண்டும். நமஸ்காரம்! நமஸ்காரம்!! நமஸ்காரம்!!!.

## சத்குருவின் அபயம்.

**மானிடபிறப்பு யாதினுஞ்சிறந்ததெனல்.**

விவேகியாகிய மாணவகா! கடல்சூழ்ந்த நிலவுலகத்தில நாம் பிரத்தியக்ஷ பிரமாணத்தா லனுபவிக்கும் எல்லாப் பொருள்களிலும், எல்லாவுயிர்களிலும் மனிதனே உயர்ந்தவனாகி விளங்குகிறானென்பது நிராக்ஷேபமல்லவா? இத்தகைய மனித ஜன்மத்தை நாமடைந்தது மிகுந்த பாக்கியமென்று நினைக்கிறேன். ஏனெனில்:— மனிதப்பிறப்பின் மேன்மையைக் கருதிப்பார்க்கு மிடத்து மிகவுமற்புதமாக விருக்கிறது. எப்படியெனில்:— மனிதனைக் காட்டிலும் வேறாகிய எவ்வகை யுயிர்களும், பொருள்களும்; சுதந்தரமற்றவைகளாகவும், மூடங்களாகவுங் காணப்படுகின்றன. இம்மூடப்பொருள்கள் மேன்மையையுடைய எல்லாமனிதராலும் மிகவும் உபயோக முடையவைகளாகவும், உயர்ந்தவைகளாகவும், கொள்ளப்படினும் அவைகள் தாழ்ந்தவைகளேயாம். ஜடப்பொருள்களாகிய பொன், வெள்ளி

தாமிரமுதலிய நவலோகங்களையும், வைரம், கெம்பு, பச்சை முதலிய நவரத்தினங்களையும், நெல், கோதுமை, யவை, கேழ்வரகு முதலிய தானியங்களையும் மாந்தர் யாவரும் உயர்ந்தவைகளாகக் கருதினும், இவற்றை உயிர்கள் உபயோகிப்பதனால் உயிருள்ள பொருள்களிலும் இவை தாழ்ந்தனவாகக் கொள்ளத் தடையின்றாம். இவ்வுயிர்களினுள்ளும் பசு, யானையாதிய பல்வகைச் சாகபக்ஷணப் பிராணிகளையும், மாமிச பக்ஷணிகளாகிய சிங்கம், புலி, ஓநாய், நரி முதலிய குரூர ஜந்துக்களையும், மனிதன் தன் வயப்படுத்தி அவைகளைத் தனதிஷ்டத்துக்கு ஒத்து நடக்கச் செய்துக்கொள்வதனால் மிக்க வலியுள்ள மிருகங்களும் மனிதப் பிறப்பினருக்குச் சுதந்தரத்தில் தாழ்ந்தனவாகவே யிருக்கின்றன. இது சாமான்ய நியாயம். இன்னுஞ் சிறப்பாக யோசிக்கில், உலகத்திலுள்ள எவ்வகைப் பொருள்களையும் மனிதன் தன் வயமாக்கிக் கொள்ளும் ஆசையும், ஆற்றலு முடையவனாகவே காணப்படுகிறான். சக்ரேசுரனென்கிற சார்வபௌமனாகு மொருவன் தன்னையன்றி அந்நிய எல்லா உயிர்களையும் தன்னினும் சுதந்தரக்குறைவை யடைவித்திருக்கச்செய்து யுக்தியாலும், புத்தியாலும் தனது சத்தி யதிகரிக்கச்செய்துகொண்டு யாரினுஞ் சுதந்தர மதிகமுடையவனாகி வாழக் காண்கிறோம். அன்றியும் சில மந்திர தந்திர யுக்தி புத்தியுடையார் தேவரையுந் தமது வசப்படுத்திக்கொண்டு தாமேவலின்படி செய்ய விதிப்பதாகக் கேள்விப்படுகிறோம். இவ்வகையாக மனிதப்பிறப்பே மேன்மை பெற்று விளங்குதலினால் மனிதப் பிறப்புப்பேறு ஓருயிருக்கு வாய்க்கில் அது அவ்வுயிருக்கு அரிதாஞ் செல்வமென்று நினைக்கத் தடையின்றன்றோ? இயற்கையின் சுதந்திர மதிகமாகப் பெற்ற மனிதப் பிறப்பினர்க்கே பாஷையும், நீதியும், ஒழுக்கமும், பாவபுண்ணியமும், இன்றைக்கு நாளைக்கெனத் தேடிவைக்கும் யுக்தியும், புத்தியும், எனதுனதென்னு மபிமானமும் மிகுதியாக வுண்டென்பதிற் றடையென்னை? பாஷாஞானம் ஏனைய உயிர்களுக் கில்லையெனல் ஸ்பஷ்டம். அதுபோலவே நீதியும், நியாயமும், இன்றைக்கு நாளைக்கெனத் தேடிவைத்துக்காக்குந் திறமையும், எனதுனதென்னு மபிமானமும், வழக்கமும், முறைமை தவிராமையும், பாவபுண்ணியமும் மற்ற உயிர்களுக்கிருக்கக் காண்பாமில்லை. இதனால் மனிதனெவ்வொருவனும் தனது முயற்சி

யால் உலக முழுவதையும் தனதாக்கிக்கொள்ள ஆசையும், ஊக்கமு முடையானென்றே வெளியாகின்றது. இப்படிக்கு இயற்கையிலுள்ள தன் சுதந்தர சத்தியானது பிரதிபந்தங்களால் ஒருவனிடத்து குறைவை யடைகின்றதே யன்றி சாதக சாதனப் பொருள்களின் சகாயம் வாய்க்குமேல், இவ்வுலகத்தைத் தனதாக்கிக் கொள்ள சிறிதுந் தாழானென்பதே துணிபாம்.

**மனிதனுக்குஇன்றியமையாச் சாதனம் கல்வியே**

எல்லா மனிதருக்கும் தனது சுதந்தரத்தை விருத்தி செய்துக்கொள்ளுவதற்கு வேண்டிய எவ்வகைச் சாதனப் பொருள்களுள்ளும் குறைவற உலகமெல்லாந் தனதாக்கிக் கொள்வதற்கு இன்றியமையாச் சாதனங் கல்வியே யன்றி, வேறில்லை யென்பது எமது அபிமதம்; எமது முன்னோர்களின் துணிபு மிதுவே. "இயற்கையில், கல்லாத அல்லது கற்ற எல்லா மனிதர்பாலும் உள்ள பாஷாஞானந் தானே கல்வியென்பது? இது யாவர்பாலு முண்டாயிருக்க விதந்து கல்வி கற்க பிரயாசை யெடுத்துக் கொள்வது வீண் பிரயாசை யல்லவோ?" என நினைப்பை. அல்ல. அல்ல. அதிக சுலபமும், அரிய சகாயஞ் செய்யும் ஆப்தனுமாகும். எங்ஙனமெனில்:—ஒருவன் தான் செய்யுங் காரியத்தில் பலர் சகாயஞ் செய்ய உடன்படுவதனால் அவனது காரிய மவனுக்குச் சில நாள்களுக்குள்ளாகவே இடையூறுகளின் வலுவைக்கடந்து தன்னை விரும்பியவனுக்குத் தவிராத இஷ்டபூர்த்தியைச் செய்கின்றது. சகாயமின்றிப் பிரதிபந்தங்கள் அதிகரிக்குமாகில் எடுத்த காரியம் முடிவு பெறுவது சந்தேகமே. சிலகால மின்றிப் பலகாலஞ் செய்யினும் இடையூறுகள் தொலைந்தா லன்றி யெடுத்த காரியம் முடிவு பெறாது. உலகிலுள்ள மானிடப் பிறப்பினனெவ்வொருவனுந் தானே எல்லா உலகிற்குஞ் சார்வ பௌமனாகி இருக்க இச்சிப்பதோடு அழியாது வாழும் ஆசையுமுடைய இயற்கையனாதலின், பிறர்பால் பொறாமை கொண்டு எவர்க்குந் தீங்கிழைக்கத் துவசங் கட்டித் திரியா நிற்பன். இவ்வித இடையூறுகள் யார்க்கும் நேர்ந்திருக்கின்றனவென்பது உலகப் பிரசித்தம், இவ்வாறு பொறாமையால் பரஸ்பர விரோதம் மிகமிகுந்து சகாயஞ் செய்யுமறிவுடைய புண்ணிய புருடர்களின் கூட்டுறவு குன்றிய விடத்து

எவருக்கும் அவரவர் மேற்கொண்ட பெருமுயற்சிகள் அவர்களுக்கு முடிவு பெறுவ தெங்ஙனம்? ஆகையால் அறிவுடையோரும் கைம்மாறு வேண்டாத பரோபகாரிகளும், பொறுமை யாதிய புன்குண மில்லாப் புனிதரும், உலகிற் சிலரே யன்றிப் பலரிலர். இதனால் இவரையே குருவாகவும், தெய்வமாகவும், தந்தைதாயாகவும் அறிவுடையார் மதித்து, அணுகி யடைக்கலம் புகுந்து, தங்குறைகளை நீக்கிக்கொண்டு தழைத்தோங்குகின்றார்கள்.

சிறப்புக்கல்வி சற்பிதக் குறி பழக்கம்

இத்தகைய உலோகோபகாரர்களாகிய மகாத்துமாக்களே எவர்க்குந் தமது சகாயத்தை யெளிதிற் பெறத் தமது புத்தி நுட்பத்தால் பாஷா ஞானத்திற்கொத்து உபயோகப்பட அகரமாதிய குறி வடிவாகிய வெழுத்துக்களைக் கற்பித்து அவ்வெழுத்துக்களால் சொற்களும் அச்சொற்களால் வேத சாஸ்திர மாதிகளையும் விதித்திருக்கின்றார்கள். ஒருவனுக்குத் தான் கொண்ட கருத்தைச் சாதித்துக் கொடுக்கத்தக்க சாதனம் சாத்திரமென்ப. இத்தகைய கற்பித சகாயக் கல்வியிற் பயிலாத ஒருவன், உலகோபகாரிகளின் சகாய சாதன சாத்திரக் கருத்துகளைக் கடைபிடித்து நடந்து, இடையூறுகளைக் கடந்து, சருவ ஜகத்திற்குஞ் சார்வ பௌமனாகி அழியாது வாழ நினைந்த ஆசைக்கருத்தை முற்றுவித்து குறைகளாகிய பொறுமை யாதியாலும் இடையூறுகளை யெற்றித் தன்னிலையி னிற்பது எங்ஙனங் கூடும்? நிலையென்பதோ மனிதர்க் கியற்கையிற் கிடைத்த இணையிலாச் சுதந்தர மல்லது வேறல்ல. அதனால் தனக்கு நன்மையுண்டாக வேண்டுமெனத் தனிக்கும் ஒவ்வொருவனும் தப்பாது கல்வியிற் றலைப்பட வேண்டுமென்பதே திண்ணம். நல்லோர்களின் துணிபும் இதுவே. பலவந்தஞ் செய்துங் கல்வி கல்லாதார் கடைப்படு மிருகமாவ தன்றி மற்றென்னுவார்? இதனாலே யன்றோ "விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூற், கற்றாரோ டேனை யவர்" எனவும், "எந்த வுலகத்து மியாங்காணேங் கல்வி போன் மம்ம ரறுக்கு மருந்து" எனவும் பெரியோர் வழங்கியிருக்கின்றனர்.

சிலர்க்கே கல்வி புரிய தேன்பாரைப் பற்றி.

இவ்வாறிருக்க சிலர் இவ்வகையாகப் பரோபகாரிகளாற் செய்யப்பெற்ற சகாயக்கருவிகளாகிய சாஸ்திரங்களைக் கற்றும், அவற்றிற் சொல்லிய படி நடவாமலும், தற்சுதந்தரம் பெருக்கும் முயற்சியில் தலையிடாமலும், பூர்வந்தம்பால் பிடிப்புற்றிருந்த பொறாமைக்குண மாதிய பழக்க வசத்தராய்பேதஞ் செய்து ஜாதி குல மாதிகள் வகுத்துக் கொண்டு தமக்கே அச்சாத்திரஞ் சாதகமாமெனச் சொல்லி வஞ்சித்துக் காலங்கழித்து வருவா ராயினர். இத்தகையார் போலிக் கல்வியரும், பொறாமையுடையருமென்றே சொல்லத் தக்கவரா வர். இவரும் மூர்க்க மிருகத்துட் படுவா ரல்லது முதன்மை மனிதராகார்கள். இத்தகைய அபகாரிகளுஞ் சில அசம்பாவித அபூத கற்பனாலங்கார புராணாதாரப் புன்னூல்கள் புனைந்திருக்கின்றார்கள். இயற்கைத் தற்குண வியல்பு மிக்காருக்கு இதுவுமோர் சகாய காரியாகிய சாத்திரமே யாகும் போலும். இயற்கையில் உபகார சிந்தையுடைய உபகார புருஷரும், ஆழ்ந்து யோசிக்கும் ஆற்றலுடைய விவேகியரும், நீதிவழுவா நெறிமுறையாளராம் நிபுணரும், மேற்படியார் புராணங்களையும்,அவர்செய்கைகளையும், சொல்லும் புத்தி மதிகளையும், தன்கடைசேர்க்காத தகமையாகிநிற்பர். தன்சுதந்தரம் தனக்களியாது தன்னை யடிமைகொள்ள தர்மம் போதிக்கும் தந்திரவாதிகள் சொல்லைத் தக்கமிக்க தர்மவான்களின் வார்த்தைகளைக் கடைபிடிப்போர் கேட்க விரும்புவார்களோ? ஓர் காலத்தும் விரும்பார். உபகாரிகளையே உறவினர்களாகக் கொள்ளவேண்டுமே யல்லாது, அபகாரிகள்பா லபயம் புகுவது அழிவிற்கே யிடமாகும்.

பாஷாஞானம் மனிதர்கட்கு இயற்கையில் உண்டு.

புத்திமானே! இதுவரையில் கல்வியென்பது கருணையுடைய பெரியோர்கள் தஞ்சகாயம் விரும்புவோர்க்கு, அதையவர் பெறும்பொருட்டுச் செய்த கற்பனைக் கருவிகளென்று சொல்லினேன். இயற்கையில் மனிதன் எதையும் அறியவேண்டுமென்னும் ஆவல் வடிவமான வனே யெனற்கு ஐயமில்லை. பாஷையும் பாஷார்த்த முணரும் ஞானமும், பாஷைக் காதாரமான அக்ஷ

க்காங்களாதிசப்தமும் மனிதனிடத்திற்றானே யுண்டு. சில மிருகாதிகளும், சில பக்ஷிகளும் தத்தம கருத்தைத் தம்மினம் அல்லது தன்னொத்த பிராணிகளுக் கறிவிப்பான்வேண்டி சில குறிப்புத் தொனிகள் செய்கின்றன. இவ்வளவேயன்றி வாக்கியத் தொடர்க்கு ஆதாரமாகிய எழுத்து வடிவத் தொனியை யளப்பவனவல்ல. இதுபோலவே மிக்க புத்தியுடைய நக்கார் தம்பாலுள்ள பாஷாஞானத்தால் தத்தங் கருத்தைப் பிறர்க்குச் சொல்லால் அறிவிக்கின்றனர். தாய்தந்தையர் கற்பியாது பாஷை யியற்கையிலுண்டாதலில்லை யென்போர் ஆழ்ந்து யோசியாத தாழ்ந்த புத்தியுடைய அவசரக்காரரே யாவர். அன்றியும் தமது செய்கைகளிலும், குணங்களிலும், இயற்கையாற்றலிலும் அநேக மறதியுடையா ரென்பதில் தப்பில்லை. இன்னார் மிக்கத் துராசைவசப்பட்டு தம்மியற்கையை மறந்தார்போலும். மற்றும் பொறாமையாதிய புகு மக வஞ்சகரும், பொய்வாழ்விற்கே யுரியன தேடும் போகப்பிரியரும், நன்றியறியு நாயினுங் கடைப்படு நடையிற்றாழ்ந்த கட்டை விரும்புந் துட்டரும், பிறரை யேமாற்றும் பிரிய மேற்கொண்டவரும், தற்புகழ் வேண்டித் தடயாறுளத்தரும், சுலபத்திற் கிடைக்கும் சுகம்பெறு வினையிலாளரும், அல்லசெய்து அழிந்துபோகு மகங்கையி லாழ்வோருமாகிய இவர்கள் முன்னோர் நடையென்றும், முன்னோர் மொழியென்றும், முறைமையென்றும், தமதறிவின்மையைப் பிறர்க்குச்சொல்லி அதைவிடாது தாமும் நடந்து, பிறரையும் நடத்துவிக்கப் பிரயாசை யெடுத்துக் கொள்கின்றனர். இது மூடத்துட்டமல்லது முன்னோர் மொழிக்கும் ஒழுக்கத்திற்கும் பொருந்தாதாம். எங்ஙனமெனில்:—

**பேதம் பெரியோர்க்கும் உடன்பாடல்ல.**

சர்வஞ்ஞரும், சர்வஜீவ தயாபரருமாகிய பெரியோர் கருத்தில் பேதமோர்காலத்தும் விரும்பத்தக்கதாகி யிராது. அவர்கள் இயற்கையில் மனிதப் பிறப்பிற்பட்ட வுயிர்களுக்குள்ள சுதந்தரத்தை யூட்டுவிக்க மிக விரிவாகவும், விளக்கமாகவும் நூல்களால் விளக்கி யிருக்கின்றார்கள். அவர்களுரைத்த நூல்களில் பேதமென்னுந் தடையாம் பிரதிபந்தத்தை நீக்க சாதனமாகுஞ் சமத்துவத்தைப் பன்முறையும் வற்புறுத்தி யிருக்கின்றார்கள். அன்றியும் தாங்களு மவ்வாறே நடங்

தார்கள், நடத்தினோர்கள், பின்னோர்களிலும் நடத்துவிக்க கற்பித்தக் கல்வியையு முண்டாக்கினார்களென்பதே மயக்கமற்ற தீர்மானமாகும். இதில் எவ்வித சந்தேக முனக்குச் சிறிதுந் தேவையில்லை. இதை யினி உனக்கு நன்றாகப் புலப்பட நாட்டுவேன். பேதத்தால் பொறாமையாதிய துற்குணங்களும், துராவஸ்தையும், பிரதிபந்தங்களும் எவர்க்கும் மேன்மேலும் வளருமேயல்லாமல் யார்க்குஞ் சாசுவதமாகிய சுகப்பிராப்தியையோர்போதும் உண்டாக்காது. இத்தகைய பேதவாதியைத் தவிர பாதகனென்பவன் பாரிலில்லை. ஆனாலும் செய்ந்நன்றி யறிதற் பொருட்டு யாவர்க்கும் உயர்வு தாழ்வு என்னும்பேதம் சிறிது சித்திக்கின்றது. பிறப்பினால் பெண், ஆண் என்னும் பேதம் சித்திப்பதுபோல மற்ற ஜாதிபேதம் சித்திக்க வருமையினு மருமையே. மேற்சொல்லிய வயதுபேதம், குணபேதம் யாவரு மங்கீகரிக்கத் தக்கனவேயாம். நன்மை புரிவோன்பால் அதனைப் பெறுவோன் அவர்க்குத் தாழ்ந்து நடந்து தன் னன்றியறிதலைக் காட்டலே யின்றியமையாத ஏற்றமாஞ் செல்வமாகும். செய்ந்நன்றியை யறியாதவன் சிதைவானல்லது கதிபெறு வானல்லன். "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு." என்பதே பெரியோர் துணிபு. மற்றைய ஜாதிபேதமோ பேதபோதக பாதகர் கற்பனையாகவும், மூடர் கைக்கொள்ளு முரட்டுக் கொள்கையாகவுங் காணப்படுமேயல்லாது இயற்கையி லுள்ளதாகக் கண்டிலம்; காட்டினாருங், காட்டுவாருமில்லை. தம்போன்ற போலிகள்பால் காட்டுவதன்றி உண்மையை யுணர உடம்படுவோர்க்கு உணர வுணர்த்துவா ரொருவருமில்லை. இதனாலன்றோ "ஜாதி யிரண்டொழிய வேறில்லை" எனவும் "இட்டார் பெரியோ ரிடாதார் இழிகுலத்தோர் பட்டாங்கி லுள்ளபடி" எனவும் பறைந்தனள் பாட்டி.

**தர்மமே சிறந்தது தானமன்றெனல்.**

இடுதலென்பது தானமோ தருமமோ என்பாயாகில், தருமஞ் செய்வதே யோக்கியமல்லாது தானஞ்செய்வ தஃதொவ்வாது. தானமென்பது கட்டாயத்தாற் செய்யும் முட்டுப்பாடுடையதேயாம். கட்டாயத்தான் செய்யும் தானமோ பட்டாங்கி லுள்ளபடி யன்று. தானஞ் செய்வதோ மானிடர்

பெருமைக்கே. இது பொதுவாக யாவர்க்கும் நன்மையைப் பயவாது. தனிகர் பெருமைக்கே தக்கது இத்தானம். "குதிரைசெத்ததல்லாமல் குழிதோண்ட பத்துபணம்" எனவும் "செத்தவர் வீட்டில் வாழ்ந்தவர் கெட்டார்" எனவுஞ் சொல்லும் பழமொழிக்கிணங்க இத்தானம் ஏழைகளுக்கு இடையூறின்மே விடையூறும். இது மனிதரின் சுதந்தரத்தை மாற்றவல்லதோர் உபாயம். இதனாலன்றோ இதனைத் தீராக் கருமமென்று பெரியோர்கள் செப்பியும் உணர்த்தியும் உள்ளார்கள். உலகில் இதனைப் பகைப்போர் எண்ணிலர். பலரும் வேண்டாததைப் பாடிப் பாடிப்பதில் பயனென்ன.? மூடர்தம் கொள்கையென இதனை ஓர் மூலையிலொதுக்குவோம். அறிவிலார் தானமிடுக. அழும்பரதையேற் றருந்துக. நமக்கென்ன? இதனை மேற்கொள்ளுவோர் ஒவ்வொரு மனிதனையும் பந்தத்திலாழ்த்த பரிதபிக்கும் கள்ளக் கர்மிகள். இவர்கள் கல்வியில்லார்பால் கரைந்து திரிக.

**விசாரணையில்லார் பழக்கம் விபரீதம்**

புத்தியுடைய கல்விமானாகிய நீ நம்மைக் கேட்ட கேள்விகளுக்கு இயற்கையிலுள்ள அறிவின் விளக்கத்தை உனக்கு அடைவிப்பான் வேண்டி சிலவார்த்தைகளைச் சொல்லுகின்றோம். நீ சாவதான சித்தமுடையவனாய் ஆவலோடுங் கேட்பாயாக. துரபிமானமென்பது சிறிதுமில்லாமல் துடைத்து இதனைக் கவனிப்பாயாக. என்னை வேதநிந்தகனென்றும், வேதத்தை அனாதியெனக் கொள்ளாதவனென்றும் யோசித்துவிடாதே. நானே ஆய்பவன். சிலர் ஆராய்ச்சியென்பது சிறிதுமில்லாமல் பழக்கமே ஒழுக்கமென்று நினைத்து அதிலுள்ள குறைகுணங்களைக் கவனியாது, "முருங்கக்காயென்றான் அதனால் பத்தியம் முறிந்துபோய் விட்டது இனி என் மருந்திவனுக்கு எப்படி பிடிக்கும் பத்தியமில்லாத மருந்து சத்துருக்கை பூரணமாகும்" எனப் பிதற்றும் வைத்தியம் பிடித்த வைத்தியனைப்போல வேதமுதலானவை கற்பனை என்று சொன்னமாத்திரத்தினால் "இவன் நாஸ்திகன், இனி என்ன இருக்கிறது, வேதப்பிரமாணத்தையே இவன் விரும்பவில்லையே, சரி, சரி, இனியெதை அங்கீகரிக்கப்போகிறான், யுக்தி என்றாலோ ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாகப் பிறக்கும், அவை

யெல்லாம் பிரமாணமாகுமா? அநுபவமென்றுலோ மாணாக்கர் தம் கர்மஞ்செய்து மாண்டபின்னான்று அநுபவிக்கப்படுவது? ஆகையால் வேதங்கற்பனை யென்கின்ற இப்படிப்பட்டவர் முகத்தி லும் விழிக்ககூடாது'' என்று சொல்லி, தப்பித்து அப்பாற்போ வர்! அப்படிப்பட்டவர்களும் கற்றோர்போன்றே காணப்படுவாராயி னும் அவர்கள், சிற்றறிவுடையாரேயாவர். எவரெப்படி சொல்லினு மறிந்தோர் அறிவிலார்க்கு தம்மாலானவரையும் சமாதானஞ்சொ ல்ல முற்படுவார்களல்லது முனிவுகொள்ளார். மூடத்தன்மை யோடு முரட்டுப்பிடிவாதமும உடையவராக காணப்படுவாரேல் வீண்கஷ்டமென்று அவரை ஒருவாறாக விநயத்தோடும் போக்கி விடுவர். கிணற்று நீரை வெள்ளம நிறப்புமல்லாது குறைக்காது. அதுபோலவே விவேகமும், பொறுமையும ஆழ்ந்துயோசிக்கும் ஆற்றலுமுடைய குருவானவன் அவ்வகை குணங்களுடைய சிட னது கேள்வியாகிய விவேகத்தோடு வெள்ளம்போன்ற வினை. என்னும் விவேகத்தையுஞ் சேர்த்ததிகப்படுத்தி அவனது அறி யாமையால் நேர்ந்த துசகக் குறைவுதீர ஆனந்த பூர்த்தி செய் வானேயல்லது, அவன் பொருளைக்கைக்கொண்டு செல்ல நினை யான்.

பாஷையியற்கை யன்றென்பதின் மறுப்பு

இதுநிற்க; உலகத்தில் பாஷாஞானம் இயற்கையில் மனிதர் பாலில்லை, தாய்தந்தையர்களாற்றான் பா ஷாஞானம் உண்டாகின்றது என்பவர் உலக முழுமைக்குமொரே பாஷையாக விராமைக் குஎன்ன காரணங் கண்டுபிடித்தார்களோ? ஆதியில் தேவபாஷையாகிய வடமொழியொன்றே யுலகமெங்கும் பேசப்பட்டிருந்தது என்றும், இடையில் பலபாஷைகள் அப்பா ஷையைத் திரிப்பதினால் உண்டாகியனவென்றும் சொல்லப்புக லாம். அது பொருந்துமாறில்லை. ஏனெனில்:—தமிழர் தமிழ் அநாதியென்றும், தெலுங்கர் தெலுங்கு அநாதியென்றும், அரபி யர் அரபி அநாதியென்றும், கிரேக்கர் முதலாயினோர் தத்தம் பா ஷைகளை யநாதியெனக் கூறுகிற்பர். எல்லாப்பாஷையிலும் தாய் பாஷையாகிய வடமொழி கலந்தே காணப்படுகிறதெனில் ஒரு பாஷையில் மற்றொரு பாஷையின் மொழிகள் இப்படியே கூடிக் காணப் படுகின்றனவென்றும் அவ்வப்பாஷையாரும் போராடு

கின்றனர். இதுநிற்க. எந்த பாஷையையே யாகிலும் உலகமுழு தும் ஆதியில் யாவருமறிந்திருந்தால் இதர பாஷையைச் செய்ய யார்க்கும் எவ்வித காரணமுஞ் சித்தித் திருக்க மாட்டாது. ஒரு பாஷையார் மற்ற பாஷையின் பிரபலத்தைப் பார்த்தபொழுது அதினின்றுந் தத்தமக்குத் தேவையான வார்த்தைகளையும், அபிப்பிராயத்தையும் தமக்கும் பிறர்க்கும் உபயோகமாகும்படி அப்படியே தம் பாஷையோடு சேர்த்து வழங்கி வந்திருக்கலாம். இதனால் ஒரு பாஷையிலுள்ள பதங்கள் மற்றொரு பாஷையிற் சேர்ந்தனவாக யூகிக்க விடந்தருகின்றது. எப்படிக்காணினும் எந்த பாஷையும் இயல்பாக மனிதன்பாலே பிறந்ததாக நினைக்க விடமுண் டல்லாது, வேறு விதமாக யோசிக்க விடமில்லை. அபூதக் கற்பனைகளாகச் சொல்லுமவையெல்லாம் ஆராய்ச்சியில் மெய்யாக நிற்க விடம் பெறலருமை. எல்லாப்பாஷையினு முதன்மை பட்டதென்று ஆராய்ந் துணர்ந்தோரால் கொள்ளப்படுகின்ற தேவபாஷையாகிய சமஸ்கிருதமென்னும் வடமொழிக்கு அக்காலத்தில் அறிகுறியாக வழங்கி வந்த எழுத்துக்கள் தேவநாகரமென்றும், சிலர் மலையாள வெழுத்தைப் போன்றிருக்கும் எழுத்துக்களென்றும், விவாத மிடுகின்றனர். சிலர் எழுதாக் கிளவியே தேவ பாஷையாகையால் எழுத்து அதற்கில்லையென்கிறார்கள். அன்றி வேதத்திற்குச் சுருதியென்று (=கேட்கப்படுவதென்று) பெயர்வழங்கி வருதலால் அதற்கறிகுறியாகிய எழுத்தில்லையென்று தானே பொருள்படுகின்ற தல்லவா? அன்றியும் வேதம் அத்தியயன ரூபமாகவே யிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். வடமொழிக்குப் பாணினி முனிவராலே வியாகரண சூத்திரஞ் செய்யப்பட்ட தென்பதால் சில காலங்களுக்குப் பின்புதான் அப்பாஷையும் ஒழுங்குபட்டதென்று யோசிக்க விடமுண்டாகின்றது. அன்றியும் அகஸ்தியர் முதலிய முனிவர்களால் சொல்லப்படும் சித்தி நூல்களில் பாஷைக்குக் காரணமாகிய ஐம்பத்தோரெழுத்துகளும் மனித சரீரத்திலுள்ள ஆதார மாறிலும் பிரிவுபட்டு நிற்கின்றனவெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதனால் மனிதர்பாலே பாஷைஞானமும், அதற்காதார ஒலி வடிவ எழுத்துகளும் உள்ளன வென்பதே முன்னோர்களின் துணிபென வெளியாகின்றது. மனித ரன்றிய மற்ற பிராணிகளில் கிளி முதலிய சிலவற்றிற்கு மிக்க பிரயாசை

யால், பாஷை கற்பிக்கப்பட்டாலும் அவைக ளப்பாஷையைப்
பேசினும் பொருள்விளக்கஞானம் பெற்றவைகளாகவும், பெறுவ
னவாகவும் காணப்படவில்லை. ஆதலால் மனிதனே பாஷாஞானத்
திற்கு இயற்கையாக உரியானென்பது எவ்விதத்திலும் மறுக்கப்
படாத விஷயமாம். இப்படி இயற்கையில் பாஷாஞானம் பெற்ற
மனிதரில் சிலர்க்குக் கல்வியில் முழுவதும் அதிகாரமும், சிலர்க்கு
அரைப்பங்கிற்கும், சிலர்க்கு கால்பங்கிற்கும் அதிகார முண்டெ
ன்றும், சிலர்க்கு அதிகார மில்லவே யில்லை யென்றும், சிலர்சொல்
லுவாராகில் இவர் முன்சொல்லிய பிராணிகளை யொப்பாவரல்
லாது வேறென்னவார்? இன்னோரைப் பண்டிதர்களென எங்ஙன
னம் நினைக்கலாம்? பண்டிதராகக் கொள்பவரை நாம் சிரிப்ப
தல்லாது வேறென் செய்வோம்.

**பாஷையைப்போல் கல்வியும் சுதந்தரமே.**

விவேகியே! உலகிலுள்ள மானிடப் பிறப்பினராகிய ஆண்
பெண்ணும் யாவர்க்கும் இயற்கையில் சுதந்
தரமாக வுடைய பாஷையைப்போலக் கல்
வியும் சுதந்தரமாகவுடையதேயாகும். இப்
படியிருக்க கல்வியைச் சிலருக் குரியதென்
றும் சிலருக்குரியதாகாதென்றும் சொல்
லுவோரையும், அதைக்கேட்டு மெய்யென அங்கீகரிப்போரை
யும் மூடப் பழக்கத்தி லாழ்ந்த மூர்க்கர்களெனக் கொள்வதில் தப்
பேது? பாஷையை மாத்திரம் யாவருக்கும் இன்றியமையாத
தென வங்கீகரித்துக் கல்வியையும், கல்வியைக் கற்பிக்கும் வேதத்
தையும் யாவருக்கும் இன்றியமையாததென அங்கீகரியாதவர்களை
யெவ்வளவு மதியீன ரென்னலாம்? ஆண் பிள்ளைகளே கல்வியை
யுடையவர்களா யிருக்கவேண்டும். அதிலும் உயர்ந்த ஜாதியாரு
க்கே அஃதிருக்க வேண்டும். பெண்களுக்கும், தாழ்ந்த ஜாதி
யாருக்கும் அஃதிருக்கப்படாதென மூடாட்டாசனது சகாய
த்தில் கட்டுப்பாடுகளை யுண்டாக்கிக் கொண்டவர்கள் இது முன்
இன்னார் காலத்தில் இவ்வித சாபத்தால் இன்னாரால் நேர்ந்த
தென்று ஒரு குயிப்பேற்றக் கதையுந் திருஷ்டாந்தமாகக் காட்ட
ஓர் புராணஞ் செய்ய முயலாத காரணம் யாதோ தெரியவில்லை.
கல்விகற்பது கடினமாகையால் சோம்பேறிகள் செய்யாது விட்
டுவிடுவர். பாஷையை விட எவருமெய்யார்கள் எனமதித்து பா

ஷையை மதிக்கப் பிரவேசியாது கைவிடுத்தனர் போலும். கூடு
மேல் இனியும் பிரவேசித்தே யிருப்பர். பாபமற்றவனே! இயற்
கையாக பாஷை யாவருக்கும் உரியதுபோல கல்வியு முரியதென்
பதே சிராசேஷபம். இஃதுன் கருத்திற்கே புலப்படுகின்றது தல்
லவா?

**சித்திமுத்திகளின் சிறப்பு.**

சீடனே இதைச் சற்றுகவனி. உலகிலுள்ள ஒவ்வொருவ
னும் இயற்கையி லடைய விரும்புவது
யாது? சுகத்தையா? துக்கத்தையா? சுகத்
தையே யல்லவா? அச்சுகம் யாது? நோ
யற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும்
மரணமற்ற தீர்க்காயுளு மல்லவோ? அவற்றிற்குத் தேவையான
வகைகளையே சித்தி முத்தி யெனக் கூறுவர். நோயற்ற வாழ்
விற் குரியதான துணையா யிருப்பவைகள் சித்திகளாம். மரண
மற்ற தீர்க்காயுளுக்குரியதான துணையா யிருப்பது முத்தியாம்
சித்திக்குரியன மணி மந்திர ஔஷத வடிவங்களாயுள்ளன. பசி
தாக சீதோஷ்ணாதிகளும் நோய்களேயாம். இந்நோய்கட்கு
அன்ன பான வஸ்திராதிகள் ஔஷதங்களாம். நோய்களில் பசி
தாகம் தீராப் பெருநோய்களாம். காமாதிகள் அதனிலும் வேக
முடையன வாயினும், சிறுநோய்களாம். பெரு வியாதியென்
னும் குஷ்டமாதிய பிணிகள் அதனிலும் தாழ்ந்த சிறுநோய்களெ
னச் சொல்லவேண்டியன வாயிருக்கின்றன. இப்படியிருந்தும்
குஷ்டமாதிகட்குப் பரிகரிக்கத்தக்க பொருளும் பொருளுணர்ச்சி
யும் அதைத் தெரிவிப்பாரு மின்மையால் அச்சிறுவியாதிகள் பெ
ருவியாதிகளென வழங்கப்படுகின்றன. தீரா வியாதிகளாகிய
பசிதாகாதிகட்குரிய பொருள்களை யாவரும் விலைபொருள்களாக்கி
கடைகளில் தானிய வஸ்திராதிகளாக விற்கையாலும் இவை
யுடையவர் ஏழைகட்குத் தர்மத்திற்குங் கொடுத்து இந்நோய்
களை யாவரும் பரிகாரஞ் செய்வதினால் பசி தாகாதிகளை நோய்க
ளாக மதிப்பதில்லை. இல்லையெனினும் இந்நோய்களுக்குரிய குறை
எவர் நெஞ்சிலிலும் நீங்கினதாகக் காணப்படவில்லை. தாகத்
திற்கு மப்படியே ஏரி, குளம், வாவி, வாய்க்கால், தண்ணீர்ப்பந்
தல் முதலியன தருமத்திற்கு அமைத்துவைத்தலால் தாகத்தை
யும் மதிக்கிறார்களில்லை. மனப்பீடையாகிய காமாதிகட்கும்

சரீர பீடையாகிய சுரம், குன்மம், சூலை, பெருவியாதிகட்கும் பரி காரப் பொருள்கள் வெகு பிரயாசையோடு கற்றுணர்ந்தோர்பால் பெறக்கூடியனவாயிருப்பதால் இவைகள் கடின வியாதிகளாகக் காணப்படுகின்றன. இதற்குஞ் சிலர் கன்னிகாதானம் தர்ம வைத்தியங்களால் உதவிபுரிந்து வருகிறார்கள். வியாதிகளாகிய பெருநோயாதிகளுக்குக் தக்க ஒஷதிகளை எவரும் விளைபொருள் களாகப் பயிரிடுவதில்லை. வனங்களில் கடவுளால் வளர்க்கப்ப ட்டு வளர்கின்றன. இவற்றை யுபயோகிக்கும் விதத்தை உப காரிகளாகிய அகஸ்தியராதிய சித்தர்களும் பிரமன் மரீசி முத லிய தவசிரேட்ட முனிகளும் யாவருக்கும் விளங்க வேத உபவே தமாக உபதேசித்து வந்ததாக நூற்களால் விளங்குகின்றது. அப் படி யவரால் உபதேசிக்கப்பட்டு கேட்டவைகளை பிரபலசுருதிக ளென வழங்கப்பட்டு வருகின்றன. இவைகளில் ஒரு தேகத் திற்கு பிறதேகங்களாலுண்டாகும் பீடைகளை யவ்வவற்றிற்குப் பகையாயுள்ள ஜந்துவின் தேக ஸ்மரணையாலும் ஜந்துவினிடத்தி லுள்ள பொருள்களாலும் தீர்க்க உரைப்பவையே மந்திர தந்திர மென உணர இடந்தருகின்றது. உதாரணம்:—பாம்பு விடத்தி ற்கு கருடன் ஸ்மரணையும் தேள் விடத்திற்கு மயிற் பீலி புகையூட் டலுமாம். மணியென்பது பாதரச பந்தனத்தாற் செய்யும் மணி யேயாம். இதன் பெருமையை வாயால் உரைக்க முடியாது இதைச் செய்யும் உபாயமும் அதற்குரிய பிரயாசையும் நூலா லுணர்ந்துகொள்ள முடியுமே யல்லாது இதை இங்கு விரிக்க இடந்தேடல் விருதா பிரயாசையாம். மாணவகா! இதனால் ஜன்மம் சுகமல்லவென்பது ஆழ்ந்து யோசிப்பவர்க்கு விளங்கா மற் போகுமா? ஆகையாலல்லவோ பிறவியைப் பவரோகமென வும் கடவுளைப் பவரோக வைத்தியனெனவும் வேதத்தை மணிமந் திர ஔஷதங்களாகவும் பெரியோர் மதிக்கின்றனர். இவ்வித வேதத்திற்குச் சிலரே அதிகாரிகளெனவும் பலர் அதிகாரிகளாகா ரெனவும் விதிப்பவர் வஞ்சகர், துஷ்டர் மூடர் என்னும் வகுப்பில் சேராதாராதல் எங்ஙனம்? வேதாகம புராணேதி ஹாச மதந் மாதிய நூலகள் அநுபவ விருத்தமாக வுரைக்குமாகில் அந்த சம்பு வதிலும் வேறு கட்டுக்கதைகளைப் படிப்பது சுகமாகுமென புத்தி மான் நினைப்பானல்லவோ? எனெனில்:—கட்டுக்கதைகளாகிய கா விய நாடக அலங்காரங்களால் மனதுக்கோர் சுகமுக்குரோதவோப

அநுபவ சந்தோஷம் அல்லது துக்கமாகிலும் ஜனிக்கின்றது. அவ்வளவிற்கு முதவாமல் பார்க்கத்தக்க கண்களும் கேட்கத்தக்க காதுகளும் மோக்கத்தக்க மூக்கும், உருசிக்கத்தக்க நாக்கும் சீதோஷ்ணாதி யறியுமுடம்பும் நினைக்கத்தக்கமனமும் விசாரிக்கத் தக்க புத்தியும் அறிகுறியுணர்த்தும் ஆனனமும் இழந்தபின்பு பிதிர்லோகத்திலும் சுவர்க்கத்திலும் கைலாயத்திலும் வைகுண்டத்திலும் சுகமடைவதாகவும், நரக கீழுலகத்தில் துக்கப்படுவதாகவும் சொல்லும் மூர்க்க வித்வான்கள் சொல்லால் அவர்கள் விதிக்கும் ஜாதி மத ஆசார உபவாச குலதர்ம கஷ்டத்தையும் தான எக்கிய யாக பூஜோற்சவ கர்மாந்திர கருமங்களாலுண்டாகும் பொருள் நஷ்டத்தையு மடைவது பயனற்ற காரியமாக நினைக்க இடமுண்டாகின்றது. "தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்" என்பது உண்மையாகையால் வஞ்சக வார்த்தையால் கடவுள் தரிசனம் பெற்றோம், கைலாயாதி கதிகள் பெறுவோம் என தன்னெஞ்சறியாததைச்சொல்லி பொய் யொழுக்கத்தில் காலைக்கழிப்பிப்பவர் மனம அவர்களைப் பிற்காலத்தில் அலக்கழிக்காது விடுமென்பதற்கு இடமில்லையன்றோ? மனமாறப் பொய்பேசும் வஞ்சகக் குருக்கள்மார் நாஸ்திகரே யல்லது ஆஸ்திக ரோர்பொழுதும் ஆகார்கள். "நெஞ்சாரப்பொய்தன்னைச் சொல்லவேண்டாம், * நிலையிலாக் காரியத்தை நிறுத்தவேண்டாம்" என்றதை யிவர்கள் கற்றுங் கேட்டும் மறந்தார்கள் போலும். புத்திமானே! பிறவித்துன்பம் எல்லாருக்கும் நேர்ந்திருக்கிறபடியால் அதை யொழிக்க விதிக்கும் வேத சாஸ்திராதிகளை ஒவ்வொருவரும் கற்றுணர்ந்து, அடங்கிப் பேரின்பப் பேற்றினை யடையவேண்டும். இதுவொவ்வொருவர் கடமையுமாமென்பதை மறுக்க முடியாது. பசிக்கன்னம் ஒருவகுப்பாரே புசிக்கலாம், மற்றொருவகுப்பார் புசிக்கலாகாது; தாகத்திற்கு ஒரு சாராரே அருந்தலாம் மற்றொரு சாரார் அருந்தலாகாது எனச் சொல்லின் சொல்பவரின் விவேக மிருந்தவாற்றை யோசிக்கின் சிரிக்கத்தக்க தாகுமல்லவா? அன்னம் பானம் வஸ்திர பூஷணம் தொழில் தேட்டம் யாவர்க்கும் வேண்டியது போலவே கல்வி, ஞானம், ஸ்நானம், சீலம், திடம், நீதி, பொறுமை, கற்பு முதலியன யாவர்க்கும் வேண்டியனவே யாகும். யாவரும் செய்து

* நிலையிலாக் காரியமென்றும்;

கொள்ளலாமே. ஒருவர் தடைசெய்ததனால் என்னை? "ஜாதிக்கேற்றபுத்தி சாப்பாட்டிற்கேற்ற லத்தி என்பதுபோல" பூர்வ புண்ணியத்தால் புத்திபேதம் யாவர்க்குமே நேர்ந்திருக்க அந்நியரைநிந்திப்பது அநீதி யென்பர் சிலர். அங்ஙனமாயின் வேதத்திற்கருகரென்ற ஜாதியிற் பிறந்த ஒவ்வொருவருக்கும்வேதமாதி கலைகளோதித்தெளிய நினைவெழாத காரணம் யாதோ? அறியேம். அறியாக் காரணமும் நீசகுணமுடைமையும் நீணிலத்தில் அவரிடத்து காணப்படலுக்குக் காரணம் என்ன? ஒன்றையுங் காணேம். அவரவர் சோமபலே காரணமாம். மாடு, ஆடு, குதிரை முதலிய மிருகஜாதிகளும், பட்சி ஜாதிகளும் தந்தமக்கு கடவுளால் விதிக்கப்பட்ட ஆகார விவகாரங்களிலுஞ் சத்திக்குந் தொழில்களிலும் ஒன்றாகவிருப்பதுபோல மானிடப் பிறப்பினர்களுள்ளும் ஆகார விவகார பாஷா ஞானம் முதலியன ஒன்றாகவே காணப்படுகின்றன.

உலகி லெல்லா மனிதர்களுக்கும் உணவும், ஸ்நானமும், உடையுங், பூச்சும், பூணும், விருப்பந்தரத் தக்கவைகளென்று சொல்லவேண்டிய தில்லையன்றோ? அதுபோல அழியாத ஆனந்த மோக்ஷமுண்டாயின் அதைப் பெறவும், ஒழியாத் துன்பமாகிய நரகமுண்டாயின் அதைத்தான் தவிர்க்கவும் சொல்லும்வேதத்தை எல்லாருமே கற்கவேண்டியது தானே. இப்படியிருக்க, வேதத்தையாவரும் பயிலலாகாதென விதிப்பவர் எவ்வளவு புத்திமான்கள்? விதிப்பவர் தங்களை மாத்திரம் தேவதாப் பிறப்பென்று எண்ணிக்கொண்டார்கள். அதற்குத் தக்க சில பொய்ப் புராணக் கதைகளை நாளடைவில் கற்பித்துக் கொண்டு * பதினான்கு வித்தைகளைப் பிரமாணமெனக் கொள்ளுகிறார்கள். பிரத்தியக்ஷ அநுபவப் பிரமாணத்திற்கும், அனுமானாதி யுத்திப் பிரமாணங்களுக்கும் விருத்தமான அசம்பவப் போலிஞானக் கற்பனைக் கதைகளை வித்தைகளாகமதிப்போர் மதிநுட்பமுள்ளவர்தானோ வென்பதிற் சந்தேகம்.

கல்வியாவர்க்கும் இன்றியமையாததே.

எல்லா நூல்களும் அப்படியே கற்பித்தவைகள் தானேயென்றெண்ணாதே. மெய்யும் பொய்யும் விரவியதில் எது அநுபவத்திற்கும் யுக்திக்கும் பொருந்துகின்றதோ அது மெய்யாகியஞானமாம். எது யுக்திக்கும் அநுபவத்திற்கும்

---

* வேதம் நான்கு, அங்கம் ஆறு, புராணம் ஒன்று, ஸ்மிருதி ஒன்று, நியாய சாஸ்திரம் ஒன்று, மீமாம்சை ஒன்று, ஆக பதினான்கு.

பொருந்தாது முரண்படுகின்றதோ அது போலிக் கற்பனைப் பொய்ந்நூலாம், பொய்ந்நூல்கள் விபரீத வுணர்ச்சியை யுண்டுபண்ணுவனவாம். இஃதிருக்கட்டும். இதுவரை மற்றெல்லாப் பொருள்களும் மனிதருக்குத் தேவையானதுபோல கல்வியும் இன்றியமையாததே யென நிரூபிக்கப்பட்டது. ஆகையால் ஒருவன் மற்றப் பொருள்களைப் போலக் கல்வியைத் தேடிக்கொள்வதும் அதற் கிடையூறு பேசுமெவரையும் மூர்க்கரென்று ஒதுக்கி அவர் சொல்லும் யுக்திகளையும், பிரமாண வசனங்களையும் அலக்ஷியஞ்செய்து நடப்பதும், விவேக மாகும். அப்படிக்கு நடவாமையே அவிவேகமும் மூட நம்பிக்கையும் முரட்டுக்கொள்கையு மாகும்.

## சீடனது குறைக்கு சத்குருவின் விடை.

சாந்த சீலனே! இனி யுன் அபிப்பிராயப்படி நான் மனமார அறிந்தவைகளை உனக்கு நினைப்பூட்டுகிறேன். நீ எல்லாமுணர்ந்திருந்தும், உணரவும் உணர்த்தவும் வல்லவனாக விருந்தும், நான் கேவலம் அறிவிலி ஜடன், மூடன், கிஞ்சிஞ்ஞன், தாங்களெனைக் கிருதார்த்த னாக்கி என்னைத் துக்க சாகரத்தினின்று மகரையேற்ற வேண்டுமென என்னைப் பிரார்த்தித்துக்கொண்டது, மயக்கமான வழக்கத்தால் வந்த பிராந்த வசனமாம். ஆயினும் இது ஒருவன் பலகாலமும் ஆராய்ந் தறிந்தபின் அகன்றுபோகுந் தன்மையதன்றி இத்துர்வழக்க மாயா மோகம், வேறு விதத்தா லொழியத் தக்கதல்ல. உலகத்தி லாராயத்தக்க விஷயங்கள் அநேகமாக வுண்டெனப் பலர் பலவிதமாகச் சொல்வார்க ளானாலும் ஒருவன் தன்னையும் தனக்காதாரத் தலைவனையும் தன்பாற் கிடைத்துள பொருள்களையும் விசாரிப்பானாயின் போதுமானதென்பது என் னபிப்பிராயம். சுகப்பட வேண்டியவன் தானே யாகையால் முதல் தன்னை விசாரிப்பதே போதுமானது. எவனும் தன்னை விட்டுவிட்டுத் தனக் கன்னியப் பொருள்களிலேயே சுக முண்டாகின்றது என்று மயங்கி நிற்கையால் காணப்படும். உலகத்தையுங் காலத்தையும், தேசத்தையும் வஸ்துக்களையும் விசாரித்தா லொழிய மயக்கமொழிவது அசாத்தியமாகவே காணப்படுமென்பதிற் றடையில்லை. ஆகையால் நாமுலகத்தையும், உலகத்

திலுள்ள முக்கியப் பொருள்களையும் முக்கிய மதத்தினர் கொள்கைகளையும் விசாரிப்போம். உலகத்தில் எந்த நூல் செய்தோரும் செய்பவருமாகிய எல்லோரும் தந்நூலை யின்னோரே படிப்பாரென்றும், இவரேபடிக்க வேண்டுமென்றும் நினையாது, யாவரும் பார்த்துணர்ந்து தம்போ லாகவேண்டு மென்றே நினைந்தோரும் நினைப்பவர்களுமாக விருக்கிறார்கள். இதனால் எவர்மத மாயினும் நமக்கென்ன? உண்மை யெம்மதத்தி லுண்டாயினும் அதை நாம் கைப்பற்ற வேண்டியதே யாம். ஞாயத்திற் கொத்த வார்த்தையை யேலாதவன் மூடனன்றி வேறுகான். ஞாயமில்லாத வார்த்தை யாயினும் பழக்கமே பெரிதாகையாலும் இவ்வார்த்தை வழக்கத்தை யனுசரித்திருப்பதாலும் இதையே யேற்கவேண்டு மென்பவன் தந்திரவாதியும், வஞ்சகனுமாவனல்லது வேறல்லன். நியாயத்திற்குக் கட்டுப்படாத அவனையன்றி பெரும்பாவி உலகத்தி லெவனு மிலன். ஒன்றுமறியாதார் பாவிகளாயினும் தேருபவராக விருக்கையால் அவர்களைப் பாவிகளாகக் கொள்ளப்படாது. அறிந்திருந்தும் பிறரைவஞ்சிப்பவ னெவனோ அவனே மிகுந்த பாதகனும் காதகனுமாவான். இத்தகைய பண்டிதரை யவமதித்து நடப்பதே மேன்மை யடையத்தக்க மெய்ம்மார்க்கம். எவனுந்தான் சுகவும்; தன்னல மிழக்கவும் கருதா னாகையால் நாமும் நமது நன்மையின் பொருட்டு தந்திரவாதிகளின் வார்த்தையைத் தவிர்க்கவே வேண்டும். உடை, உத்தியோகம், உயர்வாம்பட்டம் இவைகளைப் பெறுவதினாலேயே தனக்கியற்கையிற் கிடைத்த மனித சுதந்தரத்தைப் போக்கிக்கொள்ள முயலலாமா? இகவாழ்வு எவர்க்கு நிலையாக நின்றது? கண்டதிதுவே யன்றி கைலாய வைகுண்ட மோக்ஷ லோகம் சொன்மாத்திரந்தானே யென்னின், இவர்கள் போதிக்கும் போதனை நமக்கெற்றிற்கு? வேத சிரசாகியும், சாரமாகியுமுள்ள உபநிஷத்துக்கள் நூற்றெட்டினுள் பிராம்மண ராதிய ஜாதிபேதத்தைப் பற்றி சர்ச்சை செய்து அவை பொய்யென நீக்கும் வஜ்ஜிர சூசி முதலிய உபநிஷத்துக்களு முண்டு. இவை யாவுமுலகோரறியில் தம்முரட்டுப் பிடிவாதம். நிலை நில்லாதெனவெண்ணி வேடத்தாற் பகட்டும் பேடைப் பெரியோரை முற்றுமொழிக்கப் பாடும் படவேண்டும். இதுவே உலகோபகார மாமன்றி மூடத்திலாழ்த்த முயல்பவருடன்கூடுதல் உலகஅபகாரமாகும். உணவு

இலையாவு மூலகோ ரறியில் தம்முரட்டுப் பிடிவாதம் நிலைநில்லா தெனப் பயந்து அடியோடு வேதோபநிஷத்துக்களைப் படிக்கவும் கேட்கவும் கூடாதென்று மறைக்கப் பாடுபட்டார்கள். இன்னும் பாடுபடுகிறார்கள். வேத வேதாந்தமென்றால் விரோதமென்றே பலர் நினைக்க அநேக விபரீதக் கொள்கைகளை விரித்து; அவ்வே டிக்கைகளில் ஜனங்களைப் பழக்கி, தங்கள் சுக ஜீவனத்தை விருத்தி செய்துக்கொண்டு ஒருமைப்பாட்டை முற்றுங் கெடுத்தார்கள். கெடுக்கிறார்கள். இதன்றி ஆசை மேலிட்ட மனிதருக்குப் பொய்த்தேவர்களையும், பொய்ம் மந்திரங்களையும், பொய் யாகங்களையும், பொய்யுபதேசங்களையும் பொய்ப் பூஜைகளையுங் கற்பித்து அவைகளை யுலகெங்கு நிரப்பி ஜாலஞ் செய்து தங் காலங்கழித்து வந்தார்கள். வருகிறார்கள். அன்றியும், துவேஷம் விளைவிக்கத்தக்க வீணை, குறிகளையும், வீணை வேஷங்களையும், வீணை யோகங்களையும், யாகங்களையும், மூடர் மோகங்கொள்ள வேடிக்கையாகக் காட்டிப் பயமூட்டி பொருள் பறித்து மூட்டைப்பாடன்றி மூவேளையும் புசித்துத் தூங்கி உலகிற் பலரேங்கித் திரிவதற்கு இரங்காது பரோபகாரசிந்தையற்றுச் சோம்பேறிச் சாமிகளாகிப் பூமி யெங்குந் திரிய ஆரம்பித்தார்கள். எவர்க்கு மின்றிமையாத கல்வியும் நாகரீகமும், நீதியும், கைத்தொழில்களும், உபகாரசிந்தையும், கற்பியாது, அவைகளைக் கற்பிக்க முயலும் புண்ணியரைக் கொலைசெய்யத்தக்க மூடப் பழக்கங்களையும், முரட்டுப் பிடிவாதங்களையும், அதிகப் பொருள் செலவுசெய்து நிலைக்கச் செய்கிறார்கள். அன்றியும், கலியாணத்திலும், கருமாதியிலும், தீரங்களிலும், கடலோரங்களிலும், கோவில்களிலும், பாவநாசாதி குளங்களிலும், கங்கையாதிய ஆற்றிலும், புதுவீட்டிலும், பிள்ளைப்பேற்றிலும், பெண்கள் ருதுவிலும், இருதுவிலும், கேசத்திலும், வித்யாப்பியாசத்திலும், வேடிக்கையிலும், தாசி கேளிக்கையிலும், சங்கீதத்திலும், பொய்த் தேவர் நிர்மாண போதப்பிலும், ஜாதி யாசார சாதிப்பிலும், ஞாயிறாதி நாட்களிலும், சூரிய கிரஹணாதி கோட்களிலும், சாந்தி ராயணாதி விரதத்திலும், பஞ்சாங்க சாதத்திலும், தர்ம்ம சத்திரத்திலும், ஜாதக பத்திரத்திலும் தமக்கே வரும்படி யேற்படுத்திக்கொண்டது போதாமல், தானத்திலும் விபரீத ஞானத்திலும், பாஷையிலும், பிராயச்சித்த சிக்ஷையிலும் பேதக்கஷியிலும், தருமத்திலும், எவ்வகைக் கருமத்திலுந் தமக்கே வரும்படி தேடிக்கொண்டு மனிதரை மனிதன் மூடத்தனத்தால் பலகைச் ஜாதி மத ஞானா

பேதத்தை நிலைநிறுத்தி விட்டார்கள். மூடப் பசுக்கொலையை விட்ட முழுவிரக்க சான்றோரெனத் தம்மைக் காட்டிக்கொண்டு, முதன்மை மனிதரை வஞ்சனையாற் கொலைபுரிந்து வந்தார்கள். இன்று மக்கொள்கையைக் கைவிட நினைக்கிறார்களில்லை. சாபத்தால் ஜாதிகளைச் சிறிதாக்கிவிடும் மந்திரச் சமர்த்தர்களாகிய இவர்கள், ஆசீர்வாதத்தாலும், அடிமைகளாகியே யிருக்கப் பாடுபடுகிறார்களே யொழிய அந்த ஜாதிகளை யுயர்த்தி தம்மோடு சேர்த்துக்கொள்ள' என் பாடுபடுகிறார்களில்லையோ தெரியவில்லை. இவர்கள் கற்ற மந்திரக்களுக்கு கெடுக்குஞ் சக்தியே யன்றிக் கேட்டினின் றெடுக்குஞ் சத்தியில்லை போலும்.

தெய்வமொன்றே. போலித் தெய்வ பூஜை போர்க்கிட மேனல்.

இயற்கை யநுபவத்திற்குச் சிறிதும் பொருந்தாத ஜாதிவேற்றுமையைக் கற்பித்து, அதனை நிலைநிறுத்த ஜாதிக்குத் தக்க ஆலயச் சாமிகளையும் அநேகஞ் செய்து விட்டார்கள். இத்தெய்வங்களெல்லாம் பேர்மாத்திர முடையனவாய் இறந்தார்க்கே யுபகரிப்பனவாகி உயிருள்ளளவும் எதிரே வாராதவையாய் பூசையும் பலியும் புசிக்குந் தன்மையோடு, புரியாதாரைக் கோபிப்பவையாயு மிருக்கின்றன. உலக மெல்லாவற்றிற்கு மொரே தெய்வந்தா னுண்டே யல்லது சிறிது பெரிதுகளாகிய பல தெய்வங்களில்லை. இதை வேதம் பல விடங்களில் வற்புறுத்துவதோடு ஈசாவாஸ்யம், கிராலம்போப நிஷத்துக்களில் ஸ்பஷ்டமாகவுங்கூறி வற்புறுத்து கின்றது. இஃதொன்றே யாவரு மொப்பக் கூடியதாய் யுத்தி யநுபவத்திற் கொத்திருக்கின்றது. அன்றித் தெய்வம் ஏகமாய், எங்குமாய், எல்லாம் வல்லதாய் எதற்கு மாதாரமா யிருப்பதே, ஏகதேசத்தி லிருப்பதும் பிறப்பதும் இறப்பதும் வருவதும் போவதும் தோன்றுவதும் மறைவதுமாக விருப்பது, சாகுஞ் சாமியாகிய ஜடப்பொருளே யல்லது சாகாச் சாமியாகிய சைதன்னியப் பொருளாகாது.

புத்திமானே! சாகுஞ் சட சரீர அபிமானியாகிய ஜீவான்மா ஜட தெய்வத்தை நம்பி செத்தபின் தன்னோடு வாராது நின்றுவிடும் ஜடசாமிகளாலும் முன்னொருக்கால் பிறந்திருந்திறந்து இப்போது பூமியி லில்லாத சாமிகளாலும், யாது லாபத்தை யடையும்? இவர்கள் காட்டும் வேடிக்கைச்சாமிகளாலடையும் பிரயோஜனம் நேத்ரோர்சவமாகவும், விபரீத செலவாகவும், விருதா சரீர கஷ்டமாகவும் முடியுமே யன்றி வேறுபயன் விளைக்காது என்ப

நான்மையன்றே? ஆகையால் நாம் வேதங்களையும், உபநிஷத்துக்களையும், நீதிநூல்களையும், ந்யாயசாஸ்திரங்களையும், வானசாஸ்திர ரஸாயன சாஸ்திரங்களையும், பூகோள ககோள இருப்பையும் நமதநுபவத்தையும் யுக்தியையும் வைத்து ஆராய்வோம், அநுபவத்திற் கொவ்வாத வற்றை அநுமானாதி பிரமாணங்களால் யூகித்துப் பார்த்து நல்லனவாயில் கொள்ளுதும். பயனற்றனவாயின் தள்ளுதும். இதிற்பிழையென்னை? குழந்தாய்! உன்கருத்தைக் கூறுதி.

சாந்தசீலனே! உள்ளதனை உள்ளபடி உணருதலே அபரோக்ஷ ஞான சாக்ஷாத்கார ஸ்வாநுபவமென வுணர்வாயாக. இவ்வாறுணர்ந் தனுபவித்த அனுபவத்தைப் பிறர்க்குணர்த்துதற்கே வேதாகமமாதி சகல சாஸ்திரங்களையும் முன்னோர்கள் விளம்பியிருக்கிறார்கள். ஆகையால்நீ அவசர புத்தியின்றிச் சர்வாபிமானங்களையும் விட்டு ஆராய்ச்சி செய்தறிவாயாகில், எவ்வித துக்கமுமில்லாதவனாகி பரமாநந்த சொரூபியாக உடலோடுறையுங் காலத்திற்றானே பிரணவ தேகி யெனப்பெறுவதோடு ஜீவன்முக்தனெனப் பெறுவாய். இது பெற்றவர்களையே துவிஜரெனா முன்னோர்கள் விளித்துள்ளார்கள். "மாற்றிப்பிறக்க வகையறிந்தோர்" எனச்சொல்லுவது மிவர்களையே. நாம் நமது கண்களாலுணரும் பொருள்களையும், மண், நீர், நெருப்பு, ஆகாயமென்னும் பஞ்சபூதங்களையுஞ் சேர்த்தல்லவோ பிரபஞ்சமென்று வாக்கால் விவகரிக்கின்றோம்? இவ்வுலகத்தைப் பற்றி பலர் பலவிதமாக உணர்ந்து விவகரிக்கின்றனர். அவைகளையெல்லாம் ஆழ்ந்து யோசிக்குங் காலத்தில் அவைகள் மூவித அபிப்பிராயத்துளொடுங்கிப்போமென்றே புலப்படுகின்றது. அவையாவென்னில் விளம்புகின்றேன். நீ பராக்கற்று ஊக்கத்தோடுங் கவனிக்கவேண்டியது. ஏனெனில் சிரத்தையின்றிச் செய்யும் வேலை சீக்கிரம் முடிவுபெறாது. நெடுங்காலத்திற்குப் பிறகாவது முடியுமல்லவோ என்றெனினும் நினையாதே. இடையூறாகவரும் வேறு பிரயத்தினத்தினால் அது முழுதும் காணமடைந்து மறந்தே போனாலும் போகக்கூடும் அப்படி மறந்தவைகள் உலகத்தில் கோடானுகோடியுண்டு. ஆகையால் நான் சொல்லுமவைகளை சிரத்தையோடுங் கேட்டு என் பரிசிரமத்தைப் பாழாக்காது பயன்படுத்துவாயாக.

உலகத்தைப் பற்றி இயற்கையார் அபிப்பிராயம்.

சௌமியனே! இவ்வுலகத்தைச் சிலர் இயற்கையென்றும் அதாவது சுபாவ மென்றும், சிலர் செயற்கை யென்றும் அதாவது கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்டதென்றும், சிலர் தோற்ற மென்றும் அதாவது தோஷத்தால் ஒருபொருள் மற்றொரு பொருளாகத் தோன்றுவது போலத்தோன்றுந் தோற்ற மாத்திரமே யென்றும், கூறுகின்றனர். அன்றி இவர்களுள் சிலர் இவ்வுலகத்தைச் சிவமய மென்றும் சிலர் விஷ்ணு மயமென்றும், சிலர் பிரம்ம மயமென்றும், பெயர்கள் வேறுவேறாகவும் கருத்து ஒன்றாகவும் இருக்கக் கூறுகின்றனர். முன் கூறியவைகளெல்லாம் எப்படி எப்படித் தாங்களுணர்ந்தார்களோ அவைகளைப் பற்றி அப்படி யப்படியாகவே பல அரிய நூல்களைச் செய்து அவற்றின் மூலமாக யாவரும் தத்தம் ஆராய்ச்சிகளை உணர உணர்த்துகிறார்கள். இவற்றில் உம்முடைய வபிப்பிராயம் யாதோவென்று நீ உணரத் துரிதப்படாதே. ஏனெனின் ஆத்திரக் காரனுக்குப் புத்திமட்டு என்னும் பழமொழியைக் கடைப்பிடி. நான் ஒவ்வொருவருடைய அபிப்பிராயத்தையும், அதற்கவர்கள் சாதகமாக மேற்கொண்டு சொல்லும் யுக்திகளையும் விளங்க உரைக்கின்றேன். பின் அவைகளுக்குப் பாதகமாக விருப்பவைகளையும் விளக்குகின்றேன். அவைகளை நீ கேட்டுணர்வதால் யதார்த்தத்தை உள்ளடி யுணர்வாய். உலகத்தை இயற்கை என்றுரைக்கும் மதத்தினருள் பலர் கல்லாரும் விஷயந் தெரியாதவருமாக விருக்கிறார்கள். சிலர் சோம்பேறிகளாய் சுபாவம் என யாராவது சொல்லக் கேட்டதை ஆதாவாக வைத்துக்கொண்டு பேசுகிறார்கள். சீடனே! இவர்களை நீக்கி இனி பலபொருள்களின் சுபாவங்களைக் கற்று விஷயாராய்ச்சி செய்து, இவ்வுலகம் இயற்கையென்பவர் கருத்துகளில் சுருக்கமாக இன்றியமையாதவைகளை இசைக்கின்றேன். இயற்கையென்பவர் இவ்வுலகத்தை அறுபத்து நான்கு பூதியங்களின் விகார காரியவடிவ மென்கிறார்கள். பூதியமென்பன கலப்பில்லாத முதற்பொருள்களெனல் அவர்க ளபிப்பிராயம். இப்பூதியங்கள் பரமாணு ரூபமாய்க் கண்களுக்குத்தோன்றாதனவாய் கருவிகளால் சோதனையில் கருத்திற்கு விளங்க அல்லது விளக்கக் கூடியவைகளாக இருக்கின்றன வென்பர். அன்றி, இப்பூதியங்கள் சூட்டிற்கும் குளிர்ச்சிக்கும் ஏற்ற விதமாய் மூவித உருவங்களாகி விளங்குகின்றன வெனல் அவர்கள் துணிபு. எப்படியெனில், நாம்

கண் எதிரில் காணும் பனிக்குபோன்ற பனிக்கட்டி யென்னும் ஜலத் திரட்சியானது, மிகக்குளிர்ச்சியால் கற்பாறையை யொத்துக் கடினமாய்த் திரண்டிருக்கிறது. அதுபோல, உலகத்திற்கடினப் பொருள்களாகக் காணப்படும் எல்லா வஸ்துக்களும் அவற்று வற்றிற்கேற்ற குளிர்ச்சியால் பரமாணுக்கள் நிசேகா கர்ஷணம் பெற்று உறைந்திருக்கின்றன வென்கிறார்கள்.

வெண்மையாகிக் கற்பாறையை யொத்து கடினமாகக் காணப்பட்ட பனிக்கட்டி யானது, பூர்வம் அதிக வுஷ்ணத்தால் ஆவியாகிய பின் கண்ணுக்குப் புலப்படாதவணுவாகி யிருந்ததே. என்கிறார்கள். அப்படிக்கிருந்த அணுக்கள் சிறிது குளிர்ச்சியை யடைந்தபோது ஆவியாகிப், பின்னுங்குளிர்ச்சியை யடைந்தபோது மேகமாக காணப்பட்டு, அதிலும் போதுமான குளிர்ச்சியைப் பெற்றபோது மழையாகப்பெய்து இளகலாகிய ஜல வடிவமாகிக் காணப்படுகின்றது என்ப. பின்னும் அந்த ஜலமே அதிகக்குளிர்ச்சியால் கற்பாறையையொத்துப் பனிக்கட்டியாகக் குளிர்ந்து உறைகின்றது. பனிக்கட்டி யென்பது குளிர்ச்சியின் திரட்சியென்று அருந்தக்கொள்ளுகின்றது. இதைப்போலவே உலகில் நாம் காணும்சகல பதார்த்தங்களும் கண்ணுக்குப் புலப்படாம லிருந்த பரமாணு பூதியங்களே. அப்பூதியங்களின் வடிவம் வேவ்வேறாகிருதி யுடையனவாய் இரண்டு மூன்று முதலாக பொருட்குத் தேவையான அணுக்கள் கூடியும் கூடாமலும் கூடு குளிர்ச்சிகளுக்குத் தக்கவிதமாய் கடினத்திரவிய மாகவும், இளகல் திரவியமாகவும் ஆவியாகவுங்காணப்படுகின்றன என்பர்.

இவ்வுலகத்தோற்றம் இவ்வளவேயன்றி வேறல்ல என்பதவர்கள் துணிபு. இப்பரமாணுக்களைவிட ஜீவான்மாவும் இப்பூதியங்களைப் படைத்த பரமான்மாவும் கிடையா. என்னும்வைகள் சொன்மாத்திரமே யன்றிக் கண்ணாதி பஞ்சேந்திரியங்களுக் காயினும், கருவிகட்காயினும் காளதுவரையில் எட்டக்காணேம். பூதியங்களைப்போலஇவைகள் யுண்டாயின் அவைகளைப்போல இவைகளும் புலப்படவேண்டும். அங்ஙனம் புலப்படப் பெற்றவர்களும், பெறுவிப்பாரும், உலகத்தில் இருந்ததாகவும் அல்லது இருப்பதாகவும்பிரஸ்தாபமில்லை. இவ்வகையால் உலகத்தில் கடவுளும்ஜீவான்மாவும்,பாவபுண்யத்தால் வரும் சொர்க்க நரகமும் உண்டென்று கூறி வருபவர்யாவரும், மூடரும், மூடப்பழக்கத்தை மேற்கொண்டவருமேயாகக் காணப்படுகிறார்களல்லது வேறலர். விஷயமிப்

படியிருக்க, இந்த உடலிலிருந்து சகலதொழில்களும் செய்து சுகதுக்கத்தை யனுபவிப்பதியாதோ அதுவே ஜீவான்மா வெனவும் இந்த ஜீவான்மாவின் பூர்வ ஜன்ம கர்மத்திற்குத் தக்கபடியாக சரீரமும் இந்திரியங்களும் புவனமும் படைத்து, அதில் போகத்தைத் தாரதம்மியமாக ஜீவர்களுக்கு ஊட்டுபவனே பரமான்மா வெனவும், சில படித்தவர்களும், படித்தோர் சொல்வதைக்கேட்டு கற்பிய பாமரர்களும், வழக்கமாகச் சொல்லி வருகிறார்கள். இதை யோசிக்குங்கால் கடியாரத்தில் காலத்தைக் காட்டுகிற முள்ளை யும், இத்தனை மணியென்று அடித்துக்காட்டும் கருவியையும், அசைப்பிக்கிற ஒரு ஜீவான்மா அதிலிருப்பதாகக் கொள்ளும் புத்திசாலியின் புத்தியையொத்ததாகக் காணப்படுகின்றது.

இயற்கையென்பார் ஜீவன்கடவுளில்லை யென்பார்க்கு உதாரணம்.

எப்படியெனில்:— ஓர் குழந்தை தன்பாட்டியைப்பார்த்து. பாட்டீ இதோ இங்கு காணப்படுகின்றதென்னவென்று கேட்டான். கிழவி, இது கடிகாரமென்றாள். பையன் இதில் டக்கு டக்கென்னும் சப்தமுண்டாகிக் கேட்கிறதே அது ஏன். அப்படிச் செய்கிறது யார்? என்றான். பாட்டி அந்த கடியாரத்தில் இருக்கிற உயிர் செய்யும் சத்தமென்றாள். பையன் உயிர் எப்படி அதிலிருக்குமென்றான். பாட்டி உயிரில்லாமற்போனால் அதெப்படி இத்தனை மணியென்றறிந்து அடிக்கும். மனிதர் விரலால் பொருளைச் சுட்டுவதுபோல அது முள்ளால் எப்படி மணியைக்காட்டும் ஆகையால் நீ அந்த கடியாரத்தைத் தொடாதே. தொடுவாயா கில் அந்தக் கடிகாரம், கீழே விழுந்து இறந்துபோகும். அது செத்துப்போனால், அப்போது மீளவும் அது டக்கு டக்கென்று சப்திக்காது, இத்தனைமணியாயிற்றென்று மணியடித்துக் காலத்தைக் காட்டாது. விரலாகிய முள்ளால் மணியையும் நிமிஷத்தையும் விளக்காது என்றாள். பையன் பாட்டீ நான் அதனருகே போகிலேமாட்டேன். கையால் தொடவுமாட்டேன். ஒருவேளை அது என்னால் தவறிவிழுந்து இறந்துபோனால் அது எனக்குப் பாதகந்தானே யென்றான். பாட்டி ஆம் அப்பா நீ அப்படிசெய்யாதே. எந்த உயிரைக்கொல்வதும் பாதகந்தான் என்றாள். பையன் அதைநம்பி பயந்திருந்தான். இக்கதையைப்போலவே கடவுளும் ஜீவனுமுண்டென்று சொல்லுகிறவர்கள் வார்த்தைகள். பாட்டிக்கதையைப்போல பாராட்டிவருகின்றார்கள் உண்மையாகப்

பார்க்கில் கடியாரத்திற் சேர்க்கப்பட்ட . கருவிகளின் சேர்க்கையாலுண்டாகும் ஒரு சக்தியே சப்தமும் மடியணிக்குந் தொழிலும், மணியைக் குறிக்குந்தொழிலும் செய்கிறது; அல்லாமல். அரக்கடியாரத்திலும் வேறாகிய ஓர் உயிர் அதிலிருப்பதில்லை. கடியாரத்தின் அவயவங்கள் பழுதாகிவிட்டால் மேலே சொல்லிய காலத்தைக்குறிக்கும் சக்தி அதனிடத்திலுண்டாயிருப்பதில்லை.

ஹையார் தங்கள் கொள்கையைப் பின்னும் ஸ்திரப்படுத்தல்.

எப்படி சுண்ணாம்பும் மஞ்சளும் கலந்தபோது முன்பு அவைகளினிடத்தி லிருப்பதாகக் காணப்படாத. செம்மைநிற முண்டாகி வெண்மையும் பசுமையுமாகிய நிறங்கள் ஒழிந்த ஓர் பொருளாகிக் காணப்படுகின்றதோ, அப்படியே பூதியங்கள் தம் சேர்க்கையால் முன்னில்லாத அறிவென்னுமோர் தொழிற் சக்தியோடு சரீரமாகிக் காணப்படுகின்றன. உடம்பின் அவயவங்கள் நாளடைவில் தேய்ந்து அழிவடைந்த காலத்தில் அவ்வறிவென்னுந் தொழிற்சக்தி நாஸ மடைகின்றது. இவ்வளவேயன்றி வேறில்லை. சரீரத்தைத் தவிர வேறாகிய ஜீவான்மாவொன்றிருக்குமாகில் சரீரத்தை ஊறுபடுத்த அது காணப்படாமைக்குக் காரணமென்னை? அன்றியும் சரீரத்தின் இரத்தவோட்ட முதலியவற்றை மறுத்தலால், அல்லது கருவி முதலியவற்றுல்தடைசெய்வதனால்மேற்படி அறிவென்னுஞ்ஜீவன் குறையவும், இன்மையாகக் காணப்படவும், காரணமில்லையன்றோ? தேகத்திலும் வேறாக ஒரு ஜீவான்மா இருக்குமானால், இரத்தவோட்டமில்லாமல் தடைப்படுத்துவதால் திமிர் உண்டாகி பரிசவுணர்ச்சி குறையவும் குலோரிபாரம் என்னும் மருந்தை சுவாஸிக்கக் கொடுப்பதால் முழுதும் அறிவின்மையுண்டாகவும் காரணஞ் சம்பவிக்குமா? அவயவக்கூட்டச் சக்தியே உயிரல்லாது வேறில்லை.

பூர்வ கர்ம நிரசனம்.

சுகதுக்கப்பிராப்தி எல்லோருக்கும் ஒன்றாக விராமைக்குக் காரணம் பூர்வ கர்மப்பலனென்றல்லவோ சொல்லுகிறார்கள்? அப்படிச் சொல்லுமவர்கள் ஒருமாதத்தில் காய்க்கும் மாங்காய்,அல்லதுதேங்காய்,பலாக்காய், முதலியவைகள் ஒரே அளவினையுடையனவா யிராமைக்குக் காரணம் என்ன கர்மமென்றால் அவர்களென்ன சொல்லுவார்கள்? ஐயே! பா

வம். இதிருக்கட்டும். வினைச்சம்பந்தமுடைய அரூபமாகிய ஆத்மா கண்ணிற்கும் கருத்திற்கும் புலப்படாதிருந்து நாலுபேர்கள் நாணிக்கொண்டு சுமக்கத்தக்க சரீரத்தை எப்படி தாங்கிக்கொண்டு நடக்கிறதோ தெரியவில்லை. இவ்வினைச் சம்பந்தம் உயிர்களுக்கு எப்படி உண்டாயிற்றோ? எந்தக்காலத்திலோ? ஜன்மம் முந்தியதா? அல்லது கர்மம் முந்தியதா? கர்மத்தால் ஜன்மமெனில் ஜன்மியாத ஜீவான்மா எந்தப்பொருள்களால். எவர்க்கு எந்த கர்மம் செய்தது? கர்மமென்பது வாக்காலும் மனத்தாலும் காயத்தாலும் அன்றோ உண்டாவதாக ஆஸ்திகர்கள் யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். சரீரத்தின் வேறாகிய ஆன்மா சரீரமின்றி எப்படி கர்மசம்பந்தத்தை அடைந்திருக்கக்கூடும்; சிலர்கன்மம் அநாதியென்கிறார்கள். பொருத்தமில்லாத இந்த அநாதிகர்மத்தை எப்படி ஒப்புக்கொள்ளக்கூடும். சுபாவமென்பதை ஒப்பாத இவர்கள் அநாதியென்பதை ஒப்புவது அதிசயமாகக் காணப்படுகின்றது. எண் ஜாணளவாகிய இச்சரீரத்தில் ஜீவான்மா இருக்குமிடமெதுவோ? அதைக்குறிக்கிறார்களில்லை. இஃதிருக்கட்டும்.

ஷையர் பரமனைப்பற்றிய அபிப்பிராயம்.

பரமான்மாவாகிய பரமேசுவரனைப் பற்றி விசாரிப்போம். அவரிவ் வுலகத்தைப் படைப்பானேன்? என்று படைத்தார்? படையாமுன்னரவரெப்படியிருந்தார்? கருணையால் படைத்தாரெனில் எல்லாவுயிர்களுக்கும் ஒரேவிதமான தேகத்தையும், போகத்தையும் ஞானத்தையும் கொடாமை யெவ்வுமோ? புற் பூடாதி மரஞ் செடிகள், புழு பாம்பாதிய ஊர்வனங்கள், நரியானையாதிய மிருகங்கள், கயல் திமிங்கிலமாதிய ஜலசரங்கள், மனிதர்கள் ஆகிய பேதமான தாரதம்மிய வுருவங்களைப் படைப்பானேனோ? அவரவர் வினைக்கேற்றபடி செய்தாரென்னில் அவரைக் கருணாநிதி யென்றும் சர்வஞ்ஞரென்றும் சொல்லாதிருக்கக்கடவர். சர்வஞ்ஞருக்கு உயிர்கள் பின்னடைவது தெரியாதிருக்குமோ? அவரிஷ்டம் போல்படைத்தாரென்பவர் அவரை நீதிபரரென்று நினையாதிருக்கக்கடவர். இதன்றி கர்மத்தைப்பற்றி முன்னரே சங்கித்திருக்கின்றோம். கேள்விக்குத் தக்க விடையளிக்காமல் சொன்னதையே வெழுக்கமின்றிச் சொல்லு மூடரன்றி மற்றையோர் அதைச் சொல்ல உடன்படார்கள். கற்றுமுணராத சில மூழையொத்தார் கேட்போருக்குத் தக்க விடையளிக்க முன்வாராது தம்மிலு மூடர் பலரிருக்கிறார்கள் இவர்களோ சமதுகல்விக்கும், மதத்திற்கும்

பெருமையை யுண்டாக்கப் போதுமென்று நினைத்து செருக்குற்றுத் திரிகிறார்கள். தாங்கற்ற நூல்களிலிருக்குங் குற்றங்களின்னவைகளென்று தெரியாமலும், பிறர் தெரிவிக்கத் தெளியாமலும் ஊதியப் பிரயோஜனத்தை நினைத்து வேஷத்தால் சமயாசாரிகள் அடியாரும், குருக்களும், ஓதுவிப்பானும், உணர்வளிக்கும் ஞானாசாரியனும், குலகுருவும், மடக்குருவுமாகி வயிறு வளர்ப்பதே சாஸ்திரங் கற்பிக்குந் தந்திர சூத்திரமோக்ஷமென்று அந்தரங்கத்தில் யூகித்துக் கொண்டு, கற்றோருக்குத் தப்பித்துக்கொண்டு காலங் கழிக்கிறார்கள்.

ஷடியார் விசாரணையில்லா ஆஸ்திகரையும் அவர் குருக்களையும் பழித்தல்.

இவர்கள் உலக விஷய ஆராய்ச்சியை யுணர்வதும், பிறருக்குணர்த்துவதும் கடின சாத்திய மென்றிதைத்தள்ளிவிட்டு, கட்டையும், உருத்திராக்கக்கொட்டையும், மயிரும், இடுப்பில் தடித்த தாம்புக் கயிறும், தாடியும், காவியாடையும் சடையும், கையிற் கொடையும், பூதியும், கோவணப் பாதியும், தரித்துப் பயனற்று காலும்வாலுமுடைய புலித்தோலும், குடுக்கையும், மான்றோற் படுக்கையும், நடைக் கலங்கார விச்சித்ர பாதக்குறடும், மார்பிற்றங்க பூணூற் சரடுந் தாங்கிக்கொண்டு, ஐயோ! பேதை ஜனங்களுக்கு நீதியைப்போல பல ஜாதிமத ஆசார பேதங்களைப் போதித்து, காதகராகி ஆசை மேலிட்டு காசின் உண்டிகளைச் சுமந்து இரகசியமாக வேசிகளுக்கும், தாஸிதாஸ ஜனங்களுக்குங் கொடுத்து, கற்று மறிவில்லாத துட்டர்களைக் கிட்டே வைத்துக்கொண்டு, எவரையுங் கட்டாயப்படுத்தி சிட்டர்களாக்குவார் போன்று கேடுவிளைக்கப் பாடுபடுகிறார்கள். இவர்களெல்லாம் பகல்வேடத் திருடர்களேயன்றி வேறில்லை. அப்படிக்கில்லையாகில், மெய்யையறிய விரும்பு மெம்போல்வார்களுக்கு விடையளிக்க முந்தாது பிந்திநின்று தஞ்சிடர்பால் சொன்னதைக்கேட்டுச் செத்தார் போற் கிடக்கவேண்டுமென என்முன்னே வாக்குத் தத்தம் பெற்றுக்கொண்டு, பின்னே உபதேசிக்கத் தொடங்குகின்றார்கள்.

இவர்கள் கருணையைப் போலவே இவர்கள் சொல்லுங் கருணாநிதிக்குங் கருணை யிருக்கிற தாக்கும். ஐயையோ? ஆசையோடு காசுகளைச் செலவிட்டு பூசை யாதிகளைச் செய்து மோசக்காரர்களாகிய வேஷக்கார குருக்களுக்கே படைத்து தனக்குத்

தாவர்களாவார்களையே இவர்கள்சொல்லுங்கருணாநிதி போக்ஷத்திற் சேர்ப்பவராகக் காணப்படுகிறார். அப்படிக்குச் செய்யாத பேரை மீசைதுடிக்க ரோஷத்தோடு நாசமாக்கி நரகத்திலல்லவோ சொருகிவிடுகிறாராம். இவர்கள் கடவுளை யிப்படிச் செய்யின் இவர்கள் செய்யாது விடுவர்களா? நீதியாக நடக்கப் போகிறார்களா? ஏதேது அது ஒருபோதுமில்லை. சிலர் பாவத்தைச் செய்து கங்காநதியில் மூழ்கச் சொல்லுவார்கள். எத்தனை பாவங்கள் செய்யினும் சேதுவாதி தரிசனத்தாலும், சிலர் கங்கையாடலாலும் க்ஷேத்திர யாத்திரையாலும், சிலர் ஏசு மகம்மது செய்யுஞ் சிபாரிசுகளாலும் தீர்ந்துவிடுமென்பார்கள். இஃதிருக்கட்டும்.

**இயங்கையர் கிறிஸ்து மதத்தை இகழ்தல்.**

சிலர் கடவுளானவர் தன் சாமார்த்தியத்தை ஜனங்களுக்குக் காட்ட குருடனை, செவிடனை, ஊமையை, சப்பாணியை, நொண்டியை, சண்டியை, மாடாதிய பல தாரதம்மிய ஜந்துக்களை ஒரு காரணமு மில்லாமலே படைத்தாரென்று சொல்லி அப்பேர்பட்ட கடவுளை நீதியதிபராகவும், பாவபரிகாரசகவும், கருணைக்கடலாகவும், கொள்ளுகிறார்கள். அன்றியு மவரை இகலோகத்தி லெங்குமிராது பரலோகத்தில் ஏகதேசத்தி லிருக்கிற பரமபிதாவாகச் சொல்லுகிறார்கள். இப்படி சொல்லுகிறவர்கள் இங்கு நம்மெதிரிற் காணு மிவ்வுலகத்தை ஏறக்குறைய 6000 வருடங்களுக்கு முன் தங்கள் கடவுள் படைத்ததாகச் சொல்லுகிறார்கள். இந்துக்களுக்கோ மூன்று யுகத்து 38,24000 வருட பஞ்சாங்கம் போகக் கலியுகத்து 5000—வருட பஞ்சாங்க மிருக்கிறது. இவர்களுள் முந்திய நூலாராகிய கிறிஸ்தவர்கள் கடவுள் முந்து நாள்களிற் வானம், பூமி முதலியவைகளைப் படைத்து அவைகள் பிறருக்கு விளங்க பிந்திய நாளில் சந்திர சூரியரைப் படைத்ததாகச் சொல்லுகிறார்கள். சூரியன் பிறவாமுன் நாள்பிறந்ததைப் பற்றி அதிசயிக்கத் தக்கதாகவே யிருக்கின்றது. இதன்றி உலக சிருஷ்டியை ஆறுநாட்களில் முடித்து 7ம்நாள் ஓய்ந்திருந்ததாகவுஞ் சொல்லுகிறார்கள். ஆதித்தனை யவர்கள் (SUN) சன்னென்று பெயரிட்டு வழங்குகிறார்கள் (SUN DAY) சன்டே என்பது சூரியன்பிறந்தநாளாகப் பொருட்படுத்தலாம். சூரியன் பிறந்த நாள் கடைநாளாகில் சூரியன் பிறவாமல் முந்திய நாட்கள் பிறந்து கழிந்ததிதம் உணரத் தக்கதாகக் காணப்படவில்லை. உலகச் சடப்பொருள்களை விளக்கும் சூரியன், சந்திரன், அக்

கினி, புதன், வியாழன், சுக்கிரன், சனி, என்னும் கிரகங்களால் வார மேற்படுகிறது. இவைகளுள் முந்தியது சூரியன், சூரியன் பிறவா முன் கடவுள் வானம் பூமியாதிகளைப் படைத்து கணக்கிட்டதெப்படி; வாரமெப்படி ஏற்பட்டது? அன்றியும் இவர்கள்சொல்லுங் கருணைக்கடலாகிய கடவுள், பாவிகளாகிய மனிதர்கள் தாம் செய்தபாவத்தை இயேசுவின் மூலமாக மன்றாடிக்கேட்டுக்கொண்டாலொழிய மன்னிக்கமாட்டாராம். ஆதாம், ஏவாள், செய்தபாவத்தால் உலகிலுள்ள யாவரும் பாவிகளானாராம். இயேசுவை நம்பாத ஒருமனிதன் புண்ணியம் பலசெய்திருப்பவனாயினும் ஆதாம் வம்சத்திற் பிறந்ததனால் பாவியே ஆவானாம். அவன்செய்த பாதகம் அவனுக்குத் தெரியாதிருக்கினும், ஆதி முதாதையாகிய ஆதாமும்ஏவாளுஞ் செய்த பாவத்தினாலும் அவர்கள் சந்ததியிற் பிறந்ததினாலும் இவன் நித்திய நரகத்தை அநுபவிக்க வேண்டியவனாகவேயிருப்பானாம். ஐயையோ! இவ்வளவு குரூர தண்டனை விதிக்கும் கன்னெஞ்சுடைய வன்னெஞ்சக்கடவுளை, அவர்கள் கருணைக்கடலென வழைப்பது பரிகாசப் பெயர் போலும். பிர்காலத்தில் ஆதாம், ஏவாள் பிசாசின் சூதுக்குள்ளாவதைக்கடவுளறியார் போலும். கிறிஸ்து பிறவாமுன் ஏறக்குறைய நாலாயிர வருஷ பரியந்தம் பிறந்திறந்தவர்களெல்லாம் நித்திய நரகத்திற்கே ஆளாவார் போலும். முதன்மை மனிதன் செய்த பாவத்திற்கு நெடுங்காலத்திற்கு பின்னுதித்து பல தருமங்களையும் நீதியையும் கடுமானவரை செய்தார்க்கும் விமோசன மார்க்கம் சிறிதும் நினையாதிருப்பவரை நியாயாதிபதியெனச் சொல்லுவது முன்போலப் பரிகாச நாமம் சூட்டியதேபோலும், கிறிஸ்துபிறந்தபின் இறந்தாரினும் முன்னிறந்தாரினும், இப்பொழுதிருப்பவர்கள் கணக்கில் கொஞ்சமேயாவார்களன்றோ? 100-வருடங்களுக்கொருதரம் உலகம் புது மனிதரால் ஆளப்படுகிறது. இதனால் உலகிலிருப்பவர்களைக்காட்டிலும் இறந்தவர் தொகை 60,000 மடங்கதிகமாகிறது. இப்படி நியாயத்தீர்ப்புக்காலவரை எவ்வளவு அதிகப்படலாம். அப்போது அவர்களெல்லாம் எந்த வானலோக சொர்க்கத்திலும் நரகத்திலுமிருப்பார்களோ? அவை இந்த பூமியைப் பார்க்கிலும் எத்தனை மடங்குபெரியதோ? வரம்பற்றதாயின் ஆகாயமேயாம். அப்போது ஆகாயத்தில் ஆதாரமற்றிருப்பார்கள் போலும். இந்துக்கள் கூறும் அசம்பாவித பிறப்புகளைப்போல இவர்களும் கிறிஸ்துவின் பிறப்பைக் கூறுகிறார்கள். பூஜாரி-அல்லது குறத்தி அல்லது ஜோசியன் ஆகிய இவர்கள் கூறும் குறியைப்போன்ற தீர்க்கதரிசனத்தையும் நம்பியிருக்கிறார்கள். அன்றி ஆதியாகமத்தில்

மந்திரங்களும் அவற்றிற்கு சக்தியும் உண்டாயிருந்ததாக வொப்புகிறார்கள். வான நக்ஷத்திரம் தெய்வ வரவைத் தெரிவிப்பதாகவும் ஏற்கிறார்கள், ஜீவலக்ஷணத்தைச் சிறிதும் தெரிந்தவர்களாகத் தெரியவில்லை. சுவர்க்க வர்ணனையும் நரகவர்ணனையும்சொல்லத்தெரியாமல் சொர்க்க நரகப்பெயர்களை மாத்திரம் சொல்லுகிறார்கள். ஆராய்ந்து பார்த்தால் இந்துக்கள் புராணமே இவர்கள் கற்பனைகளுக்கும் ஆதாரமாக விருந்ததா வெளியாகிறது. ஆராய்ச்சியில் நில்லாதவைகளைப் பன்னிக் கேட்பவருக்கு தேவாகசியத்தைப்பற்றி சர்ச்சை செய்யலாகாது என்று சொல்லிவிடுகிறார்கள். அன்றியும் விவாதம் வந்தபோது கடவுள் நாமத்தை வீணிலுச்சரிக்காதே என பைபிளில் தங்களுக்கு ஆணை பிறந்திருப்பதாகச்சொல்லி அகலப்போய்விடுகிறார்கள். அந்நியமதங்களின் கருத்தையறியாமல் கொள்ளையாகக் கேள்விகளும் நிந்தைகளும் பேசியூரெங்கும் தூற்றித் திரிகிறார்கள். இவர்களில் சிலர் தேவமாதா கிறிஸ்து முதலியவர்களின் பிரதிபிம்பங்களைச் செய்து இந்துக்களைப்போல விக்கிரஹ ஆராதனையும் உற்சவாதிகளும் செய்து வருகிறார்கள். விக்கிரக ஆராதனை கடவுளுக்கு விரோதமென்றும், பாவமென்றும் ஒரு சாரார் சொல்லுகிறார்கள். எல்லாருமே கடவுளெக்காலத்திலும் அரூபியேயென்றும், ஆவியாக இருக்கிறாரென்றும், சித்தாந்தப் படுத்துகிறார்கள். சில சமயங்களில் கடவுளானவர் பிதா, புத்திரன், பரிசுத்தஆவி, யென்னும் முக்கூறாகவுமிருக்கிறதாகச்சொல்லுகிறார்கள். கடவுளென்றும் அரூபியேயாயின் அவரை வழிபடுமிவர்கள் உலகமுடிவாகி நியாயதீர்ப்புக்காக அவரையிவர்கள் இங்கேனும் மோக்ஷமுதலிய மற்றெங்கேனும் காணக்கூடுமோ? இப்படியிருக்க நியாயதீர்ப்புச் சமயத்தில் குமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தி லிருந்துவிசாரணை செய்து பாவிகளை நரகத்திற்கும், புண்ணியர்களை மோக்ஷத்திற்கும் அனுப்புவாரென்றும் நம்புகிறார்கள்; உருவமில்லாத கடவுளுக்கு முன்னிடமும்பின்னிடமும் வலப்புறமும் இடப்புறமும் எப்படி கண்டுபிடிக்கக்கூடுமோ? யோசித்தார்களில்லையே. பரிபூரணமாகிய தேவன்முன் யாவரையும், யாவற்றையும், கொண்டுசெல்லுவதென்றால் என்ன? இதிருக்கட்டும்.

**இயற்கையென்பார் மகம்மதிய மதத்தைப் பற்றி சொல்லல்**

இவர்பின் வந்த மஹம்மது என்பவர் செய்த குரான் என்னும் புஸ்தகத்தை நம்பும்பேர்களில் ஷரியத்தென்னும் ஒருபாகத்தை முக்கியமெனக் கொள்ளும் பெயர்கள் கிறிஸ்தவர்களைப் போலவே உலகோற்பத்தி முதலியவைகளை ஒப்பிச் சொல்லுகிறார்கள். கிறிஸ்துவையும் ஒப்பிக் கொள்ளுகிறார்கள். ஆனால் இவர்களுக்கு மவர்களுக்

றுஞ் சில வித்தியாஸமுமுண்டு. அதேதெனில், கிறிஸ்துவர்கள் திராட்ச ரசமாகிய ஒயினைக் குடிப்பதும் வேண்டாமென்ற பன்றியின் மாமிஸத்தைப் புசிப்பதும், சுன்னத்தென்னும் தீட்சையைக் கைவிடுப்பதும் கிறிஸ்துவர்கள் மீது குற்றமென்று சொல்லுகிறார்கள். இதன்றி மஹம்மதை நபிநாயகமென்று ஏற்றுக்கொள்ளாமையானது கிறிஸ்தவர்கள்மீது பெருங்குற்றமென்று மஹம்மதியர் வேறுபடுத்துகிறார்கள். அன்றி மற்றவற்றில் சமமாகவே கொள்ளுகிறார்கள் அன்றியும மஹம்மதியரிடத்தில் விக்கிரஹம் செய்வதோடு மிருக பக்ஷியாதி வடிவங்களைச் சித்திரிப்பதும் மிகுபாவமென்னும் ஓர் விசேஷமிருக்கின்றது. மஹம்மதியரில் யாராவது ஒருவன் உயிருடையமனித, மிருக, பக்ஷிமுதலிய எவ்வித பிராணி உருவத்தை யெழுதியபோதிலும், அல்லது மெழுகு முதலிய பதார்த்தங்களால் அவ்வுருவங்களைச் செய்யினும், கடவுளவர்கள் மீது கோபங்கொண்டு, "நான்செய்யும்சிருஷ்டிச் செயலை நீசெய்தமையால் நீ இவைகளுக்கு உயிரைக்கொடுக்க வேண்டும். கொடாயாகில் விடேன்" என்று அவனைமிக்க கடினதண்டனைக்குள்ளாக்குவாராம். இதனால் மஹம்மதியர் விக்கிரஹ ஆராதனைச் செய்யாதிருப்பதோடு விக்கிரஹங்களையும் படங்களையும் வீடு முதலிய விடங்களில் வைத்திருக்கப்படாதென்பதே மஹம்மது நபியின் பிடிவாத மென்பது வெளியாகின்றது. இப்படி விதிப்பானேனெனில் படங்களை அலங்காரத்திற்கு வீட்டில் சேர்த்தால் நாளடைவில் யாருக்காகிலும் அப்படத்திலுள்ள உருவத்தையுடையவர் சரித்திரம் கேட்கவேண்டி வரும் அதன்பின் அவர்செய்த மகிமை உபகாரக் குணங்களைக்கேட்டு அவர்போலாக பிரியமுண்டாகி, அவர்மீ தபிமானம் வைக்கவேண்டி வரும். அபிமானம் வந்தபின் படத்திற்கு மரியாதையான காரியஞ்செய்யவேண்டிவரும். அப்படிச்செய்யின் விக்கிரஹ ஆகாரனைக் கொப்பாம். முடிவில் விக்கிரஹ ஆராதனைச் செய்யும் இந்துக்களாக வேண்டிவரும். அப்படிவரின் தம்மதம் நில்லாதென்று இப்படி விதித்ததாகத் தெரியவருகின்றது. இப்படிக்கிருந்தும் மகம்மதியர் மொகரம் பண்டிகையில் பஞ்சா விக்கரக பூஜையைப் பண்ணாது விடவில்லை. இது இவ்வளவோடு நிற்கட்டும். இனி உலகத்திலுள்ள பல மதத்தினர்களும் உருவத்தைச்செய்தும் செய்யாமலும் சிறிது சிறிது வித்தியாஸமாக வேறுபட்டு பூசித்தும் தோத்திரஞ் செய்தும் பாவமன்னிப்பை யடைந்து நல்லகதியைப் பெறவேண்டுமென

கடவுளை வழிபட்டு வருகின்றார்கள். முடிவாக யோசித்துப் பார்க்குமிடத்து நாம் சொல்லுகிற அறுபத்துநான்கு வகைப்பட்ட பூதியங்களே, தாது, மூல, ஜீவன், என்னும் முப்பிரிவினையடைந்து, மூவுருவமாகி, பருத்தாகவும், ஆகாரமாகவும், ஐசுவரியமாகவு மிருந்து சர்வசுகத்தையும் செய்துவருகின்றன. யாவரும் போகத்துக்குரிய பாக்கியமாக நவதானியத்தையும், நவலோகத்தையும், நவரத்தினங்களையும் பசுவாடு முதலிய வற்றின் மந்தைகளையும் வாகனமாகுங் குதிரை, யானை, முதலியவைகளையும், வீடு தோட்ட முதலிய விடத்தையும், மனைவி, புத்திரர், பந்துக்கள், முதலிய மனிதரையும், அல்லவோ மதிக்கிறார்கள். அன்றிக்கொடிகளையும், செடிகளையும், மரங்களையும், புற்களையும், உல்லாசமாகத் திரியுஞ் சிங்கார வனங்களாகவும், மா, பலா, தெங்கு, முதலிய பலத்தைத்தரும் விருக்ஷங்களின் சமூகத்தை தோட்டங்களாகவும், கரும்பு, செந்நெல், கேழ்வரகு, முதலிய புற்களைப் பயிராகவும் நினைக்கிறார்கள். இவைகளெல்லாம் பூதியங்களின் பிரபாவமே யன்றி வேறென்ன, இப்பூதியங்களே கண்ணுக் கலங்காரமாகும் பல நிறங்களாகியும் பல்வகை உருவமாகியும், நாவிற்கு உருசியைத்தரும் சுவைப்பொருள்களாகியும் மூக்கிற்கு வாஸனை பயக்கும் பல நறுமண புஷ்பாதிகளாகியும், காதிற்கினிமை செய்யும் பல பேத வோசையைத் தரும் காற்றாகியும், பிராணவாயுவுடைய பிராணிகளாகியும் பரிச வின்பத்தைத் தரும் ஸ்திரீ புத்திரர்கள் முதலியபொருள்களாகியும், உபகரிக்கின்றன. மேலும் இப்பூதியங்களின் செயற்கையால் உண்டாகும் வியாதி முதலிய துன்பங்களுக்கு, அவைகளை நிவர்த்திக்கும் உப்புக்களாகவும், உபரசங்களாகவும், பாஷாணங்களாகவும், உலோகங்களாகவும், நான்கு பிரிவை யடைந்து தாதுக்களென்னும் பெயரால், மருந்தாகி அத்துன்பத்தைப் பரிகரிக்கின்றன. இவ்வித மகிமையை யுடைய பூதியங்களின் குணகுணங்களை ஆராய்ந்தறிவதை விட்டு சோம்பேறிகளாம் அந்தரங்கக் காமிகளாகிய சாமிகளின் பேச்சால் தேவர்களாலும் மந்திரங்களாலும் சௌக்கியத்தைப் பெறலாமென்று மனிதர் நினைத்து பிரயாசை யெடுத்துக்கொள்ளுகிறார்கள். அன்றி திவ்விய தேசங்களிற் சென்று ஆங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கி சிவ விஷ்ணுவாதி பிம்பங்களைச் சேவித்ததால் பூர்வஜன்மங்களிற் செய்த பாவத்தால் வந்த வியாதி முதலியவைகள் தொலைந்து பல சௌக்கியங்களுண்டாகிப் பலர்சுகமடைந்தனரென பலபாமரர்கள் நினைக்கிறார்கள். இவையெல்லாம் பூதியங்களால்

விளைந்த சுகமல்லது வேறல்ல. எப்படியெனில் மனிதசஞ்சாரங் குறைந்தும் நல்ல க... ...தும் நிருமல இடங்களுக்கு வியாதியாளர் சென்று வசிப்பதால், அசுத்த காற்றாலும், அசுத்த ஜலத்தாலும் விளைந்த வியாதி நீங்க, அவர்கள் சுத்தஜல சுத்த காற்றாகிய பூதியங்களால் சுகமடைகிறார்கள். கோவிலில் காணப்படுகிற கல் உலோகங்களாற் செய்யப்பட்ட தெய்வங்களும் இப் பூதியங்களின் விகாரவடிவமே யல்லாது வேறில்லை. இப்படியே இப்பூதியங்களின் விரிவைப்பற்றி பேசுவோமாகில் யாவும் பூதியங்களின் மகிமையாகவே முடியுமல்லாது வேறொன்றாக விருக்குமென நினைக்கவிட மில்லை. எவரெவ்வித சௌக்கியத்தை எவருக்கு உண்டுபண்ணினாலும் அவை இப்பூதியங்களா லுண்டாயின வென்றே ஆய்ந்து யோசிக்கில் காரணம் புலப்படாமற்போகாது.

இவ்வுலகத்திற் கற்றார் கல்லாராகிய பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர், குருக்கள் தேவர்கள் முதலிய பிரிவினைகளுடைய யாவரும், இப்பூதியங்களின் விகாரவடிவாகிய பலபுஷ்பதாம்பூல, காஞ்சன, சேல அரதனாதிகளுக்கே ஆசையுற்றிருக்கிறார்களென்று சொல்வதில் யாதொரு ஆக்ஷேபமும் எக்காலத்தும் உண்டாக மாட்டாது. மண், பெண், பொன்னாதியவைகளை விட்டுத் துறந்து வெறுத்தவர்களைப்போல காஷாயாதி வேஷமிட்டுத் திரிந்து வாயாற் பகட்டும் பொய்ஞ்ஞானிகளும், வாய் பேசாத மௌனிகளும் இப்பூதியங்களின் இச்சையை விட்டவர்களென்று சொல்ல நம்பிக்கையில்லை. இக்கள்ளக் கர்மபந்தஞானிகள் ஆசையையும், மோசக்கருத்தையும், விவரிக்கில் வாணாட்பரியந்தம முடிவுபெறாதென்று பூதியமதத்தினர் சொல்லுகிறார்கள். இவ்வளவோடு இவ்வுலகஞ் சுபாவமென்னும் மதத்தினர் கொள்கையை நிறுத்திவிடுகிறேன்.

பூதியமதத்தினர் விசாரணையில்லா ஆஸ்திகரினும் மேல் என்றல்.

ஹே! புத்திமானே! சிலமூடர்கள் நெடுங்கால வழக்கமாகப் பழகிவரும் வழக்கத்தையும், அப்பழக்கத்தால் தங்களுக் குண்டாகியிருக்கும் மேன்மையையும், வரும்படியையுங் கருதி உள்ளதனை யுள்ளபடி யுணர்ந்துரைக்கும் இப்பூதிய மதத்தினரை நாஸ்திகரென்றும், தங்களை ஆஸ்திகரென்றும், ஆஸ்திகர் நாஸ்திகர் முகத்தைப் பார்க்கக்கூடாதென்றும், வஸ்துவிசாரமில்லாத தம்போன்றார்க்குச் சொல்லிக் கொடுத்தார்கள். இன்றைக்கும்

சொல்லிக்கொ[illegible]கள் காலத்திற் பிரத்தியக்ஷமா க வுள்ளதை உ[illegible] த்தினரை நிந்தித்து மூடர்களெனவும் [illegible]வும் ரக்கூடாத தேவதைக[illegible] இறந்தபின் இனிமேலுண்டாகிச் ச[illegible]ர்க்காதி[illegible] தந்திர கருமங்களாற் [illegible] போச, அவற்றை விரும்புவோர்களிடத்தில் அத்தேவ[illegible]லிக்க, பூஜோற்சவ யாக யக்ஞாதிகளுக்கு அப்பிரயோஜனமென[illegible] நிஷேதித் துத் தள்ளிய பூதிய விகார வடிவப் பொருள்க[illegible]சேகரிக்குந் தங்களைப் புண்ணியவான்களெனவும் புகழ்ந்துக் [illegible]ர்க அன்றியும் கல்வி, தவம், தருமம், வாய்மை, நீதி, வ[illegible]ளமை பிறர்மனை நயவாமை, பிறர்பொருளிச்சியாமையாதிய [illegible]ணை முடையார் எவரேனு முயிரோடிருப்பாரேல் அவர்களை யா[illegible] ாதவர்களை யென்றும்,மூடசிகாமணிகளானாலும் அல்லது[illegible] கற்றவர்க ளானாலும், தூரபிமான முடையவர்க ளாகவே யிரு[illegible] காணாது கேட்டவைகளையே சண்டதாகச் சொல்லியும், எழு[illegible] மிறந்திருப்பார்க ளாகில், அவர்களை முன்னோர்களென்றும், [illegible] களென்றும், அடியார்களென்றும் பூசித்தும் புகழ்ந்தும் வருவா[illegible] கள். இத்தகைய ஆராய்ச்சியில்லாத மூட ஆஸ்திகான் ஆராய்ச்[illegible] செய்யும் புத்திமான்களாகிய நடுவு நிலைமை குன்றாத பூதிய மத[illegible] தினரை நாஸ்திகா ளென்று கூறுவது அவிவேகமென்றே நினைக்[illegible] றேன். ஏனெனில் ஆஸ்திகரெனா சைவ, வைஷ்ணவ, பௌத்[illegible] சாக்தேய, பைராகி சந்யாசாதி வேஷங்களைத் தரித்துக்கொண்[illegible] ஈசுர, ஜீவ, உலக ஆராய்ச்சி சிறிதுமில்லாமல், ஏழைஜன[illegible] களின் சப்பாத்தியத்தைப் புசித்துக்கொழுத்து புத்திமான்[illegible] யும், நீதிமான்களையும் நிந்தித்துத் திரியும் மூடர்களைக் கடவு[illegible] கும், நீதிக்கும், மனிதத் தன்மைக்கும் அஞ்சாது வஞ்சி[illegible] நாஸ்திகர்க ளென்றே கொள்ளவேண்டு மல்லாது, பூதிய ம[illegible] னரைக் கொள்ளுவோர் குருடரே யாவார்க ளென்பது து[illegible] இங்ஙனம் நான் சொல்லிவந்த பூதியமதத்தினர் கொள்கை[illegible] வுளில்லை யென்று கொண்டது மல்ல. கொள்ளுகிறது [illegible] கொள்வது மல்ல. கடவுளுண்டா இல்லையா வென்றாராயு[illegible] மாம். ஆனால் யாதுந்தெரியாமலே வாழ்ந்துவேஷத்தால் [illegible] கடு கூறுவோரை அவர்கள் லக்ஷியஞ் செய்வோர்க ளல்லர் [illegible] குணனே! நானிதுவரை சொல்லிவந்தவைகளை யெல்[illegible]ம் நீ யுணர்ந்து கொண்டாயல்லவோ? இனி இவ்வுலகம் சூ[illegible]மை யென்று சொல்லும் ஆஸ்திகர்களது கருத்தையும் அவர்கள் கூறுங் காரணத்தையும் விவரிக்கப் புகுகின்றேன்.

## உலகம்செயற்கை என்பவர்கருத்து.

நீதிமானே!

கடல்சூழ்ந்து சிறப்புற்ற இச்செழுஞாலத்தை அபார கருணா
நிதியாகிய கடவுளின் சிருட்டி யென்பவர் கருத்தை நீ கவனமா
கக் கேட்க வேண்டியது. இம்மதமோ உலக மியற்கை யென்றும்
உலகம் தோற்ற மென்றும் சொல்லும் இருமதத்தினர்க்கு மிடை
யினின்று இருவரோடும் போர்கொடுக்க வேண்டிய மதம். இதி
ஏன் அநேக பேத மதங்களும் பேதாசாரங்களும், பேதபோத
களும், உபகாராபகாரங்களுமாகிய அநேக பிரிவுகளடங்கியிருக்
கிறன. இதை அதிக சிரத்தையின்றிக் கேட்கும் பட்சத்தில் உன்
சித்திற் றீராத சந்தேக மென்னும் ஊற்றுண்டாகி விபரீதமென்
னும் ஆறுகப் பெருக்கெடுக்கும். அன்றியும் உன் மனம் ஏதாவ
ரர் விபரீத பாவனையி லழுந்தி மிக்க சாஞ்சல்யத்தைக் கொடுக்
மிடமுண்டாகும். இச்செயற்கை மதத்தினரொருவர் மற்
ரு மதத்தினர் நூலின் கருத்தை யறியாமலே நூலுக்கும்
ம் சொல்லும் சிருஷ்டியாதி கிரமத்திற்கும் தாமபிமானித்த தெ
த்திற்கும் விரோதமான வார்த்தை யெவர் வாயினின்றும் வந்த
க்திரத்திற் சர்வகாரியங்களும் முழுகிப் போனதாக நினைத்து
ரபாவேசங் கொண்டு விரோதமாகச் சொன்னவனுக்கு எவ்வி
திலும் பல தீங்குகள்செய்யவிடந்தேட உத்தேசித்து விடுவார்
ஙிப்படி தீங்கான காரியஞ்செய்ய விடங்கொடுக்கு மிவ்வழி
மத வார்த்தைகளைப் பொறுமையோடுங் கேட்டுத் தெளிய
டியிருப்பதால் நீ அபிமான மற்றவனாக விருந்துகேட்கக் கட
வை. அன்றியும் ஒரு மதத்தினர் மற்றொரு மதத்தினைரைத் தோற்
கடிக்கச்செய்யவும் அல்லது நிர்மூலமாக நாசப்படுத்தவும் துணியுந் தம்
மதத்தினர்களை அத்தந்த வகுப்பி லுள்ளார் புண்ணிய ரென்றும்
பரோபகாரிகளென்றும், அருளுடையா ரென்றும் பேசுவது வழக்க
மாகையால், நான் சொல்லும் ஆஸ்திக மதத்திலும் யாவருக்குங்
கோப முண்டாக விடமிருக்கு மென்பதி லாக்ஷேபமில்லை. இவர்
கள் பரோபகாரங்களெல்லாம் தாங்கள் கொண்ட துரபிமானத்
தையும், மூடமூர்க்க கொள்கையையும் ஊரெங்கும் நிறைக்க நி
னைத்தலே யொழிய வேறுகா. இவ்வுலகம் செயற்கை யென்று
போதிக்கும் ஆஸ்திகாளென்ற பட்டப்பெயர் தரித்துக்கொண்ட
வர்கள் தங்களுக்குள்ளேயும் ஒருவருக்கொருவர் மாறுபட்ட பல
விகற்பங்களைக் காட்டித் தம்மதத்தினரோடும், புறமதத்தினரோ

டும் வேறுபடும் மதத்தினரநேகராயினும், சந்திரகுலத் தரசனாகிய பரதனு லாளப்பட்ட இவ்விந்து தேசத்தில், பூர்வ இந்துக்கள், நவீன கிறிஸ்தவர்கள், மகம்மதியர்கள் என்னு மும்பிரிவினரே பிரபல மானவர்களாகக் காணப்படுகின்றனர், ஆனால் சைனா, ஜப்பான், பர்மா,முதலிய தேசங்களில் பௌத்தமதமும் பிரபல மாகவே யிருக்கின்றதாம். இவர்களில் கிறிஸ்தவர்கள் பிறர்கொள்கைகளைப் பழிப்பதும் பிறர் மதத்தி லாக்ஷேபனைகளைத் தேடுவதும் தம்மதத்தைக் காரணஞ் சிறிதுமின்றித் தாமே புகழ்ந்து பேசுவதுமே தொழிலாக வுடையவர்கள். தத்துவ மார்க்கத்தில் தலையிட்டுக் கொள்ளுஞ் சத்தி சிறிதுந் தம்பாலில்லாத சிறுவர்கள் போன்றே காணப்படுகிறார்கள். அநாதாரப் பேச்சுகளை யதிகமாகப் பேசுவதிலும், பொய்ப்பிரியம் பொய்ந்நேசங் காட்டித் தெருக்களிற் பிரசங்கிப்பதிலும் ஜீவனோபாயந் தேடுபவர்களாகவே யிருப்பாரும் சிலருண்டு.

மகம்மதியரோ தெருக்களிற் பிரசங்கிப்பதும், அந்நியத் தூஷணைகளை யூரெங்கு நிரப்பப் பாடுபடுவதும் காணோம். ஆனால் தம்மதத்திற் சார்ந்தோர்களுக்கே தம்மதப் புகழ் தற்காலம் போதித்து வருகின்றனர். மகம்மதியர்களும் கிறிஸ்தவர்களைப்போலவே கொல்பவர்களும் சொல்பவர்களு மானாலும், தம்மதத்தினர் மட்டேயன்றி பிறர்பால் பிரசங்கிக்க வூக்கங் கொண்டெழு மேக்கங் கொண்டவர்க ளல்லர். அன்றியும் மகம்மதியர்கள் நான்கு புத்தகங்கள் கடவுளாலனுப்பப்பட்டவைகளென்றும், அவைகளால் வரலாறும் மதமும் ஒன்றென்றும், நான்காவதாக முடிவிலனுப்பிய குரானே சித்தாந்தமானதென்றும், மற்றவை பூர்வபக்ஷமென்றும் கூறுவார்கள். இனி உலகம் படைப்பென்னும் ஒவ்வொரு மதத்தைச் சார்ந்த எந்த வகுப்பினரும் உலகமும், ஜீவான்மாவும், நரகமும், சுவர்க்கமும், பரமான்மாவென்னுங் கடவுளுமாகிய ஐந்துபொருள்களையும் உண்டென்றுகொள்ளுமவர்களே. கடவுள் கட்டளையாகிய வேதம் விதித்த நன்னெறிகளை கைக்கொண்டு நேர்ப்படிந்து நடப்பாருமின் மோக்ஷத்தையும், அப்படியின்றி யிஷ்டம்போல் நடந்தவரின் நரகத்தையு மடைவா ரென்பதில் எவர்களும் பேதப்படுகிறவர்களல்லர். அன்றியும் கொலைசெய்தல், பொய்பேசுதல், களவாடல், கள்ளருந்தல், குரு பிறர்க்கை யென்னும் பஞ்ச மஹா பாதகங்களையும் செய்ய லாகாதென யாவரும் ஸம்மதிப்பவர்களே, இதன்றி தம்மைத் தாமே மேன்மைபடுத்திக் கொள்ளும் அகங்காரமும், செல்வமடைந்தும் பிறர்க்

குபகரிக்க மனமில்லாது புதைக்கும் உலோபமும், அந்நியர் மனை மீது ஆசை வைத்தலையுங் காமமும், தனக்குண்டாகும் பலத்தைத் தடுத்தார் மீது கொள்ளும் குரோதமும் அதிக வுணவின் மீதுள்ள போஜனப் பிரியமும், அந்நியர் சௌக்கியத்தைப் பார்த்தானந்தியாது அழுகை கொள்ளும் பொறாமையும், தனக்கு நன்மையைத் தானே தேடிக்கொள்ளவேண்டுமென்பதை நினையாது வீண்காலங் கழித்து மந்தமென்னுஞ் சோம்பலும், கடுங் கோபமுமாகிய தலைமையான பாதகங்களிவ்வேழும் எந்த மனிதனிடத்து மிருக்கலாகா தெனவே போதிப்பவர்கள். இவற்றுள் யாவரும் பேதப்படுகிறவர்களல்லர். முன்சொல்லிய மூவருள் கிறிஸ்தவர்களும் மகம்மதியர்களும் நம்பிக்கையே பிரதானமென்னும் மதத்தினர்கள். நம்பிக்கை விசுவாசம், பக்தி என்னுஞ் சொற்கள் ஒரே பொருளையுடையன. இந்துக்களோ நம்பிக்கையும், ஆராய்ச்சியும், ஆசரிக்க வேண்டுமென்னு மதத்தினர். கல்லாதவர்களும், சிறுவர்களும் பேதைப் பெண்களும், நம்பிக்கைக் குரியவர்களாயிருக்கவேண்டுமென்றும் ஆராய்ச்சிக் கதிகாரிக ளல்லரென்றும் கற்றவர்களை அன்பிற்கும் ஆராய்ச்சிக்கும் அதிகாரிகளென்றும் பிரித்துக் கூறுபவர்கள்.

நம்பிக்கை வைக்கத் தகுந்தவர்களிலும் கன்மிகளெனவும் பக்தர்களெனவும் இரண்டு பிரிவினையுடையவர்க ளிருக்கிறதாக அபிப்பிராயப் படுகிறார்கள். கன்மம் வாக்காலுங் காயத்தாலுஞ் செய்யத்தக்க ஒழுக்கத்தைப் போதிப்பது. இது செய்தாருக்குச் சுவர்க்க முண்டாமென்பது இந்துக்கள் நூலின் றுணிபு. சுவர்க்க மென்பது நற்பொருள், நற்குணம், நல்லோர் கூட்டுற வெனப் பொருட்படும். அன்றியும் கன்மிகள் கற்றோர் நடக்கும் நல்வழக்கத்தைப் பார்த்து அவர்க ளாசாரப்படி நடந்து வரும் சதாசார முடையவர்களே யன்றி மூடர் சொல்லில் முதன்மைப்பட்டு நடந்து வருபவர்களல்லர். அன்றியும் வேத விதிப்படி அறிந்து செய்யும்வர்களைக் கொள்ள வறியாது போனாலும் பிறருக்குத் தீங்கற்ற பூர்வ வழக்கங்களில் குன்றாது நடந்துவருபவர்களைக்கொண்டு தங் கருமத்தையுங் குணத்தையுந் திருத்திக் கொள்ளுகிறவர்கள். பக்தர்க ளென்போர், தாய், தந்தை, மூத்தோர், குரு, சத்சாத்திரங்களிடத்தில் வைத்த அன்போடு வேத விதித் தெய்வத்தினிடத்தி லன்பு வைத்து உபசார தோத்திரத் தினைச் செய்து வருபவர்கள், புராணங்களையே வாசித்து வேதத்தி

திற் சிறிது மறியாதிருக்கும் குருமார்களிடத்தில் உபதேசாதிகளை
பெற்றுப் பூசை மந்திர ஜெப தப முதலிய அங்கங்களைப் பரிபாலி
த்தும் வருகிற பக்தர்களும் சிலர் இருக்கிறார்கள். ஆனாலும்
இவர்கள் கல்லாதார் வகுப்பிற் சேர்ந்த மூட பக்தர்களே யாவார்
கள். ஏனெனில் வேதமே எவர்களுக்கும் பிரமாண நூல். வேதத்
தை மணி மந்திர மருந்தாகவும் கடவுளைப் பவரோக வைத்தியரா
கவும் பிறவியை ரோகமெனவும் முற்கூறியிருக்கின்றேனல்லவா?
கற்றும் ஆராய்ந்துணராத அறிவுடைய சிலர் தம்போலும் வஞ்
சகர் கட்டிவைத்த தலபுராணங்களையும் அசம்பாவித கதைக
ளடங்கிய புராண உபபுராணங்களையும் அவற்றின் ஆதரவால் பிற
ந்த ஆகமங்களையும் அவற்றில் ஸ்தாபிக்கும் கோவில் குளங்களை
யும் விபரீத பாவனைகள் விளைநிலமாகிய பிறவிச்சாதிகள் முதலிய
வைகளையும் வேதவிருத்தமாகவும் முன் பின் முரணாகவும் குள
றிக் கொட்டி உளறித்திரிபவர்கள்; முதனூலாகிய வேதத்தை மு
தனூ லல்லவென்பர். வேதம் முதனூல் என்பதை இந்துக்களால்
சொல்லப்பட்ட எல்லா நூற்களிலும் பெறலாம் என்பதற்கு ஆட்
சேபம் எவ்விதமாகவும் எக்காலத்தும் உண்டாகாது. வைணவர்கள்
கொள்ளும் பாஞ்சராத்திர வைகானசாதிகளும், சைவர் கொள்ளும்
ஆகமங்களும் முதனூல் என்பது கற்றார்க்குச் சிரிப்பைத் தரு
மல்லாது சித்தத்தை பயப்பதாகாது. "வினையினீங்கி விளங்கிய அறி
வின் முனைவன் கண்டது முதனூ லாகும்" இதுவேவேதம். சார்
புநூல் "முன்னோர் நூலின் முடிபொருங் கொத்து, பின்னோன்
வேண்டும் விகற்பங் கூறி யழியா மரபினது வழிநூலாகும்"
இவை மநுதர்மாதிசாத்திரங்களாம். "இருவர் நூற்கும் ஒருசிறை
தொடங்கித் திரிபுவே றுடையது புடைநூ லாகும்" இதுபுராண
மாம். முதனூலாகிய வேதமறிந்து சார்புநூலாகிய தர்மசாத்திரங்
கற்று புடைநூலாகிய புராணாதிகளின் உண்மை அர்த்தங்கொள்
ளாமல் ஐயந் திரிபு நீங்காத அறிவால் உருவகாதி அலங்காரமாகக்
கூறிய கதைகளை மெய்யெனக்கொண்டு வருபவர் மூட பக்தராக
காது மெய்யறிவுடையராதல் எங்ஙனம்? இதுநிற்க, சில விவேகி
கள் ஆராய்ச்சி அறிவோடும் கூடிய பக்தியே பக்தர்களுக் கிருக்க
வேண்டுமென்று ஒப்புகிறார்களே யொழிய கேவல நம்பிக்கையே
போதுமானதென்று சொல்லுகிறவர்களைக் கற்றவராகக் கொள்ளு
கிறார்களில்லை. கல்வியறிவிருந்தும் ஆராய்ச்சி பயனற்றதென்றும்
கேவல நம்பிக்கையேபோதுமானதென்றும் கற்றோரும்வாதாடு
பவர்கள் பலரிருக்கிறார்கள். இவர்கள் கற்றவர்களேயானாலும்
பரோபகார சிக்ஷையில் பயிலாது ஸ்வப்பிரயோஜனம் பயின்ற

முழுக்காதக மனமுடையோர். இவரால்நமக்காவதென்ன? இனிச் சாங்கியம், ஞாயம், வைசேஷிகம், பாதஞ்சலியம், பூர்வமீமாம்சை உத்தர மீமாம்சை என்னுஞ் சாத்திரங்களை எழுதியவர்களோவென்றால் ஆராய்ச்சியால் வரும் ஞா த்தாலன்றி மோட்சம் ஓர்போதும் உண்டாகாது என்பவர்கள். ஞானமோ வேதத்தாலன்றி விளையாது. வேதமோ எல்லா முணர்ந்த கடவுளின் ஏவலாளரால் சொல்லப்பட்டது. அது யுக்திக்கும் அநுபவத்திற்கும் ஓர்காலத்திலும் முரண்படாது. ஒழுக்கத்தைத் தரும் கன்மமும், மனசுத்தியைத் தரும் பக்தியும், ஆராய்ச்சியா லுண்டாகும் ஞானத்திற்கு சாதகமாக இருக்கின்றனவென்று வேதங்கற்றோர் விரிவாகக் கூறுகின்றார்கள். இதனால் இவர்கள் வேதவிதித கன்ம, பக்தி ஞானம் எனும் மூன்று பிரிவினையும் ஒப்புகிறவர்கள். துவைத விசிஷ்டாத்வைதமென்னும் இருபிரிவினை வேதார்த்தத்தால் மேற்கொண்டொழுகி வருபவர்களும், ஜீவனைச் சடமாக ஒப்புகிறவர்களல்லராயினும் நியாய வைசேஷிகர் மதப்படி மற்றயுக்திகளை ஒப்பிக்கொள்பவர்களே. எல்லா மதத்தினரின் கொள்கையும் ஜீவான்மாவும் பரமான்மாவு முண்டென்பதே. ஜீவனுண்டு ஈஸ்வரனில்லையென்னும் நிரீஸ்வர சாங்கிய மதமும் ஒன்றுண்டு. அழியாத ஜீவன் பூதியங்களின் வேறாய் ஒன்று உண்டென்று ஏற்றுக் கொள்வதால் இச்சாங்கியரையும் ஆஸ்திகரென் றொப்பிக்கொள்ள வேண்டியது. பௌத்தர் நாஸ்திகர் என்பதில் தடையில்லை. எவ்வித துன்பத்தையு மின்பத்தையும் அநுபவித்துவரும் ஜீவனை இல்லையென்பவர் எவ்விதத்தில் ஆஸ்திகராவர்?

சற்குணசீலனே! ஜீவன், ஈஸ்வரன், ஜகம் என்பவரைப்பற்றிச் சொல்லும் மதத்தினர் முக்திக்கு ஏதுவாகக் கொள்ளும் விசேஷணங்களைக்கேள். பூர்வமீமாம்சையார் முத்திக்கு ஏது கர்மமே என்றும், சைவவைணவர் பக்தியே யென்றும், துவைத விசிஷ்டாத்வைதிகள் பக்தியோடு ஞான மென்றும், சாங்கிய நியாயவைசேஷிகர்கள் பதார்த்த பரிசீலன ஞானமே யென்றும், கொள்ளுகிறவர்கள். இவர்களெல்லோரும் பூதங்களாகவும் பௌதிகங்களாகவும் காணப்படு மவைகளே உலக மென்பவர்கள். நாம் பிரத்தியட்சமாகக்காணும் பூமியாகிய மண்ணும், சமுத்திரமென்கிற ஜலமும், சூரியனென்னும் நெருப்பும், காற்று, ஆகாயம், என்கிற ஐந்துமே பூதங்கள் எனப்படுவன. சீடனே! பூதியமென்றால் கலப்பில்லாத பொருள்கள் என்றல்லவோ பூர்வம் சொல்லினேன். அவைகள் அணுபத்துகான்கல்லவோ? அவ்வணுபத்துகான்கின் கலப்பு பொருள்

களை இவர்கள் பூதமென் றெப்படி கொண்டார்கள், இவர்கள் தால அறிவுடையவர்களாகவே தோன்றுகிறார்க ளல்லது நுட்ப வறிவினையுடையவர்கள் என்றெப்படி ஒப்பக் கூடுமென்று நினைப்பை. அவர்கள் தாம் கொண்ட யதார்த்தமானவை விளக்கப் போதுமானவைகளை எடுத்துக்கொள்ளவில்லையென்றே நினைக்க வேண்டும். இப்போது நாம் காணும் முன்சொல்லிய விரிவாய பூதங்கள் பஞ்சீகரண பஞ்சமகா பூதங்களென்றும் காரிய பூதங்களென்றும் இவர்கள் சொல்லுகிறார்கள். இவைகளைக் காரணபூதங்களென்று சொல்லுகிறதில்லை. ஆனால் காரண பூதங்களில் நான்கை பரமாணு ரூபமாகவும் நித்தியமாய் என்று மிருப்பனவாகவும் சொல்லுகிறார்கள். ஆகாயத்தை வியாபகமாய் என்றும் நித்தியமாயிருக்கிறதென்று சொல்லுகிறார்கள், இப்படிக் கவர் கூறுவது எவ்வித கருவிகளின் சகாயமுமின்றி இயற்கையிலுள்ள ஞானேந்திரியங்களென்னுங்கருவிகளால் எவர்களும் எவ்விடத்தும் எளிதில்உணரக்கூடியவைகள் என்றே நினைந்து ஐந்து பூதங்களாகச் சுருக்கியுரைத்தார்கள் போலும். இதன்றி காலத்தையும் திக்கையும் வியாபகமாகவும் நித்தியமாகவு மிருப்பதாக ஒப்புகிறார்கள். சிலர் மனதை அணுவாகவும் நித்தியமாகவும் சொல்லுகிறார்கள். அப்படி சொல்லுகிறவர்கள் நியாய வைசேஷிகர்கள். மற்றையோர் இதைக் காரியப்பொரு ளென்கிறார்கள். சிலர் ஜீவனை பரமாணுவாகவும் சிலர் மகத்தாகவும் சொல்லுகிறார்கள். அணுவென்போர் இராமநுஜாதியோர். மகத்தென்போர் சாங்கியர் சைவர் முதலாயினோர். இவர்கள் சொல்லும் விதமாக ‘ஒவ்வொரு கருத்தையும் விரித்து சொல்லத்தொடங்கினால் நான் சொல்லவும் நீ கேட்கவும் இருவர் வாணாளும் போதாது. ஏனெனில்,இவர்கள் நான்கு வேதங்களில் ஏதேனும் ஒரு வார்த்தையை ஆதாரமாகக் கொண்டு அதற்குச் சாதகமாக 18 ஸ்மிருதிகளையும் பதினென் புராணங்களையும் ஆறு சாத்திரங்களையும் உதாரணமாகக் கொள்வதுபோதாமல் பாரதம் இராமாயணம் என்னும் இதிகாசங்களையும் கூறத்தொடங்குவார்கள். இவற்றால் வினையும் சந்தேகங்களுக்கும் அவற்றிற்கவர் பின்னுங்கூறும் சமாதானங்களையுஞ்சொல்லிக் கொண்டு வந்து பின் இவர்கள் இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு இப்படி சித்தாந்தப் படுத்துகிறார்களென்று சொல்லி காட்டப்புகில் என்னால் முடிவுபெறுமென நான் நினைக்கவில்லை. அளவிறாது. ஏனெனில் அவர்கள் சித்தாந்தமாகத் தாங்கொண்ட கருத்தைப் பரிபாகிக்கே தெரிவிக்கக் கூடுமென்றும் அதுவும்

காலமும் இயற்கை குணமும் வருப்படியும் பார்த்தே சொல்ல வேண்டு மென்றும் அவர்களுக்கே தாஞ்சொல்வது தெரியுமென்றும மற்றையோர்க்குத் தெரியாதென்றும் சொல்பவர்கள். ஆகையால் அப்படிக்கு நான் காட்டினாலும் அது அவ்வளவோடு முடிந்துவிடுமா? முடியாது. இப்படி கட்சி பிரதிகட்சிகளைச் சொல்லிக்கொண்டு வருவதில் பூரணபிரயோஜனம் ஏதாவது உண்டாகுமா வென்னில்? இல்லை. இல்லை. தீராவழக்காகவும் போராகவும் சந்தேகமாகவும என்று மிருக்கும். இதன்றி சொல்லுகிற எனக்கும் கேட்கு முனக்கும் வாழ்நாட்கள் கற்ப பரியந்தம் நீடித்திருக்கினும் பயன்படாது. என்றும்ஒருமதமும் முடிவு பெறாது. பெற்றதெனச் சொன்னாலும் அப்பிரிவை சார்ந்தார் ஒப்ப மாட்டார்கள். இவர்களிடத்தி லெல்லாம் கற்ற சாமர்த்தியத்தோடு துரபிமானமுமிருத்தலால் தம்மதம் தாழ்வடைய இடங்கொடார்கள். வீண் வழக்காவது தொடுப்பார்களே யொழிய விட்டு சும்மாஇரார்கள்.

குழந்தாய்! நான் உனக்கு 4 வேதத்தையும் 6 சாஸ்திரத்தையும் 18 ஸ்மிருதிகளையும் 18 புராணங்களையும் இதிகாசங்களையும் இவற்றிற்குப் பின் பெரியோர்க ளெழுதிய பல்வகை நூல்களையும் பிரமாணமென் றெடுத்துக் கொண்டே ஜீவான்மா இலக்கணத்தைச் செப்புகின்றேன். நான் சொல்லப்போவது சாத்திரங்களுக்கே யன்றி யுக்திகளுக்கும் அநுபவத்திற்கும் ஒத்திருக்கும். எந்த சாஸ்திரமானாலும் அநுபவ பிரமாணத்தை ஜெயிக்காது. ஏனெனில் பெரியோர்கள் அறிந்தனுபவித்தவைகளையே வேதமாதியவற்றில் விளம்பி யிருக்கிறார்கள். வேதம் சர்வஞ்ஞனாகிய ஈஸ்வரனனுபவமாகையால் அவனருள் பெற்றோரும் அவ்வீஸ்வரன் அனுபவிக்கச்செய்ததை விளக்கியிருக்கிறார்கள். இதில் தடையில்லை. பெரியோர்கள் அநுபவித்து எழுதியவையே வேதமாதியன வென்று நான் முன்னமே உனக்குச்சொல்லியிருக்கின்றேன். அநுபவமில்லாத வார்த்தை அபரோக்ஷஞான சாக்ஷாத்காரத்தைத் தராது. மூடிவை இவ்விடத்திலும் இக்காலத்திலும் அடையக்கூடாததாகி, நம்பிக்கை மாத்திரமாகவே இருக்கும். நாம் கொண்ட நம்பிக்கை எதார்த்தமோ விபரீதமோ என்னுஞ் சங்கைக்கு என்றேனும் இடந்தராமல் இராது.

இவ்விருக்க, இந்தக்கலில் ஞானிகளாயுள்ள பேர்கள் எந்த வார்த்தையையும் எந்த மதத்தையும் எந்த நூலையும் பூர்வ பக்ஷமாகவாவது அல்லது சித்தாந்தமாகவாவது ஒப்புக்கொள்ளார்கள்

சாக்ஷமே தென்பையாகில் இவ்விந்துக்கள் தங்கள்வேதத்திலில்லாத அபிப்பிராயம் கற்றவர்கள் கல்லாதவர்களாகிய எவ்வித மனிதர்களிடத்திலும் உண்டாகாதெனத் தீர்மானித்திருக்கிறவர்கள் திரிகுண சம்பந்தமுடைய விருத்தி அந்தந்த வவசர காலத்தில் தோன்றும் அனுபவாகாரமாக விளங்கி விவகரிப்பதால் சர்வ அபிப்பிராயமும் சமயோசிதமாகக் கொள்ளத்தக்கன வாதலால் எவ்வித அபிப்பிராயங்களும் தங்கள் வேதத்தில் பூர்வபட்சமாகவேனும் சித்தாந்தமாகவேனும் அடங்கி கிடக்கின்றனவென்று கொள்ளல் அவர்கட்கு நிராட்சேபம். இந்துக்கள் தங்கள் வேதத்தை அநாதியென்று ஒப்புகிறவர்கள். காரணம் இப்போதுனக்கு விளங்காதாகையால் சமயம் வந்தபோது இதைப் பற்றி யுனக்குத் தெரிவிக்கின்றேன். இப்போ தெழுதப்பட்டிருக்கும் வேதாதி சகல நூல்களும் மஹான்களாலேயே சொல்லப்பட்டும் எழுதப்பட்டுமிருக்கின்றனவென நினை. எவரால் எழுதப்பட்டனவாயினும் இன்றியமையாதவற்றை எவரும் நிராகரித்து நடப்பது கூடாது. உள்ளது போகாது; இல்லது வாராது, என்பது என்றைக்கும் கெடாத நியாயம். எழுக்குறைய வேதங்களின் பிரிவாகிய 1130 உபநிஷத்துகளும் பெரியோரால் செய்யப்பட்டனவேயென்பதில் சந்தேகமில்லை. இவற்றுள் 103 உபநிஷத்துக்களில் மோட்சத்திற்கு முக்ய காரணம் ஆத்மஞானமேயென்று உரைப்பன. பெரும்பாலும் இந்த உபநிஷத்துக்கள் ஓதும் ஆத்மஞானத்தால் மோட்சம் பெற முயற்சித்தல் அருமையென்றயர்வோர்க்கு, சிறிதாக மனத்தால் செய்யும் யோகமாதிய கர்மத்தையும் அதனையும் கடினமென்று நினைப்போர்க்கு வாக்காலும் காயத்தாலும் செய்யத்தக்க கருமங்களையும் சிறிதாக கூறுகின்றன. மற்றைய உபநிஷத்துக்களோவெனில் இவ்வுபநிஷத்துக்களின் கருத்திற்குச் சிறிதும் முரண்படாது ஞானமடையும் பரிபாகம் பெறும்பொருட்டு இரங்கி, மறைவாக வேத கருத்தைப் புறப்பொருள்களின் மீது வைத்து அந்தர்முகத்தில் குருவாலறிந்து செய்ய வேண்டிய சாதகங்களைப் புறம்பிற் செய்ய விதிக்கின்றன. இப்போது யான் உனக்குச் சொன்ன மூக்கருத்து உள்ளதனை யுள்ளபடி யுணர்ந்த அபரோட்ச ஞான சாக்ஷாத்கார ஞானிகளுக்கன்றி மற்றையோர்க்குப் பொருந்தலருமை. இனி ஜீவான்மாவின் இலக்கணத்தைப்பற்றி பேசுகிறேன். ஜீவான்மாவென்பது ஞான வடிவாகிய அநாதி நித்ய பொருள். இது தேகத்தை யோர்கால் யானெனவும் ஓர்கால் எனதெனவும் கொள்வதும் கூடியதுமாக விருக்கின்றது. இது கர்ம சரீரமாகிய தூல தேக

மழிந்தபோதும் அழியாத சூக்குமத் தேகத்தோடும் வாசனையோடும் எக்காலத்திலுமிருந்து அக்கர்மத்திற் கொத்தபடி மீளவும் பூலோகத்திலேனும் நரகத்திலேனும் சுவர்க்கத்திலேனும் தூல சரீரமடைந்து சுகதுக்க மிசிரத்தையும் அடைவது. சுகத்தைச் சுவர்க்கத்திலும் துக்கத்தை நரகத்திலும் மிசிரத்தைப் பூலோகத்திலும் அடைவது. இத்தகையஜீவான்மா என்றும் பூதியங்களின் வேறானதே. பூதிய பரமாணுவைப் பார்க்கிலும் மிகு நுட்பமானது. என்றால் சிறியதென நினையாதே. அதி சூக்குமமானதெனவறி. பூதவணுக்கள் நுட்பமானவைகளாயினும் காரியப்பட்டபோது ஒன்று மற்றொன்றில் வியாபிப்பதாகவும் ஒன்றில் மற்றொன்று வியாப்பியப் படுவதாகவு மிருக்கின்றன. பிருதிவி சமுத்திரத்தில் வியாப்பியமாம். சமுத்திரமோ பூமிமுழுதும் வியாபித் தீரமாக்கி மும்மடங்கதிகமாய் வியாபகமாகிக் காணப்படுகிறது. நீர் வியாபிக்கக்கூடாத குருத்துவமுடைய பொன்,வெள்ளி, யாதி லோகங்களிலும் வைரமேறிய அல்லது எறுத இரத்தினாதி கற்களிலும், ஜலத்திலும், நெருப்பு பிரவேசிக்கிறது. அதுபோலவே மண்,நீர்,நெருப்புக்களில் காற்றுவியாபிக்கின்றது. ஆகாயமோ அதிசூக்குமமாகி காற்றாதி நான்கிலும் வியாபிக்கின்றது. இவற்றிற் கெல்லாம் அதிசூக்குமமாகிய ஜீவான்மா அந்தக்கரணமாதி சரீரத்தில் வியாபிக்கின்றது. இங்ஙனம் வியாபிக்கக்கூடிய தனையே சூக்குமமெனக்கொள்ளப்படுகிறது. பரமாணுவினுஞ் சூக்குமமான தொன்றில்லை. பூதியங்கள் காரியப்பட்ட காலத்தில் வெட்டுக்குத்தாதி ஊறுகளை அடைவதுபோலஎவ்வித பொருளாலும் ஜீவான்மா ஊறுபடுவதன்று,ஜலத்தால் நனைவதன்று, நெருப்பால் தகிக்கப்படாதது, ஆயுதங்களால் கண்டிக்கக் கூடாதது, காற்றால் அசையாதது என அறி. இத்தகையஜீவான்மாவும் புனர்ஜென்மமு முண்டென இந்துக்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். கிறிஸ்து மகம்மதியர் முதலியோர் புனர்ஜன்மத்தை ஒப்புகிறவர்களாக பேசுகிறார்களில்லை. சுவர்க்கத்தையாவது நரகத்தையாவது ஜீவன் அடைந்தபின் மீளாம லிருப்பதே மேலான ஞாயமெனக் கொள்ளுகிறவர்கள். இந்துக்கள் அப்படி கொள்ளுகிறவர்களல்லர். மீளா நரகம் ஈசனைக் கருணையற்றவரென பேசுதற்கு இடந்தருதலால் ஞாயமாகக் காணப்படவில்லை. மற்றெப்படி கொள்ளுகிறார்களென்னில் வேத விதித மெய்ந்நெறிப்படி நடந்து பொய்யொழுக்க மொழித்து இம்மையிற்றானே [illegible] மையின் பயனாகக்கொண்ட தேகாபிமானத்தை விட்டு [illegible]

# அநுபவானந்த தீபிகை

...த்தால் நிறைவுற்றபோது மோட்சமடைந்தது ... க்கஞ்சிறி ...யின்
றிப் பரமானந்த வடிவாகி என்று மிலகிக்கொண்டிருக்கு மென்
றும்,மற்றைய காலங்களி லெல்லாம் பல தாரதம்மிய முள்ள
தூலதேகத்தைச் சூக்கும காரண தேகங்களோடு பெற்று,சுவர்க்
கத்திற்கும் நரகத்திற்கும் இகத்திற்கும், சுழன்று திரிந்துகொண்
டிருக்கு மென்பர்கள். இது இந்துக்கள் கொண்ட வேதத்திற்
சொல்லும் சித்தாந்தமே அன்றி யவர்கள் யுத்தியாற் சொல்லு
மவைகளல்ல. ஜீவன் ஞானமுடைந்த காலத்தில் காரண தேக
மாகிய அஞ்ஞான மழிந்துபோவதால் சூக்கும தேகத்தையு
மொழிந்து பிறப்பிறப்பற்றுச சுசுரூபமாகிய ஆயத்தை யறிவோ
டிருந்து விடுகிறது. சிருட்டியில்லாத பிரளயகாலத்தில் ஜீவான்
மா அதிசூக்குமமாகிய வாசனைகளோடு சூக்கும சரீரத்தோடும்,
காரணதேகமாகிய அவித்தையி லடங்கி யிருக்கின்றது. ஞானத்
தாலன்றி காரணதேகமாகிய அவித்தை என்றும், எவ்விடத்தி
லும் எவ்விதத்திலும் அழிவை யடைகிறதில்லை. ஆகையால்,
ஜீவான்மா வேதங் கற்று ஞானம் பெற்று விதிப்படி நடந்து பர
மான்மபோதத்தை யடையவேண்டிய தவசியமாக விருக்கிறது.
இனி இத்தகைய ஜீவான்மா இல்லையென்பதைப்பற்றி உண்டா
கும் சங்கைகளுக்கு விடைகளைச் சொல்லுகிறேன். சீடனே!
நீயும் நானும் இடையாது. பூதிய சேர்க்கையா லுண்டாகிய தொ
ழிற்சக்தியே நீயும் நானுமென வுறு கொள்வோ மென்னில், நாமி
ருந்தல்லவோ நம்மைப் பூதியச சேர்க்கையா லுண்டாகிய சக்தி
யென்று மதிக்கிறோமெனச் சொல்ல வேண்டி வருகிறது. முடி
வில் நாமில்லாமற் போவோம்,பூதியங்கள் என்று மிருக்கும் என்
பதை, நாம் இப்போது ஒப்பிக்கொண்டாலும், நாமிருந்தல்ல
வோ அதையும் ஒப்பிக்கொள்ளுகிறோம். இதனால் நாம் இருந்
தே நம்மை இருக்கிறவர்களாகவும் இல்லாமற் போகுமவராக
வாகவும் நம்மை நாம் நினைக்கின்றோம். நாமிலலையாகில்பூதியங்
கள் நிலையாக விருப்பன வென்பதையும் நம தின்மையையும்
உணர்ந்துகொள்வ தெப்படி?

இதன்றிப்பூதியங்களின், சேர்க்கையா லுண்டாகும் ஓர் சக்தி
யே ஜீவான்மா வென்பதைப் பற்றி எனக்
பூதியச் சேர்க்கையா லநேக சங்கைகள் உதிக்கின்றன. அவற்றை
லாம் சக்தியே ஜீவான், யுனக் குணர்த்துகிறேன். நீ இதை யோ
ம எந்தப்பதில் மறுப்பு. செத்துப்பார், நான் பூதிய மதத்தினர்சொல்
லும் பூதியங்களே தானு மூல ஜீவ தேகங்
கள் முதலிய, உருவங்களாகக் காணப்படுகின்றன வென்பதை

ஒத்துக்கொள்ளுகிறேனேயொழிய ஒழிப்பேனில்லேன். அன்றிப் பூதியங்களே கடினப் பொருள்களாகவும் இளகற்பொருள்களாகவும் ஆவியாகவும்காணப்படுகின்றனவென்பதையும் சம்மதிக்கின்றேன். ஆனால் இவைகளின் கூட்டுறவால் அறிவென்னுமோர் சத்தியுண்டாகி,அச்சத்தியே இவ்வுலக சுகதுக்க போகத்தை யநுபவித்து, முடிவில் சொரூப மற்றுப்போகிறதென்பதைமாத்திரம் ஒப்புவதில்லை. ஏனென்பையேல்,பூதியங்கள் கலந்தபின் னுண்டாகிய அறிவு,தான் பிறவாமுன் னடந்த பூதச்சேர்க்கையையும், சேர்க்கையால் தான் பிறந்த விதத்தையு முணர்ந்து அதிலையமற விவகரித்து விளக்கப் புகுந்தது,அதிசயமாகக் காணப்படவில்லையோ? எவரேனும் பிரத்தியக்ஷமாகத் தற்காலத்தி லுள்ளவைகளையும் தனக்குப் பின்னுண்டானவைகளையும் அறியுமாற்ற லுடையவராக அநுபவமும் நியாயமு மிருக்கிறதேயொழிய,முன்னுண்டாயிருப்பவைகள் தான்சொல்லும் விதமாகவே யுண்டாயினவென்று உறுதிப்படுத்த நியாயமும் அநுபவமு மில்லை. கண்ணெதிர் காணுங் காரிய வஸ்துவைக்கொண்டு காரணத்தை யூகித்துணர்ந் துரைக்கலா மல்லவோ; எப்படி புகையாகிய காரியத்தைக் கண்டு அதன் காரணமாகிய நெருப்பு அவ்விடத்தி லிருக்கிறதென்று அறிகிறோமோ அதுபோலவே அநுமானத்தால் முன்னடந்தவைகளையுங் கண்டுபிடிக்கலா மல்லவோவென்று நினையாதே. அநுமானமும் ஓர்பிரமாணமே. இனும் அநுமானம் விபரீதமாகவு மிருக்கக் கூடுமாகையால் அநுமானஞ் சமுசயத்திற் கிடமானதே ஒழிய உறுதிபடுத்தற் குரியதல்ல. புகையைக் கண்டு நெருப்புண்டெனக் கொள்ளல், பழக்கத்தில் வந்த அநுபவமே. ஏதேனுமோ ரநுபவ மிலாத அநுமான மெப்பொழுதுந் தப்பிதமேயாம், ஏனெனில்; எவ்விடத்திலும்,எக்காலத்திலும், எவ்வித பூதசேர்க்கையாலும் அறிவென்னுமோர் சத்தியுண்டாகி யெழுவதைக்கண்டார், கேட்டார்,காட்டுவா ரொருவருமிலையார். பூதியங்களைக் கருவிகளா லெவரும் பிரித்தும், கூட்டியும், திருத்தியும், வருகிறார்கள். அப்படிக்கவர்கள் பிரிக்கும்போதாகிலும், கூட்டும்போதாகிலும், கூட்டியபின்னாகிலும், அறிவென்னுமோர்சத்தியை யுண்டாக்கியும், உண்டாக்கியபின் னழித்தும் காட்டினாரும் இனிகாட்டுவாரும் இலராவர். எவ்வித சரீரத்தையும் பிரித்து அறிவென்னுஞ் சத்தி யழியக்கண்டவரேயோ. இதோர் பெரிய காரியமன்றே. இது யாவ[illegible] [illegible]ரேனென் கூறலாகும். சீரங்கத்[illegible]த்து பூ[illegible]

களைப் பிரித்து அறிவழியக் காட்டுவதுபோல, பூதியங்களைச் சேர்த்துச் சரீரத்தையும் அறிவென்னுந் தொழிற் சக்தியையும் உண்டாக்கியுங் காட்டலாமன்றோ. அப்படிச்செய்யுஞ் சாமர்த்தியம் இவர்களுக்கேன் இல்லாமற் போயிற்றோ தெரியவில்லை. உண்டாவது இயற்கையும் நாம் செய்வது செயற்கையுமாகுமென்பரேல், இயற்கையாக அறிவும் ஒன்று உண்டென்று ஏன் கொள்ளுகிறார்களில்லை. அதிருக்கட்டும் பூதியங்கள் சரீர உருவைத் தரிக்குமுன் அறிவென்னுஞ் சக்தியைப் பெற்றிருந்தனவா? சரீரமாகக் கூடுஞ் சமயத்தில் பெறுகின்றனவா? சரீரமாகக் கூடியபின் பெறுகின்றனவா? அறிவென்னுஞ் சக்தி எப்போதுண்டாகிறது? கூடுவதற்கு முன்பே பூதியங்கள் அறிவென்னுஞ் சக்தியைப்பெற்றிருந்தனவென்பதற்கு அநுபவமும் ஆதாரமும் இல்லை. உண்டென்று சொல்ல இவர்கட்கு மார்க்கம் இல்லை. ஏதனுலெனின் சரீரமும் அறிவும் ஓரே காலத்தில் உண்டானதாக விருந்தால் மரணத்தில் அவை பிரியக் காரணமில்லை. பூதியங்களைப் பிரித்துப் பார்க்கும்போதும் அப்பூதியங்கள் அறிவை யடைந்தே விளங்கவேண்டும். அப்படிக்கில்லாமையால் சேர்ந்த பின்பே அறிவைப் பெற்றதெனச் சொல்லல் வேண்டும். அப்பூதியங்கள் அறிவென்னுஞ்சக்தியை பின்னடைய பெறுமேல், அப்படி பின்னுண்டாகு மறிவிற்கு நாம் தேகசம்பந்தம் பெற்றால் பசி, தாகம், காமம், முதலியன நமக்கு உண்டாகும். நாம் அதற்குத்தக்க அன்னபானாதி வடிவப்பொருள்களைத் தேட முயற்சிக்க வேண்டிவரும் அப்படி முயற்சிக்கத் தக்க விதமாக உருவெடுக்கவேண்டும் என்றுமூடப் பூதியங்கள் அறிந்து தக்க கருவிகளோடு சரீரமாக அமைந்ததெனல் அருமையிலும் அருமை. அன்றியும் அம்மூடப் பூதியங்கள் நாய்,பூனை, குதிரை, யானை,மாடு,ஆடு முதலிய மனிதப் பிரயோஜனகாரிகளாகிய மிருகங்களாகவும், கிளி கருடன் மயில் முதலிய பக்ஷிகளாகவும், சுறு மீனாதி ஜலஜந்துக்களாகவும், இகலோக பரலோக புத்தியோடு கல்வியும் பாஷாஞானமு முடைய மனிதராகவும், உள்ள இவ்வெல்லா தேகங்களுக்கும் மிகவும் பயன்படத்தக்க தானியம், காய், கனி, கிழங்கு, சாகமாதிகளைத் தரும் கொடி,செடி,புல் விருக்ஷங்களாகி ஒன்றிற் கொன்று தாழ்ந்திருக்க வேண்டுமெனவு மிவைக்கு உருவெடுத்தன வென்பது அசம்பாவிதமாகவே யிருக்கின்றதன்றோ? அன்றியு மம்மூடப்பூதியங்கள் "சரீரம் கூடிய பின்னர் நமக்கு ஓரறிவாதிய ஆறறிவு வரையிலும் அவற்றையாளும் ஓர் யஜமானனும் அறிவென்னுந் தொழிற்

சக்தியுமுண்டாகும். அதற்குப் பசியுண்டாம், தாகமுண்டாம், காமமுண்டாம், குளிருண்டாம், சூடுண்டாம், அழகுண்டாம், ஆசையுண்டாம், சுகமுண்டாம், துக்கமுண்டாம், வியாதிகளுண்டாம், சந்ததியுமுண்டாக்க வேண்டி வரும், இவைகளுக்கெல்லாம் தேவையான பொருள் வடிவமாவோமென அறிவினறிந்தெரியாமலே கூடி ஒவ்வொரு வர்க்கத்திலும் ஆணாகவும், பெண்ணாகவும் உருவெடுத்தன வென்னில் இது நம்பக்கூடியவிதமாக விருக்கின்றதா? இதனை நம்புவோர் யாராக விருக்கவேண்டும்? நம்புவோரும் நம்பினோரும் பூர்வ பூதிய ஸ்திதியைப் பெற்றிருக்கின்றார்கள் போலும். அன்றியும் அப்பூதியங்கள் கலப்பாதார வடிவெடுத்து அறிவடைந்தபின் காணவேண்டியதற்குக் கண்களும், கேட்கவேண்டியதற்குக் காதுகளும், முகரவேண்டியதற்கு மூக்கும், சுவையறிய நாக்கும், தேவையான பொருள்களைப்போயடைய கால்களும், தேகேந்திரியாதிய எவற்றிற்கும் தேவையானவைகளைப் பரிக்க, எடுக்கத் தொடுக்கப், பெறத்தக்க கைகளும், போகிக்கத் தக்க ஆண்பெண் குறியும், கொள்ளக் கடிக்க வுதவும் வாயும், வேண்டுமென எப்படி யறிந்து கூடியிருக்கும்? ஐயையோ! இதைச் சிறுவரும் நம்பலாமென நினைப்பதற் கிடமாகாதே. உலகத்தில் விருட்சாதிகள் விதைகளாலும், இலைகளாலும், கிளைகளாலும், உண்டாகின்றனவே யொழிய பூதியங்கள் கூடி யுண்டாகக் காண்கின்றோ மில்லையே. அப்படியே முட்டைகளாலும், வியர்வையாலும், பல ஜந்துக்கள் பிறக்கக் காண்கின்றோம். பூதியங் கலந்துண்டாகக் கண்டார் காண்கின்றாரெவர்? பையினிடமாகக் கட்டுண்டு பிறக்குமுயிர்களும் மைதுன சுக்கில சுரோணிதக்கலப்பால் உண்டாகின்றனவே யொழிய, பூதியங்கள் நேரே கூடி யுண்டாக்க வுண்டானதொன்றுங் காணப்படவில்லை. சிலர் ஆதியிற் பூதியங்கள் கூடி இவ்வுருவகைத் தோற்றமாக வுண்டாகிப்பின்னப்படி கூடவேண்டிய அவசிய மின்மையால் அதனை மறந்து நிற்கின்றன வெனவுங் கூறுகின்றனர். அவசியமும் அவசிய மின்மையுங் கூடிய பின்னுண்டாகிய தொழிற் சக்தியாம் அறிவிற்கே தெரியு மல்லாது மூட பூதியங்களுக்குத் தெரியாதாகையால் அவைகள் தங்காரியத்திற் குன்ற வேண்டிய காரணம் ஒருசிறிது மில்லை, இஃதிருக்கட்டும், கண்களானவையோ தூசுகளைப் பகுதா வரைச் செய்யும் உரோம வரிக்கால் செப்பனிடப் பட்ட இரு இமைப்பைகளை மூடவுந் திறக்கவுங் கூடியவிதமாக வடைந்து அபாயமின்றி பள்ளங்களில் மறைந்திருக்கவேண்டு மென்றும்,

காதுகளானவை சத்தக் காற்றைத் தடுத்துச் சிறு துவாரங்களுக்குள் ளாக்கிக்கொள்ள மேல்விரிந்து அடிகுவிந்து இருக்கவேண்டு மென்றும், மூக்கானது உணவு பதார்த்தங்களின் மணத்தை யறிவிக்க வாயை யடுத்திருக்கவேண்டு மென்றும், பற்களானவை மூவகைப்பட்டு வாய்க்கடங்காப் பதார்த்தங்களை உளி யென்னு மாயுதத்தைப் போல வெட்டுதற்கு கூர்மையாகவுந் தட்டையாகவு முருவெடுத்து முன்னிற்க, மற்றுஞ் சில அரைக்கக் கூடிய விதமாக சதுராகிருதியுடைய தட்டையாகவும் புறமிருக்கவேண்டு மென்றும், அறுபடாத நார் போன்ற பொருள்களைத் துண்டு படுத்த தக்கவிதமாயவை இவ்விரண்டிற்கு மிடையிலிருக்கவேண்டு மென்றும், நாக்கானது புரண்டு பற்களுக்குச் சகாயஞ் செய்யவும், எழுந்து வளைந்து ஒலிவேற்றுமை படுத்தவும் சுவைகளைத் தாங்கிக்கொள்ளவுந் தக்கவிதமாய் எலும்பின்றி ஈரத்தோடிருக்க வேண்டுமென்றும், இப்படியே ஒவ்வோ ரவயவமும் பின்னடக்க வேண்டிய தத்தந் தொழிலுக் கேற்ற விதமாயுருவெடுத்தது தக்க விடத்திலிருக்க வேண்டுமென்று மம் மூடப் பூதங்கள் எப்படி தெரிந்து கூடியிருக்கும்? இதையெலாம் யோசிக்குங்கால் திரிகால வுணர்ச்சியுள்ள ஞான வடிவாகிய ஓர் பொருளிருந்தே இப்பூதங்களைக் கூட்டியிருக்கவேண்டுமென நினைப்பதற் கிடமுண்டாகின்றது. அப்படிக்கோர் ஞான வடிவாகிய பொருளின் சகாயத்தை யிப்பூதங்கள் பெறுதற் கவசியமில்லை, இவைகளுக்கே அந்த வல்லமை யிருக்கின்றதெனில், பரமாணுக்கள் ஞானமுடையனவாக வேண்டும். ஞானமுடையனவாகவே யாமாயின் ஓர்கால் ஞானமற்ற சடசவமாகக் காணப்படக் காரண மில்லை யன்றோ;

ஞானவடிவானவன் நிமித்த காரணம்.

சீடனே! உலகத்திலுள்ள எவ்விதமான ஜீவ சரீரங்களினவயவங்களைப் பற்றி யோசித்துப்பார்த்தாலும் ஓர் சர்வக்ஞனாகிய கடவுள் அச்சரீரத்தை யபிமானிக்கு முயிர்கள் வசிக்க வேண்டிய இடத்திற்கும், புசிப்பிற்கும், சுகத்திற்குந் தக்கவிதமாக அமைத்ததாகப் புலப்படுகின்றதே யொழிய அறிவற்ற பூதங்களே கூடி இவ்வுருவத்தைப் பெற்றதாக நினைக்க எண்ணமெழுத லில்லை. நான் முதலிற் சொன்ன விருட்டறையில் மனிதனிருக்கக் கொள்ளப்பட்ட ஜீவ தேகங்களின் ஆலயமாக வெல்லாம் அவ்வச்சரீராபிமானியாகிய ஜீவனின் இச்சை கிரியா

ஞானப் பிரயத்தனங்களுக்கு வேறு விதமாகவே யிருக்கின்றன, என்பதை தனித்தனி விளக்கப் புகுந்தால் அவையாவும் உண்மையேயாம். நிற்க. ஆகையால் கடவுளின் அபார சக்தியை வர்ணிக்க எவராலுமாகாதென விசைக்கின்றார்கள். ஒரு சோற்றின்பதத்தை யறிவதால் பானைச் சோற்றின்பாகத்தை தெரிவதுபோல ஒரு தேகத்திலமைந்திருக்கும் அவயவங்களால் எல்லாப்பிராணிகளினவயவத்தையுமறிந்து கொள்ளலாம். மாணாக்கனே! இலையுதிர் காலத்தில் யாதொரு சலனமுமின்றிக் காஷ்டமாத்திரமாக நின்றமரமாதிகள், வசந்த மாரிகாலத்தி லிலை, தளிர், பூ,காய்,கனி,விதையாதிகளாற் றழைத்து விளங்கி அவையாவும் தனைத்தேடி வந்தடைய வுயிர்களுக்கு ஒளியாயும், நின்ற நிலை பிரிந்து ஓடி மறையாமலுமிருந்து, பக்குவப்பட்ட இலை, காய், கனியாதிகளை சஹஜமாக உதிர்த்து அவைகளைப்பெற வுதவுகின்றன. மீள மீள இவ்வாறே செய்து வருகின்றன. இங்ஙனம் செய்துவரும் விருக்ஷமொன்றினது செய்கையை ஆழ்ந்து யோசிக்கினும் கடவுளினது காருண்ய மாதி சக்திகளை எளிதி லுணரலாம். இதுவரை நான் சொல்லி வந்த நியாயத்தால் சர்வஞ்ஞனாகிய ஓர் ஞானஸ்வரூபியின் அமைப்பாலன்றி இப்பரமாணுக்கள் தாமே கூடி பிற்பயன் பயக்கவேண்டிய பொருள்களி னுருவத்தை தரிக்கின்றன வென்பது கேள்விக் கொவ்வாமலிருப்பதோடு யுக்தி யநுபவங்களுக்கு விருத்தமாகவே யிருக்கின்றதல்லவா? இது உனக்குஞ் சம்மதமாக விருக்குமென நம்புகிறேன். ஆனால் சர்வக்ஞனாகிய கடவுளை அநுமானப் பிரமாணத்தாற் கொள்ளலாமே யொழிய பிரத்தியக்ஷமாகக் கண்டாருண்டாவென பூர்வ பக்ஷத்தவர் கேட்கலாம். அன்றியும் இவ்வனுமானம் விபரீதமாகவு மிருக்கப்படாதோ? வென்று நாம் பூர்வம் அவர்களைக் கேட்டது போலவே அவர்களும் நம்மைக் கேட்கலாம். கடவுள் பிரத்தியக்ஷமே யன்றி யப்பிரத்தியக்ஷமல்ல. ஆயினுமிப் பிரத்தியக்ஷம் நுட்ப அறிவினர்க்கே புலப்படுமன்றி யேனையோர்க்காகா தருண்மை. ஏனெனில் கண்களுக்கல்லாது மற்ற அவயவத்திற்கு உருவங்கள் விளங்கா. அதுபோலவே ஓசை காதிற்கே பிரத்தியக்ஷமாகிறது. கண்களுக்காவதில்லை. வாசனையோ மூக்கிற்கே விளக்கமாகிறது. பரிசமதுவோ த்வக்கிற்கே விளங்குகின்றது. ருசியோ நாக்கிற்கே விளங்குகின்றது. கந்தம் பரிசம் ரூபம் சத்தம் ரஸமென் னுமைந்தையும் கண்கள் காணுமோ? காணா; இவ்வண்ணமாகவே கடவுள் ரூபத்தையும் சச்சிதானந்தாதி குணங்களையும்

ம்பின்மையற்ற சுத்தசாத்மீக மனமெனும் நின்மல விருத்தியேபிரத்தி யக்ஷமாகவறிகிறது. இதையே சூக்குமபுத்தியென்றும் நுட்ப வறிவென்றுங் கற்றோர் சொல்லுகின்றார்கள். அநுமானத்தால் எவர்க்கும் நிரூபித்தல் யாவர்க்கு மெளிதாம். இவ்வநுமானம் விபரீதமாகா தென்பதற்கு விடை யளிக்கின்றேன். பூர்வபக்ஷி முன் உதாரணமாக வெடுத்துக்கொண்ட கடிகார யந்திரம்போல எவ்வித கருவிகளையு மறிவுடைய மனிதன் தானுத்தேசித்த காரிய சித்திக் கநுகூலமாக விருக்க தானமைத்துக் கொள்ளுகிறா னென்பதைப் பிரத்தியக்ஷமாக நாமெல்லோரு மெங்குமறிந் திருக்கின்றோம். அதுபோலஈசனென்கிறோம். பூதிய கலப்பால் என் றேனு மெங்காயினுமோர் அறிவுதிக்க கண்டாரிருக்கின் அவரனு மானமுங்கொள்ளலாம். அங்ஙனமின்றி. கடிகாரயந்திரத்தைக்கா லங்காட்டத்தக்கவிதமாகவும் மணியடிக்கத்தக்க விதமாகவும்அத தற்கேற்ற பொருள்களை யறிந்து கொண்டு அதனாற் பலருக்கும் பயனுண்டாக்கக் கருதிய ஓர் அறிவாகிய ஜீவன் அதை யமைத் தமைக்கிறான். ஆங்கேயீசனும். பித்தளையிரும்பாதியபொருள் உலகோர்க்குப் பயனுண்டாக்கக் கூடி எவ்வித யந்திரமாக வும் தாமே யமைதலை யாமெங்குங் கண்டோமில்லை. சடமாகிய அத்தி மரத்திற் காய்க்குங் காய்களின் விதைகளில் சிறு மசகாதி பிராணிக ளுற்பத்தியாவதுபோல ஜடப்பொருள்களின் கூட்டுற வாலேயே ஜீவரென்னும் சக்தியுணர்வு உண்டாகிறதெனப் பலர் போராடுகின்றார்கள். இப்படிக்கு நினைப்போர் ஜீவன் ஈசன் என் னும் அறிவுகளின் நிஜஸ்திதியைச் சுவாநுபவமாக உணராதவர்க ளே யல்லது வேறல்லர்.

ஜீவ பிரதிபிம்ப உணர்வும் சாட்சி யறிவும் வேறேனல்.

சரீரத்தின் வேறாகிய ஜீவான்மஅறிவு தேகத்தைத் தானெ ன வபிமானிப்பதினாலேயே ஜனன மரண துக்கங்க ளடைந்துவருகின்றதே யல்லது யதார்த்தத்தில் இல்லையென்பதே ஞானிக ளுடைய தீர்மானமென்பதற் கையமில்லை. நாமொரு முட்டையை உடைத்துப்பார்ப் போமாயின் அறிவென்னுஞ் ஜீவான்மா விருக்கக் காண்கிறோ மில்லை. அப்படியே சுக்கில சுரோணிதங்களிலும், விதையாதிகளி லும், ஜீவான்மா விருக்கக் காண்கிறோமில்லை. ஆனாலவைகள் தேக வுருவத்தை யடைந்த பின்னர் அதனிடத்து அறிவுண்டா யிருக்கக் காண்கிறோம். அப்படியே அத்திக்காய் விதையிலும்

உடனுண்டாக அதிலறிவுண்டாயிருக்கக் காண்கின்றோம். இந்த அறிவு அச்சரீரத்தினுள்ளிருப்பதாக வுணர்வது பிசகு. சரீரத்தினிடத்தில் ஜீவான்மாவின் பிரதிபிம்ப சக்தியிருக்கிறதே தவிர ஜீவனில்லை. சிலரிந்த பிரதிபிம்ப சக்தியையே ஜீவான்மாவென நினைக்கிறார்கள். சில சாத்திரங்களிலுமிப்படியே உள்ளிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கும். அப்படி சொன்னவைகள் தூல மதியுடையார்க்குப் புலப்படச் சொன்ன வார்த்தைகளே யல்லாமல் சித்தாந்தமாகா. முடிவாகச் சொல்லின் முட்டையினகத்திலாவது வேறெந்த விடத்திலாவது சரீர வுருவம் பூரணமடைந்தவுடனே அதில் ஜீவ பிரதிபிம்ப முண்டாகத்தக்க அந்தக்கரணமென்னும் ஓர் சொச்சமானவிடம் உண்டாகி விடுகின்றது. அப்போது காரண சரீரமாகிய அவித்தையிற் பிரதிபிம்பமா யபிமானியாகிய ஜீவன் அவ்வந்தக்கரணத்திற் பிரதிபிம்பிக்கின்றான். அந்த அந்தக்கரணம் தேகத்தைப் போஷிக்கவும், பத்திரப்படுத்தவுந் தக்க முயற்சியிற் றலையிடுகின்றது. இவ்விதமாகிய, ஆபாச ஞானங்களையே ஜீவனெனப் பலர் மதிக்கின்றனர். இது ஆராய்ச்சியின்மையா லமைந்ததேயாம். இவ்வித ஆபாசஅறிவே Chloroform கிளோரிபாரம் முதலிய வஸ்துக்களால் தடைப்படுகிறது. சர்வ கிர்த்தியத்திற்கும் கியந்தாவாகியும், சாக்ஷியாகியு மிருக்கு மறிவு மாறுகிறதில்லை. மாறிப்போமாகின் மீள அந்தக்கரண முண்டாவபின் எனக்குக் குளோரிபாரம் முகரக் கொடுத்தவுடனே இருளாகவும், மயக்கமாகவுங் காணப்பட்டது, பின் எனக்கு என தேக ஸ்மரணையில்லாமற் போயது, அதன்பின் என்னை யெப்படிச் செய்ததும் எனக்குத் தெரியாது, தேகஸ்மரணை வந்தவுடனே இவ்வளவுங் கிருக்குங் கதியெல்லாம் எனக்கு விளங்குகிறது என்று, பூர்வோத்தர ஸ்திதிகளை நினைக்கவும், சொல்லவு மிடமில்லை. ஒருவன் கண்கள் வியாதியால் தெரியாதபோதும், காதுக ளெப்படியே வியாதியாற் கேளாத போதும், அவைகளால் அறிந்து ஆக்க வேண்டிய அல்லது அடைய வேண்டிய வேலைகளை யுணரா திருந்து, மருந்தா லந்நோய் நீங்கி அவ்வவயவங்கள் சொச்சமான பின் முன்போல் அவைகளாலாகும் காரியசித்திகளை யடைகிறான். இதனால் கண்களுங் காதுகளுந் தந்தொழிலை யறியுஞ் சக்தி யற்றிருந்தபோது ஜீவான்மாவு மில்லாதிருந்த தாகவும் நினைக்கக்கூடுமோ. வெண்டலை நீயே யோசித்துப்பார். அப்படியே தேகத்தினுள்ள எவ்வித கருவியும் வியாதியாலும் மருந்தாலேனும் தந்தொழிலை யிழந்து நிற்கக்கூடும். மீளவும் அடையவுங்கூடும். அடையப்பெறாமலே போகவுங்கூடும். இதனை

லே ஜீவான்மா குறைகிறது, வளருகிறது, இன்மையையடைகிறது, என்கிறீர்களல்லவோ? நித்திரையால் பரிசவுணர்ச்சியின்மையும் பித்தத்தால் புத்தி மாறுபட்டும் ஜன்னி சீதளத்தால் ஸ்மரணையில்லாமையும் மூர்ச்சையால் தேகப்பிரக்ஞையின்மையுமுண்டாகஸம் பிரத்தியட்சமாக அநுபவிக்கிறோம். அப்போதெல்லாம் ஜீவான்மா குறைந்து மீளவும் வளர்ந்து விடுவதாகக் கொள்ளலாமோ? குளோரபாரத்தைச் சுவாசியாமலே சரீரத்தை யெவ்வித பாதைப்படுத்தினும் தெரிந்துகொள்ளாதிருக்க பல வித வியாதிகள் செய்துவிடுகின்றனவே, அப்போது ஜீவான்மா குறைந்து விடுகின்றதா! இவைகள் ஜீவான்மாவின் பிரதிபிம்பசத்தியை தடுக்கின்றனவே யொழிய நேரே ஜீவான்மாவைக் குறைக்கவும் முற்றுமின்மையாகச் செய்யவும் கூடியவைகளல்ல. சிலர் சிறு குழந்தையாகவிருக்கும்பொழுது உனக்கு இவ்வளவு அறிவேது? மூளையின் பச்சைநிறமுடைய நரம்புகள் செம்மை நிறத்தைப் பெறப்பெற படிப்படியாக அறிவு அதிகரிக்கிறது. அதன்பின் வாலிபப்பாதிகளிற் பழகப் பழக அறிவதிகரிக்கின்றது. நாளுக்கு நாள் மூளைக்கு வலுவாகிய பாஸ்பரஸ் என்னுந் திமுருகற் பாஷாணச் சத்துடைய வெண்காயமாதிய பதார்த்தங்களை நாடோறும் புசித்து வருவதால் பிரகாலரூபமாகிய அப்பாஷாணச்சத்து மூளையிற் சம்பந்தப்படப்பட அறிவு அதிகரிக்கின்றது, இல்லையாகில் ஞாபக சக்தி குறைந்து நாளடைவில் மூளையின் நரம்புகள் பலவீனப்பட்டு அறிவென்னுஞ் சக்தியை யிழந்துவிடுகின்றது, என்கிறார்கள். இது உண்மையானாலும் ஜீவவறிவு வளர்வதுஞ் சுருங்குவதுங் கிடையாது. அந்தக்கரணமே வலுவையும் க்ஷீணத்தையும் பதார்த்தங்களா லடைகிறது. குழந்தைகளுக்கும் சாமானிய வறிவிருக்கிறதே யொழிய இல்லாமற் போனதில்லை. கல்வியாதிய பல பொருளுணர்ச்சியறிவு சாமானிய ஜீவவறிவல்ல. இது அந்தக்கரண வலுவேயாம். இதற்கு விருத்திக்ஷயச் சாதகங்கள் பதார்த்தங்களின் சேர்க்கையாலே உண்டாகிறதென்பதற்கு யாதொரு தடையுமில்லை. இது விருத்தியடையினும் குறையினும் முற்றுங் கிடையாமற்போனபோதினும் ஜீவான்மாவிற்கோர் பழுதுங் கிடையாது. இதைச் சாதாரணமாக யாவருஞ் சுழுத்தி யவஸ்தையில் பிரதிதினமு மநுபவிக்கின்றனர். இப்படி சரீரத்தி லந்தக்கரணம் விருத்தியடைந் திருப்பதையும் ஆசையாதியால் பலவீனப்பட்டு பேதமடைந்து குறைந்ததையும் முற்றுமின்மையாகப் போனதையும் மீள உண்டானதையும் அறிகிற ஜீவான்மா ஓர்போது மில்லாமற்போனதில்லை.

போகிறது மில்லை. போவதுமில்லை. இதை யறியாதார் குழந்தைகளுக்கும் மிருகாதிகளுக்கும் அழியாச் சிவ அறிவில்லையென்று விண்வாதாடுவதோடு இடையிலுண்டானதாகவும் விருத்தி க்ஷயங்களை யடைவதாகவும் பேசுகிறார்கள். சீடனே! இவ்விதவறிவாகிய ஜீவான்மா தனதிச்சா ஞான கிரியாசக்திகளுக் கனுகூலமாக கடிகாரம், கடம், ஆதி பல கருவிகளைச் செய்துக்கொள்ளுகிறது. தனக்கன்றி அந்நியர் பிரயோஜனத்திற்குரிய யந்திராதி பலபொருள்களைச் செய்துகொடுத்துப் பிரதிபலனை அடைந்தும் அடையாது உபகரித்தும் வருகின்றது: இப்படிக்கு பரமான்மாவும், ஜீவான்மாக்களின் வினைபடிக்கு சரீராதிகளை யமைத்து ஜீவர்களுக்குக்கொடுக்கிறார் என்று கொண்டால், இதுவிபரீத அநுமானமாக விடமுண்டா? இடங்காணோம். நான் பிரத்தியக்ஷமாக ஓர் ஜீவ வறிவையும் அவ்வறிவு பின்னுக்குந் தனக்கும் பிறர்க்கும் பயன்றாக்கூடிய விதமாச் செய்யுங் கருவிகளையும் உதாரணமாகக் கொள்வதுபோல, அவனையும் அவனாலாக்கப்பட்ட தேகத்தின் கருவிகளையும் தேகத்தையும் கொள்ளலாமென்று நான் கண்டதைக்கொண்டு ருஜுப்படுத்துவதில் விபரீதமிருக்கக் காரணமில்லையன்றோ? இவ்வநுமானம்பொருத்தமுடைய தென்றே நினைக்க வாதார விருக்கின்றது. இவ்வநுமானம்போல பூதிய மதத்தினர் சொல்வதைக் கொள்ளச் சற்றுமாதார வில்லை. மூடத்தன்மையும் முரட்டுக்கொள்கையும் பிடிவாதமுமெனக் கொள்ள விடந்தருகின்றது. எங்ஙனமெனின்;

பூதியங்களில் தேவையானவைகளைச்சேர்த்து பரிசவுணர்ச்சி மாத்திரமுடைய மரஞ், செடி, கொடி, புல், வகைகளிலொன்றையாயினும் பரிச, இரச, ஈரறிவுடைய சிப்பி, நத்தை சங்குமுதலியவைகளிலொன்றை யாயினும், பரிச ரசத்தோடு கந்தத்தையும் முணரும் சிதல் எறும்பாதி மூவறிவுடைய பிராணிகளிலொன்றை யாயினும், அதனோடு கண்ணறிவு முடைய தும்பி, வண்டு பாம்பாதிய நான்கறிவை யுடைய பிராணிகளிலொன்றை யாயினும், விலங்கு புள் முதலிய ஐயறிவுடையவைகளிலொன்றை யாயினும், இகபர புத்தியுடைய மனிதரிலொருவரையேனும், எக்காலத்திலாவது எவராவது செய்திருந்தாலும் அல்லது விதை, முட்டை, வியர்வை, சுக்கில சுரோணித கலப்பு ஆகிய வைகளின்றி யமைக்கப்பட்டவைகளே என்றேனு மொருவருக்கேனுங் கேட்டிருப்பவர் ஒருவர் உளராயின் அவர்கள் சொல்லும் அநுமானத்திற்கும் திருஷ்டாந்த பிரத்தியக்ஷமிருப்பதால் ஒப்பக்கூடியதாய் அங்கீ

கரிக்கலாம். அப்படிக் கில்லாமையால் அவர்கள் சொல்லும் திரு ஷ்டாந்த மில்லாத் அநுமானத்தை நாம் விபரீதமென்று கொள்வ தில் தோஷமென்னை? இஃதிருக்கட்டும். கண்ணாடியிற் பிரதிபிம்பிக் கும் மனிதாதியுருவங்கள் அதற்குரிய பிம்பங்களைப்போல அறி தல், வளர்தல் செழித்தல், மங்கல், பலந்தருதலாதிய தொழில் களை செய்வதில்லையன்றோ? அது போலவே ஜீவான்மாவின் பிரதி பிம்பமும் அறிதலாதி தொழிலைச்செய்யும் சக்தியுடையதாகாதல் லவோ? இப்படியிருக்க அந்தக்கரணத்திற் பிரதிபிம்பித்த அறிவு சகல தொழில்களையுஞ்செய்கிறது, அறிகிறது! என்றுசொன்னால் எப்படிநம்பலாமெனப் பலர்கேட்கலாம். இப்படிக்கவர்கள் கேட் பது, ஞானிகள் சொல்லும் விஷயத்தி னுண்மையை விபரீதமாக நினைத்துக் கொள்வதே யொழிய வேறல்ல. நிழற்பாவையும், கண் ணாடியிற் காணப்படும் பிரதிபிம்பப்பாவையும் (தனக்கதிஷ்டான) ஆகாரமாகிய பிம்பப்பாவை கைகால் முதலியவை யசைக்கதாமு மசைத்துக் காட்டுவது போலவேயன்றித் தாமேயசையுஞ் சக்தியு டையனவல்ல. அதுபோலவே ஜீவான்மா இச்சாஞானக்கிரியை களை விரும்ப அந்தக்கரணாதி இந்திரியங்கள் அவ்வறிவின் பிரதி பிம்பத்தைப் பெற்று விளக்கிடாக அவைகளும் இச்சாஞானகிரி யைகளை படைகின்றன. தாமே சுயவறிவாக விருந்து செய்வன வென்று நாமங்கோரஞ் செய்யவில்லை. முன்னோர்களு மங்கீகரி த்திருக்கவில்லை. ஜீவான்மாவைத் தவிர சரீர அந்தக்கரண இந்தி ரியங்கள் புவனம் வஸ்துக்களென்னும் யாவையும் ஈசன் அறிவற் ற பூதியங்களாற் சமைத்திருக்கிறானென்று முன்னரே யொப்பிக் கொண்டிருக்கிறோமாதலால், ஈசன் ஜீவன் என்னுமிருவர்களுக் கல்லது சுயவறி வுருவம் மற்றெப்பொருளுக்குங் கிடையவே கிடையாது. சாலேசாமுடைய கண்களானவை சுலோசனத் தின் சகாயத்தைப் பெற்று, எழுத்து முதலிய சிறுவடிவங்களை யெப்படியறிகின்றனவோ, அப்படியே ஜீவன் அந்தக்கரண இந் திரியங்களிற் பிரதிபிம்பித்து, அல்லது அதித்துச் சுகதுக்காதிபோ கத்தையும், விஷயத்தையும் அறிக்கடைகின்றது. எப்படி அக் கண்கள் கண்ணாடியின் சகாயமின்றி எழுத்தாதிகளையறியாதோ அப்படியே ஜீவான்மா இந்திரியமின்றி காணவுங், கேட்கவுஞ், சுவைக்கவும், முகரவும், பரிசிக்கவும், அந்தக்கரணமின்றி அநுப வித்தவைகளையுஞ் சுகதுக்கங்களையும், மீள நினைக்கவும், அநுப விக்கவுஞ் சக்தியுடையதாகாது. ஜீவான்மாவிவைகளின் சகா யத்தைச் சூக்கும தூல தநுக்களில் அடைகின்றது. இப்படிக் கென்றா முன்னோர் வகுத்த ஜீவலக்ஷணத்தைப் பகுத்துணராத

வர்கள் பிரதிபிம்பங்களே யறிகிறதாகவும், தொழில்களைச் செய்கிறதாகவும் அப்படிக்கலைகள் செய்வதால் ஆன்மாவாகியதனைக்கொருஹானியும் லாபமுமில்லையென்றும் யூகமின்றியுஞ்ஞானமின்றியும் இச்சாஞான கிரியைகளையும், அபிமானத்தையும், விடாது அதர்ம வழியிற் பிரவர்த்தித்தும் வருகிறார்கள். இதோடு இவ்வித அதர்மோபதேசத்திற்கு வேதாந்த மெனவும் சித்தாந்தமெனவும் பெயர்வைத்து இதையெவரு மங்கீகரிக்க கட்டாயப்படுத்துகின்றார்கள். இவர்கள் அவித்தையாதியமூன்றுதேகவபிமானமும் விடுத்து இச்சாஞான கிரியைகளின்றி இயற்கை வடிவில் விளங்குஞ் ஜீவான்மாவாகிய சுதந்தர சுக நித்திய ஞான சொரூபத்தை யறியார்கள். இவர்கள் விபரீதமாகஜீவன் இலக்கணத்தை புணர்ந்தவர்களே யாவார்கள். இஃதிருக்கட்டும் ஜீவனுக்குக் கர்மசம்பந்த மெப்படியுண்டாயிற்று. கன்மம் முந்தியதா? ஜன்மமுந்தியதா? ஜன்மமின்றி ஜீவன் கர்மத்தை எப்படி சம்பாதித்துக்கொண்டது? கர்மம் மனத்தாலும் வாக்காலுங் காயத்தாலுமன்றோ உண்டாகிறதாக ஆஸ்திகராகிய இந்துக்களொப்புகிறார்கள். ஜன்மமுந்தியதெனில் முதல ஜனனமெப்படி வந்தது? அதுவருவானேன்? என்றுவந்தது என்று பூர்வபக்ஷத்தார் கேட்குங்கேள்விகட்கு என் அநுபவமாகிய விடைகளை சுருதி யுத்திய் பிரமாணங்களுக்கொத்தே உரைக்கின்றேன்.

பூர்வகன்மமும் புனர்ஜன்மமும் உண்டென்கைக்கு ஏது.

சீடனே! இவைகளை வெகு ஜாக்கிரதையாய் கவனி. என்றும் உலகத்தில் நாம் பார்க்கும் எவ்வெப்பொருள்களும், தொழிற்குணமும், வன்மையும், வடிவு, அளவு, சுவையாதிய பொருட்குணங்களில் ஒன்றும் பலவுமாய்பொருந்தியிருக்கக் காண்கின்றனமே யொழிய தொழிலுங்குணமுமில்லாத பொருளொன்றேனுமிருக்கக்காண்கின்றேமில்லை. தொழிலெனினுங் கன்மமெனினுங் கிரியையெனினு மொன்றேயாம். இக்கன்மம், மூர்த்தத்திரவியத்தில் (அதாவது உருவப்பொருள்களில்) சமவேதித்திருப்பதாம். இக்கன்மம் வேற்றுப்பொருள் சையோகத்தாலும், தஞ்சார்பு கெடுதலாலும் நசிப்பதாக விருப்பதால் அநித்தியமானது. அதுபோலவே ஜீவான்மாவும் திரவியமாதலால் அதனிடத்தும், இச்சை, துவேஷம், பிரயத்தனம், சமஸ்காரமுதலிய கர்மமும், நித்திய[illegible]வம், சுதந்தரம் முதலிய குணங்களும் ஆகாரமாகவே [illegible]கிறது. கர்மத்தால் ஜன்மமுண்டாகிறபடியால், கர்மம் [illegible]

முமம் ஜன்மங் காரியமுமாகக் காணப்படுகிறதே யென்பையாகில்,
ஜன்மத்தால் கன்மஞ் சம்பாதிக்கப் படுதலினுல் ஜன்மங் காரண
மாகவும் கர்மங் காரியமாகவுங் காணப்படுகின்ற தென்னலா
மன்றோ? எப்படி விதையால் விருக்ஷமும், விருக்ஷத்தால் விதை
களுமுண்டாகின்றனவோ எப்படி முட்டைகளால் பறவைகளும்
பறவைகளால் முட்டைகளுமுண்டாகின்றனவோ! எப்படிச் சுக்கிலச்
சுரோணிதக் கலப்பால் மனிதாதிதேகங்களும் தேகங்களால் சுக்
கிலச் சுரோணித விளைவுஞ் சையோகக் கலப்புமுண்டாகின்றன
வோ அப்படியே கன்மத்தால் ஜன்மமும் ஜன்மத்தால் கன்மமு
முண்டாவதாகவே தோன்றுகின்றபடியால் காரணகாரிய வாத
மென்று முடிவு பெறுததாகவேயிருக்கின்றது. இப்படிக்கிதைத்
தீராவழக்காகவிடின் முடிவுதான் யாதோ வென்பையேல், எல்
லாம் அநாதியாக விருக்கிறதென்று நான் முன்னமே குறிப்பிட்
டிருக்கிறேன். இதைப்பற்றி பல மதத்தினர்கள் சொல்லும் யுக்
திகளைச் சொல்லுகிறேன். இதை நீ கவனிப்பதால் மதங்களினு
டைய வலுவும் ஆதிப்பிறப்பினுடைய உண்மையும் நீ தெரிந்து
கொள்ளுவாய். கிறிஸ்து, மகம்மதியர்கள் கன்மத்தினுல் ஜன்ம
மொப்புமவர்களல்லர். உலகத்திற் கடவுள் ஜீவர்களைத் தாரதம்
மியமாகப் படைப்பானேன்? கடவுளுக்கு எல்லா உயிருஞ்சமமல்
லவோ? இப்படிக்கிருக்க சிலவுயிரைத்தீராவியாதியுடனிருக்கவும்,
சிலவுயிர்களை பலத்தோடு அழகும் நீண்டவாயுளு மடைந்திருக்க
வும், சிலவுயிர்களை அற்ப ஆயுளடையவும்,சிலவுயிர்களை கர்ப்பத்
தினிடமாகவே யிறக்கவும், சிலவுயிர்களை ஆண்மையோடு பல
வுயிர்களை தன்வயப்படுத்தி சுகமும் வீரமும் தீரமுமநுபவிக்கவும்
செய்வானேனே? பூர்வ கர்மமில்லையாகில் சிலவுயிர்களை யுயர்த்தி
வாழ்வித்தும், சிலவுயிரை இழித்துத் தாழ்வித்தும் வைக்கப்பிரி
யப்பட்டது நீதியாகக் காணப்படவில்லையே என்னுங் கேள்விக்கு
பூர்வபக்ஷிக ளவரிஷ்டமென்றும் அதைப்பற்றி நாம் விசாரிக்கப்
படாதென்றும் தன் வல்லமையைக் காட்ட விப்படி செய்திருக்கி
றாரென்றும், தேவரகசியமென்றும்,சொல்லுகின்றார்கள். கடவுள்
ஓர் ஏதுவுமின்றி தன்னிஷ்டம்போலச்செய்பவராகில் கிறிஸ்து மக
மதியர்கள் தங்கள் பைபில் குரானையு மேற்றுக்கொண்டு நடந்து
வருவதிற் பயனென்? இராமன பாதகங்கள் மிகுதியாகச்
செய்த துஷ்டர்களையும் நாளை மோக்ஷத்திற் சேர்த்துவிட்டு பா
வஞ்செய்யாது மேற்சொன்ன பைபில் குரான்விதிகளை யேற்று
நீதியில் தவறாது நடந்து வந்த அல்லதுவரும் கிறிஸ்து மகம்ம
தியர்களை நித்திய நரகத்திற் சேர்த்துவைக்கவும், கூடுமல்லவோ?

என்றால் இவற்கவர்கள் என்னசொல்லுவார்கள்? இதெல்லாம் மனிதர்சாமார்த்திய வார்த்தைகள். இப்படிப்பட்ட வார்த்தைகளைக்கேட்பதும், கேட்பாரோடு யழுகுதலும், பாவமென்று கடவுள் பைபிளினுங்குரானிலும் கட்டளையிட்டிருக்கின்றார். எனச்சிலர் சொல்லித் தந்திரமாக அவ்வார்த்தைகளைக் கேளாதவர்களைபோல பேசவிடுகிறார்கள். பின்னுஞ் சிலரோ தேவனிஷ்டம் அப்படியுஞ் செய்யக்கூடும். அப்படிக்கவர்செய்வாராயின் அவரைக்கேட்பாரார்ரென்று கொடுங்கோலரசர் கூற்றிற் சிலவற்றை உவமானமாகச்சொல்லிக்காட்டிப் பின்னு உண்டாகுஞ் சங்கைகளுக்குவிடைசொல்ல வகையில்லாமையால் ஓய்ந்து பின்னொருகாலத்தில் பேசலாமென்று சாக்குப் போக்குகள் சொல்லிக்கொண்டு போய்விடுகிறார்கள். இவ்வித கஷ்டம் பலரிடத்தில் பலகாலங்களில் பலகிறிஸ்து, மகம்மதியர்கள் பட்டும் தம்மூர்க்கக் கொள்கையினின்றும் மாறுபடுகிறார்களில்லை. புண்ணியபாவங்களை யொப்பி சுவர்க்க நரகப்பயனுண்டெனச்சொல்லுவரும் எவ்விதமதத்தினரும் பூர்வ கர்மத்தையும், புனர்ஜன்மத்தையும் ஒப்பார்களாயின் அவர்கள் கடவுளுண்டென உலகோரை வஞ்சிக்கும் ஆஸ்திக வஞ்சக நாஸ்திக குருக்களே யாவரென நினைக்க விடந்தருகின்றது. ஏனெனில்; உலகத்தில் ஒவ்வொருவனும் புண்ணிய பாவமிரண்டையுஞ் செய்தவனாகவே யிருக்கவேண்டும். கேவல புண்ணிய புருஷன் உலகி லிருக்கின்றானென லருமை. இதைப்போலவே கேவல பாவி உலகத்திலுண்டெனலுங் கூடாது. ("குணநாடி குற்றத்தை நாடி மிகைநாடி மிக்க கொளல்") ஆனால் புண்ணிய மதிகமாகவும் பாவம் மிகச்சிறிதாகவுஞ் செய்தவரைப் புண்ணியரென்றும், பாவமதிகமாகவும் புண்ணிய மிகச் சிறிதாகவுஞ் செய்தவரைப் பாவியென்றும் யாவரும் பறைகின்றனர். சமமாக வுடையவரையோ அவரிடம் நன்மைபெற்ற சிலர் புண்ணியரென்றும், தீமைபெற்ற சிலர் பாவிகளென்றுங் கூறுகின்றனர். இப்படியே இந்துக்கள் தங்கள் நூலால் கொள்ளப்படுகிறார்கள். இவ்விஷயம் உலகத்திலெங்கும் அநுபவமாகையா லங்கீகரிக்கத்தக்கதே. கிறிஸ்தவர்கள் சொல்லுகிறபடி நித்தியநரகமும், நித்திய சுவர்க்கமும் இவர்களுக்களிப்பது நியாயமாகக் காணப்படவில்லை. இதன்றி இவ்வுலகத்தில் பாவமாவது, புண்ணியமாவது அதிகமாகவும் அல்லது இரண்டுஞ் சமமாகவும் செய்துகொண்டுவந்தவனிறந்தபிறகு அவனைப்புதைக்க யாவரும் பார்க்கின்றோம். அப்படி புதைக்கப்பட்டவனுடைய தேகம் சிலதினங்களில் வயிந்து போவதையு மறிந்திருக்கின்றோம். ஞாயத்தீர்ப்பு காலத்தியவர்

மகாமகோபாத்தியாய

தும் புதைக்கப்பெற்ற எவன் தேகமு மிராதென்பது யாவருக்கு மனுபவமல்லவா? இறந்துபோனவன் ஆத்மா நியாயத்தீர்ப்புகால பரியந்தம் எந்தவுருவத்தோடு எந்த லோகத்தில் எதை யநுபவித்துக்கொண்டு இருக்கிறதென்பதை அந்நூலாலறிய விடமில்லாதிருக்கிறது. கிறிஸ்துமத குருக்களும் அதை யறிந்தவர்களாகவும் அதைப் பிறர்க்குச் சொல்லி விளக்குகிறவர்களாகவுங் காணப்படுகிறார்களில்லை. இதுநிற்க; கிறிஸ்தவர் மதப்படி விசாரணைக்காலமாகிய கடைநாளில் உலகுதித்த நாள்முத லிறந்தோர்கள் உயிர்த்தெழுவார்களானால் அப்போது பூமி அவர்களுக்கெல்லாம் நிற்கவிடந்தருமா? இடங்கொடுப்பதாகவே கொள்ளுவோம். அழிந்துபோன பூர்வதேகமல்லவே மீள உண்டாவது? இதனால் உயிர்கள் வேறேதேகத்தைப் பெற்றவர்களாகிறார்களல்லவா? இப்படிக்குப் பெற்ற புதிய தேகத்தோடல்லவோ புண்ணியவான்கள் நித்ய சுகமென்ற சுவர்க்கத்திலும், பாவிகள் நித்திய நரகத்திலும் போய்வசிப்பவர்களாக வேண்டும்? யோசித்துப் பார்த்தால் பூர்வம் புண்ணியத்தையும், பாவத்தையும் செய்திறந்து புதைக்கப்பட்ட தேகமல்லவே நரகத்திற்கும் மோக்ஷத்திற்கும் போவது? அது உருவழிந்து போனதை யாவருமறிவார்களாகையால் புனர்ஜன்ம தேகமே பூர்வவினைப்படி நரக சுவர்க்கத்தை யநுபவிப்பதாகத் தெரியவருகிறது. ஆதலால் கிறிஸ்து மதத்தினர் முடிவில் புனர்ஜன்மத்தை யொப்பி முதலில் பூர்வ வினையை யொப்பாமற் பேசுவது நியாயமாகக் காணப்படுகின்றதா? யாதோர்தீங்கும் செய்யாத உயிர்களிற் சிலவற்றை வலிமையும் ஆண்மையுமுடைய துஷ்டமிருகங்களாகவும், துஷ்ட பக்ஷிகளாகவும், மீன்களாகவும், பூச்சிகளாகவுஞ் சிருஷ்டித்து சிலவற்றை அவைகளால் எக்காலத்துந் துன்பமடையத்தக்கசாமர்த்தியமும்வலியுமில்லாத சாது ஜீவன்களாகப்படைப்பதும்,கடவுள் சாமர்த்திய மென்பது நியாயமேயோ? அன்றியும் ஒரு தீங்குஞ் செய்யாத ஒருயிரை உலகத்தில் பேடி, குஷ்டரோகி, முடவன், செவிடன், குருடன், ஊமை முதலிய தேகியாக பிறப்பித்து அவனை வாழ்நாளெல்லாந் துன்பமடைய வைப்பது கடவுளுக்குக் கருணையேயோ? இது நியாயமாகவுங் கருணையாகவுங் காணப்படுதலில்லை. இப்படியே மகம்மதியரும் பின்னுக்குக் கர்மபலனையும், கர்மபல பிராப்திக்கு ஜன்மத்தையு மங்கீகரித்து முற் பிறப்புகளை [illegible]க் கொள்ளாதது அடாததேயாகும். இவர்களிற் சிலர் ஆதியில் கடவுள் சர்வ வுயிர்களையுஞ் சமமாகவே படைத்தாரென்றும், தேகத்தோடு பொருந்திய ஜீவர்கள் ஆசையால்

பிறவுயிர்களுக்குத் தீங்கிழைத்தலால் தீவினை யதிகரித்து பேதமாகிய ஜன்மங்களடைந்து கொண்டு வருகின்றன, வென்றுங் கூறுகின்றனர். அப்போது முதலில் மனிதனே படைக்கப்பட்டானென் றாகிறது. இதையொருவாறு ஒப்பிக்கொண்டாலும் ஆட்சேபனைக் கிடந் தாராம லிருக்கவில்லை. எப்படியெனின் கடவுள் ஆதியில் மனிதனைப் படைப்பானேன் என்னுங் கேள்விக் கிடந்தருவதோடு ஆகாராதிபோக வஸ்துக்களைப் படையா முன் மனிதனைப் படைத்தாரென்பது அசம்பாவிதமாகக் கொள்ள விடந்தருகின்றது. கடவுள் ஏன் படைத்தாரென்னுங் கேள்விக்கு லீலைக்காகப் படைத்தாரென்று விடை கூறலாமே யென்றால், பின்வினையும் பெரிய அனர்த்தங்களை யுணராத பேதைமையான லீலை கடவுளுக் கடாதென வுரைக்க நியாயமிருக்கின்றது. இதனாலேயே இந்துக்களுள் பிரபல சமயிகளாகிய, சைவ வைஷ்ணவர்கள் ஜீவன் அநாதியாகவே மலசம்பந்த முடையனாக விருக்கின்றான் என்றும், கருணாநிதியாகிய கடவுள் தமது கருணையால் அம்மலத்தி லிருந்தும் ஜீவர்களை விடுவிக்கும்படி செய்ய சகாயமாகத் தனுகரணாதிகளைத் தருகிறாரென்றும் சொல்லுகிறார்கள். ஜீவர்கள் தமக்குக் கிடைத்த தனுகரணாதிகளைக்கொண்டு வேதாகம மோதும் வழிகளிற் சென்று மலநிவர்த்தியைப்பெறுவார்களாயின் மோக்ஷ சுகமடைந்து ஜன்மத்தினின்றும் கன்மத்தினின்றும் விடுபட்டிருப்பார்க ளெனவும், அப்படிக்குச் செய்ய முயற்சியாமல் ஆசையால் நிலையா வுலக வாழ்வையும், தேக யோக போகத்தையும், மோகத்தினால் சதமென நம்பி பிறவுயிர்களுக்குத் தீங்கிழைத்து வருவார்களாயின் மிருகாதி தாழ்ந்த ஜன்மங்களிலும் பிரவேசித்து உழல்பவர்க ளாவார்களென்றும் பகர்கின்றார்கள். புற்பூடாதிகளும் உயிர்களுக்கு உணவாகி உபகாரம் பெறலால் புற்பூடாதி உயிர்கள் உயர்ந்த ஜன்மங்களைப் பெறுவனவாகின்றன. உயர்ந்த மனிதனும் தீங்கிழைப்பதால் புற்பூடாதி தேகங்களைப் பெறுகிறானெனச் சொல்வது கொள்ளத்தக்கதாகவே யிருக்கின்றது. வாசிட்டாதி அனேக நூற்களில் உலகம் காடாக வெகு கற்பங்களிருந்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது. எப்படிபார்த்தாலும் பூர்வ ஜன்மத்தையும், பூர்வ கன்மத்தையும் ஒப்பாமல் ஆஸ்திகம் நிலைப்பதாகக் காணப்படவில்லை. கடவுள் நியாயாதிபதி யென்பதற்கு மிடமு[illegible]மும். இஃதிருக்க

பூர்வ கன்மத்தையும் புனர் ஜன்மத்தையும் ஒப்புகிற இந்துக்களை ஒப்பாத அந்நியமதத்தினர் சில கேள்விகளைக் கேட்கிறார்கள். அவை யாவெனிற் கூறுவாம். பூர்வ ஜன்ம முண்டாயின் அந்த ஜன்மமும் செய்த கன்மமும் நமது நினைவிற்கு வாராமைக்குக் காரணம் யாது? இந்துக்கள் சொல்லுகிறபடி பிரு புண்ணியத்தால் மனிதனாகப் பிறந்தவொருவன் மீளவும் மாடாகவும் ஆடாகவும் மாறுவானோ? முதல் ஜன்மத்திற்குக் கன்மம் காரணமாக நினைக்க நியாயமுண்டா? மனிதனைத் தவிர மற்றவுயிர்களுக்கு ஆன்மா வுண்டா இல்லையா? உண்டாயின் அவற்றை வதைத்துத் தின்பவர்களை உலகத்தில் அரசன் முதலாயினோர் தண்டிக்காது விடுங்காரணமென்ன? மனித கொலையை மாத்திரமல்லவோ அரசர் முதலிய யாவரும் கொலையாக மதித்து செய்தவனைப் பிரதி கொலை யடையச்செய்கிறார்கள். ஒருவன் பிறந்தவுடனே இறந்துபோகிறான் அவனுக்குப் பாவ புண்ணியமில்லையல்லவா? அவன் மறுஜன்ம மடைய ஹேது விருக்கின்றதா? "முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்" என்கிற பழமொழிப்படிக்கு ஒருவன் விடா ஊக்கமுடையனா யிருந்தால் அவன் கல்வி செல்வம் ஆரோக்கிய முதலியவைகளை யடைகிறானா இல்லையா? சோம்பலும், மறதியும் அசதியு முடையவன் தரித்திரத்தையும் மூடத்தையும், ரோகத்தையு மடைவானென்பதில் ஆக்ஷேபமுண்டா? பிரயத்தனஞ் செய்யும் மதி பெரியதோ சோம்பேறி சொல்லும் விதி பெரியதோ? மதியினால் விதியையும் வெல்லலாமென்கிறார்களே இது அநுபவ வசனமாகாதோ? என்றிவைபோன்ற பல கேள்விகளைக் கேட்கிறார்கள். இப்படிக்கவர்கள் கேட்பது பூர்வ கன்மமும் புனர் ஜன்மமு மில்லையெனத் தீர்மானிப்பதற்காகவே யல்லது வேறல்ல.

**பூர்வகன்மமும் புனர் ஜன்மமுமுண்டென்கைக் கேது.**

புத்திமானாகிய சீடனே! இவைகளுக் கெல்லாம் ஆழ்ந்து ஆராய்ந் தறிந்த விவேகிகள் சுருதி, யுக்திகளுக்கொத்துச் சொல்லும் விடைகளை நீ கவனிப்பாயாக. இவைகள் மிக ரசமான வார்த்தைகள். இவற்றையெவனும் கேட்கவும் அறியவும் ஆசையுடையவனாகவே யிருக்க வேண்டும். கன்ம மென்பதின் சொருபத்தை முன்னே தெரிவித்திருக்கின்றேன். அக்கன்மமானது புண்யகன்மமென்றும் பாவகன்மமென்றும், மிசிரகன்மமென்றும், மூன்று பிரிவுகளையுடையதாக விருக்கின்றது. இக்கன்மங்களைச் சர்வஞ்ஞரு

கிய ஈசன் இரண்டு பிரிவாக வகுத்து எல்லா வுயிர்களுக்கும் அள்
ளித்து அநுபவிக்கத் தேக யோகத்தைக் கூட்டுகின்றனராம்.
புண்ணியமாவது பாவமாவது செய்தவுடனே அக்காரியங்களும்,
அதற்குரித்தா யிருந்த பொருள்களும் அழிந்தாவது அல்லது
மறைந்தாவது போகின்றன. ஆனால் பயிர்கள் தானியங்களை
விளைவித்து நசித்துப்போவது போல அப்புண்ணிய பாவ கருமங்
கள் வாசனை அல்லது ஸம்ஸ்காரம் அல்லது அதிர்ஷ்டம் அல்
லது ஊழ் என்று சொல்லுகிற விதைகளை விளைவித்து அழிகின்
றனவே யொழிய வினைக ளொழிந்து போனவைகளல்ல. இதற்
குத் திருஷ்டாந்தமேதெனின், பயிர் செய்பவன் விளைந்த தானி
யத்தை பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு மற்றவைகளை அழிய
அன்னியங்களுக்கு பராமுகமாக கைவிடுவது போலவாம். வாசனை
யானது சூட்சுமஞானரூபமாக விருப்பதால் அவைகள் இவ்விந்தி
ரியங்களாலும், எவ்வகையாலும் புலப்படுமவைகளல்ல. இப்படிப்
புலப்படாமையாலேயே யாவரும் மயங்குகின்றார்கள். இவை சற்று
விரிவாகச்சொல்லவேண்டி யிருக்கிறது ஒரு மனிதன் வேறொரு
மனிதனை யாருக்குந் தெரியாத விதமாக கொன்று விடுகின்றான்.
பிறகு அப்பிரேதத்தைப் பார்த்தார் அதைப்பற்றி விசாரணை
யெடுத்துக்கொள்ளுகிறார்கள். அப்படியவர்கள் விசாரிப்பதை
அறிந்த கொலைசெய்தவன் நெஞ்சம் அவனை யச்சப்படுத்துகிறது.
அதனால் அவனுக்குக் கவலையும் பயமுமுண்டாகிறது. பின்னர்
அவன் நாம் இக்கொலையை ஒருவருக்குந் தெரியாமற் செய்திருக்
கின்றோமாகையால் அது வெளிப்படாதென்னும் நினைவு, அவ
னுக்குள் பிறக்கிறது. அதுவே அவனுக்குத் தைரியத்தைத் தரு
கிறது. முடிவிலவன் அக்குற்றத்தி லகப்படாமலே தப்பித்துக்
கொள்ளுகிறான். அந்நாடவன் பின்னால் அநேகவருடங்க ளிந்த
நினைவே யில்லாமலுமிருக்கிறான்; மற்றொரு காலத்தில் மற்றொ
ருவன் அப்படியே கொலை செய்ததாக இவன் கேள்விப்பட்ட
வுடன் தான் முன் செய்தது ஞாபகத்திற்கு வருகிறது. அது
வரையவன் செய்த அக்கருமம் என்ன வடிவாக விருந்திருக்க
லாம்? அப்படி கண்ணுக்கும் மனத்திற்கும் புலப்படாம லிருந்த
அநுபவமே வாசனை யென்று சொல்லப்படுகிறது. இவ்வகை
யான பாவ புண்ணிய வாசனைகளைச் சர்வஞ்ஞனாகிய சர்வேஸ்வர
ன் ஸஞ்சிதம் பிராரத்துவ மென்று மிரண்டு பிரிவாகச்செய்து ஒவ்
வொருவருக்கும் தநு கரண புவன போக ரூபவுணர்ச்சியை
[illegible] பிராரத்துவ கன்மமாக அநுபவிக்கக் கொடுக்கின்றான்.
[illegible]மோ சேஷமாகவே யிருக்கின்றது. இதனால், ஒருவன்

பிறந்த வுடனே யிறந்துபோனாலும் மீள அவன் பிறவாதிருக்க ஹேதுவில்லை. இதனாலே பிறந்தவுடனே இறந்த குழந்தையும், மீள பிறக்கு மென்பதே திண்ணமாயிற்று. ஞான மடைந்தா லன்றி பிறவி மாயாதென்பதே வேத வேதாந்தங்களின் றுணிபு. இதுநிற்க ஒருவனை ஞானமடைந்த தநு கரண புவன போகங்களைப் பூர்வ வினையின் பயனென வுணராது, அவித்தையால் மோகிக்கப் பெற்று தநுவை தானாகவும், மற்றவற்றைத் தனதாகவும் சிந்தை செய்து அவைகளைப் பத்திரப்படுத்த ஆசையாற் செய்யுங் கருமங்களே ஆகாமிய கர்மமெனச் சொல்லப்படுகின்றது. இக்கன்மத்தின் பயனும் பூர்வ சஞ்சிதத்திற் சேருகின்றது. ஈசன் மீளவும் ஒருவன் ஒரு ஜன்மத்தில் அநுபவிக்கவேண்டிய அளவை யறிந்து பிராரத்துவ தேகமாகக்கொடுத்து மீதியைச் சஞ்சிதமாக வைக்கிறான். இப்படியே இக்கன்ம சேஷ வாசனையானது, ஒருவனுக்கு ஞான மடைகிற பரியந்தமும் தேகத்தையும் உயர்வு தாழ்வாகிய போகத்தையுங் கொடுத்துக்கொண்டு வருகிறது. இவ்வாறு சேஷமாகும் வாசனையானது ஒருவனுடைய தேக மழிந்த காலத்தில் அவனுடை யவித்தையி லடங்கி யீசனிடத் தடைக்கலம் புகுந்திருக்கிறது. அதை யீசன் வகுத்து செய்தானுக்குப் பிராரத்வ போக தநு கரணாதிகளாகக் கொடுத்துக் கொண்டு வருகையால் ஜீவன் தனக்கு நேர்ந்தவைகளை யுணர்பவனாக விருக்கிறானே யொழிய பூர்வ ஜன்மத்தையும், கன்மத்தையும் அறிகிற சக்தியுடையவனாக விருக்கவில்லை. இதன்றி யாவரும் பாலிய முதல் பாடுபட்டு சம்பாதித்த அநேக அருமையான பாடல்களையும், மந்திரங்களையும், சிறிது சிறிதாகச் செய்துவந்த பாவங்களையும், அப்படியே செய்து வந்த புண்ணியங்களையும், அந்நியர் மனநோகப் பேசிய வார்த்தைகளையும், தன்பா லந்நியர்வஞ்சனையாக அல்லது நியாயமின்றிச் செய்த கிருத்தியங்களையும் அல்லது ஆடியவார்த்தைகளையும் தானேஉண்டவுணவுகளையும், கட்டியவஸ்திர திநுசுகளையும்பூசியசலவைச்சாந்துகளையும் மற்றுஞ்சிலவற்றையும்நாளடைவில்மறந்து போகிறார்கள். மறந்த மாத்திரத்திலவைகள் இல்லாமற்போய்விடுகின்றனவென்பதுஉண்மையாயின், சாம்பித்திரைசெய்யும்போது கண்காதாதிஞானேந்திரியங்களையும், வாக்கு பாதாதி கன்மேந்திரியங்களையும்மனதாதிஅந்தக்கரணங்களையும், பிராணாதிவாயுக்களையும், அவற்றால்விளைவுகளையும், [illegible] சாதிகளையும், ஸ்தூல சூக்கும [illegible]களையும், இவற்றால் சேர்ந்த கல்விகேள்வி சகல குணங்களையும் மறந்து விடுகின்றோம். அப்படி மறந்த மாத்திரத்தி லவைகளில்லாமற் போய்விட்டனவா?

இல்லையே. இதைப்போலவே முன் சொன்னவைகளை நாம் மறந்திருந்தபோதிலும் அவையெல்லாம் வாசனா ரூபமாகவே யிருக்கின்றன வெனக் கொள்ள நியாய மிருக்கின்றது. நாம் செய்த யாவும் நமக்கு நினைவிற்கு வரமாட்டாது. அதனாலே அவைகளெல்லாம் இல்லாமலே போய்விடமாட்டா. எப்படி ஜடப்பொருள்களாகிய, உணவுப் பதார்த்தங்கள் புசித்த வொருவனிடத்திலிருந் தவைகள் ஜீரணமாகியும் கழிந்தும் போனாலும் தன்சாரத்தை ஜடமாகிய அவனுடலுக்குக் கொடுத்து தன்பயனை யநுபவிக்கவே செய்கின்றனவோ அப்படியே சித்தாகிய ஜீவனால் செய்யப்பட்ட கன்மங்கள் ஜீவான்மாவின் பிறப்பிற்குக் காரணமாகிய, வாசனைகளை யளித்து நசிக்கின்றன. வாசனா மதிக சூக்குமமென்று முன் சொன்னோமாகையால் அவைகளறியப்படமாட்டா. அதிருஷ்டம் அல்லது விதி அல்லது பிராரத்வம் என்னும் பெயரால் பூர்வ வாசனா பலனுக்கு வருகின்றது, எப்படி உணவுப் பொருள்களை முற்றுந் தவிர்தலால் சரீரம் மரணத்தை யடைகின்றதோ அப்படியே வாசனைக்குக் காரணமாகிய இருவினையையும், வினைக்கேதுவாகிய தனு கரண புவன போகாபேட்சையையும் ஜீவன் விடுவதால் ஜீவன் முத்தியை யடைகிறது.

பூர்வஜன்மந் தோன்றமைக் கேது.

சீடனே! இதுவரை வாசனா நினைவிற்கு வராமையால் பூர்வ கன்மமும் புனர்ஜன்மமும் இல்லையெனல் கூடாதென வுரைத்ததாயிற்று. இன்னமும் சிறிது விசாரிப்போம். ஒருவன் இத்தூல சரீரத்திலிருந்துகொண்டே நித்ராதோஷத்தால் சொப்பனத்தையடையும்போது ஸ்தூலதனுவும், அத்தூலதனு வக்காலத்திலிருக்கிற இடமும், அதிலுண்டாயிருந்த வியாதி முதலானவைகளும், அச்சொப்பனங் காண்போ னினைவிற்கு வருகிறதில்லை. எழுந்து ஸ்தூல சரீரமுணர்ந்தபின் அச்சரீரத்தைச் சார்ந்த விவகாரங்களெல்லா முண்டாகின்றன. இவ்விவகார நினைவுகள் கனவு காணுங்காலத்தில் எவ்விடத்திலென்ன ரூபமாக விருந்தனவோ, பின்னு மெங்கிருந்து பூர்வ நினைவுகளெல்லா முண்டாகின்றனவோ, அதுபோலவே பூர்வதனுவைமறந்த மாத்திரத்தில் அத்தனுவை யடுத் ——— வினையும் மறதிக்கு வந்ததில் [illegible] அதிசயமல்ல வல்லவா? [illegible] னைவிற்கு வந்தவனுக்கு ம[illegible]வைக ளெல்லாந் தோற்றுவது போலவே யோகிக்குப் பூர்வஜன்மமும் பூர்வ

கன்மமுந் தெரிகிறதென இந்துக்கள் சாஸ்திரங்களுரைக்கின்றன. அனேகந்து சாவகாசமான அநுபவமல்லவாகையால சொப்பனத்தையே உவமையாக வைத்துக்கொள்வது உத்தமமாகக் காணப்படுகிறது. இதனால் ஜீவனுக்கு வேறொரு தேக தோற்றரவால் பூர்வ தேக ஸ்மிருதியாவுந் தோன்றுவதில்லை யென்பது அநுபவமென்றுங் கொள்ள வேண்டியிருக்கின்றது. பூர்வ கன்மமும புனர்ஜன்மமும தோன்றாற் செய்வது கடவுள் நீதியாகவே காணப்படுகின்றது. ஏனெனில் பூர்வ ஜன்மமுங் கன்மமுந் தோன்றுமாயின் இப்போதுண்டாகிய ஜன்மமும் ஜன்மப்பயனும அடைவதற்கு சம்மதமிராது. சொப்பனங் காணுங்கால் வேறாக தனு கொள்ளிருந்தும் நினைத்தபோல பூர்வ ஜன்மமும் பூர்வகன்மமும் தோன்றுங்காலத்தில் தற்போதிய ஜன்மமும அதனைச் செய்ய வேண்டிய கன்மமும் பயனைப்பெறாது வறுமையையடைந்திருக்கும். சிலர்நாம் கனவை விட்டு எழுந்த மாத்திரத்தில் பூர்வ தேகமும், பூர்வகன்மமும நினைவிற்கு வருகின்றனவே அப்படியே பெயபோதாகினும் நமது பூர்வ ஜன்மமும், பூர்வகன்மமும் நமது நினைவிற்கு வருகின்றனவா வெனக் கேட்கிறார்கள். இது யோகிகளாலறியப்படுகிறதென முன்னமே சொல்லி யிருக்கின்றமேதாடு யாவருக்குந் தோன்றாத காரணத்தையுஞ் சிறிது சொன்னோம். இன்னுஞ்சிறிது சொல்லுகின்றோம். இதனால மனிதன்மாடாகவும் ஆடாகவும தேவராகவும் மற்றெவ்வகைப் பொருள்களாகவுமாகலா மென்பதும் தோன்றுமோவென நினைக்கின்றேன். எப்படியெனின் ஓருயிர் தனது யதார்த்தசொரூபத்தை நினைந்து பாராமல் தன்னை மனிதஜன்மமாகவும் சிறிய தன்னை அனேகவும் யௌவன பருவமுடையவனாகவும் அரசன் மகனாகவும் அவயவங்களின குறைவிலாமை பெற்றவனாகவும், தனது சாக்கிராவஸ்தையில் உணர்ந்திருந்தும், அதே உயிரானது நித்திராதோஷத்தினால் கண்ட கனவுகளில், ஒருக்கால் ஏழையாகவும், மற்றொரு காலத்தில் கிழவனாகவும், மற்றொரு காலத்தி லிறந்தவனாகவும், மற்றொரு காலத்தில் குழந்தையாய்ப் பிறந்ததாகவும, ஒருகால் ஆகாயத்திற் பறப்பவனாகவும், ஓர் பொழுதாமரமாகவும், மாடாகவும், உலகத்தில் தான் முன்பு கண்டிராத மிருக ரூபமாகவு தானிருப்பதாகத் தன்னை உணருகின்றது. அதன்பின் தன்னையும் உலகத்தையும் உணராது தாங் சுழுத்தியிலிருக்கின்றது. இதனால் ஒருவன் சரீரத்தை விடும்போது அதன் வினை வாசனைக்கு [illegible] வடிவாக அப்போதுண்டாகும் நினைவின் வடிவாக விருக்கு [illegible] தை விட்டு மீள ஜனன மெடுக்கும்போது பூர்வ நினைவின் வடிவாகக் கனவுபெற்று

வெளிபோந்து அதே வடிவாகத் தன்னை யறியும் நனவையு மடைகின்றதென்பதிற் பிழையென்னை? ஒரு வடிவுமில்லாத இவ்வுயிரானது அஞ்ஞான வசியா யிச்சித்த பொருளை யநுபவிக்குந் தக்க வடிவை யடைய ஆசைப்படுவ தியல்பாகவே யிருக்கின்றது. அப்படி இச்சித்தபடியே தனது கனவில் அவ்வுருவாகி விடுகின்றது. இதனாலேயே சித்திபெற்ற யோகிகள் பல வடிவங்களைத் தரிக்கக் கூடுமென்றும் சொல்லுகிறார்கள். ஞானிகளோ பிறப்பிற்குக் காரணம் இ[illegible]சையேயன்றி வேறல்ல வென்கிறார்கள். இப்பொழுது மனிதராக விருக்கும் ஒவ்வொருவருக்கும், அவர்களந்த மனிதஜன்ம மடையுமுன் னமெப்படி யிருந்தோமென்பது அறிய அவர்களுக்குத் தோன்றா திருந்தாலும், பிறந்த அன்று இன்று தான் பிறந்தகுழந்தையாக விருக்கின்றோமென்பது மாத்திரந் தெரிந்திருக்கு மல்லவோ? எப்படி தெரிந்திருந்த மென்றால் அச்சரீர போக்கியத்தாலுண்டாகும் சந்தோஷசிரிப்புப் பசியாதிய நோயாலுண்டாகும் அழுகையுமுண்டாக நாம் காண்கிறோ மாகையால் தன்னை யுணராது அப்படிக்கு அந்தக்குழந்தை சிரித்தற்கும் அழுததற்கும் காரணமென்னை? பெரியோராகிய நாமும் சுழுத்தியில் நம்மை யுள்ளவராகக் கொள்ளாதிருந்தும், நனவில் ஏதேனுமொருவடிவினராக விருப்பதாகக் கொள்வது போல அக்குழந்தையுங் கொள்கிறதென்பதி லாட்சேபனை யில்லை. பின்பு அக்குழந்தையும் நம்போலுறங்கி குழந்தை வடிவத்தைத் தவிர்ந்திருந்து மீளத்தன்னைக் குழந்தைவடிவாக அறியும்போது சற்று மாறியவடிவாக அறிகிறதேயொழிய அன்று பிறந்த குழந்தை வடிவாகத் தன்னையறிகிறதில்லை. இப்படியே ஏறக்குறைய மூன்று வயதளவும் ஆண் பெண் என்னும் வேற்றுமையும், அதனாலுண்டாகும் ம[illegible]மும், ஜாதி, குல கோத்திர முதலியனவுமுடைய உயிரா[illegible] தன்னை நினையாமல் தினந்தினம் மாறிய வுருவாகவே உணர்ந்து வருகிறது. பின்பு சிறிது மானமாதிய உலக வழக்கத்தை யறியும் வலியுடையதாகி தன்னை நாளுக்கு நாள் மாற்றி வேற்றுமைப்படுத்தியுணர்ந்து வருகிறது. பின்புபால்யயௌவன கௌமாரவிருத்தாப்பியமாதியபருவங்களையுடையதாக அறிந்துவந்து கடையில் மரணமடைபவனாகவும் இவ்வுடல் நம்மைவிட்டுப்போகிறதெனவும் போயதென்றுமுணர்ந்துகொண்டே பிறவா முன்னும் இ[illegible]யில் தூக்ககாலத்திலு மிருந்த விதமாகவு மிருந்து விடுகின்[illegible] இதனாற் றன்னைச் சில பொழுதாயினும் பூர்வ மிருந்தபடியே இருத்தி யுணரும் வலியற்ற ஜீவன் தான் கொண்டிருக்கும் மனிதாதி ஜன்மத்திற்கு வேறாகிய வேற்

றுருவமாகவும் நினைக்கத்தடையில்லை யல்லவா? அன்றியும் இவ்வுயிர் தனக்கு வாய்த்த ஒருடலோடு என்றுமிருக்க வேண்டுமென்னு மிச்சை அதிகமாகவுடையதென்பது யாவர்க்கும் அநுபவமேயாம்.

ஆயினு மது சிறிதும் எவ்வுயிர்க்குஞ் சித்திப்பதில்லை. காரணம் பூர்வ கர்மத்திற்குத் தக்க விதமாக ஈஸ்வரன் அவ்வுயிரின் ஆஸ்ரய வுருவதேகத்தைக் கணம் கணமுமாற்றிக்கொண்டே வருகிறதினால் அதனிச்சை முடிவாகாமலே யிருக்கின்றது. இப்படி அறியாமையால் அநாதியில் மோகமடைந்த வுயிர் நிலையான தனதேதார்த்தவுருவத்தை வேதாதிகளின் விதிப்படிக் கண்டுதன்னுலறியாமையைப்போக்கிக்கொண்டு பெறுதல் அருமையென நினைத்து சர்வஞ்ஞனுகிய ஈஸ்வரன்வேதத்தையும் தேகத்தையும் அநாதியிலிருந்து கொடுத்துக்கொண்டே வருகின்றான். வேதங்களும் மதங்களும் உலகத்தில் பலவுண்டு. ஆயினும் யுக்தி யனுபவத்திற்குப் பொருந்தாத சில மதங்கள் முன்பின் முரணாக இடையிலே ஆரம்பித்து இடையிலேயே நின்றுவிடுகின்றன. ஹிந்துக்கள் ஆமோதிக்கும் வேதத்திலோ ஆதியந்தத்திலும் இடையிலும் தேவையான யாவும் உண்டாயிருக்கின்றன. இந்து மதத்திற் சொல்லும் நான்கு வேதங்களிலும் அதிக இரகசியப்பொருள்கள் இருக்கின்றன. அவையாருக்கும புலப்படுகிறதில்லை, புலப்படாமைக்கு காரணம் சோம்பலாலும் சிலமூடர்கள் சொல்லாலுமவற்றை யாவருங்கற்று உணர்ந்து மனத்துல்லியம் பெறும விருப்பதே "காடறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் வேண்டுவதில்லை" யென்பதுபோல வேதத்திற் கருகாள் நாங்களே என்று நிரீயும் போலிபார்ப்பாரும் நாம் பார்ப்பு[illegible]பால் வேதங்கற்றே யிருப்போம் என்று மற்றவர் நம்பி[redacted]ளர்களென்று நம்பித் தாங்களும் கல்லாது ஒழிந்து காலங்கழித்து வருவாராயினர். தான் கல்லாமையால் பிறரையும் கல்லாதிருக்கச் செய்யவும், தமது ஊழல்கள் வெளிப்படாதிருக்கச் செய்யவும், சூத்திரராதியோர்க்கு புராணமே போதுமென்று அதனைப் போதித்து ஜீவனஞ் செய்வாராயினர்.

இதனாலே உள்ளதனை உள்ளபடியுணர்த்தும் ஹிந்துமதம் பேர்மாத்திரமாக பிழைத்து வருகின்றது, அல்லாது பிரபலப்பட்டு தன் பயனை யாவர்க்கும் புகட்டிக் கொடுக்கும் பிரபல செழிப்பைப் பெறுது வற்றி வாண்டு நிற்கின்றது. உண்மையா

கையால் வேரோடும் ஒழிந்து உயிரற்றுப்போகாமல் வற்றியஜீவத்தோடு வாழ்ந்து வருகின்றது. பூர்வம்இச்சையே பிறப்பிற்குக் காரணமென்று கூறியிருக்கின்றோம் மாகையால் ஒவ்வொருவரின் இச்சையும பூர்த்தியாகவேண்டியது அவசியகரமாம். புனரிச்சை பிறவாமலிருப்பதற்கு ஹேதுவாகிய பொருட்பெறுதியே பூரண சுகத்திற்கு ஆஸ்பதமாகுமல்லாதுமற்றவையாகா. எல்லா வுயிர்களும் தங்குறைவுகளை நீக்கிக்கொண்டு சுகப்படுவோமென்று கருதியல்லவோ மண்,பெண்,பொன்னாதியவற்றை விரும்புகின்றன. என்றைக்காகிலும் தங்குறைவுகளைப் பூர்த்தி செய்துக்கொள்ளாமல்ஆன்மா எப்படி நித்தியச் சுகமாகவிருக்கும். மண்பெண் பொன்னாதிய பெற்ற சார்வபௌமனும் குறைவற்றவனாகக் காணப்பட்டிலன். எல்லா வுலகமும் எல்லாப்பொருள்களும தனதாக வுடைய ஈசுரனை ஜீவன் நோக்கி தவமுதலியவற்றால் அவரது கருணையைப் பெற்று யாவும் தனதாகப் பெற்ற வன்றன்றோ பூரண சுகத்தைப் பெறுவான். இதனால் ஜீவன் ஈசனை எவ்வகைத் துணையாக நினைக்கவேண்டு மென்பதை யோசிக்க ஒவ்வொரு மனிதனும் கடமைப்பட்டிருக்கின்றான. எல்லா உலகிற்குங் கடவுள் ஒருவரேயல்லாது பலரில்லை. ஈஸ்வரபக்திசெய்பவன்சர்வகாரணனாகிய சர்வாந்தர்யாமியையே பஜிக்கவும் நினைக்கவும்வேண்டு மல்லாது மதத்தினர் சொல்லும் சிறிய தெய்வம் பெரிய தெய்வங்களைக் கொண்டாடுவது பிசகு. ஏனெனில் அநேக தெய்வம் உலகத்திற் கென்றும் பொருந்தாது. ஒரே தெய்வந்தான் பொருந்தும்.

எம்மதத்தினரும் தந்தெய்வத்தைப்பரத்துவமுடைய தாகவும்பெரியதாகவும் மற்றையோர் தெய்வம் சிறியதாகவும் பரத்துவமற்றதாகவும் குளறித் திரிவர். இது சிரிக்கத் தக்க கொள்கையேயல்லாது வேறல்ல. தந்தெய்வமே எல்லா உலகிற்கும் தெய்வமாகையால் எவர்கூறும் தெய்வமானாலும் அதனையே மற்றவர் வேறு பெயரால் தந்தெய்வமாகத் துதிக்கிறார்க ளென்று புறமதத்தினை நிந்தியாது நினைப்பவரைக்காணோம். அவர் சிறிய தெய்வத்தைத் துதிக்கிறாரென்றும்,நாம் பெரியதெய்வத்தைத் துதிக்கிறோமென்றும் சொல்லித் திரிகின்றனர். இப்படி சொல்லும் ஒவ்வொருவனையும் அநேக தெய்வமுண்டெனக் கொண்டவனாக மதிக்க இடந்தருகின்றது. ஜகத்திற்கு அநேக தெய்வம் காரணமென்னை சிரிப்பிற்கே இடமாகும். அநேக தெய்வமே ஜகத்திருக்கவேண்டும் ஒரு தெய்வத்தால் எல்லா காரியமும் முடிய

மா? என்பவன் மூடனுவதோடு தன் றெய்வம் சர்வசக்தியும் சர் வஞ்ஞத்துவமும் இல்லாததென்றே கொள்பவனுகிருன். அப்படிக்கல்ல. தன் தெய்வமே சர்வசக்தியையுடையது, சர்வஞ்ஞத்துவமுடையதுமாம்என்றும் பிறர்சொல்லும் தெய்வங்கள் அப்படிக்கில்லாமையால் தாழ்ந்தனவாமென்றுங் கொண்டு சொல்லுகிருர்கள் என்று கொள்ளலாமேயெனில், இதுவும் சிரிப்பிற்கே இடமாம். ஏனெனில் எவன்கொண்ட தெய்வமானுலும் சர்வசக்தியும் சர் வஞ்ஞத்துவமு மில்லாததாயின் அதனை தெய்வமாகக் கொண்டு அதனைப்பழிப்பது இவனது மூடததனமேயாகும். சர்வசக்தியும் சர்வஞ்ஞத்துவமு மில்லாததை ஜீவனுகவே மதிக்கவேண்டும். அதைத் தெய்வமாகக் கொண்டு சிறிய தெய்வமென வாதாடுதல் பயனில் கூற்ரும். அவன்றன்தெய்வமும் சர்வசக்தி சர்வஞ்ஞத் துவமு முடையதே யெனச் சொல்லின், அதைத் தான்கொண்ட தெய்வமென மதிக்கவேண்டுமேயல்லாது, அதைத் தாழ்த்தப் பார் டுபேவது அறியாமையினும் அறியாமையாம். அன்றியும் தெய் வமென்பது யாவர்க்கும் பொதுவானதாகவும் நீதியுடையதாக வும் இருப்பதெனக் கொள்ளாமல் தங்களுக்கே நன்மை செய்து பிறர்க்குத் தீமைசெய்வதெனக் கொள்வதும் அதைப் பிறர்க்குச் சொல்வதும்மூடத்தனம் என்பதில் தடையென்னே? ஈசன் ஒருவனேஎன்பது ஈசாவாஸ்யோபநிஷதத்தாற் பெறப்படுகின்றது. அவனே சர்வாதாரனென்பது மறுக்கப்படாத வுண்மை. எங்ஙனமெனின் உலகிற்காணப்படும் அறுவகைத்தோற்ற சரீரங்களிலெல்லாம், மண் வியாபகமாகவும் சரீரங்கள் வியாப்பியமாதவும் இருக்கக் காண்கின்ருேம். அப்படியே பூமி முழுமையும் தனது சிநேகமென்னுங் குணத்தால் வியாபித்து ஈரமாக்கி பூமியினும் 1 முப்பங்கதிகமாகிக்காணப்படுநீர் மண்ணினுஞ் சூட்சும அணுக்களுடையதாய் வியாபகமாகி இருத்தலைக் காண்கின்ருேம் அப்படியே ஜலத்திலும் மண் கல்லாதிய எவ்வகைப்பட்ட மூர்த்த திரவியங்களிலும், நீர் பிரவேசிக்கக்கூடாத குருத்துவமுடையகல், அல்லது உலோகாதிய பொருள்களின் அந்தரங்கத்திலும் பிரவேசித்து அவற்றைத் தன்மயமாக்கிக் காட்டும் அக்னி என்னும் அதிசூக்குமப்பொருளை மண் ணீரினும் வியாபகமாயிருக்கப் பிரத்தியட்சமாக உணர்கின்ருேம். இவைகளுள் ஒன்றைக்காட்டிலுமற்ருென்று வியாபகமுடையதும் சூக்குமமுடையதுமாகி உருவமுடையனவாய் காணப்படுகின்றன. இதைப்போலவே அருவமாகிய வாயுவும் அதற்கிருப்பிடமாகிய ஆகாயமும் பூதத்தன் மாத்திரைகளாகியஇங்

திரியங்களும், அந்தக்கரணமும், அதிசூக்குமப் பொருள்களாய் மற்றவற்றில் வியாபிக்குந் தன்மையுடையன லென்று கொள்ள ஆட்சேப மென்னை? இல்லையென்றோம். இது பிரத்தியட்சம், அல்லது அநுமானம்,என்னும் பிரமாணங்களாற் பொருந்து மல்லவா? இவற்றைப் போலவே ஜீவன் மேற்சொல்லிய எல்லாப் பொருளினும் அதிசூக்குமமாம். அதனினும் ஈசனே அதி சூக்குமமாகவும், பூரணவியாபகனுகவும்,சர்வஞ்ஞனுகவும்,சர்வசக்தனுகவும்,சர்வாந்தரியாமியாகவும்,சர்வ நியந்தாவாகவும,சர்வகாரணனுகவும், சர்வாதாரனுகவும,ஏகனுகவும் கொள்வதற்குத் தடையென்னே? ஈசரா தேவர்கள் அநேகருண்டென்பதைப் பற்றி யுண்டாகும் சங்கைகளுக்கு நேர்ந்த போது விடையளிக்கின்றேம். எழுவித பிரமாணத்திற்கும் வேறாகிய ஐதீகமென்னும் அசம்பவ துர்வழக்கத்தை யகற்றுவான் வேண்டி இறப்புப் பிறப்போடு ஏகதேசமுமுடைய கடவுளரைப்பற்றி பேசவேண்டிய தவசியமாகையால் இனியோரிடத்தி லதைக் குறித்துப் பேசுவாம்.

சீடனே! இனி மனித ரல்லாத பிராணிகளுக்கு ஜீவான்மா உண்டா இல்லையா. என்பதற்கு விடைசொல்ல ஆரம்பிப்போம் பூர்வம் நான் எச்சரீரத்தினும் அந்தக்கரணமென்னுஞ் சொச்சப் பதார்த்த மிருக்கிறதே யொழிய ஜீவனில்லை யென்றே சொல்லியிருக்கின்றேன். ஜீவான்மாவும் பரமான்மாவு மில்லாத பொருள் உலகத்திலெங்கு மெதுவுமில்லை. ஆன்மா வினைக்குரிய தேகத்திலபிமானித்து நிற்கின்றது. தேகங்கள் பல்வேறு வடிவமுடையனவாக விருக்கின்றன. அவற்றுள் சிலவற்றிற் கந்தக்கரணமும், சிலவற்றிற்கு ஞானேந்திரியங்களும், சிலவற்றிற்குக் கருமேந்திரியங்களும் குறைவாக விருக்கின்றன. மனித சரீரத்தில் அந்தக்கரணங்கள் நான்கு அல்லது ஐந்தும், ஞானேந்திரியங்களைந்தும், கன்மேந்திரியங்களைந்தும், பிராணுதிவாயுக்கள் ஐந்து அல்லது பத்துமமைந்திருக்கின்றன. மற்றவற்றிற்குக் குறைவேயாம். எங்ஙனமெனின். மிருகங்களுக்கு கைகளென்னுங் கருமேந்திரியமும், பரலோக இச்சைசெய்யும் உள்ளமும், புத்தியும் கிடையாது. மனிதனுக்கு கைகளானது எல்லாவித கருமத்தையும் செய்து கொடுப்பனவாக விருக்கின்றன. கைகள் பரிக்கவும், எடுக்கவும், கொடுக்கவும், வாங்கவும், வெட்டவும், புனையவும், பூட்டவும், கட்டவும், கழிக்கவுமாகும், எல்லாத் தொழில்களையும் செய்கின்றன. இக்கைகளில்லாத மிருகங்களானவை மனிதரிற்றாழ்ந்தன வென்பதிற்றடை யென்னே? குரங்

காதி சில மிருகங்களுக்குக் கைகளிருப்பினும் பரலோக புத்தி கிடையாதென்பது யாவருக்கும் வெளிப்படையான விஷயமே. அதுபோலவே மிருகத்திற் றாழ்ந்தவற்றிற்கு ஞானேந்திரிய கர்மேந்திரிய அந்தக்கரணாதிகள் குறைவை யடைகின்றன. புல்மாமாதிகட்கு ஜீவான்மா வண்டாயினும் அவை தூங்குமனிதனை யொத்திருக்கின்றன. தூங்குமனிதனுக்கு உசுவாச நிசுவாசரூப பிராணபான வாயுவும் மிகுமந்தமாகிய பரிசவுணர்ச்சியும் ஒழிய மற்ற அந்தக்கரண ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் தொழிற்படாமலிருக்க சரீரமெப்படி விருத்தியடைந்து கொண்டும், க்ஷீணமடைந்து கொண்டும் வருகின்றதோ, அப்படியே புற், பூண்டு, முதலியவைகளுக்கு உயிரிருக்க விருத்தி க்ஷயங்கள் நேர்ந்துகொண் டிருக்கின்றன. ஆனாலவற்றினிடை அபிமான ஜீவனில்லாமற் போகவில்லை. அந்தர்யாமியாகிய பரமான்மாவு மில்லாமற் போகவில்லை. மரங்களும், மிருகங்களும் மனிதர்களும், ஜனனமரண மடைய நாம் பிரத்தியக்ஷமாகப் பார்க்கிறோம். இப்படியிருக்க மனிதரல்லாத பற்றவற்றிற்கு ஆன்மா இல்லையென்று லது எப்படி யொப்பக்கூடும்? அரசர்கள் மனிதகொலையையே கொலையாக மதிக்கிறார்களல்லாது மற்றவற்றை கொலையாக கொள்ளுகிறார்க ளில்லையே யென்னில மனிதன், நீதியையுடையவன், ஞானமுடையவன,எவற்றிலுமேன்மைப் பட்டவன், அதிகாரி, சுதந்திரன், ஆகையால் அவனைக்கொல்லுவது பெருங் குற்றமா மென்னும் நியாயத்தால், அரசர்கள் குற்றவாளிகளுக்குத்தண்டனையேற்கச்செய்தராஜாங்கநீதிகளிருக்க நீ யாரையுமதண்டிப்பது தகாதென தண்டனை செய்தவனைத் தண்டிக்கிறார்கள் அப்படியே கொலையையு மதிக்கிறார்கள். மற்றவைகளுக்கு இத்தகைய மேன்மையில்லாமையாலும் அவற்றிற்குப் பரிந்து வழக்குத் தொடுக்கும் பிராணிகள் காணப்படாமையாலும், அதனைக் கொள்ளாமலுங், கேளாமலு மொழிந்தார்கள்.

ஒருவனுக்குச் சொந்தமான மனிதரல்லாத மற்றொருபிராணியை, வேறொருவன் வதைப்பானாயின், அதைப் பற்றி விசாரணையும், நடந்துவருகிறது. ஆனலப்பிராணி மனித சமானமன் றாகையால் அதைக் கொனறவனைக் கொலை செய்வதில்லை . கொலைப்பட்டபிராணியினந்தஸ்துக்குத்தக்க தண்டனை விதிக்கிறார்கள். ஆகையால் மிருக முதலிய வற்றிற்கு,ஜீவபரமான்மாக்களில்லை யென்போர் தூலபுத்தி யுடையவரேயன்றிச்சூக்கும அறிவுடையரல்லர். எந்த சரீரம் எவ்வகைச் சிறப்பி

னைப் பெறுமோ அந்தச்சரீரத்திற் கதுபோன்ற சரீரத்தை நீக்கல் நியாயமும் வழக்குமாம். உயர்ந்ததற்குத் தாழ்ந்ததையும், தாழ்ந்ததற்கு உயர்ந்ததையும், தண்டித்தலும் பலியிடுதலும் நியாயமாகாது. மனிதரிற் றாழ்ந்தது மிருகம், மிருகத்திற் றாழ்ந்தவை பறவை, பறவையிற் றாழ்ந்தவை ஊர்வனநீர்வாழ்வன, அவற்றிலுந் தாழ்ந்தவை மரஞ்செடியாதிய தாவரங்கள். அவற்றிலுந் தாழ்ந்தவை உலோகமாதிய தாதுக்களாம். இப்படியிருக்க தாழ்ந்த தேகத்தை யழித்தவனுக்கு உயர்ந்த தேகத்தை யிழக்கச் செய்தல் அரசநீதிக்கடுக்கா தாகையால் அவனைக் கொலைசெய்யா தொழிந்தார்கள். அன்றியும், உயர்ந்த மனிதன் பிரயாசைப்பட்டு எவ்வகை யுயிரும பிழைக்கச் செய்த பயிராதிகளை மிருகாதிகளழிப்பதால் அதை அரசரும்வேட்டையாடி கொலைசெய்கிறார்கள். மனிதராதிய சாதுப்பிராணிகளுக்குத்தீங்கிழைக்கும் துஷ்டமிருகங்களைக் கொலைசெய்வோருக்குப் பட்டப்பெயரும் பரிசும் அளித்து வருகிறார்கள். இதன்றி மனிதன் நெடுநாளாக மிருகாதிகளைப் போஷித்து வளர்த்து வருவதால், அதைத்தேவையான பொழுது தன்கஷ்ட நிவாரண நிமித்தம் அதை வதைபுரிந்து புசித்து தன்கஷ்டத்தை நிவர்த்திசெய்து ஈடாக்கிக் கொள்ளுகிறான். ஆகையால் நாம் அப்பிராணிகளுக்காக மனிதனைத் தண்டிப்பது தகாதென அரசர் தவிர்த்து வருகின்றார்கள். இப்படிக்கரசர் விட்டுவிடுவதினாலேயே பிராணிகளுக்கு ஆன்மா இல்லையெனச் சொல்வதுதகாது இதைக்கட்டப்பாறையை விழுங்கியவனுக்குச்சுக்குக்கியாழங் குடிக்கக்கொடுக்கின், அது ஜீரணித்துப்போமென்றுசொல்லும்புத்தியை யொத்தபுத்தியாகவே கொள்ள வேண்டும். உயிர்களை வதைப்பதால்பாவமில்லாதுபோகாது. ஆயினும்,உயிர்களெல்லாஞ்சமமானாலும்தேகஞ் சமமல்லவாகையால், அந்தந்த தேகச்சிறப்பிற்குத் தக்கபடி பாவமதிகமாகவுங் குறைவாகவும் வந்து நேரும். மனிதருக்கு மிகவுமுபகாரியாய் தாயைப்போன்று பால், தயிர், மோர், வெண்ணெய், நெய்யாதிதந்து பலரைப் போஷித்து வருகிற பசுவின் கொலைமிகக் கொடியதென்பதிற் றடையென்னை? இவ்வாறு தாயையொத்த பசுவை கொலைபுரிவோரையே ஆரியர்கள் சண்டாளரென அழைக்க விதித்தார்கள். பலருக்கு க்ஷேமம் புரியும் பசுவின்றன்மையையறிந்து அதனைப் பாதுகாத்தலையொழித்து சுயநலங்கருதி அதனுயிரிழக்கச் செய்து பிழைப்போரைச் சண்டாளரெனக் கொள்வதில், குற்ற மெள்ளளவுங் காணோம். ஆங்கே உழுதலாதிய பலதொழில்களுக்கு உதவிபுரிகிற சாகபக்ஷணிகளாகிய, மாடாதிய

பிராணிகளை வதைப்பதால் மிகுந்த பாவமுண்டாமென்பது பிரா சேஷப மல்லவோ? இவைகளும் மனிதர் செய்யும் பயிராதிகளை மேய்ந்து இடையூறுண்டாக்குவனவாக விருந்தாலும், கட்டுதிட் டங்கட்குட்பட்டு மானிடர்க்கடங்கி நடப்பனவாக விருப்பதான் மனிதன் இவைகளைப் போஷித்துவருவது புண்ணிய மென்றும் கொலைபுரிவது அதிக பாதகமென்றும் இந்துக்கள் சொல்லுகிறார் கள். கல்வியிற் சிறந்த எந்ததேசத்தவரும் உயிர்களை வதைக்க லாகாதெனவே பாலபோதக புத்தகங்களில் வரைந்திருக்கக் காண்கின்றோம். சாமான்யமாக வுரைத்திருக்கும் எந்த நூல்களை யும் மனிதர் கவனிப்பதில்லை. யாவருக்கும் பொதுவாகிய நீதிநூல் களையும் ஆராய்ச்சியின் மிக்க ஞானிகளெழுதிய வஸ்துநிச்சய தத்துவ சாஸ்திரங்களையும் மனிதர் கையாடாமல், அப்பிரத்தி யக்ஷமாகிய அசம்பாவித ஆச்சரியக்கதைகளை சொல்லும் மத நூல்களை, எவ்வளவு ஆபாசங்கள் கலந்திருந்தபோதிலும் கடவு ளால் கொடுக்கப்பட்ட நூலென்று ஆராய்ச்சியில்லாத அறிவீனர் சொல்வதனால், அதைமிக மேன்மையாகக் கொள்ளுகிறார்கள். சோம்பலும் அச்சமும் அறிவீனமுமே இப்படிக்கொள்வதற்குக் காரணம். மூடவழக்கமும, கலவியறிவில்லாமையும், அவற்றிற் குத் துணைக்காரணங்களாக விருக்கின்றன. கல்வியறிவு அதிக முாகவுடையாரெனச் சொல்லப்படுவோரும் அப்படித்தாமே நடக்கிறார்களென்றால், அக்கல்வியறிவுடையாரே பொறாமை காரணமாகவும், சுயநலப்பிரியங் காரணமாகவும்,தற்புகழ்வேண்டி யும், அறியாச் சனங்களை வஞ்சித்து அனந்த பேதவழக்கங்க ளுண்டாக்கினார்க ளாகையால் அவர்கள் பொதுநலங் கருதாப் புன்மதிகளே யாவரல்லது கற்றுணர்ந்தடங்கிய பெரியோர் வகுப் பிற் சார்ந்தவராகார். இவர்கள் நீதிசாஸ்திரவாராய்ச்சி யுடைய வரும், நடுவு நிலைமை கருதும் நற்குணமுடையாரு மல்லராவர். இதனானே யன்றோ,நெருப்பைத் தலைகீழாக்கினும் அதன் ஜுவாலை கீழாகாதவாறு துஷ்டர்கள் வேதாத்தியயனஞ் செய்யினு மவர் துற்குணமடங்கப் பெறார் ஆகையால், நல்லோர் அவர்கள் வார்த் தையில் நம்பிக்கை வைக்கலாகாதென நவின்றுள்ளார்கள். இயற் கை நற்குண நற்செய்கை யுடையார்பாலே நல்லறங்கேட்டல் நலமென நியாயம் நாட்டியுள்ளார்கள். இஃதிருக்க, எல்லா தேகங்களும் ஆன்மாவை யுடையனவே யாயினும், யாவுமனிதரிற் றாழ்ந்தவைகளே யாகையால் மிருகக்கொலைக்கு மனிதர்கொலைக் குச் சமமன்று. இஃதிருக்க,

இனி ஒருவன் விடாமுயற்சியால் கல்வி, செல்வம், ஆரோக்யம், அதிகாரம், அடைகிறானு இல்லையா தெய்வம் விதித்த அளவே நடக்குமென்பது மூடத்தனமல்லவா, என்பவைகளைப் பற்றி விசாரிப்பாம். "முயற்சி யுடையா ரிகழ்ச்சி யடையார்" எனு முது மொழி மதிக்கத்தக்கதே. "முயற்சி திருவினை யாக்கும... ............"என்பதும் ஆப்தாநுபவமே. ஆயினும்முயற்சிப்பவன் காரியங்களெல்லாம் இன்றே முடிவுபெறு மென்பதே முன்னோர் கருத்தாகு மென்பதில் சிறிது சந்தேகம். முயற்சிப்பவன் தானெடுத்துக்கொண்ட தொழிலின் முடிவு இப்படித்தான் முடியுமென பூரணமாக முன்னறிந்தவனே யானாலும், யறியாதவனே யானாலும இடையூறுகள் பலவிருப்பதை யுணர்வானாகலால் அதிர்ஷ்டமெப்படி யிருக்குமோ அப்படிக் காகட்டுமென்று துணிந்து செய்யத் தொடங்குகின்றான். ஏனெனில் "இன்றைக்கிருப்பவன் நாளைக்கிருப்பனென்றெண்ணவோ திடணில்லை"யென்ப தெவர்க்கு மநுபவம். இரோமென்று முயற்சி செய்யாமலிருக்கவு மிடமில்லை. "இறு முயிர்க்கு மாயுண் மருந் தொழுகற் றீதன்று" என்றார் மொழிபிசகாமல் இறந்துபோகும் வரையில் பிழைப்பித்தற்குரிய மருநதும் ஆகாரமும அருந்தக் கொடுப்பதை நாமறிந்து வருகிறோம். ஆகையால்,முயற்சியோ செய்யவேண்டியதே தெய்வமெப்படி விடுமோ அப்படிக்காகட்டுமெனயாவரு நினைந்தேத்தொழிலையும் செய்து வருகிறார்கள். எண்ணமெல்லாம் பொய்யாயயனன்றெழுதிய எழுத்தே மெய்யாகவும் ஆச்சென்றுதம் முயற்சிக்குப்பலன்முடியாமை கண்ட விடத்து எவரும்சொல்லிக் கொள்ளுகிறார்கள். அதிர்ஷ்டம், சம்ஸ்காரம்,பூர்வகன்மம்,வேகம் வாசனை, பழக்கம், வழக்கமென்பன பரியாயச் சொற்கள். இவற்றின் பலனையே பிராரத்வமாகவும், நீர் மேற்குமிழியை யொத்த நிலையில்லாக் காயமாகவும் பெரியோர்களுரைப்பதால்,இதை யுணர்ந்த யாவருங் கலங்கு கின்றார்கள். இதன்றியும், ஒருவன் ஓர் பெண்ணைத் தன்பாற் கருணை யுள்ள தாய்முதல்பலர் நல்லவளென்று பார்த்துச் சொல்ல, அவளைத் தான் மணம் புரிகிறான். அவள் முழுதும் விரோதியாயிருக்கப் பார்த்து துக்கப்படுகிறான். இப்படியே புத்திரர்கள் பிறந்த காலத்தில் இவர்கள் எனக்குப் பிற்காலத்தி லுதவுவார்களென்று அவர்களை யன்போடு மாதரிக்கின்றான். சிலர்க்கு எண்ணம்போலவே முடிகிறது. சிலருக்கு புத்திரர்களே சத்துருவாக முடிகிறார்கள். சில பிள்ளைகள் தந்தைக்குச் செய்யுங் கருமாதிகளைத் தந்தை தமக்கே செய்யப்பெறு

ருர்கள். இப்படியே வர்த்தகஞ்செய்வோன் இலாபம் பெறுவோமென நினைக்கிறான். நஷ்டமு மடைகிறான். பயிர் செய்வோனும் விதைக்கிறான் வானத்தைப் பார்த்தவண்ணமாகவே யிருந்து பதைக்கிறான். மிகத்திறமையுடைய வைத்தியனும் தான் கொடுத்த மருந்தால் நாளுக்குநாள் விருத்திகாணவிட்டது தப்பித்துக்கொள்ள தந்திரவார்த்தைகளாடிவிட்டோட வழிதேடுகிறான் இவ்வாறு சகல காரியங்களிலும் இடையூறுகளால எடுத்த காரியங்களினிறுமுடியாமையைப்பிரத்தியக்ஷயத்திலனுபவித்துவருகின்றோம் ஆகையால் முயற்சி சிறிதும் பழுதாகப் போகாதாயினும், முடிவு யாவருக்கும் நினைந்த வண்ணமே சித்திப்பதில்லை. அநேக முறைகளில் சித்திபெற்றவொருவன் அதே கருமத்தில் ஓர் காலத்தில் தோல்வியடைகிறான். அநேக முறைகளில தோல்வியையடைந்தோன ஓர்காலத்தில் ஜயமடைகின்றான். அவ்வாறுதலுக்குக்காரணம் உலக வழக்கமென்றுமூடர்களும, சுபாவமென்றுநாத்திகர்களும், சொல்வார்கள். இது கூடாது. எப்படிப்பார்த்தாலும்தெய்வ சகாயத்தால் அவரவர்க்கு முன்செய்தகருமத்தின்படி முடிந்தது, முடிகிறது, முடியும் என்பதே நியாயம். எவரும் அநுகூலப்பட்டபோது அதுசாமர்த்தியமெடுத்துக்கொண்ட பிரயாசையென்றும், அநுகூலமாகாதபோது தெய்வாதீனமென்றும் சொல்லுகிறார்கள். தெய்வமோ ஒருவருக்கு ஒன்றும் மற்றொருவருக்கு ஒன்றும் வேறுபாடின்றிச் செய்யுமென்பது நியாயமாகாது. அவரவர்செய்த நற்காரிய துற்காரியப்பயனையே அவரவர்களநுபவிக்க அளந்தளிக்கப்படுகிறதென்பதே நியாயமான தீர்ப்பு. இதனாலே முயற்சி யாவரும் செய்யத்தக்கதே யென்பது நிலைநிறது. இம்முயற்சியும் அறமாகவே யிருக்கவேண்டுமேயல்லது மறமாக விருக்கலாகாது. நன்மைசெய்தவன் இன்றில்லையாயினும் அதன் பயனை பின் நன்மையே யடைவான். தீமை செய்தவனும் அப்படியே. நன்மை செய்தவன் நாளுக்குநாள் நலிவினை யடைந்தும், தீமை செய்தவன் தினந்தினம் செழித்தும்வருவதைகாண்கின்றோமே யிதெப்படி நேர்ந்ததென்று கேட்கலாம். இதனையே பிராரத்வமென்பது. இது பூர்வகர்மத்தால் நேர்ந்தது. ஆயினும்அவனவன் செய்த நல்வினையும் தீவினையும் அவனைவிட்டொழிந்துபோகவில்லை [illegible] வெளிப்படையாகக் காணப்பெறினும் அப்படி காணப்பெறாத நல்வினை தீவினையின் பயனாகிய சம்ஸ்காரயோகம் ஒன்றுமாவி வில்லாமற் போகவில்லை அது அவனைவிட்டு விடுமென்பது சுத்தப்பிசகு. துன்பநேர்ந்தபோதேனும் புனர்ஜன்

மத்தேனும் அதுமீள வெளிவரும், அதுவரை அது அதிர்ஷ்டமாகியிருக்கும்; அன்று, திருஷ்டமாம். ஆகையால் யாவரையும் தம்மைப்போல நினைந்து தன் காரியத்தால் மனமறியத் தீங்கு செய்யாமல் தன்னைக் காக்கும்பொருட்டு முயற்சிசெய்வது இன்றியமையாக் கருமமாம். இதனையே அறமென்பர். இவ் வறத்தாற் றேடிய பொருளைக்கொண்டே யிகபரவின்பமுற்றுஜீவன்முத்தியும் பெறுகவென்றனர். எவர்செய்யும் எவ்வித கருமத்திற்கும் பயனில்லாமற் போவதில்லை. நியாயமாகச்செய்யும் வேலைக்கு இகத்திலும் பரத்திலும் தண்டனை யெய்தாது. நியாயமின்றிச் செய்தவற்றிற்கு இகத்திலும் பரத்திலுந் தண்டனை யுண்டு. பரத்தைக் கண்டார் எவரென்போர் படிறர்கள். பரனில்லாமலே யாவும் விளைந்து பலித்திருக்கின்றனவா? அதிசயம்! அதிசயம்!! பரனில்லாமலொன்று முண்டாகவில்லை யென்று முன்னரே நிரூபித் திருக்கிறோமாகையால் இனியதைச் சொல்லவேண்டு மென்பதவசியமல்ல. இதுவரை மதியெனும் முயற்சியைக் கூறினோம். இனி விதியென்பதைப் பற்றிச் சிறிது சொல்லுவோம்.

விதியென்பது அவரவர்செய்த கருமத்திற்குத் தக்கவாறு அவரவர்க்கிச் சனனத்தா லீதிதுண்டாகவென ஈசுவரன் அனந்த விதித்த தனுகரணபுவன போகங்களேயாம். போகமேவிதி, எவர்க்காயினும் இது அனுபவியாது தீராது. அனுபவிப்பதினால் பிறகொன்று மில்லாமற் போகவேண்டுமல்லவா? ஓயாது பிறவி வருமென்று சொல்லுவான் ஏனெனில் பிராரத்வம்போ யதினால் பிறவி போயினவன்று. சஞ்சித கருமமும் ஆகாமிய கருமமும், சேஷசேடமாக விருக்கின்றன. இது ஈஸ்வர சாக்ஷாத்கார ஞானத்தாலன்றி யிழுக்கடையா. ஒருவன் விதியினுள்ளது வருமென்று நேர்ந்த பொருளில் முயற்சிசெய்கையைவிட்டு, ஆசையால் ஸ்வப்பிரயோஜனத்தை நாடிச்சாந்தியடையாத மனத்தால்ஆகாமியமும் செய்வதனால் மீளவும் சஞ்சிதத்தோடு ஆகாமிய கர்மமும் சேருகின்றது. தனுகரண புவனபோகப் பிராப்தியே விதியாகையால் இது மீளத் தனக்குச் சித்தியாதபடி இதனை வெல்லுமுபாயம் யாதெனில்; புண்ணியத்தையும், ஞானத்தையும் சம்பாதிப்பதேயாகும். அது முற்றுற இந்த ஜன்மத்திற் சித்திக்காவிடினும், தாழ்ந்த ஜன்மத்திற்குச் செல்லவிடாத தடையாகியும், உயர்ந்த ஜன்மத்திலுய்க்கும் உற்ற துணையாயிருந்து ஜன்மாந்தரங்களில்

சித்திபையளிக்கும். இந்த மனிதனுகப்பிறந்த ஒவ்வொருவனுஞ் சம்பாதிக்க வேண்டுமென்பதே பெரியோர்கொள்கை. இதையே நன்மதியென்பர். இம்மதியாற்றுன் விதியை வெல்லலாமென்பதே யொழிய வேறல்ல. வாய்த்துள இழிவான போகப்பிரியம் அதிகமாகக்கொண்ட மதியால் விதியைவென்று, அதிக லாபமடையலா மென்பதல்ல. புண்ணியத்திஞற்றுன் மேலான ஜன்மமும், மேலான பதவியும், மேலான செல்வமும், மேலான அதிகாரமும், ஒருவனுக் குண்டாகின்றன வென்பதே முன்னோர்க ளபிப்பிராயம். பாபத்தாலும், பலரை வஞ்சிப்பதனுலும், பிறர்பொருளை மோசஞ் செய்வதனுலும், துராசையாலும், துராபிமானத்தினுலும், துராலோசனையினுலும், துஷ்ட கிருத்தியத்தினுலும் விதியை வெல்லலாமென்பது அவர்கள் கருத்தல்ல, இவைகளைச்செய்து சம்பாதிப்பதும் பூர்வவிதிதானே யென்பர். இது அல்ல! அல்ல!! இவையாவும் ஆகாமியவினைவாம். எப்படியெனில், ஒருவன் நியாயமான தொழில்களைச்செய்து கருமப்பயனை எதிர்பாராது தெய்வாதீனமாக எப்படிக்கு நேர்ந்தாலும் நாம் அநுபவிக்க வேண்டியதுதானென்று பொறுமையோடு மநுபவிப்பதே விதி. அப்படிப்பட்டவனுக்கு நன்மையாயினுந் தீமையாயினும் விதியால் நேர்ந்ததே யொழியத் தன்முயற்சியால் நேர்ந்ததாக எண்ண இடமில்லாமையால் அவன் சுகத்திற் பூரியாமலும், துக்கத்தில் வாடாமலும் இருப்பவனுகிறுன். இதுவே விதியாகும். அலாதன ஆகாமியங்களாம். எப்படியெனில் எடுத்தகாரியம் முடிந்தபோது தனது சாமர்த்தியத்தால் முடிந்ததாகவும், முடியாதபோது தனது அஜாக்கிரதையால் நேர்ந்த தாகவும் சந்தோஷமுந் துக்கமும் படுதலினுலேயன்றி, இதன்றி நான் செய்கிறேன் இவைகளென்னுடையவை யென்கின்ற மயக்கத்தாலும் வாழ்வதுந் தாழ்வதும் விதியால் நேருவனவேயல்லது நம்மால் நேர்ந்தவையல்லவெனக் கொள்ளாமையினுலும் நாமெடுத்த காரிய முடியாமற் போயிற்றே அதை யெப்படிக்காவது முடிக்கவேண்டு மென்கிற பிரயத்தினத்தை மீள மீளச் செய்வதினுலும், அது ஆகாமியமாகி வளருகின்றது. இதுவும் மயக்கத்தால் மேற் பிறப்பிற்கு வித்தாகிச் சஞ்சிதமாகிறது. இவ்வகையாகத் தன தெண்ணத்தை யநுபவித்துத் தீர்க்கப் பிராரத்வ தேகம் மீளவுஞ் சித்திக்கின்றது. இவற்றையெல்லாம் நித்திய நைமித்திகம் பிராயசித்தமென் ற கருமத்தாலும், உபாசனையென்கிற பக்தியாலும், போக்கிக்கொள்ள வேண்டுமே யல்லது,

அவை உலகப்பொருள்களின் சேட்டத்தாற் றீர்வதில்லை. ஆகையால் கடவுளருளாலருளிய வேதவிகித கர்மம் பக்திகளைக் கைக்கொண்டே பாபத்தைப் போக்கிக்கொள்ள வேண்டுமாகையால் எவரு மிவ்வேத விதிகளை மேற்கொள்ள வேண்டிய நித்தியாவசிகமாம். இது நிற்க

ஒரு மரத்திற் காய்க்குங் காய்களில் சிறிது பெரிதுமாகிய பேதமிருப்பதற்கு எவ்வினைகாரணமென்றதற்கும், உலகத்திலுயிர்கள் சிறிது பெரிதாகவிருப்பதனால் வினையைக்காரணமென்பது தகாதென்பதற்கும் விடைவிடுப்பாம். தேகமும் தேகத்தினவயவங்களும் நன்மைதீமையின் பயனையடைவனவல்ல தேகத்தையுயிரெனவும் வினைமுதலெனவும், கொண்டாருங் கொள்வாருமிந்துக்களிலிலர்; தேகாபிமானியாகிய ஜீவனே சுகதுக்கபோகப்பிராப்தியையநுபவிக்கத் தக்கவனெனக்கொள்ளுகிறார்கள்; அவயவங்களைச் சொல்லுகிறார்களில்லை. சிறிதும் பெரிதுமாகிய தேகங்களில் சிறிது பெரிதாகிய ஜீவனிருப்பதில்லை. அந்த ஜீவன் வினைக்கீடாகிய வேறு சரீரங்களைக்கொள்ளும்போது அத்தேகத்திற்குத்தக்கபடி பெருத்துஞ் சிறுத்துஞ் மதிற்பிரவேசிப்பதில்லை. சரீரத்தளவாகஅந்தக்கரணமெனுஞ்சொச்சபதார்த்தமந்தத் தேகத்திலுமிருக்கும். அதினிடை ஞானவடிவாகிய ஆன்மப்பிரதிபிம்ப முண்டாகின்றது. அந்தப பிரதிபிம்பத்தையே ஜீவனாகயாவருமதிக்கின்கின்றார்கள். சரீரத்தளவாக விருக்கின்ற அந்தக்காணப்பிரதிபிம்ப சைதன்னியத்தால் தேகத்தி லெவ்விடத்துண்டாகும் விருத்திக்ஷய சுகதுக்கங்களை யநுபவிக்கப்படுதலால் இதையே ஜீவ[illegible] கற்றார்கல்லாராகிய யாவருமயங்குகின்றார்கள். இப்பிரதி[illegible] தன்முயற்சியால் நீங்கவுஞ் சேரவுமுரியதல்ல; சர்வஞ்ஞனும், சர்வசக்தனும், சர்வேஸ்வனுமாகிய பரமேஸ்வரன் ஆணையால், அவத்தைகளாகி ஜீவர்களுக்குப் பிராப்தமாகின்றது. அதன் விருத்திக்ஷயங்களினால் ஜீவன் சுகதுக்கமநுபவிக்கிறான்.

**உலகைமாயாத்தோற்றமென்பவர்துணிபு**

அனகா! இனிச் சிறப்புமிக்க விச்செழுஞாலத்தைத் தோற்றமென்று நிரூபிக்கும் ஆற்றலுடைய மேதையார் அநுபவசித்தவசனத்தை. யுன்மனமுறச்செப்ப வாரம்பிக்கின்றேன். இவ்விஷயத்தைக் கல்வி, கேள்வி, புண்ணியம், அடக்கம், நிராசை, கவேஷமிலமை முதலிய நற்குணங்களால் நிறைந்த அறிவு

டையாரன்றி, உலகதேகவாசை மிகுதியையுடைய பாமரரும்,
வஞ்சனை, சூது, பொருமை, துராசை முதலிய தீக்குணங்களால்
நிரம்பப்பெற்றவர்களும் பதகர்களும் தங்கள் சித்தப்பிரவிருத்தி
யைப் பிறரறியாது மறைக்க உடையாலும், விருதாசாரநடை,
தாடி சடையாலும் சொல்லாலும், பெரியாரைப்போன்று நடித்து
க்காட்டும் பண்டிதப்பகடிகளும் ஓர் காலத்துங்கொள்ளார்களென்
றும், அவர்களால் இது வியக்கத்தக்கதும் நயக்கத்தக்கதுமாகக்
காணப்படலருமையுமாமென்று கொள்வது ஞாலந்தோற்றமென்று
ரைப்போர் துணிபு. அவர்களிவ்வுலகம் தோற்றமெனவாரம்பிக்கும்.
பிரசங்கங்களிலும், அவரெழுதும் நூற்களிலும் இதைக்கேட்போ
ரும் படிப்போரும் பக்குவிகளாயிருக்க வேண்டுமென, முதலிற்
றானேவற்புறுத்துகின்றார்கள். முமுட்சுக்களே! இதையறியவிரும்பு
வோரும் அடைவோரும் அல்லாது ஏனைய ஆசாபத்தவறிவிலிகள்
ஆகார்களென்பது அவரது தீர்மானம். இவர்கள் பிரபல சுருதியை
யும் அநுமானாதி அறுவகையுக்திகளையும், பாகியத்திலொப்பினும்
அநுபவப்பிரமாணத்தையே முக்கியமெனக் கொள்வோர்கள்
தமதனுபவத்திற்கு வயப்பெறாததும், விருத்தமானதும் ஆகிய
எவ்வித கல்வியையும் கேள்விகளையும்பூர்வபட்சமெனக்கொள்வார்
களேயன்றிச் சித்தாந்தமெனச் சம்மதியார்கள். சந்தேகவிபரீத
ந்திரா அறியாமையால் அங்கீகரித்த விஷயம் அஞ்ஞானமேயா
மல்லாது, எதார்த்த சுஞ்ஞானமாகாது என்பவர்கள் எல்லாக்கால
எல்லாதேசத்திலும் யாவராலும் அடையக்கூடிய அநுபவசித்த
விஷயத்தையல்லது, தன்னாலடையக்கூடாது பிறரால் பிற்காலத்தி
லடையப்பெறுவதாகக் கூறும் நம்பிக்கை மதத்தை வம்பென்று
சிந்த விடுபவர்கள். எவ்வகைப்பாடுபடுவதும், எவ்வித நன்மையை
க் கோருவதும் எல்லாப்பொருள்களையுந் தேடுவதுமே, தானாகவிரு
ப்பதினால், தனக்குத்தெரியாததை நம்புவதற்கிணங்குமாறுரைப்
போரை மறுப்போராகவேயிருப்பவர்கள், தனக்கு இயற்கையில்,
வாய்த்துள்ள மானிஷீக இணையிலாச் சுதந்தரத்தையிழக்கக் கற்பிப்
பாரைத் தூரும் பினும்கடைப்படுதூசியாக நினைப்பவர்கள். அஞ்சத்
தக்கநீதிகளுக்கும், நெறிகளுக்கும் ஆப்தவாக்கியங்களுக்கும், அஞ்சு
வதும் அடக்கங்காட்டுவதுமாக விருப்பார்களல்லாமல், மற்ற எவ்
விதத்தார் செய்யும் எவ்வகைச் செயலுக்கும் சிறிதுமஞ்சார்கள்.
இவர்களைப்பற்றிப் பேசப்புகின் இவரது பெருமை முடிவுபெறக்
கூறல் முற்றாறாது. "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்,

திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று" என்றுரைப்பதாலுணர்க. இனியிவர்களைப்பற்றிப் பேசுவதை விட்டு இவர்கள் சித்தாந்தத்தை விரிக்கவாரம்பிக் கின்றேன்.

அன்புடையானே! நீ அவசர புத்தியையொழித்துச் சாவதானமாக விதைச் சிரவணஞ் செய்வையாகில் நீ பூர்வங்கேட்ட வினாக்களுக்கெல்லாம் இவையே விடைகளாக விருக்குமென நினைக்கிறேன். இவ்வுலகம் இயற்கையென்பவருஞ் செயற்கை யென்பவருமாகிய இருதிறத்தார் மொழிகளையும் கேட்டிருக்கின்றாயல்லவா? ஒருவன் தனக்கு முன்னுண்டானவைகளைப்பற்றிப்பின்னுண்டாகிய தான் அவற்றி னுற்பத்தியைப்பற்றி வரையறுத்துப் பேசுதல் முற்று மெய்புறற்கிடம் பெறலருமை. மகன்தன் தாய்தந்தையரின் பிறப்பையும் விருத்தாந்தத்தையும் சித்தாந்தமாகக் கூறுவது, முழுதுஞ் சிறப்பினை யடையக்கூடியதாகுமோ? இஃதிருக்க;

பூர்வ சரித்திரம் பொய்யறிதற்கா காமைக்குதாரணம்

ஓர்பண்டிதன் உலக சரித்திர மெழுதக்கருதி, தன்கையிலெழுது கோலை வைத்துக்கொண்டு, தானுத் தேசித்து வைத்த விஷய சூசிகையை யெழுதத் தொடங்குகையில், தன்வீட்டிற் கெதிரில் ஒரு கலகக் கூச்சலுண்டாக அதையறியும்படி, தான் விரைவாக மெத்தையை விட்டிறங்கி, வெளியில் வந்தான். வீட்டெதிரில் வீதியிடை கூட்டமாக இருப்பவர்களில் ஒருவனை யழைத்து, இங்கென்ன சங்கதி நிகழ்ந்தது? என வினவினான். அதற்கவன் நான் இப்பொழுதுதான் இக்கூட்டத்திற் பிரவேசித்தேன்; இதன் சவிஸ்தார மொன்றுமறியேன் என்றனன். அதைக்கேட்ட வித்துவான் மற்றொருவனை விளித்து வினவ அவன் சொல்லுகிறான்:—பண்டிதரே இதோ நிற்குமிந் நெட்டையனை அதோ அங்கு இரத்தத்தாற் றோய்ந்த ஆடையும் சரீரமும் உடைய குறுகிப்பருத்தமனிதன் முதலிலடித்தானென்றும், அதன் பின்னரிவன் அவனை யடித்து இவ்வகையவத்தைக்குள்ளாக்கினு னென்றுஞ் சொல்லுகிறார்களென்றான். பின்னும் பண்டிதன் மற்றொருவனை விளித்துஇச்சம்பவமென்னென்றுவிசாரிக்க அவன் சொல்லுகிறான்:— அதோ அவ்வடியுண்டவன் நிரபராதி, இதோ இங்கு நிற்கும் இந்நெட்டையன் மிகுமூர்க்கன். யாதோ பூர்வசலத்தைக்கொண்டு இவனவனை முன்பின் யோசியாமல் தடிகொண்டு கொல்ல நினைந்து ஓங்கியடிக்க, அடியுண்டவன்

பண்டிதநாடிவந்து இங்கு நின்று பேசிக்கொண்டிருந்த எங்களரு கில் நின்றான்; இவனும் ஓடிவந்து "அடேபடவா! கூட்டிக்கொடுப் பவனே உன்னுயிரை வாங்காது விட்டேனு!!" என்று சொல்லிக் கொண்டேபோக எத்தனிக்கையில் எங்களிற் சிலர் தடைசெய்ய நிற்கின்றான், எங்களிலொருவன் போலீஸ்காரனை யழைத்துவர வும் போயிருக்கிறானென்றான். வித்துவான்சிரித்துச்சந்தேகித்துப் பின்னு மொருவனைக்கேட்க அவன் சொன்னதாவது:—ஐய! இந் நெட்டையனவனைத் துரத்திக்கொண்டே வந்தான் அவன் விரை வாக ஓடியதனுற் கால்பிசகி விழுந்தான். அப்பொழுது எதிரி லிருந்த அசசுந்துமூலையிலிருக்கும் கல் இவன்றலையில் மோத் துண்டது. அதனால இவனுக்குக் காயம்பட்டது. துரத்திவந்த இவன் பிரமித்து, அவனவத்தை தீரவுபசாரவார்த்தைகள் பேசிக் கொண்டிருக்கையில் அதோ நிற்கும் அவனும் நானும் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்கின்றோமென்றான். மற்றொருவன் வலுவில் வந்து துரையே இவர்களிவ்விடத்தில் யாதொரு கலகமுஞ் செய் துக் கொள்ளவில்லை. இவர்களிருவரும் சிநேகிதர்களே யென்பதை யானறிவேன். இவர்களோர் மதுபானகடைக்குப் போன விடத் தில் பகைவர்கள் இவ் விருவரையுந் தாக்க நினைந்து, கலகம் விளைக்கையில் இவர்களவர்கள் கைவசப்படாமல் தப்பி ஓடிவந்து இவன் அவன் வருகைக்கெதிர்நோக்கி நிற்கையில் அவன் இவ் வவத்தைக் குட்பட்டுவர அவனுடன் கலந்து பேசி சர்க்கார் சேவ கன் வரவுக்கெதிர்நோக்கி நிற்கின்றார்களென்றான். இவையாவை யுங் கேட்ட பண்டிதன் நினைந்து சொல்லுகின்றான். ஆ! ஹா!! ஆச்சர்யம்! ஆச்சர்யம்!! தற்காலத்திலென் கண்ணெதிரில் நிற் கும் காக்ஷியையை உள்ளபடி புணரக் கடினமாக விருக்கின்றதே, முன்னடந்தவைகளை நான் என்படி பிறர்சொன்ன சொற்களைக் கொண்டு உண்மையென யாவருங்கொள்ள எழுதமுடியும்! நான் எழுதுவதிருக்கட்டும்; இவ்வடி பட்டவனையே விசாரிக்கிறேன். அவன் சொல்வதினும் எத்தனை பொய்களிருக்குமோ நான் நிச்சயிப்பதெப்படி? மற்றொருவனைக் கேட்கும்போது அப்படியே முரணுகமுடியுமானல் என் சந்தேகந்தீருவதெப்படி? "ஆகை யாற்றான் கண்ணூர்க்கண்டதும்பொய், காதாரக்கேட்டதும்பொய்" "தீர்விசாரிப்பதும் ஸ்வானுபவமுமேமெய்" என்னும் பழமொழி வழங்கிவருகிறது. விசாரிப்பதும் அரைகுறையாயின் அதிக அபா யத்திற் கிடமாகவே யிருப்பதனால் "சிறுகல்வி பெருமோசம்"

என்று வழங்கிவருகிறதென் றிப்படி நினைந்துகொண்டே தன்னகம் புகுந்து தானெடுத்த கதையை ஒருவாறு எழுதிமுடித்தான்.

சீடனே! தீரவிசாரிப்பதிலும்,உள்ளதனை உள்ளபடி விசாரித்தறிவது அதிககடினமென்று,பதார்த்தசோதனை

பிரத்தியட்க்ஷத்தில் விஷயம் யாவரும் விட்டிருக்க,பிரத்தியக்ஷமல்லாத முன்னடந்த அந்நிய விஷயத்தை விசாரித்தறிந்து, சித்தாந்தமெனக் கூறுவது அதினுங் கடினமும், அசாத்தியமுமல்லவா? பூர்வ விருத்தாந்தத்தை விசாரித்து,உள்ளபடி யறிந்து,சித்தாந்தபபடுத்துவது எவராலும் முடியாத காரியம் என்பதிற் றடையென்னை? ஆகையால்தான் "வகுமுளதேற்சிறுவருரையுங்கொள்க,வொழிந்தது அயனுரைத்தெனினும்,ஏகவிடுகதிரணமொப்ப..." எனவசிட்டராற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் வேதமாதி யெவர்வாக்கியமானாலும்யுக்தியநுபவங்களுக்கு ஒவ்வுமாகில் கொள்ளத்தக்கனவாமென்புதில் பொய்ம்மையில்லை. இல்லையாயின் தள்ளத்தக்கனவாமென்பதில் நஷ்டமில்லை. ஆகையால் நாமிப்பொழுது நமது கண்களால்மனிதர், விலங்கு, பறவைகள்,ஊர்வன நீர்வாழ்வனவெனவழங்கப்பட்ட ஐவகைச சரபொருள்களையுங்காண்கின்றோம். ஆங்கே புற்பூண்டு செடி கொடி மரங்களென வழங்கப்படுகிற அசரவுயிர்ப் பொருள்களையுங் காண்கின்றோம். சாத்திரங்களிற் கூறப்படுகிற இந்திராதிய தேவர்களையும்,மும்மூர்த்திகளெனும் தேவதேவர்களையும், மற்றுமுண்டெனுஞ் சித்தர்வித்தியாதர அரக்கராதியோரையும், நாமமாத்திரமாகக் கேட்கின்றோ மல்லது கண்டாமல்லம். கண்டதாகக் கூறுவோர்களெல்லாம் கனவிற்கண்டதாகச் சொல்லுகின்றார்களேயொழிய,நனவிற் காட்டவுங் காணவும் நம்மாலாகாதென்றே சொல்லுகிறார்கள். காட்டினாலும் ஆலயத்திலுள்ள கற்பிதவுருவ வேற்றுப் பொருள்களையே காட்டுகிறார்களேயன்றி, உரைக்குஞ் சொற்களுக்குரிய பொருள்களைக் காட்டுகிறார்களில்லை, இத்தேவர்களை ஸ்தாபிக்க நினைப்போர் நினைப்பதொன்றும், சொல்வதொன்றும், செய்வதொன்றுமாக மனம் வாக்குக் காயங்களில் வேறுபடுபவராகவே காணப்படுகிறார்கள். இவர்கள் முன்னோராசாரமே முக்கியமென்பதன்றி,வயது மூத்தோர் வாக்கியங்களே உண்மையானவைகளென்பவர்கள். அப்படிக்கானாலும் கற்றறிந் தடங்கிய முன்னோர் வசனத்திற்குச் சிறிதுமுடன்படுபவரல்லராவர். முன்னோர்,

[illegible] யுணர்ந்து ஏதேனு மொன்றைக் கேட்போர் வினாக்க
ளுக்கு முன்னோர் கருத்தையொட்டி விடைபகர முற்படுதலைவிட்டுப்
பாமரராகிய உலகோர் நடவடிக்கைகளைப்பின்பற்றிப்பேசத்தலைப்
படுவார்கள். இவர்களறிவீனத்தைப்பற்றிப் பேசுவதிற் பயனில்லை.
ஆகையால் நாமமாத்திரமுடைய பொருள்களை விட்டு நாமத்தோடு
தோற்றமுமுடைய மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன: நீர்வாழ்
வன வாகிய. ஐவகைச் சரப்பொருள்களையும், புற்பூண்டு செடி
கொடி மரமென்னு மசரப்பொருள்களையும், அவற்றின் தொகை
வகைப் பெயர்களையும், காதாற்கேட்டுக்கண்ணாற்பார்க்கிறோமாகை
யால் இவற்றின் வரலாற்றைப்பற்றி விசாரிப்போம்.

**தேவர்கள் விஷயத் திற்றீர்மானம்.**

இவ்வகையாகிய அறுவகைத் தோற்றத்தையன்றி ஏழாவ
தாகியதேவர்களை நாமமாத்திரமாகக் காதாற்
கேட்கிறோமேயல்லது, கண்ணாற்காணப்பெறுகி
றோமில்லையென, நான் உனக்குச் சொல்வதில்
தேவர்களில்லவேயில்லை யென உனக்குத்தோ
ற்றிவிடக்கூடும். ஆனால் என்னபிப்பிராயமும், உலகந்தோற்றமென்
றறிந்த முன்னோர்களபிப்பிராயமும் அப்படிக்கல்ல. தேவாதிகளா
கி உலகமியற்கைப்பொருளென்றும், அல்லது செயற்கைப்பொரு
ளென்றும், கொள்ளுவோர்கள் சொல்லுகிற அல்லது நினைக்கிற
படி வெவ்வேறு உருவங்களாக இந்திரியங்களுக்கு எதிரிற்காணப்
படுவர்கள் அல்லவென்பதேயாகும். முடிவாக நான் தோற்றத்தை
நிரூபிக்கும் பொழுது முன் நாமரூபமாகக் காணப்பட்ட வற்றைப்
பார்க்கிலும் நாமமாத்திரமாகக்கொண்ட தேவதைகளேயுளவாக
வும், மற்றவையிலவாகவுங் காணப்படவுங்கூடும், இதனால் மும்மூர்
த்திகளும் தேவர்களும், தேவலோகாதிமற்ற லோகங்களும் வேறு
வேறாக இல்லை யென்பதே யெங்களபிப்பிராயமென்பதாக நினை.
எழுவகைத்தோற்றத்தில் தேவரொழிந்த மனிதமிருக பக்ஷி ஊர்
வன மாஞ்செடி கொடியாதிகள் பூமியை வாஸஸ்தானமாகவுடை
யன. நீர்வாழ்வனவோ குளம், ஏரி, வாய்க்கால், குட்டை, மடு,
ஆறு சமுத்திரமென்னும் நீரையிடமாகவுடையன. நெருப்பை
யும், காற்றையும் ஆகாயத்தையும் இடமாகவுடையன நாமமாத்
திரமாகச் சொல்லப்பெறும் தேவர்களேயாகவேண்டும். உலகமெ
ன்பதோ இவ்விதபலவகைப்பொருட் கூட்டத்தொரு பெயராக
இருக்கின்றது. இதில் சராசரப்பொருள்களைப் பௌதிகங்களென

வும்இவற்றின் பிறப்பிற்காதாரமாகவும் இடமாகவுமுள்ளவைகளைப் பூதங்களெனவும் வழங்குகின்றார்கள். பூதமென்பவையோபிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமெனுமைந்து பெரிய பிரிவுகளாகக் காணப்படுபவைகள். பூதமென்றால் பெரியதெனவும், மகிமையுடையதெனவும் பொருள்படும். இவற்றில் ஆகாயமென்பது வெளியாம்; வெளியென்பது வரம்பிகந்த சூனியவிட்டமாம். எதற்கும் ஆகாயமேயிடந்தருகின்றது. எல்லாப்பொருள்களுமிருக்க சவகாஸந்தரலால் வெளிக்கு ஆகாசமெனப்பெயரிடப்பட்டிருக்கின்றது. இவ்வாகாயம் வரம்பின்றியவிபுவாயொன்றாயிருப்பதால்சுவர்க்கமத்திய பாதாளமென்னு மூன்றல்லது ஈரேழுலகமும்இவ்வாகாயத்தினுட்பட்டேயிருக்கவேண்டுமேயல்லது புறம்பிற்கொள்ளநியாயமின்று. ஏனெனின்: ஆகாயம் எல்லாவற்றிற்கும் அவகாசந்தருவதோடு சூனியமாகவிருப்பதால் வரம்பிகந்த வொருபொருளெனக்கொள்ளக்கிடக்கின்றது. இவ்வாகாயத்தையுஞ் சேர்த்தே பஞ்சபூதங்களெனச்சொல்லப்படுகின்றது. பஞ்சபூதங்களாகவும், பஞ்சபூதத்திரிபாகவும் யாவும்பிரத்தியக்ஷமாகக் காணப்படுதலால் இத்தோற்றத்திற்குப் பிரபஞ்சமெனும் பெயரிட்டுவழங்கிவருகிறார்கள். இதனால் தேவர்களும், மூவர்களும் சுவர்க்கநரகாதிகளும், பிதுர்க்களும், நாமமாத்திரமாகக்கூறப்படும் பொருள்கள்யாவும் மேற்காட்டிய பிரபஞ்சத்திலும் வேறுபட்ட பஞ்சபூதமய வேற்றுலகத்திவிருப்பனவாகக் கொள்ளவறிவுடையோர்க்குப் பொருந்தலருமை. ஐயந்திரிபறக்கல்லாத புல்லறிவாளர் சொல்லாலும், மூடவழக்கத்தாலும பிராந்தியாகத் தாங்கொண்ட விபரீதக்கருத்தையே உண்மையென்று சாதிக்க வருபவர் சிறுகல்வி கேள்வியுடைய பிராந்தரிற் சேர்வாரன்றிப்பெரியோர் வகுப்பிற்சேர்ந்தார் அல்லது சேர்க்கத்தக்கவ ராகார்கள். இவர்களையே கற்றுமறியா மூழைகளெனப் பெரியோர்கூறியதாகநினைக்கவிடமுண்டாகிறது. ஆதியந்தமாகவுண்மையேனுமாய்ந்தறியாது மூடப்பழக்கத்தில் மூழ்கியிருக்க யாவரையுமுடுக்கு மிம்மூட சிகாமணிகள் எங்ஙனம் பெரியோர் கூறிய சாத்திரங்களை யுக்திக்கும் அநுபவத்திற்கும் விருத்தமறக்கொள்ளயாவரையுந் தூண்டத்துணிவார்கள்? இவர்கள் சமயம் நேர்ந்தபோது யாவுமியற்கையென்றும், சிலர்பால் செயற்கையென்றும், சிலர்பால் தோற்றமென்றும், சிலர்பால் கன்மமே முக்கிய மென்றும், சிலர்பால் பக்தியே நலனுடையதென்றும் கூறுவதோடு உண்

ணம்பாகவுஞ் சுருக்கமாகவும் சொல்லும்கருணை மிக்க ஞானிகளின் பிரசங்கத்தைக் கேட்பவர்களைப் பேதப்படுத்தித்திரிவார்கள். சிலர்கல்வியால் பிரயோஜனமில்லை குருவானவர் காட்டுங் குறியும், சொல்லும், மந்திரமுமே பிரயோஜன முடைய தல்லது, மற்றவற்றைத் தள்ளென்று அகங்கரித்துப் பேசி மனம்போனபடி பலருக்குப் பல வீண்குறிகளும், விருதா ஆசாரங்களும் விபரீத கஷ்டங்களும் நடத்த வுடன்படுத்திப் பொய்ச் சாமிகளாகித் திரிவார்கள். உண்மையில் தான் சாமியாகி யிருப்பதை நிராசையாதிய நற்குணங்களால் நிரம்பப்பெற்று, சாந்தியுற்று, ஆன்மசாக்ஷாத்காரத்தைப் பெற்றுனந்தியாது பொய்வேடக் குருசாமிகளாக எவருக்கும் போதித்துத் தாமும் பூண்டுதிரியவே பாடுபடுகிறார்கள். இன்னாருக்கு உண்மையை யெவருக்கு முரைப்பவரு மதனைமேற்கொண்டு நடப்பவரும் பகைவரே யாவரன்றோ? மேற்சொல்லிய உலகம் இயற்கையா செயற்கையா வென்பதைப்பற்றி யோசிப்போம். இயற்கையென்பது இயல்பாக உடையதாகும். இயற்கை அல்லது சுபாவம் என்பது தன்மை அலலது அதன் இருப்பு என அருத்தம் தருகின்றது. தன்மையோ தருமமல்லது தருமியல்ல; நீரினது தருமம் வெண்மையும் இளகலுமாம். அதுபோலநெருப்பினது சுபாவம் சூடும்பிரகாசமுமாம். சுபாவம் அல்லது இயற்கை உலகம் என்றால் சரியான பொருள் விளங்கல் கடினமாக விருக்கிறது. ஆயினும் அறுபத்து நான்குவகையாகிய அளவிறந்த பூதங்களின் சேர்க்கையிருப்பென்று உலகத்தைக் கொண்டாலும், உலகம் பூதியங்களின் சேர்க்கையலது செயற்கையென நினைக்க வேண்டியதாக விருக்கிறது. இதனால் இயல்பாகவுடையபொருள் ஒன்றேனுங் காணப்படவில்லை. எல்லாம் பரிணாமத்தையடைந்தனவாகவேகாணப்படுகின்றன. அதனால் காணப்படு மியாவுங் காரியங்களேயாம். காரியமோ அழிவிற்குட்படும்; காரணமழிவுபடாது. அழியுமேலதுவுங் காரியமாகவே முடியுமல்லது காரணமாகாது. உதாரணமாக ஒரு கடத்தைக் கொள்ளுவோம். கடம மண்ணிலிருந் துண்டாகின்றது. இதனால் குடமோ காரியமாம் மண்ணோ காரணமாம்; தண்டு சக்கராதிகளுங் குயவனும் இன்றி, மண்ணே குடமாகக் காரியப்படுதலில்லை. அதனால் தண்டு சக்கராதிகளுங் குயவனும் நிமித்த துணைக்காரணங்களாம். மண் ணுபாதான காரணமாம். உபாதான மென்பது (உப இரண்டாவது அல்லது சமீபத்

தில், தானம் ஓர் பொருளைக் கொடுப்பதாம்) அக்குடம் குயவனாலேனும் மற்றோராலேனும் நசிக்கத்தக்கதல்ல வென்பது அநுபவசித்தமல்ல. நசிக்குமென்பதேலாகரு மநுபவம். மண்ணழியக் கண்டாரில்லை. இதனால் காரியம் அழிவிற்குரியதென்றே நினைக்கவுஞ் சொல்லவும் நிரூபிக்கவுங் கூடியதாகின்றது. காரியப்பொருள் ஒரு பொருளின் பரிணாமமாக விருக்கின்றதேயொழியச் சுயம்பாகவில்லை. ஆபரணங்கள் பொன் வெள்ளிகளின் பரிணாமமாகவும் ஆயுதங்க ளிரும்பின் பரிணாமமாகவும், வஸ்திரம் பஞ்சின் பரிணாமமாகவும் சகடம், ஓடம், பெஞ்சு, நாற்காலி முதலியவை மரத்தின் பரிணாம மாகவும். கொள்கின்றோ மன்றோ? இதைப்போலவே ஜீவர்களின் சரீரங்களும் சுக்கில சோணிதங்களின் பரிணாமங்களெனவே சாமான்யமாக யோசிப்போருக்கும் விளங்காமலிரா. இப்பொழுது மனிதராலும் மற்றப்பிராணிகளாலும் செய்யப்பட்ட காரியப்பொருள்களும், ஜீவர்களின் சரீரங்களும் பஞ்சபூதங்களின் பரிணாமமாகவே கொள்ளவேண்டி யிருக்கிறது. இதனால் பஞ்சபூதமொழிந்த மற்றெல்லாத் தோற்றப் பொருள்களும் காரியபொருள்களே யாகின்றன. இவையாவும் வேறாயு மழிக்கக்கூடியனவாகவு மிருக்கின்றன. இவற்றை யியற்கைப் பொருளெனக் கொள்ளற்கிடங்கண்டிலம். இனிப்பஞ்சபூதங்களை மிஞ்சிநின்றன. மண், நீர் ஆகிய இருபூதங்களும் பரமாணுக்களின் செயற்கையாலாயின வென்று சொல்லுதலுக்கிடந்தந்தே தோன்றி நிற்கின்றன. எப்படியெனில், மண்ணும் மண்ணின் விகாரமாகிய உப்பு, உலோகம், பாஷாணம் உபசாரதிவஸ்துக்களும் நீரினாலாகினும், அல்லது நெருப்பாலாகினும், சேர்க்கையுற்று அணுக்களாகவும், பரமாணுக்களாகவும், பிரிந்துபோமவைகளாக அநுபவத்தால் விளங்குகின்றன. எப்படிக்கெனின், சிறிது களிப்புடைய காய்ந்தமண்கட்டியை ஜலத்தைவிட்டுக்கரைக்கில் கரைந்து அணுக்கள் பிரிந்து போகின்றன.

உப்பு மப்படியே கரைந்து பிரிந்து போகின்றது. கல்லுலோகமாதியன நீராற் பிரிவனவல்லவாயினும் நெருப்பாற் பிரிந்து பஸ்மமாகி, ஆவியாகவும், காற்றால் அணுவாகவும், போய்விடுகின்றன. பரமாணுக்களோ விபஜிக்கக்கூடாத சூக்ஷ்மமாகிய அவயவமாம் இப்படிப்பட்ட அணுக்களிரண்டுகூடியது துவியணுகமாம். துவியணுகம் மூன்று கூடியது திரியணுகமாம். திரியணுகமே சூரி

ளொளியில் வீட்டினுள் பறப்பனவாகிக் காணப்படுவன. இதனுன் பரமாணுக்களுடைய அல்லது துவியணுகம் திரியணுகங்களுடைய பரிணாமமே பூமி, மலை முதலியனவென்று வெளியாகின்றது. பூமியும் மலையும் சமுத்திரமும் பரமாணுக்களின் பரிணாமகாரிய செயற்கைப்பொருள்களே யாகின்றன. பரமாணுக்கள் மிஞ்சி நிற்கின்றன. இஃதிருக்கட்டும். இனி ஜலத்தைப்பற்றி விசாரிப்போம். இந்த ஜலத்தினிடத்தில் சிநேகம் சீதளமென்னுங் குணங்கள் சமவாய சம்பந்த (அதாவது அநாதிசம்பந்த) மாக விருக்கின்றன. இக்குணங்களுடையஜலத்தின் சையோக சம்பந்தம் பெறாது பிருதிவியின் பரமாணுக்கள் உலகம் மலைமுதலியனவாக, பரிணாமமடையவிடவில்லை. இதனாலே கல்லுமேலோகமுதலியன பிருதிவியின் பரிணாமமாகவும்,பூமி மலையாதிய ஜலத்தின் பரிணாம சிநேகாக்கருஷணகாரிய மென்றுங் கொள்ள விடந்தருகின்றது. ஜலமோ தன் பாலுள்ள சீதளசிநேககுணங்களால் பரமாணுரூபத்தைவிட்டு இளகலாகிய திரவரூபமாகி, பின்னுமக் குணத்திற்கு விரோதியாகிய சூட்டின் சம்பந்தம் குறையக் குறைய உறைந்து கற்பாறையாகி விடுகின்றது. மண் கல் முதலியனவாக ஜலவணுக்களே பரிணாமமடைந்திருக்கலாமென் றனுமானிக்கவும் இடந் தருகின்றது. வைசேஷிகர்கள். பிருதிவி பரமாணுக்களுக்கும், ஜலபரமாணுக்களுக்கும், வேற்றுமை யுண்டெனவும் ஒன்று மற்றொன்றின் தருமத்தை யேலாதெனவுங் கொள்ளுகிறார்க ளாதலால் ஜலத்தின் விகாரமாகிய ரூபமே மண்ணாகக் கொள்ள வெறுப்பார்கள். ஆயினும் கடினப்பொருளை விபஜிப்பதால் இளகற்பொருளும், ஆவியும், அரூபமும் ஆக்கலாமெனலால் நீரின் விகாரவடிவே கடினப் பிருதிவியாயிருக்கலாமெனஉத்தேசிக்கலாமல்லவோ.இதுபற்றியே போலும் பிரபல சுருதியென்னும் வேதத்திலும் நீரினின்றே பிருதிவி யுண்டாயதென்று சொல்லப்படுகின்றது. மண்ணின் பரமாணுக்களே தாமாக ஜலத்தின் சகாயம் பெறாமல் மண் கல் மயமான பூலோகம்தோற்றப்பொருளாகப்பெறுதென்பது துணியப்படுகின்றது. ஆகையால் உலகம் இயற்கைப்பொருளாகாது செயற்கைப் பொருளாகின்றது. இப்படியே நீரும், உஷ்ணத்தின் மிகுதியால் சிநேகாக்ருஷணங் குறையப்பெற்று, ஆவியாகி, கண்ணுக்கும், கருத்திற்குமெட்டாத பரமாணுரூபமாகிக் காற்றில் அல்லது ஆகாயத்தில் மறைகின்றது. இதனால் ஜலமானது தேயு அல்லது வாயு அல்

லது ஆகாயத்தின் பரிணாமகாரிய மென்று கொள்ளலாமல்லவா? எங்ஙனங் கொள்ளலாம்? மீளவும் மழையாகிவரும் புனருற்பவ முடைமையால் நீரின் பரமாணுக்கள் தேயு அல்லது காற்று ஆகாயங்களின் பரிணாமமாகக் கொள்ள இடமில்லை. நீரினின்று மண்ணுண் டாயதெனற் குதாரணம். மண்ணின் பரமாணுக் களும் ஜலத்தின் பரமாணுக்களை யொத்து ஜலத்தின் பரிணாம மாகாமல் நித்திய பொருள்களாகிய இயற்கைப்பொருள்க ளாக லாமே என்பையாகில் அது பொருந்துமாறில்லை. எப்படியெனின், கண்ணிற்குங் கருத்திற்கு மெட்டாத மண்ணின் பரமாணுக்கள் காரியப்படும்போது ஜலத்தின் அல்லது தேயுவின் சையோக சம் பந்தம் பெறாது காரியப்படுமாகில் அப்போதவற்றை நித்தியப் பொருள்களாகவும், இயற்கைப்பொருள்களாகவும், கொள்ள இட முண்டாகும். ஜலமயமாகவுள்ள ஊனீரே தடித்து உதிரமாமிசமாக வும், மாமிசங் கடின நரம்பாகவும், அதினும் கடினமாகிய எலும் பாகவும், பரிசமற்ற ஜடரோமமாகவும், நகமாகவும் பரிணாமமடை வதையும், முட்டையுள் இளகல் பொருளாகக் காணப்படும் வெண் மை மஞ்சள் கருக்களே எலும்பாதியுடைய பறவைமீனாதிய ஆவ தையும், மனிதர் விலங்குகள் விடும் இளகற்பொருளாகிய சுக் கில சோணிதந்தானே தோலென்புரோமஞ் சதையுடைய மனி தர் மாடாதிய வியக்திகளாக பரிணாமமடைவதையும், பார்த் துணர்ந்திருந்தும், கடினப் பொருள்களாகிய மண் கல்லா திகளுக்கு இளகலாகிய ஜலத்தின் பரமாணுக்களைக்காரணமாக் காமல், மண்ணின் பரமாணுக்களையே காரணமாகவும், நித் தியப்பொருள்களாகவும், கொள்ளவேண்டிய ஆவசியகம் என்னை யோ! அறியோம். புனருற்பவமுடைமையால் ஜலத்தின் பரம அணுக்களைப் போல மண்ணின் பரமாணுக்களும் நித்தியமாகி வேறாயிருக்க வேண்டுமெல்லவா வென்பையாகில் இது நிடமன்று. ஏனெனில் மண் கல்லாதிய பரிணாமக்காரியப் பொருள்களுக்குக் காரணமாகிய பரமாணுக்க ளிருந்தாற்றான் புனருற்பவங்கூடுமெ ன்று கொள்வதைப்போன்று, பிருதிவியின் காரணப்பொருள்களா கிய பரமாணுக்களின் சையோகத்திற்கு நீரின் பரமாணுக்கள் இருந்தாற்றான் புனருற்பவங்கூடுமெனக் கொள்ளலாகாதோ வெ னின், ஏதாட்சேபம். அல்லாமலும் பலவகைப்பட்ட பல அணுக் கள் கூடி ஒரு பொருளாகவேண்டுமல்லாது ஒரு பொருளே பல

பொருள்களாக மாறாதென்னும் கொள்கையே நியமமாகுமாகில்; ஓர் விதையானது மரம்,வேர்,பட்டை,கட்டை,தளிர்,இலை,பூ,காய் பழங்களாவதோடு கொட்டையென்னும்பலவிதைகளாகப் பரிணாமமடையக்காண்கின்றோமே, இவையாவும் மேற்படி ஒன்றாகிய விதையில் சூட்சுமமாகி அடங்கியிருந்தே வெளிப்பட்டனவென்று, நீ யுரைக்கினும், பின்னுண்டாகிய எண்ணரும் விதைகளில் அவ்வொருவிதையிலிருந்த சத்தே இவற்றி லுண்டாயிருக்கிறதெனக் கொள்ளலாகுமோ? ஒருவித பரிணாமமடைந்து மீளவும் ஓரே விதையாகிக் காரணத்தையறிந்து நித்தியமா யிருக்கினல்லவோ ஒன்று பலவாகாதென்பதையும், அதனதன் காரணமழியாது நித்தியமாயிருக்கின்றனவென்பதையுங் கொள்ளலாம். ஒருவிதையே தன்போன்ற பருமை சுவை பொருளடக்கம் சக்தியாதிய் குணமுடைய பல விதைகளாகப் பரிணமிப்பதை யறிந்திருந்தும், ஒன்றநேகமாகாவெனல் எப்படி? பால் தயிராகியும், தயிர்மோராகியும், வெண்ணெயாகியும், வெண்ணெய் நெய்யாகியும், நெய் மீளப்பாலாகாது முடிந்து நிற்றல் போல, பூர்வதன்மையை ஏறவிடாததெதுவோ அதுவே பரிணாமமென வழங்கி வருகின்றது என நீகூறலாம். இவ்விதவார்த்தைகள் அவசரநிமித்தங்கொள்ளும் சித்தாந்தப்போலி நியாயங்களேயன்றித் தீர்ந்த நிலையாகாது. ஏனெனில்; மீளவும் மோரையும், நெய்யையும் உண்பொருளோடு கலந்து பசுவுக்கு உண்பிக்கிற் பாலாகப்பெறலாம். ஆழமாகயோசித்துப் பார்க்கில் பரிணாமப் பொருள்கள் இவ்வளவோடு நின்று விடுகிறதென்னுந்தீர்ப்பையும், பூர்வஸ்திதியைப் பெறாதென்னுந் தீர்ப்பையும், பெறாதென்றே உலகிற் காணப்படுமெல்லாப் பொருளிடத்தும், காணலாம். ரசாயனசாஸ்திரத்தினும், பூதகுணபரிசோதனாசாஸ்திரங்களினும் ஓயாது ஆராய்ச்சி செய்து வரும் தற்காலத்துப் புத்திமான்கள் பொன்,வெள்ளி,செம்பு, இரும்பு முதலிய உலோகங்களைக் கலப்பில்லாத தனிப்பூதியங்களின் சேர்க்கையாகக்கொள்வதோடு அவைகளிலொன்று மற்றொன்றாகமாறுதல் கூடாதென்கிறார்களல்லவோ? யானே பிரத்தியக்ஷமாக இரும்பையும், காரீயத்தையும், செம்பையும்,வெள்ளியையும் பொன்னாகமாற்றித்தந்தாரைக்கண்டும் செயப்பார்த்துமிருக்கிறேன். அன்றியும் பூருவத்திற்றானே இரும்பு முதலியவற்றைப் பொன்னாக்கலாம். ஆக்கியுமிருக்கின்றோம் என அகஸ்தியர், புலஸ்தியர், இராமதேவர், போ

கர், கருவூரார், கொங்கணர் முதலிய பெரியோர்களாலெழுதப் பட்டகிரந்தங்களிலிருக்கின்றன. பரிசவேதியால் செம்புபொன்னு மாறு பிரம்மசாக்ஷாத்காரத்தால் ஜீவன் பிரம்மமாகிறான் எனவே தத்திலும் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வகை நூற்களிற் கூறியி ருக்கும் விஷயசோதனையினாற்றானே தற்காலத்தில் வழங்கும் நீராவிக்கப்பல், இருப்புப்பாதையிலோடும் ஆவியந்திர வண்டிகள் மின்சாரத்திலோடும் சகடுகள் முதலிய அநேக அதிசயக்கருவிக ளைச் செய்யும் வகைகளைக்கண்டு பிடித்திருக்கிறார்கள். அன்றியும் வெடியுப்பு, திராவகமாதிய இளகற்பொருள்கள் தம்பாலிலிடப் பட்ட உலோகங்களென்னும் கலப்பிற்பொருள்களை நீரிலிட்ட உப் பை நீரானது தன்னுருவாக்கிக்கொள்ளுவதுபோல, கரைத்துக் கொள்வதோடு புகைந்துபோகவுஞ்செய்கின்றன. இதன்றிப் பொ ன், வெள்ளி, செம்பென்னும் பொருள்களையும் கலந்துருக்கிய ஓர் கட்டியை வெடியுப்புதிராவகமுள்ள ஓர் பாத்திரத்திலிட்டு, நெருப்பின்மேல்வைத்து சூடேற்றத் தாம்பிரம்புகைந்துபோகின் றது; வெள்ளிகரைந்து நிற்கின்றது. பொன்னோ கரைந்து நில்லா மலும் புகைந்து போகாமலும் சிறு அணுக்களாகஅடியிற்படிந்து கறுத்து நிற்கின்றது. இதன்றி வெள்ளியுஞ் செம்புங்கலப்புற்ற போது வெள்ளியைச் சுத்தியாக்கிப் பிரிக்கத்தட்டார் முதலிய தொழிலாளர் அதனோடு காரீயத்தையுமிட்டுருக்கியூதிக்கொண்டு வர ஈயம் புகைந்து தாம்பிரத்தைக் கொன்று போட, வெள்ளி மாத்திர மீதியாக நிற்கின்றதென்று, நாம் கூறில் பூதகுணவாராய் சசியுடையார் இதனால் தாம்பிரமும், ஈயமும் போய் விட்டதாக நினைக்கவிடமில்லை யென்றும், அவைகள் வேறுரூபமாகவாவது பூர்வ அணுக்களாகவாவது கண்ணுக்குத்தெரியாமலிருக்கின் றனவென்றே விதிக்கின்றார்கள். ஆனா லிவ்வார்த்தையைச் சித் தாந்தமாகக் கோடற்பொருந்து மாறில்லை. எங்ஙன மெனின், வைத்தியர் நவலோகங்களையும் மூலிகைக்கவசஞ்செய்து நெருப் பில்வைத்துப் பஸ்பமாக்குகிறார்கள். அன்றிக் கோழி முட்டை வோட்டைக்கலந்தரைத்துக் குகையிலிட்டூதுகிறார்கள், அவை கள் சத்தற்றுப் பஸ்பமாகின்றன. அப்பஸ்பத்தை வெங்கார மிட்டு அல்லது மித்திரங்களைக் கூட்டியுருக்கினும் சாம்பலான்று உருகுவதில்லை, முன்னுருவத்தையடைவது மில்லை. ஆனையால் உலோகாதிகள் கலப்பிற்பொருளாயின், அதுமற்றொன்றுத்தெ

னம் பொருந்தும்? செம்பு, வெள்ளி, காரீயம், இரும்பாதிகள் பரிசவேதிப்பொருளோடு சம்பந்தப்பட அவைகள் தங்கமாகியும், திராவகங்களிலிடத் திரவப்பொருள்களாகியும், உப்பு, செந்தூரம், சிட்டமாதிய சத்திறந்த பொருள்களாகியுங்காணப்படுதலால் கலப்பில் பொருள் உலகத்தோன்றுமில்லை யெனவும், கலப்பிலணுக்கள் சேர்ந்ததனிப்பொருள்களே உலோகங்களெனவும், கலப்பில்லாத அணுக்களின்வகைஅறுபத்து நான்கு எனவும், அவைகளேபூதியங்களெனவுங் கொள்ளுங்கொள்கையும், அவைகள் நித்தியமாமென்று சாதிக்குந்தன்மையும் நிராக்ஷேபமான வார்த்தைகளாகா. இதன்றி ஆண் பெண் உருவமனிதரிடத்திருந்தே மனித பரம்பரையும் அப்படியே மிருகப் பரம்பரையும் பக்ஷி, ஊர்வன, நீர்வாழ்வன, மரம், செடி, புல், பூடாதியவற்றின் பரம்பரை விருத்தியடைந்து வருவதைக்கண்ணுற் காண்கின்றோமன்றிப்பஞ்சபூதங்களின்சேர்க்கையாலேனும், அறுபத்துநான்குவித பரமாணுக்களின் சேர்க்கையாலேனும், மேற்குறித்த சரவசர ஜீவவர்க்க பரம்பரையுண்டாகக் காண்கின்றோ மில்லை. பூதியங்களே சரவசர ஜீவவர்க்கங்களாயின அல்லது பூதங்களைக் கொண்டே ஜீவவர்க்க தேகங்களைச் செய்யப்பட்டிருக்கிறது எனும் சுபாவவாதி சிருட்டிவாதிகளின் சொற்கள் உத்தேசமல்லாது சித்தாந்த வசனங்களாகாது. ஆகையால் உலகைச்சிருட்டியென்றாயினும், பரமாணுக்களின் பரிணாமமென்றாயினும் கொள்ளல் சொல்லல்களாகிய இருவகை உணர்ச்சி நிராக்ஷேப தெளிவன்று. இவை கொள்ளற்கு இடங்காணேம். தமக்கு முன்னுண்டாய்த் தோற்றுமவற்றை விபரீதஉணர்ச்சியால் சித்தாந்தப்படுத்தப் பார்ப்பது செல்லத்தக்கதாகாது. நீரினின்றே மண்ணுண்டாயின தென்னும் வேதவசனத்திற்கு விருத்த சித்தாந்தங்களை நிஷ்பக்ஷபாதகமாக நிலைநிறுத்துவா ரருமை. இதுநிற்க இயல்பாகு நாம் எவற்றையும் இருவிதக் காக்ஷியாக அறிகிறோம். ஒன்று உளளது எனலாம் மறறொன்று இல்லையெனலாம். உள்ளதனையே பாவமென வழங்குகின்றோம். இலதென்பதையோ அபாவமென்று வழங்குகின்றோம். கண்ணால் நெருப்பைக் காணும்போது இது நெருப்பு சுடுகையுள்ளது, எரிக்குந் தகையது பிரகாசமுடையது. போகுந் தகைமையது என்று அறிகிறோம். இதனால் நெருப்பு உண்டு நெருப்பு இல்லையென இரண்டு வகைஞானம் நமக்குண்டாகின்றது. எதுவரையில் நெருப்பின் இருப்புத்தோற்றம் காணப்படுகின்றதோ அதை பாவரூப பிரத்தியக்ஷ மென்கிறோம்.

எப்பொழுது நெருப்பின்தோற்றம் முழுதுங் காணப்படுதலில்லையோ அப்பொழுது நெருப்பை அபாவரூபப் பிரத்தியக்ஷமென்கிறோம். இவ்வகையாகப் பாவம் அபாவமென்னும் இருவிதமும் இயற்கையில் யாவருக்கும் அநுபவமாகவேயிருக்கின்றன. இப்பாவரூபப் பிரத்தியக்ஷத்தில் பூர்வம் அறிந்ததையே பின்னும் பின்னுமறிவதும் முன்னறிந்திராததை அறிவதும் ஆகிய இருவகைப் பிரத்தியக்ஷங்கள் உண்டாகின்றன. ஒருவன், தாய், தந்தை, மண், நீர், நெருப்பு, வாயு, ஆகாயம்; சந்திரசூரிய நக்ஷத்திரங்கள், என்னும் வடிவப்பொருள்களையும் கை, கால், கண், மூக்கு ஆதிய அவயவப் பொருள்களையும் மீளமீளத் தினந்தினமுந் தரிசித்துப் பரிசித்தறிந் தநுபவித்து வருகிறானாகையால் இதனையே பிரத்தியபிஞ்ஞாப்பிரத்தியக்ஷமென்று கூறுவர். சாதாரணமாக சாமினாதனை அறிமுகக்காட்சியென வழங்கிவருகின்றோம். மாடு, ஆடு, குதிரை, யானை, ஒட்டை, மரஞ், செடி, கொடிமுதலிய பொருள்களிலும் பூர்வங் கண்டவைகளைக் காணுங்காட்சியும், காணாதவைகளைக் காணுங்காட்சியும் கண்டநுபவித்து வருகின்றோம். இதனால் பூர்வங்கண்ட வாசனையோடு காணும் பிரத்தியக்ஷமும், அஃதின்றிய பிரத்தியக்ஷமும் என இருவிதப் பிரத்தியக்ஷங்கள் உண்டாகின்றன. இப்பிரத்தியக்ஷ ஞானத்தையே வடமொழியார் ப்ரமை அல்லது ப்ரமாஞானமெனக் கூறுகின்றனர். நமக்குள்ள ஞானேந்திரியங்களைந்தினுள் எதனால் எதன் இருப்பையுணருகிறோமோ அதனிருப்பை யுணருமவ் விந்திரியத்தை யதற்குப் பிரமாணமென வழங்குகின்றோம். இதனால் இந்திரியங்களே பிரமாணமெனும் பெயர்க்குரியவைகளாகின்றன. நாம் கண்ணால் ஒரு குடத்தை யறிகிறோமே யல்லது காது, மூக்கு, நாக்கு இவைகளாலதை யறிகிறோமில்லை. காதாற்குடமென்னுஞ் சத்தத்தை மாத்திரங் கேட்கிறோம். குடமென்பது இவ்வகைப் பொருளென முன் கண்ணால் கண்டிருந்தாலல்லது குடமென்னுஞ் சத்தத்தால் நமக்குக்குடஞான முண்டாதலில்லை. எதாகிலும் ஒரு பாஷையைச் சிறிதுமறியாத ஒருவன்முன் அப்பாஷையையறிந்த இருவர் நின்று அப்பாஷையால் சிலசங்கதிகளைப் பேசிக்கொண்டிருக்கையில் இவன் சத்தத்தை மாத்திரங் கேட்கிறானே யல்லது அந்தச் சத்தத்திற்குரிய பொருளையறிகிறானில்லை. அதுபோலவே காதால் கடமென்னுஞ் சத்தத்தைக் கேட்டாலும் கடத்தைக் [illegible]கிறோமில்லை. ஆனால் பரிசத்தால் கடத்தைத் தடவியறி[illegible]

லும், அக்கடம் கருமையாக விருக்கின்றதோ, செம்மையாக விருக்கின்றதோ, என்னுஞ் சந்தேகம் ஜநிக்கத்தக்கதாகவே காணப்படுகின்றது. இதனால் கண்ணாற்றான் வண்ணம், வடிவு, அளவு முதலிய விசேஷங்களையுடைய கடத்தை நிச்சந்தேகமாக அறிய விடமுண்டாகின்றது. கடத்தை வண்ண, வடிவ, அளவோடு, அளந்தறிக் கண்ணை அசாதாரண காரணப்பொருளாகக் கொள்ளப்படுகிறது. எந்த விஷயத்திற்கு எது இன்றியமையாத காரணமோ அதைத்தான் அவ்விஷயத்திற்கு அசாதாரண காரணம் அல்லது கரணம் என்பது தார்க்கிகர் முதலிய எவர்க்கும் மரபாம்.

இதனாலே புறக்கரணம் அந்தக்கரணமெனச் சரீரத்தின் புறத்திலும், அகத்திலுமுள்ள சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தங்களையும், காது, தோல், கண், நாக்கு, மூக்குஎன்னும் ஞானேந்திரியங்களையும், துக்க, பய, நிர்ப்பயங்களை யறியும் மனத்தையும் சொல்லுகின்றோம். கண்ணுக்கு உருவமும், காதுக்குச் சத்தமும், மூக்கிற்கு வாசனையும், நாக்கிற்கு உருசியும், பரிசத்திற்குச் சீதோஷ்ணாதிகளும் சம்பந்தமல்லாது கண்ணிற்கு உருவமொழிந்த மற்றவைகளின் சம்பந்தம் அசம்பவமேயாகும். அப்படியே காதிற்குச் சப்தமொழிந்த மற்றவைகளசம்பவமேயாம். மூக்கிற்கு வாசனையொழிந்த பிறவும், நாக்கிற்கு உருசியையொழிந்த பிறவும், தோலிற்கு ஊறொழிந்தபிறவுஞ் சம்பந்த முடையனவைகளாகா. இதனால் ஓரிந்திரியம் தன்னோடு சம்பந்தமுடைய வேறுபொருளையடைந்து அப்பொருளை யின்னதென்றுணர ஞானமுண்டாக்குதலால் இந்திரியம் அளக்குங் கருவியாகின்றது. இதனாலே இந்திரியமே பிரமாணமாம்.

இவ்வாறு இந்திரியத்திற்கு விஷயமாகும். அறிபடுபொருளை [illegible]யமெனவும் பிரமேயமெனவுங்கூறுவர். உதாரணம் கண், பிரமாணப்பொருளாம், கடம், பிரமேயப்பொருளாம். கண்ணிற்குங் கடத்திற்குமுண்டாகுஞ் சையோகம் வியாபாரமாம். வியாபாரத்தின் பயனாகிய காட்சியறிவோ பிரத்தியக்ஷஞானமாம். இப்படியே மற்ற இந்திரியங்களுக்குங்கொள்ளுதல் தார்க்கிகர் முதலியோர்கொள்கையாகவிருக்கின்றது. கண்ணெதிரிலனந்தப்பொருள்களிருப்பினும், கண்ணெப்பொருளோடு சம்பந்தப்படுகிறதோ அப்பொருளே யறியப்படுகிறதல்லது மற்றவை யறியப்பட்டனவாதலில்லை. இதனால் கண்ணுக்குங் காணப்படும் பொருளுக்கும்

சையோகவியாபாரச்சம்பந்தமிருக்கின்றதென்பது ஸ்பஷ்டமாகின்றது. இப்படியே மற்றக் கரணங்களுக்கும் கொள்ளவிடமுண்டாயிருக்கின்றது. சையோகமும் சம்பந்தமுமுடையதன் கண்ணேயுண்டாகின்ற தல்லது சம்பந்தமில்லாததின்கண் ணுண்டாகிறதில்லை. எப்படி கண்ணுக்குச் சம்பந்தமுடைய ரூபவஸ்துவினிடத்தில் சையோகஞ் சம்பவிக்கின்றதோ அப்படியே கந்தாதிகளிடத்துச் சையோக சம்பந்தம் ஓர்பொழுதுஞ் சம்பவிக்கிறதில்லை. இச சம்பந்தம் சமவாய சம்பந்தம், சையோகசம்பந்தமென இருவகைப்படும். இவற்றுள், சையோக சம்பந்தம் வேறுவேறு இரண்டு பொருள்களுக்குண்டாகின்றது. அநாதிகலப்பாகப்பொருள்களிடத்தில், குணம், கிரியை, சாமானிய, விசேஷணங்கள் சமவாயசம்பந்தமாகச் சித்திக்கின்றது. ஜாதி யென்பதும் சமவாய சம்பந்தமேயெனப்படுகின்றது. இத்தகைய சம்பந்தஜாதி மனிதர்பால் பலவுண்டு எனல் அறிவீனத்திலும் அறிவீனமாம். நிறத்தினால் மனிதருட்பல ஜாதிகளை நிலை காட்டப்புகுதல் அபலக்கொள்கையாம். அதுபோலவே பூணூலாதிய சையோகத்தாலும், மயிர் நீட்டல் மயிர்வழித்தல் பாஷை உடை முதலிய வற்றின் சையோகத்தாலும் பலஜாதிகளைக் கொள்ளுதல் குற்றமேயாம். பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர், சண்டாளாதி ஜாதிகளைக் கேவலமனிதவியக்தியில் இளமையிற் காண்டல் அசாத்தியமென்பதெவர்க்கும் பிரத்தியக்ஷம் அறிவற்ற மூடக்கொள்கையையுடைய மூர்க்கருக்கும், வஞ்சகருக்குமன்றிமற்றோரால் அறிவதும் அரியதாகும். ஜாதியையுண்டென நிலைநாட்டி நடத்திவரப்பாடுபடும் பண்டிதரைக்கற்றோரெனல் வஞ்சகக்கற்றோரென வருத்தங் கொள்ளத்தக்கதாகவிருக்கின்றது. குதிரை, மாடு, ஆடு, எருமை, யானை, பக்ஷி, மான், புழுக்கள் முதலிய வற்றில் வேற்றுமையாக அவயவாதி பேதங்களைக் கண்டு ஜாதிகள் வகுத்துக்காண்பது போல மனிதர் மாட்டறிந்து ஜாதியை வகுத்தாரியாரோ அறியகில்லோம். மனிதர்களில் புத்திநுட்பமுடையார் உயர்ந்தோர், அஃதிலார் தாழ்ந்தோரெனக்குணித்தால் இருவேறு பிரிப்பதும் நிலைப்பனவல்ல. மந்தனும் பழகப்பழக விவேகநுட்பமுடையவனாகிறான்; நாகரீகமுடையவனாகிறான். கல்வியாலும் ஒழுக்கவழக்கத்தாலும் சகவாசத்தாலும் உயர்ந்த புத்திமானாதலுக்குத் தடையில்லை. கடத்தில் கடத்துவமும், படத்தில் படத்துவமும், மனிதர்பால் மானுஷீகத்

# அ[illegible]

[illegible]ாவிரும் உணர்வதுபோலமேற்சொல்லியவைகளைச்
[illegible]ாறுகமுடித்தமளித்தஇனம் எந்த விசேஷணைத்தைக்
கொண்டு வகுத்து வழங்கிவருகின்றனரோ அறியக்கூடவில்லை.
[illegible]சத்தாலன்றி மற்றென்றால் உளவெனக் காட்டவொண்ணு.
வேதவிதியால் கொள்ளுகிறோமென்று சிலரும், சிஷ்டாசாரமெனச்
சிலரும், ஸ்மிருதி, புராண இதிகாசங்களாற் கொள்ளப்படுகின்றதெ
னச்சிலரும் சொல்லுகிறார்கள். எதற்கும் சிஷ்டாசாரம் சிஷ்டா
சாரம் எனவும், ஆன்றோர் வழக்கெனவும் மத்தியில் ஓர் வார்த்
தையாகச் சொல்லி விடுகிறார்கள். இயற்கையில் கடவுளால்
அமைக்கப் பெற்றுள்ள இணையிலாச் சுதந்திரத்தை நீக்க
நினைக்கும் வஞ்சகர் பலர் சேர்ந்து தாம் கற்றவையும்
தாம் பெற்றவையும் பிறர் அடையலாகாதென யோசித்து, உலகி
லுள்ளவர்களை மூடராக்கச் சிலமந்திரதந்திர பொய்வசனங்களால்
துர்க்குணங்களில் பழக்கி, அவர்கள் மேற்படாவண்ணம் கட்டுப்
பாடுகளையுண்டாக்கிக்கொண்டு தாம் சுகித்துவருவதைச் சிஷ்டா
சாரமென்றால் விவேகிகள் கொள்ளத்தக்கதாமோ? உலகம் சிரு
ஷ்டி எனல் எந்த வேதவாக்கியத்திற்கு உடன்பாடோ? சிருஷ்டி
மெய்யாகிலன்றோ சிருஷ்டாசாரம் மெய்யாகலாம். பிரமத்திலும்
பின்னமாகக்கொள்ளும்யாவும் கேவலமூடவஞ்ஞானமெனப் படு
மானால் சிருஷ்டாசாரம் எத்தகையதோ? வேதத்திற் பிரமாண
மாகக் கொண்டாலொழிய மேற்படி ஜாதியாதிகளைச் சங்கிக்கும்
சங்கைக்குவிடைபகர்வது கூடாதெனச் சிலர் சொல்லுகிறார்கள்.
வேதம் அனுபவவசனமோ? மூடவசனமோ? மூடவசனமெனில்
தகாததாம். அனுபவவசனமெனில் ஆதாரமின்றியிருக்கமாட்டா.
ஆதாரங்காட்டவேண்டிய அவசியம் என்னவெனில் வேதங்கூறிய
யாவையும் அனுஷ்டிக்கவேண்டுமெனு மவசியமெது? அனுஷ்டி
யாது ஓதுக்கவேண்டும் என்பது எது? வேதங்கூறிய வற்றிற்கு
விபரீதவர்த்தங்கள் கற்பித்துக்கொண்டு நடந்தும் நடத்தியும் வந்
த மாத்திரத்தினாலே அவைசிருஷ்டாசாரமாகி விடுமா? வேதத்
திற்குவிபரீதார்த்தங்கொள்ளவில்லையென்பது மெய்யாகில் வேதத்
தையாவரும் வாசிக்கவும் கேட்கவும் ஆகாதெனக்கொண்ட[illegible]
காரணமென்னை? உள்ளபடியே இப்பொழுதும் மேற்கொண்டு நட
க்கும் சிருஷ்டாசாரம் வேதசம்மதமாயின், காணவும் கற்கவும்
கேட்கவுந்தக்கதாகவே விட்டிருக்கலாமே. தாம் நடப்பதும் பிற

லை சுயத்துவதும் வேதகர்மமல்லாமையால் இவை பௌத்தமதியில் கிரியையும் ஆசாரம் இல்லாமையும் வருமென்பதற்கே மறைக்கப் படவேண்டும் படுகிறதுமாகவிருக்கின்றன. எவ்வளவு சுருக்கிப்பேசினும் விரித்துப் பேசினும் மனிதர்யால் மநுஷியத்துவம் என்றும் சாதியொழிய வேறு ஜாதி சமவாயசம்பந்தமாக உண்டென்கை மூடக்கொள்கை எனற்கு முரண் சிறிது முண்டாகா? இதனால் நாம் மனிதர் முதல் எல்லாப் பொருள்களையும் கண்ணாற் பார்த்தறிவதே பிரத்யக்ஷப்ரமாண ஞானமாம். மனிதரில் ஜாதியாதிகள் தொழிலால் குணத்தால் தேசாசாரத்தால் வஞ்சகத்தால் நேர்ந்தவையென்று ஆகற்றவேண்டியிருக்கின்றன. காம்பஞ்சேந்திரிய விஷயத்தை அறிவதாகிய பிரமாணமொன்றையே உண்மையெனவும் மற்றவையின்றெனவும் கொள்ளுவது தகாது. அனுமானாதிப் பிரமாணங்களும் உண்டாகையால் அவற்றையும் கொள்ளவேண்டுமென்பார் பலர். கொள்ளத்தக்கனயாவும் கொள்ளத்தக்கனவே.

அவற்றையும் விசாரிப்பாம். பிரவகிக்கும் ஓராற்றின் கரையில் நாமடையும்போது அதில் நீரைப்பார்க்கின்றோம்; அந்நீரில் மரக் கட்டை கரி பூஇலை தளிர்காய் முதலியன மிதந்துவருமாகில் தூரமான காட்டில் மழைபெய்திருக்கவேண்டும்; ஆகையாற்றான் காண்படுதிரவியம் இதிற் காணப்படுகிறதென்று உணருகின்றோம். காட்டிற்பெய்த மழையை நாம் காணவில்லையாகினும் பிரவாகக் காரியத்தினாலும் அதிலுண்டாய்க் காண்படு திரவியக் காட்சியாலும் மழை பெய்ததெனவும் காட்டிலெனவும் தூரத்திலெனவும் மதிக்கின்றோம். இது உண்மையாகத்தக்கதே யொழிய பொய்யாதற்கில்லை. காரியத்தைக்கண்டு காரணத்தை நிச்சயிப்பதை பகுமானமாகக் கொள்வதுபோலக் காரணத்தைக் கண்டு இனியுண்டாம் காரியத்தை நிச்சயிப்பதை சிலர் அர்த்தாபத்தியாகவுஞ் சிலர் அனுமானமாகவுங் கொள்ளுகின்றனர். சாமானியமாகிய சாதகத்தையும் அனுமானமெனச் சிலர் கொள்கின்றனர். இவைதப் போலப் பிரமாணங்கள் பல்வடிவப் பொருள்களைக் கிரகிப்பனவாக்குக் க்காகி மூடியில் பாலைத்த வானரமென்னும் மனிதனுடைய தென்பதையும் கடவுள் பிருகாதிகளை உண்டாக்கிய வகையைச் சொல்லாமல் அருபியாகிய கடவுள் மண்ணால் ஆகாசமெல்லாம் நடித்த ஆவியை கதியெழுப்பி அவனைத் தூக்கவைத்து அவன்

[illegible]லும்பைப் பிடுங்கி ஏவாளைச் செய்தார் என்று சொல்லும் கிறிஸ்து மஹம்மது மதத்தினர் வார்த்தையும், பிரஜாபதியென்னும் பிரமன் பெண்ணுடன் கலவாமல் மரீசுமுதலியோரை ஒரு கற்பத்திலும், மற்றொரு கற்பத்தில் பிராமணனை முகத்திலும், க்ஷத்திரியனைப் புஜத்திலும், வைசியரைத் தொடையிலும், சூத்திரரைப் பாதத்திலும் உண்டாக்கினுரென்றும், மற்றொரு கற்பத்தில் இவன் விஷ்ணுவின் நாபிக்கமலத்தினின்று உண்டாகினுனென்றும் கூறுமவற்றை எந்தவிதத்தாலறிய விடமிருக்கின்றது. இன்றியமையாத காரியத்தின் பிரத்தியக்ஷத்தால் காரணத்தை யூகிப்பது அல்லது மதிப்பது அனுமானமாகின்றது. இவ்வனுமானமும் அனுபவ திருஷ்டாந்தத்தால் கொள்ளத்தக்கதாகின்றதன்றி அனுபவமில்லாத திருஷ்டாந்தத்தால் கொள்ளத்தக்கது ஆகின்றதில்லை. (அடுக்களையில்) அஃதாவது அடுப்பில் ஈரவிறகின் சையோக சம்பந்தத்தால் நெருப்பில் அதிக புகையுண்டாவதை அனுபவித்திருக்கின்றோம். இதனால் புகையுண்டாகித் தோன்றுமிடமெல்லாம் நெருப்புண் டென்று மதிக்கின்றோம். இதைப் போல மழைபெய்வதையுங் கண்ணால் பார்த்திருக்கிறோம். வெள்ளப்பெருக்குண்டாவதையும் அறிந்திருக்கின்றோம். அதனால் ஆற்றில் வெள்ளத்தைக் கண்டபோது அவ்விடத்து மழையில்லாதிருந்தும் தூரத்திற் பெய்திருக்கிறதெனவும் காட்டிலுள்ள பொருள்கள் கலந்திருத்தலால் காட்டிற்பெய்ததெனவும் கணிக்கிறோம். அப்படிக்கு எழுவகைத்தோற்றத்துள் ஒருபொருளையாவது மேற்கூறிய இயற்கையின் கொள்கைப்படியாவது, செயற்கையாராகிய சிருஷ்டியாரின் கொள்கைப்படியாவது, திருஷ்டாந்தம் ஒன்றுண்டாக யாம் பார்த்திலோம். அறுவகைத் தோற்றப் பொருள்யாவும் பரம்பரையாக உண்டாவதையே அனுபவமாக வறிகின்றோம். மனிதருக்கு மனிதரும், மிருகங்களுக்கு மிருகங்களும், பட்சிகளுக்குப் பட்சிகளும், ஊர்வனவற்றிற் கூர்வனவும், நீர்வாழ்வன வற்றிற்கு நீர்வாழ்வனவும், ஸ்தாவரமெனும் செடி பூண்டு புல்லாதிகளுக்கு அவைகளும் உண்டாகவறிகிறோம். அல்லாது வேறுவகையாகவிளைவதற்கு ஒரு திருஷ்டாந்தம் எங்குமெக்காலத்திலும்பெறுகிறோமில்லை இனிப்பெறவு மாட்டோமென்பதே துணிவு. சீடனே! சொன்னவற்றையே பலமுறையும் சொல்லி வருவது அப்பியாசத்திற்காகவும் வற்புறுத்துவதற்காகவு மெனநினை. முக்கியமாகிய ஒன்றை

யழுத்திப் பாராத தோஷந்தானே அனேக விபரீதத்திரமங்களுக்கிடந்தருகின்றது. இப்படி யநுபவமிருக்கச் சிருஷ்டியல்லாது சுபாவமென்போர் நூல்களையும் கொள்கைகளையும், சொற்களையும், நம்பி விருதாகந்தாசாரங்களை மேற்கொண்டொழுகலால் மூடத்தனம்முற்று மல்லது நற்பிரயோஜனம் ஓர் பொழுதுமுண்டாகவிடமில்லை யெனநம்ப விடமிருக்கின்றது.

இஃதிருக்க; உள்ளது எங்களுக்குத்தெரியாதா? உள்ளதைச் சொல்வதிலும் அநுஷ்டிப்பதிலும் என்ன விசேஷணப்பிரயோஜனமிருக்கின்றது. இல்லதைச் சொல்வதும் அநுஷ்டிப்பதும் தானே சாமர்த்தியமும் சிலாக்கியமும் ஆகும் எனக்கூறும் அன்மார்க்கருக்கு வேண்டுமானவரை பிரயோஜனம் மேற்சொல்லிய கொள்கைகளிலிருக்கலாம். உற்றது சொன்னால் அற்றது பொருந்து மென்னும் அநுபவவசனத்தை ஆப்தர் வசனமாகக் கொள்வோர்க்கு அவற்றால் பிரயோஜனம் சிறிது முண்டாகாதென்பதே துணிவுரையாம். இதன்றிப் பிரத்தியக்ஷம் அநுமானம் என்னும் இரண்டுபிரமாணங்களே யுண்மையோ? வேறின்றோ? மூன்றாவதாகிய உவமானப்பிரமாணத்தையும் அங்கீகரிக்கவேண்டும். ஏனெனில் நாம் நமது பிறப்பை யறிவோம். இன்ன தந்தைக்கு இன்ன தாய் பெற்றனளென வரையறுத்துக்கூறமுடியாது. தாய் சொல்லத் தந்தையையும் ஊர்சொல்லத் தாயையும் மற்றக்குழந்தைகள் பிறப்பதைப்பார்த்து, நமது பிறப்பையும் நிச்சயிக்கிறோம் ஆகையால் உவமானமும்வேண்டும் எனக்கூறுவோர் சிலருளர். எதையும் நாம் கொள்ளத்தான் வேண்டியது. கொண்டாலும் அநுபவத்திற்கு ஒத்ததாக இருத்தல்வேண்டும். இவ்வுவமானப்பிரமாணமும் பிரத்தியக்ஷப்பிரமாணத்தின் பேதத்தில் அடங்குவதாகவிருக்கின்றது. எங்ஙனமெனில் கவையமாவை அறியாதவன் காட்டில் வசிப்பவனாகிய வேடனுடைய சொல்லால் கவயமா காட்டில்வாழும் பசுவைப்போன்று அலைதாடியும் பிளவுபட்டக் குளம்புமுடைய தெனக்கூறக்கேட்டு அதை யறியவிரும்பினோன் காட்டிற் றேடிக்கவயமாவெதிர்ப்பட்டபொழுது அதை இது காட்டுப்பசுவாகத்தான் இருக்கவேண்டுமென்று வுணருகிறான். இவ்வுவமானப்படி தேவர்களை அல்லது உலக சிருஷ்டியைச் சிருஷ்டிகர்த்தாவைப்பெறுதற் கிடமுண் டென்கைகூடாது. உலகிலுள்ள உவமானப் பொருள்களின் காட்சி யநுபவத்தால் உலகிலுள்ள உவ

## [illegible]

[illegible] களின் [illegible] இடமும் [illegible] சொல்லா [illegible] பெறுவர் [illegible]

இனிச்சிலர் சப்தப்பிரமாணமும் உண்மையாதலால் கொள்ளத்தக்கதென்பர் இதுவும் உண்மையே. வார்த்தைகளே சர்வமுக்கிற்கும் ஏதுவாகின்றன. அரசாணையும் வார்த்தையே; ஆப்தன் சலிப்பித்தாற்றுள் அரசாங்கம் நிறைவேறிவருகின்றது. சர்வசாத்திரங்களும் வார்த்தைகளே; வாழ்த்தும் வார்த்தையே; வசையுமதுவே. சொல்லென்பது மந்திரம் தந்திரம் பொய்யென மூவகைப்படும். மந்திரமென்பது சத்தியவசனமாம். தந்திரமென்பது வெட்டெனப்பேசாமல் உண்மையை வெளியாக்கவும், பொய்யை மறுக்கவும் ஏதுக்காட்டிப் பேசுதல். பொய்யோ அசம்பவத்தைச் சம்பவமாகக் கற்பித்துக் கொண்டுரைப்பது. ஆனால் வார்த்தைகளினால் சம்பவமும் அசம்பவமும் சொல்லக்கூடும். ஆப்தனுரையாயினும் அசம்பவ வார்த்தைகளை ஆட்சேபிக்க விடமுண்டாவதால் எல்லா வார்த்தைகளையும் பிரமாண மெனக் கொள்ளல் தக்கதாகாது. எப்படியெனில் இதற்கோர் உதாரணம் சொல்வாம். இரண்டு வர்த்தகர்களின் புத்திரர்கள் திரவியம் எடுத்துக்கொண்டு தேசாந்திரம்போய் வர்த்தகஞ்செய்து பணஞ் சம்பாதிக்கச் சென்றார்கள். அவர்களிலொருவன் தேசாந்திரத்தில் வெகுகாலம் வியாபாரம் செய்து அதிக திரவியமுடையவனாகிமிக்கப் பெருமையடைய நினைந்து, அவிவேகிகளின் சகவாச மதிகரிக்கச் செய்துகொண்டு அவர்களின் கூட்டுறவால் மதுபானம் மாம்ஸ பட்சணம் விபசாரம் முதலிய வியாபாரத்துறையில் பிரவேசித்து கோரரோகத்தையும் தரித்திரத்தையும் பாவத்தையும் பகையையும் பயத்தையும் மென்மேலுமீட்டித் துன்பமனுபவிக்கவாற்றாதுத் தற்கொலை செய்துகொள்ளத்தக்கவிதியிலமர்ந்தான். மற்றொருவனோ செட்டிக்குரிய வழியினின்று நியாயமாக நிறைகோல் [illegible] பேசி, சூது, வஞ்சனை, [illegible] முதலிய துர்க்குணங்களில்லாது [illegible] வாக்கிற்சிறிது [illegible] வியாபாரஞ்செய்து ஆதாயத்திற் சிறிதுஞ்செலவு செய்யாது [illegible] கேற்ற செலவாகத் தானதருமாதிகள் மேற்கொண்டு புசித்துவந்தான். இப்படிச் சிலகாலம் அதிகம் விருத்தியின்றிக் [illegible] படிப்படியாகத்தன் ஜீவனத்தைக்காட்டிலும் அதிக

திரவியவந்தனுகினன். பூர்வம் தன்னையடுத்த வர்த்தகச் சினேகிதனை வஞ்சித்த வஞ்சக நண்பர் சிலர் இவனையுமடுத்துத் துர்ப்போதனை செய்யத் தலைப்பட்டபொழுது இவன் அவர்களுக்குச் சிறிதும் இடந்தரானுகி நல்லோரோடு பழகி நற்கல்வி கற்று நற்கேள்விகளால் நிரம்பித் தெய்வ உண்மையையும் பூததயையும் பச்சாத்தாபமும் உடையவனுய் யாவர்க்கும் உபகாரனுகி மிக்கபுகழும் சம்பத்தும் நாகரீகமும் சொல் நாணயமும் மதிப்பும் ஆகிய இவைகளைப் பெற்று மிகவும் விருத்தி யடைந்துகொண் டோங்கினன். முன்னொருவனைக் கெடுத்த வஞ்சகரில் சிலர் இவன் தமக்குடன்படாமையை யறிந்து இவனைத் தீங்கினுட்படுத்த பல பிரயத்தனப்பட்டும் முடியாமையால் முடிவில்இவன் தந்தையிடஞ்சென்று நும் புதல்வன் துராசாரபிரவிர்த்தியால் வியாதியஸ்தனுகி இரண்டொரு தினங்களுக்கு முன் மரணமடைந்தான் என்று தெரிவித்தார்கள். அவர்களே இறந்தவனது தகப்பனிடம்போய் உமது புத்திரன் மிக்க சம்பத்துடையவனுகி நல்லோர் சவகாசம்பெற்று மிக்க கீர்த்தியும் புண்ணியமும் சம்பாதித்து வாழ்கின்றுனென அறிவித்தார்கள். இன்னோர் சொற்களால் புத்திரனை யுடையவன் சோகத்திலும் புத்திரனை இழந்தவன் சந்தோஷத்திலும் ஆழ நேர்ந்தது. உயிரோடிருப்பவனுடைய தந்தையைப் பார்த்து ஐயா! நீர் மிகு புண்ணிய சாலியாகையால் உமக்குப் பகவான் ஆயுளும் கீர்த்தியும் பெறுக ஆசீர்வதித்திருக்கிறுர். அதனுல் நீர் தனதானிய வஸ்து வாகனுதிகளால் நிரம்பப் பெற்றவராகி எம்போலிய சாதுக்களையும் ஏழைகளையும் இரக்ஷித்துவருகிறீர். ஐயோ! என்ன பூர்வவினையோ? தங்கள் புதல்வன் எம்போலிய பெரியோர் சொல்லும் நற்போத நல்லொழுக்க நல்லாசார நற்சகவாசமாதிகளை வெறுத்து லோக விரோதியாய் மரணமடைந்தானென்றுசொல்லி அவனிடத்திற் சிறிது சன்மானமும் பெற்று இறந்தவனுடைய தந்தையிடத்திலும் இவ்வாறே அவனையும் அவன் மகனையும் புகழ்ந்துகூறி மகனிடம்பெற்ற சன்மானுதிகளைக் காட்டி இவனிடத்தும் சன்மானம் பெற்றுச் சென்றனர். இதனுலே சொல்லுகிறவர்கள் வார்த்தையாவும் மெய்ப் பிரமாண மாகுமா? அவரவர்கட்குத் தக்கபடி சொல்லி நயத்திலேனும் பயத்திலேனும் பணத்தைச் சம்பாதிப்பதும் சுயாலங்கோருவதும் புத்திசாலித்தன மாகுமல்லாது எப்பொழுதும் வெட்டெனப்பேசுதல் ஆகாது எனக் காலங்கழிப்ப

வர்கள் உலகிற் பலராகையால் அவர்கள் மொழிபிரமாணமாகாது. ஆராய்ச்சியில் அநுபவ விருத்த மில்லாமல் சரிப்பட்டு வரும் வசனங்களே ஆப்தவாக்கியங்களாம். அவ்வாறு சரிப்பட்டு வாராத வாக்கியங்களெல்லாம் அபலசுருதியே யாகுமல்லது மஹா வாக்கியங்களாகா. பொய்யும், வஞ்சகமும், மோசமும், துராசையும், துராசாரமுமே ஆகியொழியும். இவ்விதமாகப் பார்க்கில் புராணாதி எவ்வித நூல்களிலும் கூறப்படும் வாக்கியங்களில் அநுபவவிருத்த மில்லாதவைபிரமாணமாகுமே யொழியமற்றவை யாகா. யுக்தி அநுபவத்திற் கொவ்வாத யாவும் அபூதம், குறிப்பேற்றம், விபரீத உருவகம், அல்லது உருவகம் முதலிய அலங்காரங்களால் கற்பிக்கப்பட்ட கதைகளாகும் எனக்கொள்ளவேண்டுமல்லாது உண்மையாக நடந்தவைகளெனக் கொள்ளலாகா. இச்சப்தப்பிரமாணத்தில் சம்பவத்தை யல்லது அசம்பவத்தை அங்கீகரிக்க நியாயமில்லை. ஏனெனில் "தர்மசாஸ்திர ரதாரூடா வேத கட்க தாரத்விஜா, க்ரீடார்த்த மபியம் ப்ரீயூஸதர்ம பரமாஸ்மிருதம்" என்னும் பராசரஸ்மிருதியின்படி இககாலத்திலும் நடந்து கொள்வது மூடத்தனத்திலும் மூடத்தனமாம். சிலர் பெரியோர்கள் நியாயமில்லாமலேதையுஞ் சொல்லார்களெனவும், சொல்லியிருந்தால் மனுநீதி முதலிய தரும சாஸ்திரங்களை முன்னுள்ள எல்லாப் பண்டிதர்களும் அரசர்களும் அங்கீகரித்து நடந்தும் நடத்தியும் வந்திருப்பார்களா எனவும், அவைகள் எப்படிக்கற்பனை அலங்காரக் கதைகள் ஆகுமெனவும் முன்னவற்றை யங்கீகரித்தவர்கள் எல்லாம் புத்தியிற் குறைந்தவர்களா எனவும், அவர்களிலும் நாம் புத்திசாலிகளோ எனவும் கேட்கலாம் இது ஆராய்ச்சியில்லாத மூடக்கேள்வியே யல்லது வேறல்ல. ஏனெனில் உலகில் மூடராய், துஷ்டராய், கொலைப்பாதகராய், இருந்தவர்கள் இறந்து போவார்களாகில் அவர்களை எல்லாம் கற்பித மந்திர தந்திர தலைதிவசாதிக் காரியங்களால் பிதுர்தேவதைகள் ஆகினார்களெனவும், பெரியோர்களெனவும், கொள்ளக் கற்பிக்கும் வரும்படிக்காதாரமாகிய வஞ்சகக் கருமானுஷ்டான வழக்க மிகுதியாலும் இவ்வித வழக்கங்களைக் கண்ணாற் காண்பதாலும் கேட்பதினாலும் உண்டாகிய மூடப்பழக்க முதிர்ச்சியால் யாவும் நியாயமாகக்காணப்படுவதே யன்றி ஆராய்ச்சி நியாயத்தால் கொள்ளப்படுவது அல்ல. எங்ஙனமெனில் இந்துக்களில் பெரும்பா

லார் வேதத்தில் பிர்ம்மோபநிஷத் சொல்லுகிறபடி "ஜாகரி தேபிர்மா, சொப்னே விஷ்ணு, சுழுப்தௌ ருத்ரஸ், துரிய மக்ஷரம்" என்னும் வாக்கியத்திற் கிணங்கப்புராணாதிகளுக்குந்தத் வார்த்தங் கொள்ளாது ஜடலோக சம்பந்த ஜடதேக முடைய ஏக தேச உருவப்பொருள்களாக மும்மூர்த்தியாகிய தேவர்களைக் கொண்டு நடந்துவருவதாலும் அதனோடு சிவன் பார்வதியாருக்கும் விஷ்ணுவிற்கும், விஷ்ணு பிரமனுக்கும் கருடனுக்கும், பிரமன் நாரதனுக்கும் அங்கிரஸாதிகளுக்கும், சுப்பிரமணியர் சிவனுக்கும் அகஸ்தியருக்கும், விநாயகர் பார்வதிக்கும் பார்க்கவருக்கும் போதித்ததாகஎவ்வித நூல்களையும் கற்பித்துக்கற்பித்த மனிதர்களாகிய தங்கள் பெயரை நூற்களிற் காட்டாது விடுத்து வழங்கி வருவது வழக்கமாகையால் முன்னோர்கள் நம்மினும் மூடர்களா வென்று கேட்க விடமுண்டாகின்றது. வேறு காணோம். சப்தத்தாற்கொள்ளப்படும் லௌகிக வைதிக பாரமார்த்திக சாம்பிரதாய அர்த்தங்களில் யுக்தி அனுபவங்களுக்கு விருத்தமாகக் காணப்படும் வார்த்தைகளை அங்கீகரிப்பது அஞ்ஞானமாகு மல்லாது ஐயந்திரிபறக் கற்ற கல்வியும் நற்கேள்வியுமாகிய ஞானமாக மதிக்கவிடமில்லை "அறம்பொருளின்பம்வீ டடைத னூற்பயனே" என்பதனால் இந்நான்கும் எம்மனிதனும் இம்மையில் அடையத் தக்கதேயல்லது வேறிடத்தடைவது ஓர்போது மமையாது. தன்னைப்போலவே பிறரையும் பாவித்து வஞ்சனையாதிய செயல்களற்றுப் பொருளீட்டலே அறமும் பொருளுமல்லாது அந்நிய தருமம் கிடையாது. தம் பொருளைப் பிறர்க்குக் கொடுப்பதன்றோ தருமம் என யாவரும் மதிக்கின்றார்க ளென்பையாகில் முதலிற் றருமத்தையும், அதன் பின்னர்ப் பொருளையும், பின்னர் இன்பத்தையும், வீட்டையும் கூறுவதெற்றிற்கு? பொருளீட்டாமுன் பொருளால் எப்படித் தருமம் செய்யவியலும்; ஆகையால் பிறர் பொருளைத் தம்பொருட்போலவும், பிறர்துன்பவின்பங்களைத் தன் துன்பவின்பங்க ளாகவும் எண்ணி "மனத்துக்கண் மாசில னாதலனைத்தறம்" என்றபடியும் "பிறன்மனைப் புகாமை யறமெனத்தகும்" என்றபடியும், இரக்கமும் பொருமையின்மையு முடையனாகி வாழப்பழகுவதே அறமாம். அநியாயத்திற் பொருளீட்டி அரும்பருக்கு வாரிக்கொடுத்துச் சோம்பேறிகளையும் வேஷதாரிகளையும் வேடிக்கைத் தெய்வ விநோத கயிங்கரியங்களிற் புகவிடும்

யிர்களையுங்காப்பதுதருமமாகுமா ஆகாதென்பதே ஐயமில் காட்சி. இனி இன்பமென்பது கருத்தொத்த மனையாட்டியோடுவாழும் வாழ்க்கையல்லாதுவேறெனலாகா. இதனையே சிற்றின்பமென்பர். மேற்சொல்லியஇவற்றின பொய்ம்மையையுணர்ந்துதனுகரண புவன போகங்களிடத்து அபிமானம் விட்டிருக்கையே பேரின்ப வீடென்னலாம்.''ஒருவன்:இவையாவும் இம்மையிற்றானே அடையக்கூடியனவாகவிருக்கப் பஞ்சபூதங்களினுருவமாகத்தோற்றும் இப்பிரபஞ்சத்திலும் பேரின்ப சிற்றின்பங்களுக்கு வேறு உலகம் ஏற்றல் எதற்கோ? அறியாமை கல்வியறிவின்மையோடாராயாமைகளின் வலியால் சாஸ்திரார்த்தங்களை விபரீதமாகக்கற்றுங்கேட்டும் நடந்தும்நடத்தியும் வந்தபழக்க ஆதரவால் அன்றிவேறுதாரம் ஒன்றுங்காணேம்.புராணங்களிற் சொல்லப்படும் பிரமன்,விஷ்ணு,ருத்திரன் மகேசுவரன் சதாசிவாதிகளும் இவர்களின் மனைவிகளாகியசரஸ்வதிஇலக்குமி பார்வதி முதலியசத்திகளும்,சிவனின்குமாரர்களாகிய விநாயகர் சுப்பிரமணியர் வீரபத்திரரும், விஷ்ணுபுத்திரர்களாகிய பிரமன் மன்மதனும், இவர்கள் பத்தினிகளாகிய சித்தி புத்தி, வள்ளி, தெய்வானை, இரதிதேவி, சரஸ்வதி முதலியோருர், பூமாதேவி, கங்காபவானி, அக்கினிபகவான், வாயுபகவான், ஆகாயவாணி, சூரியபகவான், சந்திரபகவான்,வனதேவதை, கிராமதேவதை, காட்டேரி, மலைக்காத்தான், இருளன், இருசி, பாவாடைராயன், நொண்டிவீரன், சங்கிலிமுனியன், புறக்கடைச்சாமி, பேய், பூதம், பிரேதம், பூவாடைக்காரி, மதுரைவீரன், அஷ்டதிக்குப்பாலகர், அஷ்டவசுக்கள், இவர்களோடு தேவேந்திரன், கருடர், கந்தருவர், சித்தர், வித்தியாதரர்கள், முதலாயினோர் மனிதரைப்போலக் காலுங் கையுமுடையராகி என்று மிருப்பவராக நினைப்பது அதிசயமாக விருக்கிறது. ஏனெனில் இவர்கள் எங்கிருந்து எவர்க்கும் நன்மை தீமைகளைச் செய்கிறார்களென்று பார்த்தால் பிரத்தியக்ஷமாகக் கண்ணிற்கெல்லுங்காணப்படாதவர்களாகி நாமமாத்திரமாகக் காதால்கேட்கப்படுபவராகவே இருந்து எல்லாஞ் செய்பவர்களாகவே யிருக்கிறார்கள். தேவர்களெல்லாம் மருள் கொண்ட மங்கைமணாளர்கள் மீது ஆவேசங்கொண்டாவிர்ப்பவித்துத்தமக்காகவேண்டியவைகளை வாங்கிப் புசிக்கிறார்களலது மயக்கமற்ற புண்ணியவதிகள் புண்ணிய புருடர்கள்மீது ஸ்வாமிகள் ஆவேசங்கொண்டாவிர்ப்பவிக்கிறார்களில்லை. அன்றிக் கீழ்மூல

கம் மேலேழுலகமென்றால் இவைகளை நாம் கணிப்பதெப்படி? வேதமானது கண்ணெதிரிற் காணப்படும் பூத பௌதிக உலகத்தையே இப்பி வெள்ளி, கயிற்றுப்பாம்பு, கானல்ஜலம், கந்தர்ப்பநகரம், கனவூர், முயற்கோடு, மலடிமகன்போன்று பொய்யாகத் தோற்றுகிறதெனக் கூறுமானால் காதாற்கேட்ட உலகங்களின் கதி யாதாகவிருக்குமென வெண்ணலாம். சிடனே! இவ்வுலகம் இயற்கையென்னும் சுபாவவாதிகள் வழக்கிற்கு இணங்கப் பாம்பரையின்றி மனிதர், விலங்கு, பறவை, நீர்வாழ்வன, ஊர்வன, ஸ்தாவரம் எனும் அறுவகையில் ஒன்றையேனும் அறுபத்து நான்கு பூதங்களினெல்வற்றைச் சேர்த்தேனும் உண்டாககிக் காட்டும்வரையிலும் அநுபவமில்லாத வீண்வாதமென அவர்கள் வார்த்தையைத் தள்ளிவைப்பதே நியாயமாகும். அதைப்போன்றே முதலுளில் வானம் பூமியும், ஏழாம்நாளில் சூரிய சந்திரர்களையும், தன் சாமர்த்தியத்தைக் காட்டவென்று ஓரேதுவுமின்றி உலகைப் படைத்த சிருஷ்டிக் கர்த்தரையும் மேற்காட்டிய பிரத்தியக்ஷப் பிரமாண அறுவகைப் பரம்பரைக்கு விருத்தமாக ஒன்றுண்டாக்கிக் காட்ட யாம் பார்க்குமளவும் தள்ளிவைக்க வேண்டியதே விபரீத மில்லாத புத்திசாலித் தனமாகும். அன்றாக்கியவர் இன்றாக்க வலியிழந்திருப்பரா? அன்று தன் சாமார்த்தியத்தைக் காட்டப் பிரையாசை எடுத்துக்கொண்டவர் இன்று எடுத்துக்கொள்ளாராயின் இற்றைவரைப்பெற்ற மகிமையை இனிச்சிறிது சிறிதாக இழப்பவராகவேமுடிவார்; ஆகையால் இத்தகைய அநுபவமில்லாக்கற்பனா மூடக்கதைகளின் குப்பையைச் சத்தியவேதம் எனவும்சத்தியமார்க்கமெனவும் சொல்வோரை நாம்விவேகமில்லாரில் ஒருவராக விலக்கிவைப்போமாக. இனி விஷ்ணுவின் நாபிக்கமலத்தினின்று பிரமனும், பிரமனது சரீர அவயவங்களிலிருந்து சப்தரிஷிகளும் அச்சப்தரிஷிகள்பாலிருந்து உலகம் உண்டானதாகச் சொல்லப்படுவதை யோசிக்கில் இதில் பாம்பாநியாயம் ஏற்படுவதால் இக்கிரமச்சிருட்டியைச்சிறிது ஒப்பலாம். ஆனாலும் பிரபலதோஷத்திற்கும் ஆக்ஷேபனைகளுக்கும் இடமில்லாதிருக்கவில்லை. ஏனெனில் ஜீவபிண்டோற்பத்தி யாவும் பெண் வடிவவியக்திகளினின்றுஉண்டாகப்பார்க்கிறோமேயல்லது ஆண்வடிவத்தினின்று உண்டாகக்கண்டாம் இல்லை. இப்படியிருக்க விஷ்ணுவின் புத்திரனாகிய சதுர்முகப்பிரமன் முகத்திலிருந்தும், மார்பிலிருந்தும், தொ

டைகளிலிருந்தும், பாதத்திலிருந்தும், பெருவிரலிலிருந்தும் உண்டானதாகக்கூறுவது அநுபவசித்தமாகவிருக்கவில்லை. அன்றியும் நிரீச்வரசாங்கிய பௌத்தாதிகளாகிய சுபாவவாதிகள் அந்தப்பிரமனும் விண்டுவும் எப்படி வந்தார்களென்று வினவும் வினவிற்கு விடையைக்காணோம். அன்றிப்பிரமன் பாதப்பெருவிரலிற் பிறந்த தட்சப்பிரஜாபதி பிராமணனாகவிருக்கப் பாதத்திற் பிறந்தவர்களெல்லாம் சூத்திராராகக் காரணமென்னையோ வெனில் ரிஷிமூலம் நதிமூலம் விசாரிக்கலாகாதென்பர். இப்படியே விண்டுவிலிருந்தும் பிரமனிலிருந்தும் உருத்திரனிலிருந்தும் பிரகிருதியாகிய சத்தியிலிருந்தும் உலகமுண்டானதாக பலநூற்களில் பலவிதமாகச் சிருஷ்டிகள் கூறப்படுகின்றன இச்சிருஷ்டியும் மதங்களும் மனிதருள் பலஜாதிகள் பிறந்திருப்பது போலவே நியாயமின்றி அநியாயத்தால் பிறந்திருக்கின்றனவென்பதிற் சந்தேகமில்லை. சூரியன் புத்திரனாகிய இயமன், சனி, சித்திரகுப்தன், சூரியகுலத்தரசர்கள், அசுவனி தேவதைகள், இவர்களின்கதை அதிசயோக்தியாகச் சொல்வோர்க்கு மதியில்லையாயினும் கேட்போருக்கு மதியில்லையாவென்னும் பழமொழியை நினைப்பூட்டுவதாக விருக்கிறது. சந்திரவம்சமும் பஞ்சபாண்டவர்களின் பிறப்பும் முன்னெடுத்தாண்ட பராசரஸ்மிருதியின் பாட்டுக்கேற்க சொன்னகதையாகவேற்கலாமேயல்லது வேறெந்த நியாயத்தாலும் ஏற்கத்தக்கதாகாது. அன்றி அரவிந்தம், அசோகம், சூதம், மல்லிகை, நீலோற்பலம் என்னும் ஐவகை மலர்களைப் பாணமாகவும், கரும்பை வில்லாகவும், சுரும்புகளை நாணியாகவும் தென்றலைத் தேராகவும் கிளிகளைப் பரிகளாகவும், சந்திரனைக் குடையாகவும், மங்கையர்களைச் சேனையாகவுமுடைய மன்மதன் விண்டுவின் புத்திரனாகி மனோராச்சியஞ் செய்விக்கும் அதிகார ஆக்ஞா சக்கர முடையவனும் அங்கதேசத்தில் யௌனபுரியில் வசித்து, ஓர்காலத்தில் ஈசுவரனால் தகனம்செய்யப்பெற்று யாவர்கண்ணுக்கும் விளங்காது ரக்திதேவியின் கண்ணுக்கு அழகனாக மீண்டெழுந்து தோன்றித் தேவர்முதல் யாவரையும் வென்றுவருகிறானெனப் புராணத்திற் கூறப்படுமானால் இது விபரீத உருவகம் செய்தோதிய கதையாமெனக் கொள்ளா திருக்கத்தக்க சமாதானம் என்னையோ? சித்தஜன் - சித்தத்திற்பிறந்தவன், அங்கஜன் - அங்கத்துதித்தவன், மன்மதன்-மனதைச் சிதறவிடுபவன், அனங்

ஆண் - பெண்ணாண் வடிவமனிதர் விலங்குகள் பறவைகள் முத லியவைகளின் தேகமல்லாது தனக்கென ஓர் பிரத்தியேக அங்க மில்லாதவனெனப் பொருள்படுவதல்லாது வேறாகிய பதார்த்தங் கொள்ள விடந்தருமோ? புராணத்திற் கூறிய மன்மதன் இவ்வா றாகிய பொழுது அவனைத்தந்த விண்டுவும் சகோதரனாகிய பிரம னும் அவனை எரித்த ஈசுவரனும் மனிதர் முதலிய உயிருள்ளச்சரப் பொருள்களின் சரீரவாசியாகவிராமல் வேறிடத்திருக்கச்சாத்திய மாகுமோ? இதனாற்றானே வேதம் பிரமோபநிஷத்தில் "ஜாகரி தேபிரமா, சொப்பனே விஷ்ணு சுசுஷுப்தௌருத்ரஸ், துரிய மக்ஷரம்" எனக்கூறுகின்றது. அதுவே இருதயம், கண்டம், நாபி, நெற்றி என்கிற நான்கிடத்தும் சைதன்னியமென்கின்ற பிரமம் நான்கு பாதங்களாகித் திரிவிதச் சூத்திரமாகச் சரீரத்தி னிடமமைந் திருப்பதை யறிந்து உலகஞ் சிருஷ்டியெனு மாசை யை விட்டவனே பிராமணனென்பதை விளக்கி நிற்பதையறி யாது விபரீதார்த்தமாகச் சொல்லுக்கோர் பொருளாக இல்லாரை ஏற்படுத்திக் கொள்வது விபரீத புத்தியேயன்று. அன்றியும் அதே பிரமோபநிஷத்தில் இந்திரியம் பிராணபஞ்சகம் பிரதி பிம்ப சைதன்னியம் என்னும் திரிவித சூத்திர ரூபமாகிச் சரீரத் திடையுள்ள அந்தக்கரண தேசத்தில் மேற்சொல்லிய பிரமமே பிரவேசித்துழவுலகத்தோற்றத்தையும் சூத்திரமென்னும் நூலா னது மணிகளைக் கோத்துக்கொண் டிருப்பதுபோலக் கோத்துக் கொண் டிருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. இப்படிக் கோத் துக்கொண் டிருப்பதால் இதனையே ஏகரூப விதம் ஆக தரித் தவன் பிராமணனாகிறானெனவும் இச்சூத்திரத்தைப் பிரஜாபதி முதல் யாவரும் சகஜமாக ஆயுஸாகவும் சிரேஷ்டமாகவும் பலமாக வும் தேஜஸாகவும் கொள்ளப்பட் டிருக்கிறார்களெனவுஞ் சொல் லப்பட்டிருக்கிறது.

அன்றியும் இவ்வுலகம், லோகானுலோகா - உலகம் உலகமா காமலும், மாதானுமாத - தாய் தாயாகாமலும், தந்தை தந்தை யாகாமலும், மருகி - மருமகளாகாமலும், சண்டாளன், சக்கிலி, தபசி, சந்நியாசி முதலியோர் இல்லாமல் எவ்விடத்தில் காணப் படுகிறார்களோ அவ்விடத்தில் ("ஏகமேவ தத்பரம் ப்ரம்மம் விபாதி நிர்வாணம்") ஒன்றேயாகிய அது என்னும் பிரமம் நிர்வாண சொரூபமாக மோக்ஷசொரூபமாகப் பிரகாசிக்கின்றது.

னை, மேற்படி உபநிடதத்தில் கூறப்பட் டிருக்கின்றது, இதனால் உலகமும் உலகத்திற்கொள்ளும் பேதங்களும் பிராந்தியேயல்லாது, சிருஷ்டியல்ல வென்பது வெளிப்படையாகின்றது. அன்றியும் ("நேத்ரஸ்தம் ஜாகரிதே வித்யாகண்டே ஸ்வப்னக் ஸமாவிஸேத் ஸுஷுப்தௌ ஹிருதயஸ்தந்து துரீய மூர்த்நினி ஸம்ஸ்திதம்") ஜாக்கிராவஸ்தை நேத்திரத்திலும், சொப்பனாவஸ்தை கண்டத்திலும், சுழுத்தியவஸ்தை இருதயத்திலும், துரியம் கபாலத்தினிடத்திலும் இருந்து பிரகாசிப்பதாக மேற்படி உபநிடதத்திற்றானே சொல்லப்படுவதால் அயனரி யுருத்திரரோடு அக்ஷரப் பிரமத்தின் விளக்க விடங்களை அறியலாகின்றது. இதனால் பிரமனும் அவனுறையுளாகிய சத்திய லோகமும், விஷ்ணுவும் உறையுளாகிய வைகுண்டமும், உருத்திரனும் உறையுளாகிய கைலாயமும் சர்வ பௌதிக சரீரங்களிற்றானே உண்டென்பது சொல்லாமலே அமையுமல்லவோ? மும்மூர்த்திகளின் கதி இப்படியாயின் இந்திரன் முதலிய முப்பத்துமுக்கோடி தேவர்கள் எவ்விடங்களி லிருப்பவராவர்? இதன்றி மேரு, இமாசலம், விந்தியம், முதலிய அஷ்டகுல பர்வதங்களைப் பூலோகத்திற்கு ஸமகனத்திற்காகத் தேர்க் கச்சாணியைப்போல அமைக்கப்பட்டதாக உரைக்கப்படுகின்றது. அவைகளி லொன்றாகிய மந்திரகிரியை மத்தாக்கி, அஷ்ட நாகங்களிலொன்றாகிய வாசுகியைத் தாம்பாகக்கொண்டு பிணித்து, திதி புத்திரர்களென்கிற அந்தரவாஸ தேவர்களும், அதிதியின் புத்திரர்களாகிய அசுரர்களும் இருபுறமாக விருந்து திருப்பாற்கடலைக் கடையுங்காலத்தில் அதில் தேவாமிருதமும், விஷமும், ஜனித்ததோடு இலக்குமியும், இரதிதேவியும், சந்திரன், வெள்ளையானை, வெண்குதிரை, முதலியனவும் உண்டாயினவெனப் புராணங்களிற் சொல்லப்படுகின்றது. மூவுலகமும் உண்டுமிழ்ந்தவராகிய விஷ்ணு இலக்குமியையும், விஷ்ணுவின் புதல்வனாகிய மன்மதன் இலக்குமியின் உடன்பிறந்தாளாகிய இரதியையும் மணம் புரிந்துகொண்டார்க ளென்னின் இவ்விருவருக்கும் எந்த மன்மதன் மலர்ப் பகழிகளை எய்து காமசிந்தை யுண்டாக்கினானென நினைக்கலாம்? அவரவர்கள் சித்தத்தில் ஜனிக்கும் சித்தஜனன்றி வேறு சித்தஜனெனற்கு விடமுண்டோ? இது நிற்க; ஆராய்ச்சியில் வல்லவரும் புத்திசாலிகளுமாகிய தற்காலத்து வித்துவான்கள் தரையும் நீருமாய்த் தயங்கிச் சுழலும் விரிபூகோள மேற்பரப்பின் விஸ்தீர்ணம் ஏறக்குறைய இருபது கோடிச் சதுரமைல் என்

வும், குறித்துப் பார்க்கில் பத்தொன்பது கோடியே எழுபது லட்சம் சதுரமைலென வரையறுக்கின்றனர். இதில் திருப்பாற் கடலாதியைக் கண்டாரில்லை. இனி நெருப்பினும் காற்றினும், உருவற்ற ஆகாயத்தினும் திருப்பாற்கடல் உண்டெனக் கொள்ள ற்கு நியாயமுண்டாமோ? தரையினும் நீரினும் திருப்பாற்கடலாதிகளைக் கண்டிலமே இவற்றின்கதி என்னை யென்பாம்? சேஷ சமுத்திரம், ஆநந்தாம்புதி, விசாரசாகரம், ஸம்சாரசாகரம், வித்யா ரத்நாகரம், விரகவாருதி முதலியவைகளின் கதியடைய வேண்டுமல்லாது வேறுதற்கு இடம்பெறா. மேலும் எவ்வகை யுயிர்க்கும் தேகாதாரப் பொருள்களாகி நிற்பன விருக்ஷமாதிப்புற் கடையாய ஓஷதிகளன்றி வேறில்லை. ஓஷதிகளையிட்டே திருப் பாற் கடலைக் கடைய அமிர்தம் பிறந்ததாகச் சொல்லப்படுகின் றது. இவ்வோஷதி வர்க்கத்தில் பல பயிர்வகையாகி காணப்படு கின்றன. அவைகளெல்லாம், பூத்துக்காய்த்துப்பாலேறப் பெற்று மணியாகித்தானிய மாகின்றன வென்பதனுபவம். இத்தானியங்க ளினுற்றனை மனித மிருகாதிஉயிர்கள் சரீரத்தில் இரத்தத்தை யும் பூத்துக் காய்த்தீனுங்காலத்தில் பயோதரங்களிற்பாலும் ஏறப் பெறுகின்றன, என்பது பிரத்தியக்ஷம் இதன்றிக் கள்ளி, பாலை, வள்ளிஆதிய மரஞ்செடிகொடிகளும் பாலேறப் பெற்றவைகளா கக் காணப்படுகின்றன, மனிதராதி யோரிடத்தும், மிருகங்களி டத்தும், வெண்பாலும், செங்குறுதிப்பாலும்சரீரமுழுதும் நிறை ந்து நிற்கின்றன. இதைப்போலவே இனிமை இரசமாகிய இக்ஷு வும், சர்ப்பியும், புளிப்புரசமாகிய ததிகள் முதலானவைகளும். எள்ளாதிய சர்வபதார்த்தங்களிலும் நிறைந்து நிற்பதே யல்லாது இலவண நீர்க்கடலைப்போல ஏகதேசத்திருப்பனவல்ல வென்பது நிராக்ஷேபமாகுமல்லவா? திருப்பாற் கடலாதிகள் பௌதிகங்களில் அமைந்திருப்பின் தேவர், அரக்கர், இந்திராதியோர் வேறிட்டுத் திருப்பவராவரோ ? உணவின் சாரமாகிய பாற்கடலின் பாற்பட்ட மனமெனும் சாத்மீக மதியல்லாது ஈசன் தரித்ததாகச் சொல்லப் படும் மதி ஆகாயத்திற் காணப்படும் மதியாகுமா ? இவ்விரண்டை யும் விட்டு வேறு சந்திரனைத் தரித்ததாகச் சொல்லலமையுமோ? இராஜத, தாமத குணங்களை யேற்று அரக்கரும் தேவர்களும் ஆகும்தன்மையை யிழந்த சுத்த சத்துவமனந்தானே மூன்றாம் பிறைச்சந்திரனாகலாம். இதனையே நின்மலவிருத்தி யென் வெளி யெழுந் தொழுகுநிலையினர் நிகழ்த்துவரென்ப. இதுநிற்க அஷ்

[illegible]யின் அஷ்டகஜங்களாகவும், அவற்றின வன்மையே அஷ்[illegible]ங்களாகவும் அவற்றின் செய்கைகளின் கொடுமையின் [illegible] அஷ்டமாநாகங்களாகவும், கொள்ளற் கிடந்தருகின்றன. ஆதலால் அவற்றினும் வேறுபொருள்கள் உலகு இருப்பிற்கு ஆதாரமாக இருக்கக் காணவருமை. அஷ்டகஜங்கள் அஷ்டகுலபர்வதங்கள் அஷ்டமாநாகங்களுக்கும் அஷ்டமதத்திற்கும் சொல்லுவமை, குணஉவமை, செயலுவமை உண்டாயிருத்தல் உண்மையின் விபரீத உருவக அலங்காரமாகக் கொள்ளாது உண்மைப்பொருள்களாகக் கொளற்கிடமுண்டோ? அங்ஙனமே நிழலையும், சந்திரிகையையும் விரிப்பதால் சந்திரனைக் குடையெனவும் உருவகித்துரைத்தல் கூடாதோ? அற்றை நாளும் தொடர்ந்துப் பின்பற்றிச் செல்லும் சுரும்பும், முனையுடைமையாலும் வேதனையளித்தலாலும் மலர்களும் பாணங்களும், புடைபெயர்ச்சிப்பெறலால் தேரும் தென்றலும், ஒக்குமாதலால்உருவகித்தோதினுரென்னில் பொருந்துமாறு இல்லையெனல் எங்ஙனம்? ஆமலகத்தினுல் அருசிநீங்கப் பெற்ற நாவினிற்கு நன்னீரே இனிமைபயத்தலால் சுத்தோதகமே உருசையுடைய தென்பது மேலோர் கருத்து. அதனுல் நீராகிய விவர்த்த காரியப் பொருட்குஅதிஷ்டான காரணப்பொருள் விஷ்ணுவென்னும் பிரபலசுருதி பிரமாணவசனப்படி, ஜலத்திற் கதிஷ்டான தேவதையாகி நாராயணனெனப் படுகின்றுன். உபாதானகாரணப் பொருள் காரியப் பொருட்கு அவ்வியவகிதமாக நிற்கை இயல்பாதலால், விண்டு திருப்பாற் கடலில் உறைகின்றுனென்பதுபொருந்துகின்றது. சுத்தோதகமே பௌதிக சரீரங்களில் செம்மை வெண்மை வடிவபாலுருவங்களாகப் பரிணமித்தலால், சுத்தோதகமே பாலாகவும் முறையேததி, சர்ப்பி, இக்ஷு, சுரா, லவணமாகிய இளகல் பொருள்களாகப் பரிணாம மடைகின்றது. இவற்றினுல் எல்லா ஜீவதாவர வடிவங்கள்உண்டாக்கி போஷிக்கப் படுகின்றன. உலகில் என்றேனும் பாலாயினும், கள்ளாயினும், நெய்யாயினும் தயிராயினும், உப்புநீராயினும், சுத்தோதக மாயினும், இல்லாமற் போயதுண்டா? இல்லையே. இதனுலிவற்றை வற்றாச் சமுத்திரமாக உருவகித்த [illegible]? எழினகற் பொருள்களோ[illegible]ட்டாவதாகிய கடினப்பொருளாகிய மண்ணுங்கூடி தமிழில் அகர அகாரமாக வாகின்றது. இவ்வகலவாக்கியமே விஷ்ணுவாம். மண்ணாகிய பூதேவியும் அவற்றின் செல்வமாகிய ஸ்ரீதே

வியும், அவற்றின் பூர்வஸ்திதியே மூதேவியாகவும் உடைய சத்தனாகிய விஷ்ணு, திரிவிக்கிரமன், விராட் என்னும் நாமத்தை யுடையவனும் வார்த்தைக்கு முதலெழுத்தாகிய அகாரமாகக் குறிக்கப்படுகின்றான் என்பதிற்றடை என்ன? இதனாற் திருப்பாற் கடலாதிய உருவகித் தோதினவை எனற்குத் தட்டில்லையன்றே? இவ்விஷயம் நிராக்ஷேபமாகும் பட்சத்தில் புராணாதிகளில் அநேகம் அலங்காரக் கற்பனைகதைகள் இருக்குமென்பதிற் சந்தேகமென்னை? நாரவடிவாகிய நாராயணனென்னும் மாயாவியாகிய விண்டுவும், மாலையும் உலகசிருஷ்டிக்கு நிமித்தகாரணனாகிய மன்மதனைப் பயந்து, உயிர்களை மயக்கலால் சிருஷ்டியைச் செய்யும் பிரமனுண்டாகிச், சுரமெனச் சொல்லும் சத்தவடிவாகிய சரஸ்வதியின் துணையால் நாம, மாத்திரமாகிய தேவர்களையும், நாமரூபமாத்திரமாகிய திரவியம், குணம் கருமமென்னும் பாகுபாடுடைய த்ரை என்னும் வேதங்களையுண்டாக்கித் தோற்ற உலகுக்கு விவகாரவிதிகளை நிரூபிக்கிறான் எனவும், கொள்ளற்கிடமிருத்தலால் சப்தஸாகரங்களும் உருவகக் கற்பனையுட் படுவனவாக இருக்கின்றன. அல்லவெனில் புராணாதிகளால் ஸாகரங்களின் இருப்பிடத்தையும். சென்று, கண்டு, நிலைக்கத்தக்க மார்க்கத்தையும் இன்னவிடத்திற் கின்னதிசையில் இவ்வளவு மையில் அல்லது இத்தனை யோஜனை தூரத்தில் இருக்கின்றன வென்பதை அறிந்து, அறிவிப்பவராகக் கற்றிருப்பாரைக் கண்டிலம். கண்டார் காட்டாமைக்குக் காரணம்யாதோ காண்கிலம். இதுநிற்க! திருப்பாற்கடலைக்கடையுங்காலத்தில் நாடியாகிய வாசுகிபபாம்பு கக்கியவிடமானது, ஞானேந்திரிய கன்மேந்திரிய தேவர்களையும் அரக்கர்களையும் போகலோகங்களையும் தகிக்க வெழுந்தக் காலத்தில் சோம சூரியாக்கினி யென்னும், முக்கண்களையுடைய மூவவத்தைக்கு ஆதாரமாகிய பிரகிருதியென்னும் பெண்வடிவத்தேகத்தை அர்த்தாங்கமாகக் கொண்டவரும், வியாபகவிருத்தி ஞான வடிவாகி மாயாவியான பெண்ணாண்வடிவ பேததாரக்கங்களை விசும் ராஜஸ தாமஸ குணமிசிர சம்சாரமென்னும் ஜனனக் கடலிலாழாது, நிஸ்தரங்க ஆநந்தாம்புதி யென்னும் சுத்த சத்துவக்குணக்கரையில் உள்ளவரும், வெள்விடையாக மதிக்கும் பசுவென்னும் ஜீவனை வாகனமாக உடைய பரமசிவன், உலகங்களை இரதமாகவும், நான்கு வேதங்களைக்குதிரையாகவும், பிரமதேவனைச்சாரதியாகவும், விண்டுவைப்

[illegible]மாகவும்; மகமேருவை வில்லாகவும், ஆதிசேடனை நாணி [illegible]வும், கங்கையையும், பிறையையும், கொன்றையையும், மத்தத் [illegible]தையும், சூடிய ஜடாபாரத்தையும் கொண்டு, பூதப்ரேத, சாகினி, டாகினி ஆதிய குரூரப்பிரகிருதிகளும், இந்திரன் முதலிய தேவர் களும், சப்தரிஷிகளும், சேனைகளாகப் புடைசூழ நிறுத்தி, மும் மலமென்னும் அரண்களாகிய திரிபுரங்கள் நீறுபட சிறுமுறுவல் செய்து விசுவ, தைஜத, பிராக்ஞ னென்னும் திரிபுராதியரை தம் முருவிற் சேர்த்து, ஜீவன் முத்திதந்த பரமேஸ்வரன், விஷத் தையுண்டு யாவரையுங் காத்தருளி தேவர்க்கமுத முதவிச் செய் தனரென்பதை யாதாகக் கொள்ளலாம். இக்கதையை வேதாந்த மெய்ஞ்ஞான அர்த்தமாக நினையாது நடந்தகதையாகக் கொள் ளற்கு இடமுண்டோ? சொல்பவர்களுக்குத்தான் மதியில்லையானு லும், கேட்பார்களுக்கும் இல்லையா? பெயர்ச்சொல், வினைச்சொல் உரிச்சொல் வடிவாகிய வேதங்கள் உலகாகிய இரதத்தை பரி யாகி இழுத்துச் செல்லுதல் ஒவ்வுமோ? மேருவில்லாகவளைய சலனவிதிக்குட் படுமோ? தேராகவமைந்த உலகம் ஒன்றோ? பதி னன்கோ? புராணத்தால் விளங்கவில்லையே? ஒருலகம் தேராகில் ஒழிந்தவற்றைச் சுமந்தவர் எவரோ உணர்ந்திலம். பதினலு உலக மும் பார இரதமாகில் பரமனெரித்த முப்புரம் அவற்றின் பாற் படாதிருந்தனவோ? ஐம்பூத வடிவாகிய அகிலங்களெல்லாம் இரத மாகிய காலத்தில் அபவில் ஓர் பொருளிருத்தல் அமையுமோ? ஊகமுடைய சீடனே சத்தி, விநாயகன், பிரமன், விண்டு, உருத் திரன், மஹேசுரன், சதாசிவன், நமன் முதலியோரை முறையே பிரகிருதி, பிரணவம், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் காலம் என்னும் இவைகளுக்கு அதிட்டான தேவதைகளாகவும் மற்ற இந்திராதியரை இந்திரிய வந்தக்காணுதிகளுக்கு அதிட் டான தேவதைகளாகவும், இவர்களின் தோற்ற ஒடுக்கவிடத்தை விந்துவாகவும், விந்துவின் ஒடுக்கவிடத்தை நாதமாகவும், அத னெடுக்க விடத்தைச் சத்தியாகவும், அச்சத்தியி னெடுக்க விடத் தையே பரமசிவனுகவும் நூற்களிற் சொல்லப்பட் டிருக்குமாகில் ஒவ்வொரு தெய்வங்களுக்கும் யானை, குதிரை, சிங்கம் முதலிய வற்றின் முகங்களோடு, மனிதர்முகம்போன்ற முகங்கள் நான் கோடைந்தாறு இருப்பதாகவும், கைகள் நான்குமுதல் எட்டு பனி ரண்டு இருபதுவரை !இருப்பதாகக் கூறுங்கற்பனைக் கதைகளைச்

சத்தியமாக எப்படிக் கொண்டார்களோ? கொள்கிறார்களோ? ஆராய்ச்சி இன்மையாலும், வஞ்சகத்தாலும் சத்தியமாகக்கொண்டு நடக்தும், பிறரை நடப்பித்தும், பிம்பங்களை வார்ப்பித்தும், அவை கட்குப் பிரமோற்சவாதிகளை நடத்தியும் நடப்பித்தும், வந்த பழக்க வாஸனைப் பலத்தினால் முன்னோர்கள் நம்மினும் மூடரோ வென்று உண்மை உரைப்போரைக் கேட்க விடமுண்டாகிறது.

அங்ஙனமே விஷ்ணுவானவர் திரிவிக்கிரம வடிவமாகி மூவுலகத்தையும் தேவர்களுக்காக மாபலியிடத்தில் மூவடி மண்ணாக இறந்து, தனது அடியிலடக்கிக் கொண்டாரெனவும், அருச்சுனனுக்காக விராட்டு உருவமாகிய விஷ்ணு [வானவர் சர்வபுவனங்களும் தன்னுளடங்கப்பெற்ற வடிவமாகக் காட்டின ரெனவும், மோகினி வடிவாகி தாருகாவனத்து இருடிகளையும், சிவனையும், அரக்கர்களையும், கெடுத்ததாகவும், இன்னும் பலவிதங்களாக ஞாய விருத்தமாகவும், அசம்பா விதங்களாகவும் நூல்களில் கூறப்படுகின்றன. இவைகளை யெல்லாம் மெய்யாக நடந்த விஷயங்களாகக் கொள்ளவிடமில்லை. ஏனெனில் விஷ்ணு விராட்டுருவமான காலத்தில் பஞ்சபூதங்களும், அவற்றால் சமைந்துள்ள பௌதிக எழுவகைத் தோற்றப்பொருள்களும், இன்மையாகவாவது, அல்லது அவருருவத்தில் லயமாகவாவது, அல்லது அவ் விராட்டுருவ எல்லை கடந்த வேறிடத்திலாவது இருந்திருக்கவேண்டும், வேறிடத்தி லிருப்பதாகக் கொள்ளின் பஞ்சபூதமயமாகிய இப்பிரபஞ்சத்தின் வெளியில் ஓர்பஞ்சபூதமய வடிவனாகிய விண்டு விருந்ததாகக் கொள்ளல் வேண்டும். அப்படிக்காயின் தேவரினும் தாழ்ந்த மஹாபலியும், பிராமணரினும் தாழ்ந்த க்ஷத்திரியனாகிய அருச்சுனனும் காணப்பெறல் அமையாது. அன்றியும் வரம்பின்றிய ஆகாயத்தினும் வேறுபட்ட வெளியில் ஒருலகவடிவ விராட்டுருவ விண்டு இருக்கக்கோடல் அசம்பாவிதத்தினும் அசம்பாவிதமேயாகும்.

பிரிதிவிற் கதிட்டான தேவதை பிரமனென்வும், ஜலத்திற் கதிட்டான தேவதை விண்டு வெனவும், நெருப்பிற் கதிட்டான தேவதை உருத்திரனெனவும், வாயுவிற்கதிட்டான தேவதை மகேஸ்வரனெனவும், ஆகாயத்திற் கதிட்டான தேவதை சதாசிவனெனவும், இப்பஞ்ச பூதங்களும், இப்பஞ்ச பூதங்களின் காரியமாகிய எழுவகைத் தோற்றங்களும், அவற்றின் அதிட்டான

## [illegible]

[illegible] வேதத்தின் சம்பந்தக்கொள்கையை [illegible]
[illegible] வியாபிக்கும் வியாபக ஞானமயம், [illegible]
[illegible] இரணியத்தின் முதற்பாதமாய்க் கூறப்படு
[illegible] எமர்னதேவதையே திரிவிக்கிரம விஷ்டு
[illegible] விராட்டென்வும் கொள்ளக்கிடந்ததே யொழிய பிர
பஞ்சத்தின் வேறாக அனேக வாயிரந்தலையும், அநேகவாயிரங்
கைகளும் கால்களு முடைய விராட்வடிவ விஷ்ணு உண்டா
யிருத்த லசாத்தியமாம். அதிகமாக விரித்துச் சொல்வானேன்.
இந்துக்கள் சாத்திரமுழுமையும் வேதாந்தத்திற் கூறும் தத்து
வங்களை உருவகித் தோதிய நூல்களே எனற்குச் சிறிதையமுங்
கிடையாது. அன்றி வேதசிரசென வழங்கும் உபநிஷத்துக்களி
லும் அனேக கற்பனை அசம்பாவிதக் கதைகளும் உருவகிக்கப்பட்
டவைகளெனில் மற்றவற்றைக் கேட்பானேன்.

இவ்வாறாக அநுபவவிருத்தமான அனேக இதிகாசநூல்
கள் இருக்கின்றன என்பது நிராக்ஷேபம். இந்நூல்களோ
கற்பனை தேவர்கள் மற்றவர்களுக்குச் சொன்னதாகச்சொல்லுகின்
றன. அசம்பாவித விபரீதச் சம்சயங்களைப் பயப்பதாகிய இந்நூல்
களையும் பிரபலச் சத்தப்பிரமாணமாகக் கொள்ளவேண்டுமெனும்
கட்டாயங்கள் ஒரு சிறிதும் விவேகிகள் பால் நடையாடத்தக்கன
வாகா; பிரம, விஷ்ணு, ருத்திராதியோர்களே கற்பனை உருவகச்
சொரூபமுடையவர்களானால் அவர்கள் பிறகற்பனை உருவகத்தேவர்
கள் அல்லது மனிதர்கள் முதலியோருக்குச்சொன்னதாகச்சொல்
வதை எங்ஙனம் அங்கீகரிக்கலாம். முதற்கோணல் முற்றுங்
கோணலாகும். என்பது பொய்யோ? தேவர்கள் சொல்லினார்க
ளெனில் அசம்பாவிதமாயினும் யாவரும் அங்கீகரிப்பார்களென
நினைத்து கற்பித்த தமது நாமங்களை மறைத்து எல்லா நூலாசிரி
யரும் எழுதியிருக்கின்றார்கள். இவ்வளவு எற்றிற்கு? அசரீரவாக்
கென்றும், அநாதியென்றும், வழங்கும் வேதமே வாக்கியத்
தொடராக இருத்தலின், உருவுடைய மனிதர் பாலன்றி இதுவுண்
டாயிருக்க ஏதுவிருத்தலால், மற்றவைகளைக் குறித்து
கேட்பானேன். இனி நாமெல்லாம் அஞ்ஞானிகளேயன்றி ஞானிக
ளாகிவிடவில்லை. ஆகையால் வேதமாதி நூல்களை உண்மையென்று
நம்பி நடக்கவேண்டுமே யல்லாது அவற்றை விசாரித்தல் தகாது,
வேதமுதலிய கலைகளில் சந்தேகித்து அவற்றை விசாரணைக்குக்

[illegible]
ஆராய்ப்புகு[illegible]லும், [illegible]
நாம் [illegible] வே[illegible]
து விசாரிக்க[illegible] [illegible]
போய் [illegible]த் திரியவேண்டுமல்லது, இப்படியுமக
ளோடு வசிக்கக்கூடாது, என வாதாடுகின்றனர். இப்படி வாதா
டும் அறிவிலிகள் தன் குற்றத்தினின்று தப்புவதற்கு என்ன
மில்லாத தந்திரவாதிகளே ஆவர். இது மிகவும் அதிசயமான
வழக்கம். நாம் எதையும் விசாரித்து அறியாமையினு லன்றோ
அஞ்ஞானிகளாகிறோம். அறிந்தால் ஞானிகளாவோமன்றோ? அப்
படி அறிந்தப் பின்ன ரன்றோ காட்டிலோ அல்லது நாட்டிலோ
வசிப்பது தகுதி என்றாவது தகாததென்றாவது தீர்மானிக்கலாம்.
காட்டில் வசிப்போமெனத்தீர்மானித்தல் எவ்வகையான தெளிவு.
அஞ்ஞானியாகிய நாம் எதையும் அங்கீகரிக்காமலன்றோ காலங்
கழிக்கவேண்டும். அதை விட்டு ஜாதி, மதம், ஆசாரம், புண்ணி
யம், பாவம், சொர்க்கநரகாதிகள், பிதுர்தேவதைகள், அஜாத
தேவதைகள், முதலியோரையும், மார்க்கபோதகர்களாகிய முன்
னோர்கள் பின்னோர்களாகிய குருட்டுக் குருக்களையும் அவர்கள்
வாக்கியங்களையும் அங்கீகரித்து நடந்து நடப்பிக்கப் பாடுபடுவான்
ஏனோ? அப்படிக்கேட்டு நடப்பதிலும் நடத்துவதிலும் சிலர்
கிறிஸ்துவையும், சிலர் மகம்மதுவையும் சிலர் இராமானுஜரையும்
சிலர் மாத்வாசாரியரையும். அப்படியே நீலகண்டச் சிவாசாரியரை
யும் சிலர் மெய்கண்டாரையுமே சிறந்தோர்களெனச் சொல்லி
ஒருவர் மற்றொருவர் சொன்னவைகளைத்தூஷித்து,உபதேசித்துத்
திரிவது என்ன ஞாயங் கொண்டோ? தன்னை அஞ்ஞானியென
ஒப்புக்கொண்டு ஒருவர் வார்த்தையை நம்பி நடப்பவன் ஞானி
களைப்போன்று மற்றொரு மதத்திலுள்ளக் குற்றங்களைக்காட்ட
வர் ஊராய் அலைந்து திரிவது வெட்கக்கேடல்லவா? எவர்க
ளுடைய கேள்விக்கும் யுக்தி அனுபவத்திற்கும் பொருள்வாரதபடி
விடையளிக்கத்தக்க சமாதானங்களைத் தத்தம்மதங்களில் நின்றும்
கற்றல்லவோ தான்கொண்ட மதத்தை நிலைநாட்டவேண்டும்.
அங்ஙனமன்றித் தன்னைக் கேட்கும் வினாக்களுக்கு விடைசொல்
லத்தெரியாத விடங்களிலெல்லாம் நீ இப்படிக்கேட்பது பாபமென்
றும் கடவுளுன்னைத் தண்டிப்பாரென்றும் சொல்லி மிரட்டுவதா

மானமின்றிய செய்[redacted]லவா? மானமுடையோனுகில் தன் குற்றத்தை மறைக்கப்பாடு[redacted]போல பிறர் குற்றத்தையும் மறைக்கப் பாடுபடானு? ஒருவன் தன் குற்றத்தைத் தான்மறைக்கப்பாடு படுவதுபோல மற்றவனும் படுவ[து] ஞாயமல்லவோ? அப்படிக்கவன் தன் குற்றத்தை மறைத்துப் பிறன் குற்றம் விளக்க மற்றவனும் அப்படியே செய்வானுகில் இருவரு[redacted]வாளிகளே ஆகிவிடார்களோ? நாம் பிறர்கேள்விக்கு விடை[redacted]தெரியாத குற்றவாளிகளே எனத்தம்மையறிந்திருந்தும்ஒன[redacted]யார்பால்யோக்கியர்போலும் கற்றோர்போலும் நடிப்பது மா[னமுள்ள]செய்கையாகுமா? அயலார் குற்றத்தை ஆராய்வது போல தன் குற்றத்தையும் ஆராய்ந் தறிபவர்கள் ஆனல் அவர்கள் எவரையும் அல்லது எவர்களுடைய மதத்தையும் இகழ்ந்து பேசுவரோ? அறிந்தவரையும் உண்மை பேசுகிறூர்களெனில் கேட்ட கேள்விகளுக்கேன் விடைபகர்கிறூர்களில்லை. "ஆலையில்லா ஊரில் இலுப்பைப்பூசர்க்கரையாக மாறுமென" நம்பினவனைப்போல இவர்களும் நம்பி சிறுமையடைகிறூர்கள்போலும். இப்படிக்குச் சிறுமையடைந்தும் "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடாரென்ற" பழமொழிக்கிணங்கித் தன் கொள்கைகளை அவலம்பித்துக் காலங்கழிப்பவராகஇருக்கிறூர்கள் போலும். இன்னோர் வார்த்தைகளை நாம் பொருட்டாகமதியோமானுலும், மதிப்பாரும் இதையறிந்து விலக்கும் பொருட்டே இங்கு இவர்களைக் குறித்துப்பேச நேரிட்டது. இது நிற்க அபரோக்ஷானுபவ விருத்த மில்லாத வார்த்தைகளே சத்தப் பிரமாணம் ஆவனவன்றிப் பரோக்ஷவார்த்தைகள் சத்தப் பிரமாணம் ஓர் போதுமாகா? சிலர் பரோக்ஷமாகக்கூறும் வசனங்களும் பிரமாணமேயாகுமென்பார். எங்ஙனமெனில் நாம் இங்கிலெண்டு என்னும் சீமையையும் இராணியார் உருவத்தையும் கண்டிலோமானுலும் கேட்டுளோம். இதனுல் சீமையும் இராணியும் இல்லை யெனலாமா? நாம் அறியாதவைகள் எத்தனையோ இருக்கின்றன. அவைகளைக்கண்டோர் உண்டெனச் சொல்லில் அவர் பொய்யராவரோ அவர்கள் சொல்லை நாம் நம்பலாகாதோ? நம்பினதாலும் அவற்றைப் பெறமுயலுவதாலும் நமக்குப் பிரயோஜன மில்லாமற்போய்விடுமோ? நாமோ இன்னுக்னர் கடவுளானுல் சர்வஞ்ஞத்வமும், திரிகாலஞானமும் பெற்றபெரியோர்கள் சொல்லை நம்பி நடப்பது ஞாயமாகாதோ? அனேகர் காட்டிஉள்ளவற்றை காட்டிஉள்ளோர்கான தாம் அங்கு கண்டவற்றைக்

கூறச் சப்தத்தாலறிந்து, அப்பொருளின்மேதனை அதிகரித்தபோது அதைக்காட்டிற் சென்று காணுகின்றானன்றோ? இதனாற்பரோக்ஷ வார்த்தைகளும் பிரமாணமேயாமெனபர்கள். இவை அங்கீகரிக்கத்தக்கவாகா. ஏனெனில் இறைவனியையும் சீர்மையையும் அபரோக்ஷமாக அறிந்தவர் இருக்கிறார்கள். காணவும் மார்க்கமிருக்கிறது. அப்படியே எங்கும் ரூபியாகவும் அல்லது அரூபியாகவும் உடைய கடவுளை; கண்டோமென்பாரும், காட்டுவோமென்பாரும், அவர் உலகைப்படைக்கும் போது பார்த்தோமெனபாரும், ஒருவரும் இல்லை. அன்றி உயிரோடிருக்கும் பேறது அடையத்தக்கமார்க்கத்தையும் கூறுகிறோம் என்பவரையும் மதத்தினர்களிற்காணோம். ஆகையால் அபரோக்ஷ சாக்ஷாத்கார அனுபவவசனங்களே சத்தப்பிரமாணமாம். அவ்வார்த்தைகளைக் கொண்டுதாம் ஆராய்வதால் நாமும் உண்மையை இம்மையில் இப்பிறப்பிற்றானே அடையலாம். ஆகையால் அனுபவத்திற்குவராத சுருதியுக்திகள் பிரயோஜனமற்ற அப்பிரமாணங்களே? இனியொருகாலத்திலும், இனியொருதேசத்திலும், இனியொருபிறப்பிலும் அடைவதாகக்கூறும் பரோக்ஷப் பொருள்கள் பிரபஞ்சத்திலும் வேறாயவிடத்திலிருத்தல் ஆராய்ச்சியிலமையாமையால் அவைபொய்யென முன்னமே விசாரித்து இருக்கிறோம். பல்தரமும் அதையே பேசுதல் பயனற்ற கொள்கையாம் எனவிடுவோம். அபரோக்ஷமாயறிந்து அடையக்கூடிய வார்த்தைகளைக் கற்றலும் கேட்டலும், கற்பித்தலும் கேட்பித்தலும், கல்வியும் கேள்வியுமல்லாதுமற்றவையாகா. கடவுளால் கொடுக்கப்பட்டது அல்லது சொல்லப்பட்டது எனக்காட்டும சத்திய வேதாதிபொய்க்கற்பனை நூல்கள் உலகில் அனந்த முளவாகக் காண்கிறோம். அவைகளில் சொல்லப்படும் வசனங்களில் அனந்தம் முன் பின்முரணாகவும் அசம்பாவித மாகவும் காணப்படுகின்றனவே யன்றிச்சம்பவிக்கக்கூடியனவாகக் காணப்படவில்லை. இவ்விதபொய்க்கற்பனைகளை நம்பி நடந்து பிறரை நடத்திவரும் அறிவிலார் தம்மை அஞ்ஞானிகளாக நினையாமல், தமது கொள்கையை மறுப்போரை அஞ்ஞானிகளெனச் சொல்லுவது ஓர் கள்ளன் கள்ளனைப்பிடிபிடியென உரத்துக்கூவி ஓடுவதை யொக்க விருக்கின்றது. இதுவிற்க சிலர்வேதம் அநாதியென்றும், சிலர் அசரீரிவாக்கென்றும், சிலர் தேவதூதரால் உலகிலுள்ள யாவருக்கும் அறிவிக்க நினையாமல் தேவன் தன்னால் அனுப்பப்பட்ட மனிதனுக்கே அறி

விக்க [illegible]ரால் வெளியிடப்பட்[illegible]தாகவும், சில சூரியனிடமாக வும், சில பிரமனிடமாகவும், சில விஷ்ணுவினிடமாகவும், சிலர் தருமதேவதை யென்கின்ற பசுவினிடமாகவும் உண்டானதாகச் சொல்லுகின்றனர். இவையாவும் உண்மையாக நடந்தவிஷயமென நம்பவேண்டுமென்று அநேக பண்டிதர்கள் பாடுபடுகிறார்கள். வேதங்களை அபிமானிப்பவர் தத்தம் வேதத்திலுள்ள உண்மை இன்மைகளைப் புத்திமானைக்கொண்டாராய்ந்து பிராக்ஷேப வசனங்களைக் கண்டு பிடியாமலே தம்வார்த்தை[illegible] ஆக்ஷேபிக்கில் பாவம் வரு மென்று பயமுறுத்துகிறார்கள். [illegible]ப் பிசாசே, அல்லது சாத் தானே, அல்லது பூர்வகர்மானு சாரமோ, உன்னை இப்படி ஆக்ஷே பிக்கச் செய்கிறதெனக் கூறுகின்றனர். அன்றியும் பிறர் சொல்லும் வேதவசனங்களை வேணமட்டும் சர்ச்சைக்கும் தூஷணைக்கும் இடமாக்கிக் கொண்டு உண்மையை அறியாது உளறித்திரிகிறார் கள். தனது வேதத்தைப்பற்றிப் பிறர்கேட்[illegible]க்க சமாதானஞ் சொல்பவனாகவன்றோ எவனுமிருக்கவே[illegible]படிக்கின்ற அந்நியர் வேதத்தையும் அல்லது அன்[illegible] மதத்[illegible]மாத்திரம் தூஷிப்பதாக விருப்பது ஞாயமாகுமோ?

இனி இந்துக்கள் மேற்கொள்ளும் [illegible], காமம், பக்தி, ஞானம் என மூன்று பிரிவினைகளைப் போதிப்பதாகவும் இம்மூன் றுக்கும் அதிகாரிகள் பிராமண - க்ஷத்திரிய - வைசியர்களே யெ ன்றும், சூத்திரர்கள் அநருகரென்றும், அச்சூத்திரர் புராணஇதி காசங்கள் பிராமணன் துவாரா கேட்கத் தக்கவைகளென்றும், சூத்திரர் பிறருக்குக் கற்பிக்கவும் பிரசங்கிக்கவும் அதிகாரம் பெற் றிலரென்றும் கூறுகின்றனர். கருமமாவது நித்தியகருமம், நை மித்திக கருமம், பிராய்ச்சித்தம் என மூவகைப்படுமாம். ஒரு வன் ஞானம்பெற்ற பின்னும் நிஷ்காம கரும அநுஷ்டானம் உலக உபகாரத்தின் பொருட்டுச் செய்யவேண்டுமாம். விட்டுவிடல் கூடாதாம். இவர்கள் உலகமெனக் கொண்டது, பிராமணரை மாத்திரமோ அல்லது க்ஷத்திரிய வைசியரையுங் கூட்டியோ தெரி யவில்லை. க்ஷத்திரிய வைசியருக்கு[illegible]மத்தால் கைப்பொருள் விரயமின்றி வரும்படி கிடையாது. [illegible] பெருமையும் சில காரிய சித்தியுமில்லாமற் போகவில்லை. பிராமணர் தவிர மற் றையோர் தானம் ஏற்கத்தகாதாம். இதனால் பிராமணருக்கோ வரும்படி நஷ்டம் ஒருபோதும் சித்திக்கிறதில்லை. கருமம் செய்

பவன் [illegible] செலவழியாமனே வெனில் அச்செலவை க்ஷத்திரிய னும், வைசியனும், சூத்திரனும் ஏற்றுக்கொண்டு செய்து முடிக்க வேண்டுமாம் அப்படி முடித்து வைக்கில் அந்தப் புண்ணியத்தின் பலனை மூவரும் பெறுவார்களாம். பிராமணருக்குப் பலமோ இதத்தில்தானே சித்திப்பதைப் பிரத்தியக்ஷமாகப் பார்த்திருக் கின்றோம். கோப் பிராமண ரட்சணையின்றியில் சூத்திரன் சத் கதியடைய மார்க்கமில்லையெனக் கூறி, சூத்திரன் பொருளைக்கொ ண்டு தம்போன்ற பிராமணருக்கே அருத்தி, தானுமருந்தி மீதி யுஞ் செய்து வைத்துக்கொள்வதால், சூத்திரன் முதலி ஏனைய ஜாதியர்கள் ஏன் உலகமாக மாட்டார்கள். இப்போது லோகோ பகாரமென்பது பிராமணர் பிழைப்பென்றே பொருள்படுகின்றது அல்லவா? இதன்றி நித்திய கருமமென்பது தினமுஞ் செய்யும் சந்தி, அக்னிஹோத்திராதிகளாம். நைமித்திகமாவது கிரஹண அமாவாசை முதலிய சுப அசுப காலங்களில் செய்ய விதித்திருக் கும் ஸமுத்திரஸ்நாக உபவாஸாதிகளாம். நித்தியகருமபயனோ வெவ்வொரு சந்திகாலத்திற்கு முன்னர் செய்த பாவங்களையெல் லாம் பின் சந்தியிற் செய்யும் கருமத்தால் நிவர்த்தியாய் விடு மாம். ஸ்திரீ அத்தி, சிசுஹத்தி முதலிய பாதகங்களும் ஒரு சந்திகாலத்தில் அனுஷ்டிக்கும் கருமத்தால் நிவர்த்தியாகி விடுமானால், பாவமிகுதியைக்குறித்துப் பிராமணன் அஞ்சவேண் டியதே இல்லையாமன்றோ? இதனால் பிராமணர் ஒரு சந்திமுடிந்த வுடனே வஞ்சனை, பொறாமை, துரோகமாதிகுணங்களை மறுசந்தி காலம் வருகிற பரியந்தம் உபயோகிக்கவேண்டியவராகின்றனர். சூத்திராதியோர் அப்படித் தொலைத்துக்கொள்வதற்கிடமில்லை. பிராமணரைப்போலவே 'அரசருக்கும் அநியாயவிசாரணை பட் சபாததீர்ப்பு, குடிகொன்றிறை கொள்ளல், அதரும யுத்தம், துராலோசனை, துர்மந்திரிகள் சங்கம் முதலியவற்றால் உண்டா கும் பாதகமும், வைசியருக்கு கொண்டவிலை கூறாது, அதிக விலை க்குக்கொண்டதாகப் பொய்ச்சத்தியஞ்செய்வதாலும், நெல்லோடு கல்பதராதிகலந்து அளப்பதாலும், குறைவாக அல்லது அதிகமா க நிறை அளவை, அல்லது நீட்டலளவை, அல்லது முகத்தலள வைக் கருவிகளை உபயோகித்துக் கொள்வதும் கொடுப்பதுமாகிய வியாபாரத்தால் விளையும் பாதகமும் நித்திய கருமத்தால் நீக்கிக் கொள்ளவிடமிருக்குமானால் இவர்களும் மேற்சொல்லிய பாதக

...க்கு அருகனல்லவனென்று! இவ்வாறு பாதகம் போக்
கிக்கொள்ளத்தக்க கருமானுஷ்டான விதியைப்பெற அதிகாரிக
ளாகாத சூத்திரர்கள் தானே, பாபிகளும், நஷ்டமடைபவருமாக
விருக்கிறார்கள். பிராமணராதியோர் இவர்களிடத்து கூலியும்
கைப்பொருளும் கொள்வதினாலே புண்ணியரும் மோக்ஷம்பெறு
பவரும் வேதாதிகாரிகளுமாயிருக்கச் சூத்திரனானவன் கொடுத்
துத் தரித்திரனாகி கீழ்தர உத்தியோகஞ்செய்து ஜீவிப்பதற்கும்
வகையற்றுப்பாபியாகி நரகமும் புனர் ஜன்மமும்பெறவேண்டியவ
னாக இருக்கிறான். இவ்வாறு விதிக்கும் வேதம் மிகவும் அழகா
கத்தானே இருக்கின்றது. இப்படியும் வேதம் விதிக்குமா? இது
மிகவும் சந்தேகமே! பரமேஸ்வரன் கட்டளையாகிய வேதமானது
உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம் ஒன்றாகத்தான் இருக்குமென்
பது நல்லவர்கள் கொள்கை. இதன்றி நித்திய கருமத்தின் அதி
காரம் பெறாத சூத்திரர்களிடத்திலும் தனவந்தர்களாயிருக்கும்
பட்சத்தில் அவர்கள் பால் நைமித்திக கருமாதிகாரியங்களைப் பிரா
மணன் நடத்திவைத்துத் தானமாதிகளைப் பெறலாகுமாம். இது
யாது காரணத்தினாலெனை தீர்க்காலோசனை செய்யில் உண்மை
வெளியாகாமலிராது. வேதத்திற்கு அருகராகாத சூத்திரர் நை
மித்திக கருமத்திற்கு மாத்திரம் பாத்தியதை யுடையராதலுக்கு
முன்சொல்லிய உலகுபகாரந்தானே அல்லது வேறில்லை யெனல்
விளங்குகின்றது. தனிகனாகிய சூத்திரன் கருமாதி காலத்தில்
பூணூலும் பெறலாகுமாம், ஏனையகாலத்தில் பெறலாகாதாம்.—
உபநயனகாலத்திற் பிர்மவித்தியாப்பி யாசத்திற்குப் பெறாத இப்
பூணூல் கலியாண காலத்திலும், கருமாந்திய காலத்திலும்,
பெற வேதம் விதிப்பது ஆழ்ந்து யோசிக்கத் தக்கதாகவே இருக்
கின்றது;இதன்றிச்சூத்திராதியோர் சொத்துடையராகும் பட்ச
த்தில் பிராமண ராதியோர் ஏவலுக்கு இணங்காது மூன்று வரு
ணத்தாரையும் பகைத்து வர்த்தகம் அல்லது ஆளுகை அல்லது
சாஸ்திரவாராய்ச்சி செய்ய வாரம்பிப்பார்க ளாதலால் சூத்திரன்
சொத்தை மூவருணத்தாரும் பலாத்காரமாக அபகரித்து யாகாதி
கருமங்களைச் செய்து !பிராமணர்களைப் பொஷிப்பித்து அச்சூத்
திரனுக்கு வேறுலகத்தில் இந்திரபோக சொர்க்கம் அடைவி
த்து விடவேண்டுமென மனுநீதியிற் கூறப்பட்டிருப்பதாக, தரும
சிருஷ்டனை செய்யும் பிராமணர்களால் சொல்லப்படுகின்றது.
இம்மனுநீதிபோன்ற நீதி எந்த அரசர் நீதியிலுங்காணக்கிடை

த்தலருமை. இதைத்தானே தன்னுயிர்போல் மன்னுயிரைக்காக்கும் உயர்மனு நீதிவசனமெனக் கொள்ள வேண்டுதல் போலும். ஆ! ஆ! ஆச்சரியம்! ஆச்சரியம்! இதைப்போன்ற நீதி எவர்கள் விதிப்பார்கள்? இது பூர்வம் சொன்ன உலகுபகாரமென்பதிற் றடையென்னை? அன்றியும் பிராமணாதிய மூன்று வருணத்தோர்க்கும் பாவநிவர்த்தியின் பொருட்டுச் சந்தியும், பிர்மகாயத்திரியும், அக்கினிஷ்டோமாதிகளும், வைத்துக்கொண்டதுபோலச் சூத்திரருக்கும், பரத்துவசண்டையிற் பாடுபட்டு மண்டையை உடைத்துக்கொள்ளவும், சேகரித்தப்பொருள்களைச் செலவழித்துக்கொள்ளவும் முப்பத்துமுக்கோடி தேவர்களையும் மும்மூர்த்திகளையும் விதித்துக்கொடுத்து, பிரமோற்சவாதி விபவங்களை அத்தேவர்களுக்குச் செய்ய விதித்திருக்க வில்லையோ வெனப் பலர் கூறுகின்றனர். இத்தேவர்கள் அபிஷேக நைவேத்திய ஆராதனை முதலியவற்றால் திருப்தியடைந்து தேகபோஷணை பெறுபவராகக் காணப்படுகிறார்களில்லை ஆனால் பூசுராள் எனப்பெயர் பெற்ற தேவதைகளோடு சிலதந்திர தேவதைகளும், விருத்தியடைந்து வருகிறதாகத் தெரியவருகிறது. இதுவும் உலக உபகாரமாய்த் தான் கொள்ளவேண்டும்போலும்? நைமித்தக கருமமும் பக்தியுமாகிய இரண்டும் வேதத்தில் அதிகாரம் பெறாதச் சூத்திரற்குபகாரமாக வியாசர் புராணத்தில் விதியாவிட்டால், சூத்திராதிஜாதிகளுக்குக் கடைத்தேறும் மார்க்கம் எள்ளத்தனையுமில்லா தொழியும் போலும். வேதமாதி புராணங்களில் கூறப்படும் தேவர்களும், அசுரர்களும், தேவ தேவர்களாகிய மூவர்களும் உண்மையில் வேறுவேறாகப் பிரபஞ்சத்திலும் வேறிடத்திலிருக்கினன்றோ இவர்கள் விதிக்கும் விதிவிலக்குகளுக்கும் பயனும் உண்மையிலுண்டாகும். இல்லையாகில் இப்பூசுரசாமிகளின் போஷணாலாபமன்றி வேறில்லையா மன்றோ? எவர் எங்கு என்னலாபம் அடைவரோ விளங்கவில்லை. இதன்றிச் சூத்திரரைப்போலவே பிராமணர் பிராமணஸ்திரீகளையும் வேதாதிகாரிகளல்லரென நீக்கியிருக்கின்றார்களாம். காரண மென்னவென்னில் எப்படி ஸ்ரீகளுக்குப்பர்த்தாவே தெய்வமோ அப்படியேஜாதியுடையோர் யாவருக்கும் மறையோர் தெய்வமாம். அதனாலே மற்றையோர் வேதாதி வித்தைகளுக்கு அதிகாரிகளல்லராம். எப்படிக் கெனில் "தெய்வாதீனம் ஜகத் சர்வம், மந்த்ராதீனம் தைவதம், தன்மந்திரம் பிராமணாதீனம், பிராமணாமமதேவதா" என்று அரு

[illegible]ருக்குஞ் சாத்தியஞ்செய்த வியாச கற்பனையிற் பிறந்தவராகிய கண்ணபிரானெனும் கிருஷ்ணமூர்த்தியானவர் சொல்லியிருக்கிறார். இதனாலே வெளிப்படையாகிறது என்கிறார்கள். உலகிலுள்ள ஜாதியபிமான புருடருக்குப் பிராமமணமும், ஸ்திரீகளுக்குப் பத்தாவுமே, தெய்வமென் விதித்தது உண்மையாயின் விரதங்களும், நோன்புகளும், க்ஷுத்ரதேவதைகளும், ஆலயாதிகளில் நடக்கும் உற்சவாதி வேடிக்கைகளும் யார்பொருட்டு விதித்திருக்கின்றனவோ? தெரியவில்லை. புருஷனையிழந்த பூவையர்க்கும் புருடனைவிரும்பும் பூவையர்க்கும்,புருடனால் நேர்ந்த குறையைப் போக்கிக்கொள்ள விரும்பும் புண்ணியவதிக்கும் சார்ந்த புருடருக்கும் போலும். இதன்றி நாமப்பொருத்தம், கணப்பொருத்தம் முதலிய பொருத்தங்களை ஆராய்ந்து சுபதின, சுபலக்கின, சுபமுகூர்த்தத்தில் வேதவிதியாலும் பிராமணராசீர்வாதத்தாலும் மந்திர பலத்தாலும் மணமாலையாகச் சூட்டிய மாங்கிலியம், மந்திரதேவதைகளின் பலமும், பூதேவர்களின் உதவியும் ஆசீர்வாதமும், கிரகங்களின் அனுக்கிரகமும் இருக்க அம்மாள்திரளுமுன்னே ஐயாஉருள அம்மாள்மங்கலியம் அறுக்க நேரிடுகிறது. இது எந்த வேதவிதியின் காரணமோ தெரியவில்லை. வேத விதிப்படி தேவமணம் முடிக்கப்பெற்று வாழ்ந்து வரும் பெண்களில், அநேகர் கந்தர்வ விவாகமும் நடத்திக்கொண்டு புருடனை உல்லங்கனம் செய்து அகலவும், அல்லது அவனை மருட்டவும், காண்கின்றனமே அப்போது அவ்வேதமந்திரம் என்ன செய்தது ஒன்றுங்காணோம். ஸ்திரிகள் கல்விகற்பதால் புருடர்கள் பாலும் சபைகளிலும் செல்ல நேரிடுவதால் ஸ்திரிகள் சபலசித்தமுடையவர்கள் ஆகையால் விபசாரிகளாகிவிட இடமுண்டாகிவிடுகிறதென்பவர்கள், ஸ்திரீகளை அலங்கரித்துக்கொண்டு கலியாண வீடுகளுக்கும், கோவில்களுக்கும், இராக்காலங்களிலும் செல்லவிடும்போது கல்வியில்லாமையே அவர்கள் கற்பைரட்சிக்கிறதுபோலும். இரவும் பகலும் தேவாலயங்களில் விசேஷ உற்சவம் சாதாரண உற்சவமாதிகளையும் பாணவேடிக்கைகளையும் பரத நாட்டிய நடனங்களையும் நடத்தி வருவது எவர் வருகை உத்தேசித்தோ தெரியவில்லை. தேவபக்தியுடையவளே புருஷபக்தியுமுடையவளாவள் என, ஆக்ஷேபகாலத்தில் சொல்லுவார்போலும். பிறகு புருஷபக்தியுடையாளே பிராமணபக்தியும், பிறகு

வேஷ அடியார் பக்தியும், அதன் பிறகு இராவண சந்நியாசம் பூண்ட சந்நியாசிகள்பா லன்பும் பெற்று,முடிவில் தன் ஆத்ம தரிசனத்தையும் பெறுவானென்று சொல்லுவார்போலும். அவளே கற்று விசாரித்து உண்மையை அறிந்திருப்பாளானால் இவ்வகையாகியவேஷதாரிகள் பால் பக்தி இழந்து விடுவளே, அப்போது என் செய்வாம் என்று வருந்தி, அவள்படித்து வேதமாதிகளைகளை விசாரிக்க அதிகாரமுடையவளல்லவென விலக்கிவைத்தார் போலும். அல்லது கற்றவளெல்லாம் துர்க்கதி அடையவுங் கல்லாதவளெல்லாம் சொர்க்காதிகள் பெறவும் கண்டார்கள்போலும்: பிரத்தியக்ஷமாக எப்படிக்கண்டு பிடித்தார்களோ அறிகிலம். கற்றவள் கல்லாத புருஷனை அலட்சியஞ் செய்வதோடு தாய் தந்தை அண்ணன் தம்பி முதலியோர் கந்தாசார வார்த்தையினை உல்லங்கனம் செய்வாள் என்பாராயின் தன் சுதந்திரத்தின் பொருட்டுத் தான்சாக்கிரதையாக இருக்கவேண்டியது அவசியம் தானே. கல்லான் உறவினும் கற்றான் பகை நல்லதெனும் கதையையும் அது போல அனுபவமும் பெறாதார் யாவர். மனித ஜாதிக்கு இயற்கையில் கிடைத்துள்ள இணையிலாச் சுதந்திரப் பேரின்பவாழ்வை அளிக்கவல்ல வேதமாதிய கல்வி பிராமணபுருடனுக்குக்கே இருக்கவேண்டுமென வேதம் விதிக்கிற தென்கை விந்தை வசனமே யாகும். இந்துக்களில் பிராமணர்கள் வடமொழிப்பயிற்சியை அந்நியர்கள் பெற வழியின்மையை உண்டாக்கிக்கொண்டு அதனை விருத்தி செய்த பின்னரே பிராமணரொழிய ஏனையோர் வேதம் படிக்கலாகாதென அநேக பொய்ப் பிரமாணங்களைப் புராணத்திலும், தரும நூல்களிலும் புகுவித்திருக்கிறார்களென்பதிற்றடையில்லை. இதை யெல்லாம் கல்லாத சில அரசர்களின் சகாயத்தால் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து விட்டார்களே யன்றி வேதத்திற் கூறப்பட்டனவே யென்று கொள்ளல் விபரீதமாம். அநுபவசித்தவசனமாகிய வேதத்தில் இவ்வகையாகிய சமத்துவவிருத்த வசனங்கள் இருந்திராவென்பதே உண்மையாம். ஜனனமரண சம்சாரதுக்க நிவர்த்தியும் பரமானந்தப் பிராப்தியும் கொடுக்கவந்த வேதமானது நீராச்சந்தேகமும், ஓயாத்துயரும்,மன ஒருமைக்கு இடந்தராத பல ஜாதி முறைமைகளும், பேதவாசாரங்களும், போதிக்குமெனக் கொள்வது விவேகமாகாது. நானெனதென்னும் அகங்காரமமகார நிரசன நிமித்தார்த்தம் ஏற்பட்ட வேதமா

[illegible] ஞான வைராக்கியங்களுக்க அத்தியந்த [illegible] பரமார்த்தப் பிராப்தியும் போதிக்கும் வேதமானது, ஸ்திரீ புருஷரூபமுடைய மானுஷஜன்மமுடையா ருக்கெல்லாம் கற்கவும் கேட்கவும் உரியதாக இருக்குமேயல்லது வேறு விதமாயிருத்தற் பொருந்தாது. கற்றமங்கையர் விபசாரிக ளாவார்கள் என்றால் பல நூல்களையுங் கற்றவைதிகர்களின் அல் லது அல்லாத அவைதிக புருடர்களின் சம்பந்தம் பெறுமல் ஸ்திரீ களை ஸ்திரீகளே புணர்ந்து விபசாரிகளாயு மாக்கியும் விடுவா ரல்லர். ஸ்திரீகளுக்கு புனர்விவாகம் கூடாதென்றும் வைதிக புருஷ சிங்கங்களே இளங்கைம் பெண்களையும், கைம் பெண்களை யும், அந்நியர்மனைவிகளையும், புணர்ந்து கற்பிணிகளாகவும், விப சாரிகளாகவும், அவமானசெய்து, பிராணஹத்திக்கு இடமாக்கி வைக்கத் துணியார்களானல் கற்றமாதர்கள் கற்பழிவதற்குக்கார ணம் எப்படியுண்டாகுமோ தெரியவில்லை. தம்பாலுள்ள குற்றங் களை நீக்க நினையாமல், தமது துற்குணத்திற்குச்சாதகமாகப் பிற ரை வைக்க, நினைப்போர் ஏற்கும் வைதிகம வைதிகமாகுமா? ஆகை யால் ஆன்மாவிறகு இயறகையிலுள்ள இணையிலாச்சுதந்திரத்தைக் கெடுக்க அல்லது தடுக்கவல்ல இம்மூடஜாதி முறைமையையும், மூடப்புத்தியையும் கைவிடுவார்க்கன்றி, கைவல்யபதவியும் கவலை யற்ற இகவாழ்வும் கைகூடல் அருமை. ஒரு ஸ்திரீயானவள் தன் கணவன் தனக்காகச் செய்யும் நன்றியை மறவாதவளாய்ப் பல வழியாலும் அவனைத் துன்பமடையாது காக்கப்பாடுபடவேண்டிய வளாவள் என்பதை மறுப்போர் எத்தேசத்திலும், எம்மதத்தி லும் எக்காலத்திலும், இலராவார் என்பதே உண்மை. எந்தப் புருஷனும் தான் தேடிய எல்லாச்சொத்துக்களுக்கும் உரியவ ளாகத் தன் மனைவியைவைப்பது யாவருக்கும் தெரிந்த விஷயந் தானே? இவ்வாறு அன்னம், வஸ்திரம், பூஷணம், பத்திரஸ்தா னம், அதனேடுமானம், பிற்கால ஜீவனம், முதலியன தேடிவைக் கும் தன் நாயகனை தெய்வமாகப் பாவித்து அவனோடு உண்மை பேசி அவன் சுகவாழ்விற்குத் தானே செய்யாத ஸ்திரீயானவள் பேயும் கூற்றுவன் எவியதூதும், மிருத்யு தேவதையும், ஆவாளே

யன்றி அவள் மானமுடைய மானினியாவளோ? [illegible]
னும் அன்று கேட்தான் மொழியைக்குன்றுமாறதி [illegible]
னும் பேர் எடுக்க அவனை மகிழ்விப்பாளாகில் [illegible]
படிச்செய்யக்கூல்றல் அழகாகுமோ? அதிகமாகச்சொ[illegible] புருஷனை எதிர்ப்பவள் எவளாயினும் விபசாரியாகவே இருப்பாளென்பதில் சிறிதும் சந்தேகங்கொள்ளற்கிடமில்லை. புருடனை யடக்கப்பார்ப்பவள் பலபுருடருக்கு மனைவியே யல்லது கொண்டான் மனைவியல்லள். செய்ந்நன்றி யறியாத ஸ்திரீயும் புருஷனும் தெய்வத்திற்கு விரோதிகள் என்பதில் ஆக்ஷேபமில்லை. அதனை பலவிதமான வேஷங்களாலும், ஆசாரங்களாலும, தருமங்களாலும், மறைத்தாலும், செய்ந்நன்றி கொன்ற பாதகம் மறைந்து போகாது தீராது. இவரது ஒழுக்கம் கடவுளுக்குப் பிரீதியாகா. அநந்த ஜன்மங்களை ஒப்பும் இந்துக்கள் புனர்விவாகம் பொருந்தாதென்கை முரட்டுப் பிடிவாதமல்லாது பெருங்குணமாகாது. எந்தலோகமும், எந்ததேகமும், எவ்வித போகமும், எவ்விதகருமமும், முடிவிலாத ஆன்மாவிற்குச் சதமாகாதெனக் கொள்பவர் அழியுங்கருமத்தில் அதிகபற்றை யேற்றல் ஏமாற்ற மல்லவோ? ஸ்திரி சூத்திரர்களுக்கு வேதத்திலும் கருமத்திலும், அதிகாரமில்லை யென்போர் இவ்விருவர்பாலும் யாதொருசகாயமும் பெறாமல் காட்டிற்றனியாக வசித்து, தன்கருமத்தைத்தவறாது முடித்துக், கடவுளுடன் சேரவேண்டியதோ அன்றோ? இவரும் உலகத்தோடு கூடிவாழ்ந்து இருக்கல் ஒக்குமோ? கூடியிருந்து அவர்கள் சகாயமும் கைக்கொண்டு மனத்தாலும், வாக்காலும் காயத்தாலும் வேறுபட்டு இருக்கைதுரோகிகள் செய்கையாமன்றோ. நம்பினோரை யம்பலத்தில் விட்டேகும் வம்பரல்லாது மற்றையோர் இவை தம்பாலிருக்கச் சகிப்பரோ. சிலர் பூர்வத்திற் செய்த புண்ணியத்தின் அளவாகவே ஜாதியும், மதமும், போகப்பிராப்தியும் பொருந்து மென்போர்கள். இவர்கள் சுபதின சுபநட்சத்திர, சுபலக்கினங்களில், சுபாசுப கருமங்களைச் செய்ய நாள்பார்ப்பதேனோ. அப்படிப்பார்த்தும் முடித்தும் பழுதுவந்து நேர்ந்தபோதாகிலும் பின்பதைப் பரிகரிக்கவினை யாததேனோ. விதிப்படிமுடியுமெனும்விவேகமறிந்த பெரியோர்கள் இடையில் ஓர்கர்மவிதியையிட்டு எவரையும் வருத்தலேனோ. தேசாசார, மதாசார, குலாசார, ஜாதியாசார, ஆசிரமாசார மாகிய பூர்

வழிதியால் பொருந்து மென்பது பொருந்துமாறெங்ஙனம். மேல் காட்டிய ஆசாரவிருத்தராய் பூர்வவிதியால் ஆசாரமுடைய தாய் தந்தைகளுக்குப் பிறந்த புத்திரன் புத்திரிகள் இருவரும் எந்தவி தியால் கடைத்தேறுவார்களோ அந்தவிதியை யல்லவோ யாவரும் தேடவேண்டும். கெட்டதை நல்லதாக்க வலியில்லாத கருமத் தைக் கடைப்பிடித்து ஒழுகல் கடைச்சாதியர் ஆதலுக்கோ? கீழ்ச் சாதியிற் பிறந்த ஒருவன் மேற்சாதியிற் பிறந்தவனுடைய மதா சாரம், குலாசாரம், ஜாதியாசாரம், ஆசிரமா சாரங்களைக் கைப் பற்றிருத்தலினால் அவனுக்கு என்ன லாபமுண்டாகின்றதோ? கைப்பற்றி நடப்பதால் அவனுக்கு என்ன தீமையுண்டாகு மோ? நாமறியோம். பூர்வ ரிஷிகளெல்லாம் தலைவிதியை யொப்பி இடையில் வந்தவிதியை ஏலாமையாலன்றோ பிரபல ராகி பெரியோர்க ளாகினார்கள். இதைமறைக்க வல்லவோ நதிமூலம் ரிஷிமூலம் விசாரிக்கப்பட லாகாதென்பது. அவர்களெ ல்லாங் கல்லாதிருப்பா ராயின் வியாசர், யாக்ஞவல்கியர், திருவள்ளு வர், ஔவையார், கார்கி, நாரதர், வசிட்டர், சத்தி, முதலியோர் கதி யாதாகியிருக்கும். கற்பனை திரிசங்கு ஆனவன் சொர்க்ககதி பெறவேண்டி யடுத்ததுபோலல்லவோ அடுக்கவேண்டிவரும். இது நிற்க இவ்வகையாக உலகை வஞ்சிக்க வஞ்சகர் கொண்ட வஞ்சக விரதமாகிய ஜாதியாசாரத்தை அங்கீகரித்து நடப்பவர் மூடர்என் பதில் என்ன ஆக்ஷேபம். பாஷையோ யாவருக்கும் இருக்கலா குமாம்; அப்பாஷையா லெழுதிய புராணங்களையும் கேட்கலாமாம், அப்பாஷையா லெழுதிய நூல்களை யாவரும் படிக்கக் கூடாதாம், இது ஒப்பத்தக்கினதோ? "தலலுபோடுலேதே தலம்புலுபோடியா? என்னும் தெலுங்கு மொழியானது மொட்டையடித்துக் கொள் ளும் பெண்ணாகிய விதவைகளையும் சந்நியாசிகளையும் குறித்து உண்டாகிய அனுபவ வசனமோ வேறோ? இந்த குலாசார ஆசிர மாசாரங்கள் துஷ்டரைத் தடுத்துவிடுமோ? தடுக்காதென்பது நினைப்பூட்டவல்லவோ "சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மக ளிர்நிறைகாக்கும் காப்பேதலை" எனவும்; "மழித்தலும் நீட்டலும் வேண்டாவுலகம் பழித்ததொழித்து விடின்" எனவும் துஷ்டர் வேதத்தியனம் செயினும் அவர் வார்த்தையில் நம்பிக்கை வைக்க லாகாது எனவும், நெருப்பைத் தலைகீழாகப் பிடிப்பினும் அதன் ஜுவாலை கீழாகாது எனவும், உவமையோடும் கூறியமொழிகள்

உண்மையாகாபோலும். அன்றியும் "பெண்ணெனப்படுவ கேண்மோ பீடில, பெருமை நோக்காதுண்ணிறையுடைய வல்லவொராயிர மனத்தவாகும்" எனவும் "நம்பினபேர்களெல்லாம் நாயினுங்கடையாவாரெனவும்,, "நடைகுலுக்கியு முகமினுக்கியு நகைநகைத்திடுமாதரை நம்பொணுது மெய்! நம்பொணுது மெய்! நம்பொண்ணுது மெய்! காணுமே" எனவும், "சேலைகட்டிய மாதரை நம்பினூர் தெருவினின்று தியங்கி தவிப்பரே" எனவும், சொல்லிய வசனங்களையோசிக்கின் சுபாவம்நல்லதாயின் கற்றாளும் கல்லாதவளாயினும்பெண் நல்லவளேயாவாள். அஃதின்மையாயின்கற்றாலும் கல்லாவிடினும்நற்குண மில்லா ஆடவரை யொப்பா யிருப்பள். விபசாரமென்னும் துராசாரம் ஸ்திரீ புருஷாள் இருவர் பாலுமிருக்க ஒருவரைமாத்திரம் புகழ்வது ஏனோ? இதன்றி "பாம்புண்ட நீரெல்லாம் நஞ்சாம் பசுவுண்டதேம்படு தெண்ணீர் அமுதமாம், ஒம்பற்கு ஒளியாமுயர்ந்தோர்க்கு ஞானம் அதுபோல, களியாங் கடையாயர்மாட்டு" என்பதுபோல கல்வியுங் கேள்வியும் துஷ்டாராகிய பெண்ணுண்களுக் கிருந்தும் பிறருக்கு கஷ்டத்தையே விளைவிக்க விடமாகின்றது. நல்லெண்ணத்துடன் வேதமாதிகலைகளையொருவனறியின் அமுர்தனுவா னென்பதிற் றடைஎன்னே? அதுபோலவே நற்குணமுடைய பெண்ணும் புண்ணியவதியும், தருமதேவதையும், ஆவாளென்பதிற் றடையென்னே? சுயகாரிய துரந்தராளாகும் பெண்ணுண்களுக்குப் பரப்பிரயோஜன பரமதருமசிந்தனம் எப்படியுண்டாகும்? சுபாவத்தை கல்வியின்மையானது மாற்றிவிடுமெனவும், கல்வி அதைமாற்றாது அதிகரிக்கச் செய்யுமெனவும், சொல்லுதல் அடாத கருத்தாம். எண்ணெய், நீர், வஸ்திரம் முதலியன மணமுடைய புஷ்பங்களின் சையோக சம்பந்தத்தால் நன்மணம் பெறுவது போல சுகுணசுபாவ மில்லாதவனும் கல்வியால் நற்குணம் சிறிதடைவானென்பதே நிஜம். இவ்வளவு எற்றிற்கு? யாதேனும் ஒன்றை அறியாமையே கல்வி இன்மையும் மூடமும் அஞ்ஞானமாம். ஒன்றையறிதலே ஞானமும் அனுபவமுமாம், அதுபோலவே கல்வியையறியினும் ஞானமும் தெளிவுமாம். இதன்றி அஞ்ஞானஞானமென்பதற்கு வெவ்வேறு வஸ்துக்கள் இல்லை. ஐயிந்திரியங்களால் அறியக் கூடியவைகளையெல்லாம் கற்றூர் கல்லார் ஆகிய யாவரும் ஒரேபடித்தாக அறிய வல்லவர்களே. ஐம்பொறியா லறியக்கூடாத ஆன்மா, மனது,

[illegible], சொர்க்கம், சுகம், துக்கம் முதலியவற்றை புத்தி [illegible]ண்டே எங்ஙும் மாறுபட்டறியவேண்டும் அவற்றை ஆராய்ந்தறிந்த பெரியோர்களின் வாக்கியங்களே கல்வியாகும்.

இவ்விதவாக்கியங்களை பிறருக்கு அறிவிக்கவந்த வாக்கியதொகுப்பே வேதமாதல்வேண்டும். இதையறியவேண்டிய கடமையெல்லாமனிதருக்கு மிருக்க ஸ்திரீ சூத்திராளுக்கு அதிகாரமில்லையெனக்குக் காரண மென்னை? பிராமணரே அதிகாரமுடையாரென்னல் அவர்களுக்கு இயற்கையில் வேதம் கல்லாமலே உண்டாய் விடுகின்றதுபோலும் அப்படிப் பிறப்பினுற்றனே வேதமறிந்திருக்கும் பிராமணர்களை எவ்விடத்துங் கண்டிலம். வெகுநாள் பிரயாசைப்பட்டே கறுருரை மாத்திரங் காண்கின்றோம். பிராமணத்துவம் பூர்வ புண்ணியத்தால் ஒருவனுக்கு வாய்ந்திருந்தால் உபநயனாதி சடங்கு ஏற்ககாரணமென்னை? சடங்காதி காரியம் இயற்றினும் எல்லாருக்கும வேதமாதிய கல்வி வராமைக்குக் காரணமென்னை? அத்தியயனாதி செய்விப்பானேன்? செய்தும் தேகமாதிய நானெனக்கூறும் ஸ்திரீசூத்திர மூடரைப்போல மூடனாய் தேகேந்திராதிகளையே நானெனக் கொள்ள வேண்டியதென்னை? இவன் மூடனினும் அதிகனாதல் எங்ஙனம்? பூர்வ புண்ணியத்தினாலேயே பிராமண ஜன்மம் வாய்ப்பதானால் பிராமணரில் அனேகா வேதபாரகாரகாது நிரக்ஷர குக்ஷியாக இருக்கவேண்டிய காரணம் எவ்விதத்தாலும் சித்திககாதல்லவா? பூர்வ புண்ணியத்தின் பலத்தையும் இடையிலுண்டாகும் இடையூறு தடுத்துவிடுமோ? தடுத்துவிடுமெனில் பூர்வபுண்ணியத்தைக் கொள்ளவேண்டிய தென்னை? நிரக்ஷர குக்ஷிகளாயிருந்தாலும், நிரந்தர வஞ்ஞானிகளாயிருநதும் வேதாதி காரிகளெனக் கூறபபட்டிருப்பதனால் அவர்களை எல்லா முணர்ந்த விப்பரனுகவே கொள்ளவேண்டு மென்கை எவ்வளவு மதியீனவார்த்தை? வேதமுணர்ந்த விப்பிரனும் அதையுணரவேணுமென்னும் பிராமணனுக்கேயல்லாது மற்றெவருக்கும் கற்பியானுதலால் வேதத்தில் மற்றோருக் கதிகாரம் எப்படியுண்டாகும்? கல்வி யென்பதெல்லாம் ஒருவர் கற்றுக்கொடுக்க மற்றொருவன் கற்றுக்கொள்ளலாமேயொழிய தானுகவே கற்றுக்கொள்ளல் முடியாது. ஆகையால் இதையறிந்தே வேதம்யாவருக்கும் உதவாதென அதைக் கற்றவர் கூறுகின்றார்போலும் கல்வி என்பதை அரசனும் கற்றோர்களும் தாய்தந்தையர்களும் பல

வந்தஞ் செய்து கற்பித்துக் கொடுப்பினும் கஷ்டமாகையால் சிறுவர் இஷ்டப்பட்டு கற்ப தருமையாக விருக்கின்றது. அடியோடும் அதைக்கற்கவே கூடாதுஎனில் கற்பவர்யாவர்? கற்கவேண்டிய வயது கடந்த ஒருவன் கல்லாமையினால் நேர்ந்த அவமானத்தையும் நஷ்டத்தையும் தெரிந்து கற்கமுயன்றாலும் இடையூறு அனந்தமாகையால் அவன் முற்றுறக்கற்பதும் அசாத்தியமாகின்றது.

விடாத ஊக்கமுடையவனாயினும் கற்றுக்கொடுப்போர் வஞ்சகரானபோது அவன் நெஞ்சாரக் கற்கநேர்வது எங்ஙனம்? யாவரும் கற்கலாம் எனும் இக்காலத்து இராஜரீகத்தை நீசப்பிரபுத்வமெனப் பலவாறு பழித்துத் துயரடையும் தூயோர் அநேகர் இருக்கின்றார்கள் ஆனால் பூர்வகாலத்தில் எப்படி இருந்திருக்கலாம் "ஜாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கா லெனவும்" "கண்ணிரண்டே யாவர்க்கும் கற்றோர்க்கு மூன்றுவிழி" யெனவும் "கல்லாவொருவன் குலநலம் பேசுதல் நெல்லிற்பிறந்த பதராகும்மே" யெனவும், "கல்லாதவன் சொற் காமுறுதல் முலையிரண்டு மில்லாதபெண் காமுற்றற்று" யெனவும், இவைபோல அனந்தமாகக் கூறும் வசனங்கள் நீசநூல் வசனங்கள்போலும். வடமொழியும் வேதமும் கற்கலாகா தென்பதொழிய மற்றநூல்களைப் படிக்கலாகா தென்பவர் ஒருவருமில்லையே என்பார் சிலர் உளர். வேதத்திற்கூறிய உபநிஷத்துக்களைத் தவிர மற்றவையெல்லாம் விபரீத ஒழுக்கங்களையும் அசம்பாவித வேடிக்கைக் கதைகளையும் அநாவசியமான இறந்துபோனவர்கள் அல்லது எக்காலத்திலும் இல்லாதிருந்தும் கற்பனையால் இருப்பவர்கள் சரித்திரத்தையும் கூறுவனவா யிருத்தலின் அவற்றைப் படிக்கலாம்போலும், இதையெல்லாம் படிப்பவன் அதைப்படித்தால் உண்டாகும் கெதி என்னமோ? அதைப்படித்தறிந்தாருக்கே தெரியுமல்லாது மற்றவர்க்கெங்ஙனம் தெரியும். மற்றவையெல்லாம் வேதமல்ல, பிரமாணங்களுமல்ல ஆகையால் அதைப்படிக்கலாம்போலும். வேதமென்பதும் பலகாலங்களில்பலரால் செய்யப்பட்ட பலநூல்களின்தொகுதியாக விருக்கின்றதேயன்றி, ஒரேகாலத்தில் ஒருவராலேயே செய்யப்பட்ட நூலாகக் கொள்ள ஆதாரஞ்சிறிதுமில்லை. உத்தாலகன் முதலிய முனிவர்களால் கூறியனவாக அந்தந்த உபநிஷத்துக்களால் தெரியவருகின்றன. சுருதி யென்பதற்குப் பொருள் ஒரு

வர்சொல்ல மற்றொருவர் கேட்டதென்றே பொருள்படுகிறது. இப்படியே அநேகர் தத்தம் சீடர்களுக்குப் போதித்த அநேக உபநிஷத்துக்க ளிருக்கின்றன, இவற்றிற்சில புராணங்களைப்போல சிலகற்பனாதேவர்களின் வாக்கியங்களாகக்கூறப்பட்டிருக்கின்றன. இப்படிக்கு ஒருவரொருவருக்குப் போதித்த விஷயமெல்லாம் ஒரேகாலத்திற் பிறந்ததாகக் கொள்ளவிடமுண்டோ? பாம்பரையாக ஒருவருக்குப் பின்னொருவராகக் குருக்களாகி உபதேசித்து வந்தார்கள் என்று கொள்ளவேண்டியதுதான் நியாயம். ஆகையால் வேதம் ஒரேகாலத்தில் உண்டாயதல்ல' இதை யெல்லாம் பிற்காலத்தில் வந்த வியாசராதி பெரியோர்கள் கொள்ளத்தக்கவை களைக்கொண்டு தள்ளத்தக்கவைகளைத் தள்ளியும் ஒழுங்குபடி பிரித்துவைத்து இருக்கிறார்கள். இதில்கால வடைவில் வஞ்சக பண்டிதர்வார்த்தைகளும் மூடவரசர்களின் முரட்டுத்தனமும், ஜாதி பெருமைக்குத் தவிக்கும் சண்டிகள் சகாயமும் கலந்தே யிருக்கிறதென்பதில் யாதொரு குறையு மில்லை. எப்படியிருந்தாலும் எல்லாவுயிருக்கும் பூரணானந்தபோதம் புகட்டும் பொருட்டு போதிப்பனவாக இருப்பனவெல்லாம் பிரமாண வசனங்களை என ஏற்கத் தட்டில்லை. யுக்தி அனுபவ விருத்த வசனங்கள் எல்லாம் அலங்கார கற்பனைவார்த்தைகளாக வன்றி யதார்த்தமாகக் கொள்ளத் தக்கனவாகா. யமன், வருணன், வாயு, அக்கினி, இந்திரன் முதலியோரை அபானமாதி கருவிகளாக உபநிஷத்துகள் கூறுகின்றன. ஈஸ்வரன், ஜீவன், மாயை, அவித்தை' ஆவரண, விக்ஷேபம், என்னும் ஆறுபொருள்களும் அநாதி என்பது வேதயுக்தி அனுபவசம்மதம். இவற்றுள் ஜடப்பொருள்களாகிய உடலுலகென்னும் தோற்றப் பொருள்களும் இவற்றை விளக்கும் ஞானேந்திரிய அந்தக்கரண ஜீவேஸ்வர்களெனும் போலிசித்துப் பொருள்களும், சுழுத்திகாலத்தில் அவித்தையில் லீனமாகிற பிரளயத்தை யடைந்து மீளவும் சொற்பனகாலங்களில் சூக்ஷமஸ்தூல பரிணாம விளக்கங்களை யடைவதனையே சிருஷ்டி, திதி, சம்ஹாரமாகவும், மாயாவிசிஷ்ட ஈஸ்வரனது கிருத்தியங்களாகவும் கற்பிக்கப் பட்டிருக்கின்றது. இது ஒழிய வேறுவித சிருஷ்டி லயங்கள் அங்கீகரிக்கப்பட் டிருக்கவில்லை. ஆகையால் முன்காட்டிய பேதவாறு பொருள்களும் பிரவாக ரூபஅநாதி வஸ்துக்களாக கொள்ளப்படினும், விவர்த்தவாதப்பாவரூபப் பொருள்களாகக்கிடப்பன வன்றி

நித்தியபொருள்களாகா. இவ்விதமாக உலகிலுள்ள எல்லாசப்தப் பிரமாணங்களும் பலவகைப்பட்டு பலவிதமாக விருப்பதால் அபரோக்ஷஞானனுபவ சுகப்பிராப்தியின் பொருட்டுக் கொள்ளத் தக்கதைத் தேடிக்கொள்ளுதல் விட்டு, எல்லாவற்றையும் பிரமாணமெனவேற்றல்திராச்சந்தேகத்திற் கிடமாகையால், புராணாதிகளை வேதஅனுபவவசனத்திற்கொத்தே வுரைசெய்துக்கொள்ளவேண்டும்அல்லாது,உண்மையில்நடந்தகதைகளெனக்கொள்ளல்கூடாது: நீதிகளையும், உலகப்பொருள்களின் குணங்களையும் கற்பிக்கப் பல கட்டுக்கதைகளைக் கற்பித்திருக்கின்றனவெனக் கொள்ளல் வேண்டும். வேத சிரசாகிய உபநிஷத்துக்களிலும் அநேக அஸம்பாவிதக் கதைகளிருக்கும். அவைகளெல்லாம் குணார்த்த வாதமேயொழிய பூதார்த்த வாதமல்ல. உண்மையில் பிர்மா, விஷ்ணு, உருத்திரன், அஷ்டதிக்குப் பாலகாள், அஷ்டவசுக்கள், காமதேனு, கல்பகவிருக்ஷம், சிந்தாமணி, சப்தரிஷிகள், இராமனாதியவதாரங்கள், பிர்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திராஜாதிகள்முதலியவற்றைக் குணார்த்த வாதமாகக் கொள்ள வேண்டியவைகளே யல்லாது வேறில்லை. மீன்வயற்றில் மச்சகந்தியும், அத்தியந்தா பாவரூபனாகிய வாயுபகவானுக்குப் பீமனும் ஆஞ்சனேயனும், ஜலவடிவாகிய கங்காபவானிக்குப் பீஷ்மாசாரி முதலிய அஷ்டவசுக்களும், குதிரைவயிற்றில் அசுவத்தாமாவும், காசிபரின் பெண்சாதிகளிடத்து தேவர்களும், அரக்கர்களும், மரஞ்செடி கொடிமுதலிய தாவரங்களும், புலி சிங்கமாதி-மிருகங்களும், கருடன் முதலிய பறவைகளும், ஆதிசேடன் முதலாகிய பாம்புகளும், பிறந்ததாகக்கூறும் கதைகள் வேடிக்கையாக உலகப்பொருள்களைத் தெரிவிக்கும் கற்பனைகதைக ளல்லாது உண்மையில் நடந்தவைகள் அல்ல. அப்படிக்கனுபவத்தில் ஒன்றும் பிறப்பதை எவரும் பார்த்திலார்கள். மரமாதிகளிலுண்டாகிய விதைகளிலிருந்து மரமாதிகளும், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன விட்ட முட்டையினின்றும் பறவை யூர்வனவாதிகளும், அந்தந்தஜாதிமிருகங்களுக்கந்தந்தஜாதிமிருகங்களும், மனிதர்பால் மனிதரும் உண்டாகிறார்கள் அன்றி, உயர்திணையாகிய மனிதர்பால் அஃறிணைப் பொருள்களும், அஃறிணையில் உயர்திணை மனிதர்களும் உண்டாதலின்மையின், மலையிலும், ஜலத்திலும், காற்றிலும், அக்கினியிலும், ஆகாயத்திலும் சந்திரனிடத்திலும், சூரியனிடத்திலும், தரும்பினிடத்திலும், யாக்குண்டத்தி

னிடத்திலும்; கும்பத்தினிடத்திலும், குதிரையினிடத்திலும், கிளியினிடத்திலும், கண்ணாடியிலும், ஆண்வடிவ மனிதனுடைய முகத்திலும், தோளிலும், தொடையிலும்,பாதத்திலும், பெருவிரலிலும், மார்பிலும்; நாவிலும், கதாயுதத்திலும், ஆபரணங்களிலுள்ள இரத்தினங்களிலும் மனிதர் பிறந்ததாகச் சொல்லுதலை அசம்பாவிதமாகக் கொள்ளத்தடை யில்லையல்லவா? புத்திமானாகிய வித்துவானே இதையெல்லாம் மெய்யெனக் கொள்ள விதிப்போர்க்குத்தான் புத்தி பூச்சியமானாலும் கேட்போருக்காயினும் புத்தியிருக்க வேண்டாமா? இதுபோலவே இந்திரன் முதலிய தேவர்களும், பிரமன் முதலிய தேவதேவர்களும், அவர்கள் கூறிய நூல்களும், தவளையும், அன்னமும்,குரங்குகளும், கரடியும், வண்டும், கிளியும், தும்பிகளும், பேசிய அல்லது செய்த அல்லது உபதேசித்த வாக்கியங்கள் எல்லாம் தம்பேரை மறைத்தெழுதிய ஆரியர் செய்த கற்பனை என்று கொள்ளாது உண்மையில் நடந்தகதைகளெனக் கேட்டலும், கற்றலும், பிறர்க்குக் கற்பித்தலும் அசம்பாவிதத்தை மெய்யென நம்பிவந்த தமதறியாமையே யல்லாது உண்மையை யுணரும் உயர்ந்த புத்தியாகுமா? இதல்லாமலும் மனிதருக்கு விதித்த வருணாச்சிரம தருமாதிகளை ஆய்ந்தறியாதவரும், பழக்கத்தால் வேஷதாரிகளைக் காப்பாற்றிவருதல் விபரீத புத்தியிலும் விபரீதபுத்தியாகுமல்லவா? உலகம் இயற்கை யென்பதற்கும் சிருட்டியென்பதற்கும் தடையாகப் பிரத்தியக்ஷத்திற் காணப்படுகின்றது. உலகை இயற்கை செயற்கை என்றுபோராடுவோர் முடிவாகத் தன் கருத்தைநாட்ட முன்வந்து, போதுமான அநுபவத்தைக் காட்டி, சந்தேகத்தை அகற்ற வல்லாரைக் காண்கிலோம். முன்னெழுதி வைத்துள்ள அசம்பாவித கதைகளையும், புத்தகங்களையும், ஆதாரமாக்கிப் பேசிவருகின்றனர். இத்தகையார் ஆசை வெட்கமறியாதெனும் பழமொழிக்கு இலக்காக நிற்கத் தலைபட்டார்கள்போலும். அநுபவம் தராதசொற்களால் ஆக்கமென்னே. இறந்த பின்னான்றோ ஆக்கம் தெரியுமென்பாராயின், எதிறந்த பின்ன ரெனக் கேட்கவேண்டிவருகிறது? உடலிறந்தெனில் சாம்பலும் மண்ணுமாவ தன்றி வேறுகக்காட்டுவாரில்லை. உயிரிறந்தபின்னரெனில் ஆக்கம்பெறுவார் யாவர்? உடலிறந்த பின் உயிரிறவாது ஆக்கம் பெறுகிறதெனில் ஞானேந்திரிய கருமேந்திரிய அந்தக்காண பிராணாதிகளை அவயவமாக வுடைய உடலிறந்தஉயிர்

ஆக்கம் பெறலெதனால்? சூட்சும தேகத்தாலெனில் சூக்மாங்கம் வரம்பற்றதாகையால் பிராணாதி யிந்திரியம் அதில் தடையுற்றிரா. அன்றியும் சூக்குமாங்கம் தூலத்தை விட்டுத் தனித்திராது. எப்பொருளின் சூக்குமாங்கமும் தூலத்தைவிட்டுவேறிடத்திலிருக்கக் கண்டாரில்லை. காட்டுவாரையுங் காணோம். கனவிற்காணும் சூக்குமதேகம் நனவில் தூலதேகத்திலும், சுழுத்தியிற் காரண தேகதிலும் அடங்கிவிடுவ தனுபவமாகி இருக்க இது தனித்து உயிரோடும் இந்திரிய அந்தக்கரண பிராணாதி வாயுக்களோடு நித்திய நரகம், நித்திய சொர்க்கம், அல்லது சிலகால நரகம், சிலகால சொர்க்கம், அல்லது நித்திய சூரிப்பதம் பெறுமென்கை அசம்பாவிதமாம். ஆகையாற் சீடனே! உலகம் இயற்கை யென்பதற்கும் சிருட்டி யென்பதற்கும் வேறாக நின்று விளங்கலால் இதை அநாதியாகக் கொள்ளலே தகுதியாமென்று விசாரித்த பெரியோர்கள் விளம்புகின்றார்கள். மகம்மதியரும், கிறிஸ்தவரும் நித்திய நரகவாதனையை விதிக்கும் கடவுளை நீதிஅதிபரும், இரக்க முள்ளவரும், என உரைத்தல் அதிசய மல்லவா? இப்படிப்பட்டவர் எல்லாவுயிருக்கும் தாயுந் தந்தையுமாவாரா? இவரைப்பற்றிப்போதிக்கும் மதஸ்தர் எவ்வளவு இரக்கமுடையவராக இருப்பரோ நினைப்பிற் சகிக்கமுடியவில்லை. அறிவற்ற மிருகங்களையும், அறிவற்ற ஏழைகளையும், இம்சிக்க இவர்கள்கொண்ட கடவுள் குணமாகிய கொடுந்தண்டனையை உபயோகிப்பதில் அஞ்சுவார்க ளென்பதற்கு இடங்காணோம்.

இவர்களைப்போலவே சிவபராக்கிரமம், விஷ்ணு பராக்கிரமம், சுப்பிரமணியர்பராக்கிரமம்,கணபதிபராக்கிரமம், சத்திபராக்கிரமங்களை உலகத்திற் பரப்ப பிரயாசை யெடுத்துக் கொள்ளும் உத்தம வித்துவான்களும் மிகவும் ஜீவகாருணிய முடையவர்க ளாகவே இருப்பார்க ளென்பதிற் கென்ன ஆக்ஷேபம்? பல விதத்திலும் உண்மையாக ஆத்மாக்களுக்கு நற்குண, நற்செய்கை, நன்ஞான முதலியவைகளைப் போதிப்பவர்போன்று வெளிப்போந்து, துர்மத, துராசார, துரகங்கார, துராபிமானாதிகளை யேற்றுமவர் துஷ்டப் பிரவர்த்திகளே யல்லாது உபசாந்தமூட்டும் சாதுக்களாகார்கள். உண்டவீட்டிற்கு இரண்டகஞ் செய்யும், துன்மார்க்கர்களைச் சாதுக்களாக நினைப்பது,சங்கடத்திற் கிடமேயாகும். அறக்கருணை, மறக்கருணையென்னு மிரண்டு முடையானை ஈசனென

லைப்போலி ஞாயங்கள் காட்ட முயல்வார்களாகுலும், அவை கொள்ளத்தக்கனவாகா? நிராபராதிகளேயும் தன் சாமார்த்தியத்தைக் காட்டும்பொருட்டும், தன்புகழை நிலைநாட்டும் பொருட்டும், தீராத் துன்பத்திற் காளாக்குகை தெய்வத்தன்மைக் கழகாகுமா? கடவுளென்பான் ஜனனமரணுதி அவஸ்தைகளும், காமக்குரோதாதி குணங்களும், விருப்பு வெறுப்பாதிசெயலும், நாமரூபாதி பொருட்பேறும், இல்லாராகி இருத்தல் ஞாயமாகும். அத்தகையார் சிலரை வாழ்வித்தும் சிலரைக் கோபித்தும், நடத்துபவராகார். அன்போடும் ஆபத்தைத் தீர்த்துக்காக்கும் தாய்தந்தையர் இருக்கவும், அறியாமையாலும் அடங்காமையாலும் துஷ்ட கிருத்தியஞ் செய்து, துயர்க்குள்ளாகும் சிறுரைப்போன்று, உயிர்கள் துன்பப் படுகிறார்களேயன்றி வேறில்லையென்பதே நிச்சயமும் நியாயமுமாகும். கடவுள் உலகை முதல் முதல் சிருஷ்டிக்கவேண்டிய காரணம் என்னவென்று ஒருவர் கேட்கும் வினவிற்கு மீளவும் ஆட்சேபம்பெறுத சமாதானஞ் சொல்லுகிறவரையில், உலகம் சிருஷ்டியென்பது நிலைபெறுத நிரர்த்தக வசனமேயாகும். அன்றியும் இம்மதத்தினர் லட்சம் கோடி கணக்கான திரவியங்களைச் செலவிட்டு, ஆலயங்களும், தேரும், ஆபரணங்களும், விக்கிரகங்களும், புதுக்கி- நேததிரோச்சவாதிகளும் செய்து, அவரவர் தம்மதச் சனங்களுக்கு நம்பிக்கையுண்டாக அவரவர்களுக்கு வேண்டிய சவுகரியங்களும் செய்கிறார்கள். இப்படிச் செய்வதில் இந்துக்கள் செய்யும் குளம், சாலை, சத்திரம், அன்னதானம், முதலியன சிலவிடங்களில் பலருக்கும் உபயோகமாகுலும் பலவிடங்களில் பொதுப் பிரயோஜனமாக விராமலிருப்பதோடு வேடிக்கைக்காகச் செய்யும் வீண்செலவுகள் வெகுவாக விருக்கின்றன. கரையான்புத்தியற்று தன்வமிசத்திற்கும், இதரவுயிர்களுக்கும், தீங்கிழைக்கும் பாம்பிற்கிட மாக்கியதுபோல இந்துக்களில் அனேகர் செய்கிறார்கள். இந்துக்களில் அனேகர் அசௌகரியங்களை அதிகமாக விளைவித்து, அனந்தவுயிர்கள்படும் கஷ்ட நிஷ்டூரங்களைப் பக்தியாகவும் சிரத்தையாகவும், புகழ்ந்து பேசி, எவரையும் ஏமாற்றுகிறார்கள். மகம்மதியர்களில் ஏழைகளின் அன்னவஸ்திரத்திற் கடுத்த செலவேயல்லாது அதிக வீண்செலவு இருக்கக்கண்டிலம். கிறிஸ்தவர்கள் தம்மதம் பெருக்கப் பாடசாலைகளையும், வைத்திய சாலைகளையும், அமைத்திருப்பதோடு மார்க்கவிருத்தி செய்யும் யோஜனையோடு ஆலயத்திற்கும் சிலபொருள் செலவிடுபவராக இருக்கிறார்

கள் எல்லா மதத்தர்களாலும் கடவுள் ஒருவர் உண்டெனவும், பாவஞ்செய்யலாகாதெனவும் போதிக்கப்படுகிறதென்ப தனுபவம் அன்றித்தண்டிப்பானொருவனுண்டா யிருத்தலால் பொய்,கொலை, களவு, விபசாரம், பொறாமை, சூது, குடி, துரோகம், வீண்பெருமைகாட்டல் ஆதிய பாதகங்களாகையால் மனிதர் அதைச் செய்யலாகாதெனப் போதிப்பவர்கள் ஆனாலும், தத்தம்மதத்திற் சேராதவர்கள் மேற்சொல்லிய பாவங்களைச் செய்யாதவரா யிருப்பினும் மோக்ஷம் பெறுதற்கிடமில்லை என்பவர்கள். அன்றித் தத்தம்மதாசார குருக்களையும் தாங்கள் கூறும் வேதவசனங்களையும் தாங்கள் கொள்ளும் கடவுளையும் அங்கீகாரஞ் செய்யாது வேறுபடுவோரை நரகத்திற்கும்போகுமவராகவே கூறுவர். இதன்றித்தம்மதத்தை ஏற்காதவர்களைத் தத்தம் மதத்தினர் செய்யும் இம்சைகளையெல்லாம் புண்ணியமென்றே புகல்வோர்கள். இம்மதத்தினரெல்லாம் கடவுள் சொரூபத்தையும், உலகின் வரலாற்றையும், பந்தமுண்டாகும் காரணத்தையும், மோக்ஷத்தின் இலக்கணத்தையும், இவற்றையெல்லாம் பெறுபவனாகிய ஜீவனின் லட்சணத்தையும், மயக்கமற உணர்ந்து உணர்த்துபவர்களல்லர். நானென்பதற்குப் பொருள் தெரியாமலே, ஆயாமலே நாமென்றும் அஞ்ஞானிகளேயென்று சிலரும், நாமென்றும் பாபிகளேயென்று சிலரும், நாம் கிஞ்சிக்கனரே என்று சிலரும், ஒப்பிக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துவோர்கள். இறந்தவர்கள் கூறிய நூல்களையே பிரமாணமாகக் கொள்பவரே யல்லது இருப்பவர்கள் கூறுகிற நூல்களை யுக்தி யனுபவத்திற்கு ஒத்தனவாக விருப்பினும் கடவுளால் கொடுக்கப்படாதவை எனவும் அவற்றைக் கேட்கவும், பார்க்கவும் படாதென்பவர்கள்.

தேவவசனம் யுக்தி யனுபவங்களுக்கு விரோதமாகிய அசம்பாவித அவாந்தரவப்பிரயோஜனச் சொல்லாகவே இருக்கவேண்டுமாம். ஐயோ இதென்ன வனியாயம்! இல்லதைச்சொல்வதே ஏற்றமென்பவர்செல்கதி யாதென தீர்மானித்திருக்கலாம் நால்தியேயன்றோ? இவர்களில் தேவனை என்றும் அரூபி என்பவர்கள், தேவனை எப்படிக்கண்டு, எப்படிப் பேசினானெனக் கொண்டார்களோ? தெரியவில்லை. மோசே யேசுமுதலியோராலும், மகம்மதாலும் எழுதப்பட்டவைகளைக் கற்றுத் தெரிந்திருந்தும், அவற்றை தேவ வசனமாகவும், மற்றவர்கள் எழுதியதை மனிதவசனமாக

வும், சொல்லுவோர் தம்மால் எவ்வளவு தூரபிமானம் இருக்கிறதென்பதனை உணருபவராகக் காணப்படவில்லை. இவர்களெல்லாம் உலகப்பொருள் வரவையும், தம் கொள்கை நம்புவோரால் தமக் குண்டாகும் பெருமையும் பெறப் பாடுபடுபவர்களன்றி உண்மையில் உயிர்கள் இம்மைக்கும் மறுமைக்கும், மும்மைக்கும் செய்ய வேண்டியவைகள் எவையெனக் கண்டுபிடித்து தாமும் ஒழுகி அந்நியரையும் நடத்துவோர்கள் அல்லர். ஆயினும் அவர்கள் கூறும் பாவங்களி லிருந்து விலக வேண்டியது ஒவ்வொருமனிதனுக்கும் கடமையாம் என்பது தப்பல்ல. இதை எந்ததேசத்தாரும் ஒப்புக் கொள்வதே யல்லாமல் நீந்தியார்கள் என நினைக்கின்றேன். ஏனெனில் பொய், கொலை, களவு விபசாரம்; துராசை, குரோதம், பொறாமை, சூதாட்டம், வஞ்சனை, களியாட்டம், துரோகம், துராங்காரம், முதலியன செய்வோன் இகத்திற்றானே நிந்தையும் துன்பமும் அடைவது பிரத்தியக்ஷமாக இருக்கையில் இக்குணங்களை நல்லவையெனை எவர்புத்தியும் எவர் மனசாக்ஷியும், ஒப்பிக்கொள்ளு மென்கை ஒருபோதுமடாது. இத்துர்க்குணங்களுள்ளாரை வெறுக்காதவர்கள் அரசர் முதலிய எவரும் இலரேவர். இக்குணங்க ளில்லாதவன்பால் நீதியும், நியாயமும், மானுஷீகத்துவமும், அமைதியும், கடவுள் பக்தியும், ஜீவர்களிடத்து அன்பும் இல்லையென லாகாது. மேற் சொல்லியதீக்குணங்களை விடுதலும் நற்குணங்களைப்பழகுதலுமே சித்த சுத்திக்கு ஏது அல்லாமல், நற்குணங்க ளில்லாத வீணாசார வேஷபூஜைகள், சித்த சுத்திக்கு ஆதாரம் ஓர்போது மாகா? அந்நியரைப் பழிக்கு மகங்காரக் குரும்பிற்கு ஆதாரமாகிய ஜாதி மதாசார கட்டுதிட்டங்கள் நீதியும், நியாயமும், ஞானமும், பக்தியும், புத்திய மாகாதெனவே ஆகும். இந்துக்களின் வேதத்தில் பிரமத்தின் இலக்கணம் சுஜாதி, விஜாதி, சுவகத பேதரகித அகண்ட பரிபூரண சச்சிதாநந்தரதிகளென கூறப்பட்டிருக்கின்றது. ஜீவன் இலக்கணமோ அவித்தியா பிரதி பிம்ப அவபாச சைதன்னியமாக விருக்கின்றது. ஜனன மரண சம்சார துக்கத்தையே மித்தியா பந்தமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஜனன மரண சம்ஸார துக்கங்களின் அத்தியந்த நிவிர்த்தியோடு பரமானந்த பிராப்தியையே மோக்ஷமாகக்கொள்ளப்பட்டு இருக்கிறது.

மார்க்கமோ அஞ்ஞான நாச ஹேதுவாகிய சத்ஸாஸ்திர, சத்குரு வாக்கியங்களின் சிரவண மனன நிதித்தியாச ஞாதிகளாகக் கொள்ளப்பட்டிருக்கின்றது. சிரவணஞ் சத்குருபால் கேட்க வேண்டியிருத்தலால் சத்குரு துர்க்குணத்தைச் சேர்க்காராகையால் மெய்க்குரு சேவைக்கு சன்மார்க்கன் காரணமாக விருக்கின்றான். சன்மார்க்கத்துக்கோ துர்க்குண பிரவர்த்தி ரகித நிராசை காரணமாக விருக்கின்றது. நிராசைக்கோ உடலுலக வாழ்வின் நிலையாமையையும் சரீரத்தின் நீசத் தன்மையையும் எண்ணிப் பார்ப்பதாக விருக்கின்றது. இப்படியாக உடலினது நீசத்வத்தையும் உலக வாழ்வின் நிலையாமையு முணர்ந்து மோக்ஷம் பெற நினைப்பவன் அந்நியருக்கு நன்மையையுண்டாக்க, உபகாரமாதி குணங்களை மேற்கொளவேண்டி யிருக்கிறது. அல்லாமல் சாதியாசாரமும் மதாசாரமும் மேற்கொள்வது பயனாகக் காணப்படவில்லை. ஆகையால் ஜாதியாசார மதாசாரங்கள் சித்தசுத்திக்கு ஹேதுவென்னை சிரிப்புக்கிடமாம். உலகை வஞ்சித்து தாம்மேம்பட்டு வாழ நினைத்துக்கொண்ட விபரீதக்கொள்கைகள் மோக்ஷ சாதனமாகவும் உலோகோபகாரமும், ஆவதெங்ஙனம்? மோசத்தையே மோக்ஷ சாதனமென அவசரத்தால் அறிகிறார்கள் போலும். நித்திய கருமானுஷ்டானத்திற்கும், வேத அத்தியயனத்திற்கும் அதிகாரியாகாத ஸ்திரீ சூத்திரர்கள் பிரமசரியத்திற்கு அருகராவ தெங்ஙனம்? இங்ஙனம் பிரமசரியத்திற் கருகர் அல்லாதார் கிரஹஸ்தராதல் எங்ஙனம்? இவ்விரண்டுமில்லாதார் வானப்பிரஸ்தாசிரமமும் சந்நியாசமும் பெற வழியுண்டோ? இல்லாத போது மோக்ஷமென்பது பிராமணருக்காக்கி, மோசமென்பதை ஸ்திரீ சூத்திராதியோர் பெறுபவராகவே முடிகிறார்கள். வேதமல்லாத இதர பாஷாகிரந்தங்கள் இல்லையோ? அவற்றைப் படிக்கலாகாதோ? அவற்றில் அவ்வேதக் கருத்துகள் அடங்கி நிற்கவில்லையோ எனச் சிலர் ஞாயங்காட்டுவர். இவற்றைப் பயிற்றுவிக்கும் அதிகாரம் பெற்றவர் யாவர்? பிராமணரல்லாத ஏனையோருக்கு ஓதுவிக்கும் குருஅதிகாரம் பெற இடமேது? பெற்றால் அரசராதியோர்கள் விடுவார்களோ? ஒருக்கால் விடினும் "அம்பட்டன் குப்பத்திற்கு பள்ளிவாத்தியார்" எனப்பழிக்கும் பழமொழியை உபயோகியார்களோ? மேலுங் காதாலும் கேட்க போதிப்பதென்றால், அவனுக்கு வேதாகசியம் எப்படித் தெரியுமெனக்.

*கேட்கும் கேள்விகளை பாடங்கற்போர் சித்தங் கலங்க உரையிடா திருப்பார்களோ?*

பாஷாக்கிரந்தமும் உபநிஷதார்த்த பூர்த்தியை யுடையதாகவே இருக்கிறதினால், பாஷாகிரந்தம் கற்ற சூத்திரனும் குருவாகலாமே என ஒப்புவாராயின், அப்போது உபநிஷத்தைப்படிக்க அல்லது கேட்க அல்லது உதாரணமாக எடுத்துக்கூறல் ஆகாது எனல் ஏனோ? உச்சாரணைப் பிழையால் பாவம் சித்திக்கும் என்பாராயின் சூத்திரனுக்கு அத்தியயனம் செய்வித்திருந்தால் அப்பாவம் அவனுக்குச் சித்திக்க இடமிராதல்லவோ? உபநிஷத்துக்களின் அர்த்தத்தை உணரும் வல்லமையுள்ளவன் அத்தியயனம் கற்க அருகனல்லனோ? அநுபவத்திலோ வேதம் அல்லது வேதாந்தம் சிறிது மறியாத பிராமணர் வெகுபேர் உண்டு எனல் ஒருபோதும் பொய்யாகாது. இவர்களுக்குஞ் சோடசோபசாரஞ் செய்ய விதியாதாலமைந்ததோ அறியோம். சூத்திரரிலும் சிலர் கற்றோராகக் காணப்படுகின்றார்கள். இவர்கள் அப்பூஜியதையைப்பெற இடமுண்டோ? இல்லை. ஏனெனில் மூவருணத்தாரின் ஏவலல்லாது, பிற பெற அதிகாரம் இல்லாத சூத்திரன் குருபட்டம் பெறல் கூடாமையால். அநுபவத்திலோ சூத்திரரிலும் சந்நியாசிகளும் சமுசாரிகளும் காணப்படுகின்றனர்' இவர்களிலும் கந்தாசாரகதை படிப்போர் பெரும்பாலார். சாதி, மதம், குலம், கோத்திரம், சூத்திரம், ஆசாரம் முதலியன விட்டு எச்சிற் பொறுக்கும் சோம்பேறிகள் ஓர் பயனும் பெற்றிலர் என்பதையாவரும் உணர்ந்திருக்கிறார்கள். ஜாதியை விடுதலே சர்வபிரயோசன சித்தியென மதிப்பவர் மூடரேயாவர். சிலர் ஞானமான சிலவார்த்தை பேசின மாத்திரத்தில் எச்சிற்பொறுக்கியாக ஏற்படவேண்டும் என்பார்கள். இல்லையாயின் கருமம், பக்தி, போகாதிகளைக் கடைப்பிடித்தொழுகவேண்டுமென்பர். இத்தகைய சந்நியாசிகள் வாதம் துர்வாதமல்லாது ஞாயமாகாது. தொழிலால் சாதியும், கொள்ளல் கொடுத்தலால் குலமும் கோத்திரமும், நேர்ந்ததென அறிவதே மேலான அறிவாகும்! ஒருவரை யுயர்த்தியும், ஒருவரைத் தாழ்த்தியும், பேசுவதற்கு அன்று; அப்படிப்பேசுவது தகாதென்பதே ஆராய்ச்சியாம், என்பதற்கு ஐயமில்லை. ஜாதியும், குலமும், கோத்திரமும் இடையில் மனிதர் ஏற்படுத்திக் கொண்டதல்லாது, இது அநாதியாகிய மனிதவியக்தியில் சமவாயசம்பந்தமாக உடன்பிறந்

திருக்கிற தெனல் ஞாயவிருத்தமாம். உலகில் கற்று, நல்லவழி நடந்து, யாவரையும் நடத்துவிக்க, பாடுபடுவர்களே மேலோரும் பெரியோரு மாவர். அதுபோலவே கல்லாதவரும் கபடிகளும் தாழ்ந்த மூடசூத்திரரே என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆடை, வேஷம், ஆசாராதிகளால் உயர்ந்தோராகப் பேசுவோரைப்பதரென நினைத்தல் பயனுடைத்தாம்.

"கல்லாவொருவன் குலநலம் பேசுதல் நெல்லினுட்பிறந்த பதராகும்மே" என்பது நீதியறிந்த அரசனின் நிறைமொழியாம் அன்றோ? இகற்றின்றுனே பயனைத்தரத்தக்க தருமார்த்த காமமோக்ஷ சாதகத்தொழில்கள் இருக்க இவற்றைக்கைவிட்டுத் தேக மிறந்தபின் வேறு லோகங்களில் பயனை அடைவதாகக் கற்பித்துக்கூறும் மனவாக்குக்காயங்களின் தொழிலாகிய கருமம்பக்தியை விரும்பலென்னா சிலாக்கியமோ? அறியோம். இனி ஸ்திரீ சூத்திரர்கள் நித்திய நைமித்தியகமாதி கருமங்களை வேதத்திலதிகாரம் பெற்ற ஜாதியாருக்கே இருக்க விட்டு, தருமார்த்த காம மோக்ஷமடைய கற்பிக்கும் நூல்களைக்கற்று, தமக்கு இயற்கையில் வாய்ந்துள்ள மானுஷீக இணையிலாச் சுதந்திரத்தைக் கையாளத்தக்க வழிகளைக்கண்டு கடைப்பிடித்து, ஒழுகுதலே எக்காலத்தும் பெறத்தக்க கருமமாம். உயிரோடிருப்பார்க்கு, உணர்வைத்தருத லொழித்து, செத்தாரைச்சொர்க்கத்தில் சேர்க்கப் பாடுபட்டு, தமக்கு வரும்படியையும், பூஜியதையையும், தேடிக்கொள்வோர் கருமத்தைக் கைவிடாமையானது ஸ்திரீ சூத்திராதியோர்க்குக் கனநஷ்டமாகும். அதனால் அக்கருமங்களை ஏற்றல் வேண்டும். எத்தகை ஆசாரம், பேதத்தை யொழித்து நித்தியானந்த போதத்தை யுண்டாக்குமோ அத்தகையாசாரமே சத்திய ஆசாரமாம். செத்தாரைச் சொர்க்கத்தில் அல்லது பிதுர்லோகத்தில் அல்லது கைலாசாதி பதவிகளில் சேர்க்குமிவர் மந்திர தந்திர ஆசார உபதேசங்கள் எத்தகையார் ஏற்கப்பாலதோ ஆராய்மின். உயிரினுண்மையும், தேகாதி தேசகால வஸ்துக்களின் இன்மையையும் உணருமறிவுடையார் இயற்றற்பாலதேயோ? "நான்றுன் மூடன் ஆகையால் இத்தாசி என்னைத்தான் கும்பிட்டாள்" எனப் பெருமைக்காகக் கலகமிட்ட நால்வர்கதையைப் போன்று, நாமஞ் ஞானிக ளாகையால் சதாகாலமும் நாம் கருமஞ்செய்ய வேண்டியதேயென்போர் கதையையும் இருக்கின்றதெனலாமன்றோ? நாம்

ஞானியாகல் ஆகாதென்பது ஏனோ? எவர் லாபத்திற்கோ அஞ்ஞானப்பட்டம் அங்கீகரித்துக் கருமத்தைக் கைவிடாதொழுகல் தெரியவில்லை. ஜாதி, குலம், கோத்திர சூத்திராதிகளை மறந்த அல்லது தெரியாத மூடர்களிடத்திலும், பணத்தாசையால் சிவகோத்திர விஷ்ணுகோத்திரங்களை இயற்றிக் கருமாதிகாரியங்களை நடத்துவோர் யாவருக்கும் அநாதியாகிய சிவகோத்திர, விஷ்ணுகோத்திர, பிரம கோத்திரங்களை வைத்து இடையில்வந்த கோத்திர சூத்திரங்களை விட்டுவிடக் கற்பிப்பார்களானால், எவ்வளவு பேத ஜாதிமத குலகோத்திரங்க ளொழியும். பிரமத்திற் கபின்ன ஜகத்தில் கோத்திர சூத்திர ஜாதிமத பேதத்தின் கற்பனையாலன்றோ அஞ்ஞானமும், ஜீவத்துவமும், சொர்க்க நகரமும், பாபபுண்ணியமும் சம்பவித்து நிலைபாகின்றன. இதனைவிடுதலே பெரும்பேறு எனில் இதையகற்ற வேண்டுவது ஒவ்வொருவருக்கும் கடமை யாகாதோ? அழியாச் சிவப் பிராப்தியினும் அழியும் போகப்பிராப்தி அதிகமாகுமோ? திண்டிக்குப் பின்னரன்றோ சேர்பதவியின் யோஜனை யென்னில், யாவருக்கும் திண்டிக்கு வேண்டுவன தேவையே யன்றோ? இங்ஙனம் யாவருக்கும் திண்டியும் சேர்பதவியும் வேண்டியிருக்க, சிலருக்கே திண்டிக்குரிய வரும்படி கருமமும், சேர்பதவிக் குரிய வேதவேதாந்த வாராய்ச்சியி னதிகாரமும், வகித்துக்கொள்ள விடம் தருதலேனோ? "ஜாகரிதே பிரம்ம சொப்னே விஷ்ணு சுஷுப்தௌ ருத்ரஸ் துரியமக்ஷரம்" என்பதால் உலகிலுள்ள ஜீவகோடிகளெல்லாம் பிர்ம கோத்திரம், விஷ்ணு கோத்திரம், சிவகோத்திரம், பரப்பிர்மகோத்திரம், ஆகியிருத்தல் உண்மையன்றோ? யாவரும் விஷ்ணு கோத்திரம். சிவகோத்திரம், பிரம கோத்திரங்களையும் பரப்பிர்ம சூத்திரத்தையும் தரிப்பதை விடுத்து வஞ்சனையால் இடையில் கற்பித்துக்கொண்ட கோத்திர சூத்திரங்களை ஏற்கின், அதுஉண்மையும் சிரேஷ்டமுமாகுமோ? உள்ளதனைவிடுத்து இல்லாததும், பொல்லாததும், நில்லாததுமாகிய, விபரீத வீண் கஷ்ட நஷ்டங்களை மேற்கொள்ளல் எற்றிறகோ? ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் செத்தாரை உயிருடையராகவும், மந்திரங்கள் செய்தது நமக்கும் செய்யு மென்னும் அபூதகற்பனை யலங்காரக் கற்பனைக் கதையை நம்பியன்று மந்திரங்கள் பிதுர்லோகத்திற்குப்போய்த் தம் பிதுர்களையழைத்து வருவதாகவும், பிதுர்களைச் சொர்க்கத்திற் கொண்டு போய் விடுவதாகவும் நினைக்கிறார்கள்.

உண்மையில் " மந்திரத்தால் மாங்காய் விழாதென்ற" பழமொழி மெய்யன்றோ? மரத்தின் மாங்காயை மடியில்விழத் தன்னிடம் வரச்செய்யாதமந்திரம் பிறர்க்களை வரச்செய்யுமென்கை பித்தேயல்லது வேறென்ன? கல்லுக்கும் கட்டைக்கும் பிராண பிரதிஷ்டை செய்யும் மந்திரம் கிழவுடலிலிருக்கும் பிராணனை இறந்துபோன வயதுடம்பிற் செல்லச் பிரதிஷ்டை செய்துகொள்ள லாகாதோ? ஆ! ஹா! செய்துகொள்ளலாம். பூர்வம் பரகாயப்பிரவேசம் செய்திருக்கிறார்களென, அஷ்டமாசித்திக் கதையும் அஷ்டகர்மப்பயனையும் காகிதங்களிற் காட்டுவார்களேயன்றி, உண்மையில் அறியார் கைப்பொருள் கவர்தலாகிய சித்தி ஒன்றையே யன்றி, மற்றவையைக் காட்டுவரைக் காணோம். ஒருவன் தன்னுடலை யணுவாக்கிக் கொள்ளின் ஏனையோருக் கிடரில்லை யென்பது உண்மையே; இப்படிச் செய்தாரைப் பிரத்தியக்ஷத்தில் கண்டிலம். ஒருவன் உலகை யணுவாக்கிவிடின் உயிர் பயிராதிகள் என்னகதியையடைந்திருக்கும் என்பதை யோசிக்கவேண்டியதே. இதன்றி ஒருவன் தன்னுடலை மகிமாவால் விசுவரூபங்கொள்ள அனுமாரைப் போலவும், விஷ்ணுவைப் போலவும், பெருக்கிவிடின் அப்போது ஏனையோர் இருத்தற்கு இடம் எங்கேயுண்டாம? உலகமெல்லாம் வயிற்றிலடங்கி யிருக்குமெனில், வயிற்றினுளடங்கிய ஒருவன் வெளியிற் பெருத்திருக்கும் உருவத்தினுடைய முகத்தை எவ்வாறு தரிசிப்பான்? தரிசித்திருக்க விடமுண்டா யிருக்குமா? இவன் வெளியில் உலகத்திலும் விஸ்வரூபத்தின் வேறிடத்திலும் இருக்கினன்றோ தரிசிப்பான். கடவுண் மகிமையையும், பெரியோர் மகிமையையும் அஞ்ஞானிகளாகிய நாம் அறியோமெனில் இவற்றைக் கேட்பதாலும், கேட்பிப்பதாலும், நம்புவதாலும், நம்பச் செய்வதாலும், நமக்குவரும் பிரயோசனம் என்ன? ஏமாற்றமன்றோ? இவற்றைப்போலவே, இலகிமாவும், கரிமாவும், பிராப்தியும், பரகாயப்ரவேசமும், ஈசுவரத்வமும் அமையுமென வறிதல் வேண்டும். நல்லறிவுடைய சீடனே! இவையெல்லாம் மேற்படி பிர்மோபநிஷத்திற் கூறிய விஷ்ணு ருத்திராதியர் நனவு கனவு. சுழுத்திகளிற்காட்டும் சர்வதேக, சர்வலோக, சமஷ்டிஞான சொருபத்தின் பிரவிர்த்தி, நிவிர்த்திகளின் தத்துவ உருவங்களின் உருவகக்கதைகள் அன்றி வேறல்லவென் றுணருவாயாக. இங்கு யான் உரைத்த அஷ்டமாசித்திகளின் பாவந்தான், நீ அவனவ

எழுவகை யெனவறியும் அறிவிற் ககோசரமானாலும், அத்தல ஞான நிஷ்டாபரர்கள், நிதரிசனமாயறிகிறார்கள் என்பதிற் றடையில்லை. சுருங்க உரைத்த இக்கருத்தையறிய விரும்புவோர், நல்லோர்பாற்கேட்டுத் தெளிவி னறியக்கூடியதே யன்றி, சொல்மாத்திரக் கற்பனைக்கதையன்று. ஆகையாற் சீடனே! புராணங்களிற் கூறிய எல்லாவிஷயங்களுக்கும், கருத்து வேறாயிருத்தலினால், கதையை நடந்ததாக நினைப்பது மூலவிவேகமாம். மூலமாகக் கொள்ளினும் முன்பின்கூறியுள்ள விஷயங்கள்யாவையும் கூட்டிக் கருத்தைக் கிரகிக்குமிடத்து நல்லஞானமே யுண்டாகுமென்பதில் ஆக்ஷேபமில்லை. முன் பின்னுள்ளவைகளை விடுத்து அவற்றின் கருத்தையும் விட்டு விபரீதமாகத்தாங்கொண்ட கருத்தைச்சாதிக்க முயலின்வீண்கலக்கமும், விருதாப்பிரயாசையும்,தீராச்சந்தேகமும், தேகக்ஷ்டமும், தேடிம்பொருள் நஷ்டமுமாகுமே யல்லாது உண்மைஞான உதயமாகாது. பூர்வமெழுதிய எல்லாக் கிரந்தங்களினும் தேவிசொல்ல, சிவன்சொல்ல, விநாயகர் வரமருள சுப்பிரமணிய ரடியெடுத்துக்கொடுக்க, சரஸ்வதி நாவிலமர, பிரமன்சொல்ல, ஆங்கிரசர் சொல்ல, வருணன் சொல்ல, பார்வதி கேட்க, கருடன்கேட்க, சௌனகர்கேட்க, சூதபுராணிகர் கேட்க, அனுமார்கேட்க, வசிட்டன் கேட்க, சப்தஇருடிகள்கேட்க, நந்தி கேட்க, நாரதர்கேட்க, நைமிசாரணியர்கேட்க, சிவன், பிரமா, விஷ்ணு அல்லது மற்றவர்கள் சொன்னாரென எழுதிய வித்வான்கள் தத்தம் கருத்தெனக் கூறாதுவிடுத்ததும் இதுபற்றியே.பிருதிவுவென்னும் பூமாதேவியும், அப்புவென்னும் கங்காபவானியும், தேயுவென்னும் அக்கினிபகவானும், வாயுவென்னும் காற்றுப்பகவானும், சூனியமாகிய ஆகாசவாணியும், சூரியபகவானும், சந்திரபகவானும், மேஷ ரிஷபாதிராசிகளும், சூரியன் சந்திரன் முதலாகிய நவக்கிரகங்களும்,அசுவனி பரணிமுதலிய நட்சத்திரங்களும், ஜாக்கிராவஸ்தை யென்னும் பிரமதேவனும், சொப்பனவஸ்தையாகிய விஷ்ணுவும், சுஷுப்தியவஸ்தையாகிய உருத்திரனும், பிரகிருதி என்கிற விநாயகரும், ஞானேந்திரிய அந்தக்கரணமெனும் ஆறுமுகக்கடவுளும், அஞ்ஞானபூமியாகிய சப்தரிஷிகளும், சொல்லவும் கேட்கவும்இருந்தார்களென எந்தப்புராணங்களினும் கற்பிக்கப்பட்டிருக்கின்றது.

மண், நீர், அனல், வளி, வான், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் என எதிரில் காணப்படும் அஷ்ட பதார்த்தங்கள் அஷ்ட

வசுக்களெனவும், தேசங்களெனவும், சொல்லப்படுகின்றன. இவ்வெட்டினது சகாயகலப்பால் பௌதிக சரீரங்கள் உண்டாகின்றதினால் சூரியவம்சத் தாசர்கள் கதைகளும், சந்திரவமிசத்தாசர்கள் கதைகளும்,நட்சத்திர அம்ச புத்திரர்கள் கதைகளுமே புராணங்களாக முடிந்திருக்கின்றன. ஆழ்ந்து யோசிப்பவர்க்கு மேற்சொல்லிய மண், நீர், அனல், வளி, வான், என்கிற பிரம, விஷ்ணு, ருத்திர, மஹேஸ்வர சதாசிவங்களும், சூரிய, சந்திர, நட்சத்திரங்களென்கின்ற சூரியவமிசம், சந்திரவமிசம், நட்சத்திர வமிசங்களும் மேலாதார அண்டமென்னும் பிரமாண்டமாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறதினால் "ஜாகரிதே பிர்மா" எனவும், இவற்றின் வாசனையாகிய பிரமாண்டங்களைக் குட்சியி லடக்கிக்கொண்டு இருப்பதால் "சொப்பனே விஷ்ணு" வெனவும், இவ்வண்டங்களின் தோற்றத்தை மறைப்பதால் "சுஷுப்தௌ ருத்திர" வெனவும் சொல்லப்படுகின்றன. நனவு, கனவு, சுழுத்திகளின் சமஷ்டியுருவாக விருந்து விளங்கி விளக்கும் ஞானத்தை விட்டு, சராசர பிரபஞ்சத்தின் இருப்பு அமையாதாகையால் இவற்றின் அபிமான தேவதைகளாகிய பிரமன், விண்டு, ருத்திரன் அல்லது அவர்கள் சக்திகள் அறிவிக்க அல்லது கூறஅறிந்தோம் கற்றோம் எனப்புராணங்கள் கற்பித்திருக்கிறார்கள். இதையறியார் தம்மைத் தேகமாக அறிவது போலத் தேவர்களையும்,தேவதேவர்களையும் தேகமாக நினைக்கிறார்கள். புராணமுதல் வேதசிரசாகிய உபநிஷத்துக்கள் வரைக்கும் இப்படியே ஒருவருக்கொருவர் சொல்லிய விஷயமாக எழுதியிருக்கிற ஞாயத்தால் நாளைக்கும் ஓர் ஸ்தலபுராணம் அல்லது தீர்த்த மான்மியம், அல்லது ஓர் தேச, கால, வஸ்து விசேஷண முதலியன தெரிவிக்க எழுதுவோர் எல்லாம் சுனக புத்திரர்களாகிய சவுனகாதி முனிவர்களுக்கு, சூதகத்தா லுண்டாகிய சூதபுராணிகர் சொல்லினாரென வெழுதி முடிப்பார்கள். அல்லது அஞ்ஞானக் காட்டில் சக்கிரம்போலும் உழலும் நெஞ்சையுடைய நைமிசாரண்ய முனிவர்கள்கேட்கச் சூதபுராணிகர் செப்பினாரெனச்செப்புவர். இதனாலே பிரமன்முதல் யாவரும் மனிதர்போல இருந்தார்களென்று யாவரும் நினைக்க இடமுண்டாகிறது. உண்மையில் அப்படிக்கில்லை. அப்படிக்கிருந்தால் ஜாக்கிராவஸ்தையில் யாவருக்கும் தேவர்கள் முதல் தேவதேவர் வரைக்கும் பிரத்தியக்ஷமாகி இருக்கலாம். பிரத்தியக்ஷமாகிச் சொன்னாரென்று

சொல்லுபவர்களெல்லாம் அசரீரியாகவிருந்தும், சொப்பனத்தில் வந்தும், நிஷ்டையிலிருந்து கண்களைமூடிக் கொண்ட காலத்தில் தரிசனமாகியும், சொன்னதாகச் சொல்லுகிறார்கள். பனிமைநம்பி உழுதவன் கதையைப்போல, இவர்கள்தேவர்களைக்கண்டு வரம் பெறப் பூசிப்பது,நிஷ்பிரயோஜன மாகுமென நினைக்கிறேன். தத்துவ ஆராய்ச்சியால் யானெனதெனும் அகங்காரமமகாரம்இறக்கப் பெறலால் நாம்இறப்பவர்கள் தேவர்கள்அமிர்தர்ஆகையால் அமரரென்றுகூறப்படுகிறது. நான் என்னும் ஆணவதேகவான்மபுத்தியைத்தவிர ஜீவான்மாவேறில்லை. இதுவே அஞ்ஞானத்தால் ஜனன மரண துக்க மனுபவிக்கிறதெனக் கற்றோர் கூறுவார். இது முத்தி காலபரியந்தம் தேகோகமெனவே நிற்குமென்ப. இத்தகை ஞானத்தையே அஞ்ஞானமென்ப. இதனாற்றானே ஜனன மரணாதி துக்க சமுசாரப் பிராப்தி யுண்டாகிறது. இவ்வஞ்ஞானம் சொரூபஞானத்தால் நாசமாகிறது. சுவசொரூப ஞானத்தையே பரமசிவம் அல்லது பிரமம் அல்லது பரமபதநாதன், அல்லது பரமாத்மாவெனப் பகர்வர். அதிகமாக விரிப்பதில் கற்பவர்க்கும், கேட்பவர்க்கும், சொல்லுபவர்க்கும் கஷ்டம் அதிகமாகுமென இதை இவ்வளவோடு நிறுத்தி, சுவானுபவ ஜன்னிய மயக்கமற்ற ஆப்தவாக்கியங்களே சப்தபிரமாணமென அங்கீகரித்துக் கொண்டு, இனி உலகத்தைஆராய்வாம். ஐயம், திரிபு, அசம்பாவிதமென்னும் முக்குற்றமும் நீங்கப்பெற்று, அபரோக்ஷானுபவ ஞானத்தை உண்டாக்குவதாகி, உண்மைப் பாடுபடுபவனுக்கு உண்மைப் பயனை யளிப்பதாகிய வாக்கியங்களைப் பிரபலசுருதி வாக்கியங்களென நாம் ஏற்று நடப்பதால், பேரானந்தமடைய விடமுண்டாயிருப்பதால், அவ்விதவாக்கியங்களையும் நிராகரித்தல் அழகாகாது. சிலர் வேதத்தில் சிலவற்றைக் கொண்டு சிலவற்றை விடுவதிலும், எல்லாவற்றையும் விட்டு வழக்கம்போல நடப்பதே ஞாயமென வாதாடுவர். வழக்கமென்பது எதுவோ? வஞ்சகர் வஞ்சித்து, வேதத்தின்மேல் பாரமேற்றி, நடத்திவந்த வழக்கமா அல்லது மனிதற்கு இயற்கையிலுள்ள வழக்கமா? எல்லாம் விட்டவழக்கமாகக் கொள்ளத்தக்கது எது? நாம்வேதத்தைப் பொய்யென்றேயில்லை, புராணங்களை ஒப்பாதிருக்கவு மில்லை. கடவுளை ஏலாதிருந்திலோம், இருக்கிலோம், இனிமேலும் ஏலாது இரோம். ஆனால் அசம்பாவித தேவர்களையும், அசம்பாவித பிதுர்க்களையும், நிஷ்பல

பிரவர்த்தக கருமங்களையும் எவர் சொல்லாலும், எவ்விதத்தா லும், ஏற்பாமல்லம். பயனின்றிய கருமமும் இருக்குமோ வெனி ல் ஓர்போதும் இல்லை எனல் உண்மை. எல்லாக்கருமமும் பயனு டையனவேயாயினும் பின்னுக்குப்பெரும் தீங்கு இழைப்பனவைகளே ஏலோம். விபசாரமும், திருட்டும், கொள்ளையும், அடைக்கலம் வைத்ததை அபகரித்தலும்,நம்பிக்கைத்துரோகமும்,வஞ்சனையும், பக்ஷபாதக சாக்ஷியும், பொய்பேசுதலும், தற்கால பிரயோஜனங் களைத் தருமவைகளே யென்பதில் தடையில்லையன்றோ?பிற்காலத் தில் எப்பொழுதாயினும் ஓர்போது தீங்கை விளைப்பனவாகாதிரா? ஆதலால் அறிவுடையோ ரவற்றைப் பகைத் தொழிக்கின்றனர். அதுபோலவே பந்த ஜாதி மத ஆச்சிரம ஆசார நித்திய நைமித்திக கருமாதிகளையும் முன்னிலைச்சுட்டாம் தேவதைகளையும், பந்தத் தைவிளைவிக்கப் பொய்புலகத்தைப் பொய்புடலைப் பொய்போக த்தை, பெரிதாக்கி, அஃதை மெய்யாக்கச் சாதனமாயிருப்பதால் அறிவுடையோர் யாவரும் இவற்றை இன்றியமையாக்கருமமென மேற்கொள்ளாது கைவிடுகிறார்கள்.

சீடனே! பிரத்தியக்ஷமென்பது யாவும் ஒப்பக்கூடிய பிரமா மாணமல்லவா? உலகில் எந்த தேசத்தவரும் பெண்வடிவ ஜீவர்க ளின் வயிற்றிற்றானே ஆணுரு பெண்ணுருவமாகிய ஜீவர்கள் பை யினிடமாக வாவது, முட்டையினிட மாவது, உதிக்கவறிந்திருக் கிறார்கள். கேவல புருஷவடிவ ஜீவனிலிருந்து ஒருயி ருண்டாகக் கண்டவர் இருக்கின்றார்களா? இல்லையென்பது எவராலும் மறுக் கக் கூடாத அனுபவமல்லவோ? மரங்களாலும், புற் பூண்டு, கொடிகளாலும், சிலகிழங்குகளாலும், சிலகிளைகளாலும், சிலஇலை களாலும், உண்டாகின்றன வென்பது அனுபவமே? ஆயினும் இவற்றில் சில சிலருக்குத் தெரியாதிருக்கும். வாழை உருளைக்கி ழங்கு, நாபி, கருணை, சேமை முதலியன கிழங்குகளை விதையாக உடையன. கொடிக்கள்ளி, இலைக்கள்ளி, சதுரக்கள்ளி, சர்க்கரை வல்லி ஆள்வல்லி, வெற்றிலைமுதலியன இலைகளையும் செடிகளையும் விதைகளாக உடையன. கரும்பு, ஆல், அரசு, வாதநாராயணன், பூவரசு முதலியனகிளைகளை விதைகளாக உடையன. இதுநிற்க, சரு கிலுண்டாகும் சருகுணி, அத்திப்பழ விதையிலுண்டாங் கொசுக் கள், மிருகங்களிலுண்டாம் உணிகள், மனிதரில் உண்டாம் பேன் ஈராதிகளும், வியர்வையிலுண்டாகு மவைகளென கேட்கப்படுகி

பீஜம். ஆயினும் வெளிப்படையாக யாவரும் இவ்விஷய மறிந்திருப்பார்களெனக் கொள்வதற்கிட மில்லை. எப்படிக்காயினும், சராயுஜம், அண்டஜம், உற்பீஜம், சுவேதஜம், என்னு மிவைகளுண்டாயிருக்கின்றன வென்பது அனுபவம். உணி பேனிராதிகளுக்கு வியர்வையன்றி வேறுகாரண முண்டாயிருப்பதாலும் இருக்கக் கூடுமென நினைக்கவிட முண்டாகி யிருக்கின்றது. எப்படியெனில் நீரில், கண்ணுக்குப் புலப்படாத உயிர்கள் ஓர்துளியில் நூறு நூறாகப் பூதக்கண்ணாடியில் பார்க்க விளங்குகின்றன அப்படியே பூமியிலும், காற்றிலும், ஆகாயத்திலும் இருக்கின்றன. இவற்றை வீட்டிற்குள் உண்டாம் சிறு துவாரத்தின் வழியாகவரும் சூரியகிரண பிரகாசவெளியில் மைக்ராஸ்கோப் என்னும்கண்ணாடியைக் கொண்டு பார்க்க விளங்குகின்றன. இவற்றின்முட்டைகள் எவ்விடத்தில் எப்படிசேர்க்கப்படுகின்றனவோ தெரிந்து கொள்ளுதல் அருமை. ஆயினும் இவைகளுள் புழு உருக்கள் மூவுருவாக மாறுகின்றன வென்பது மாத்திரம் அறியலாம். பச்சைநிறமுடைய ஈ என்னும் சிறுபறவை மாமிசம் அல்லது மலமாதிய பொருட்களின் மீதிருந்து புழுக்களை யீனப் பார்த்திருக்கின்றோம். அப்புழுக்கள் முதிர்ந்து அடியினின்றும் கறுத்து நீண்ட முட்டைவடிவாக அசைவற்றுச் சில தினங்களிருக்கின்றன. பிறகு அம்முட்டை வெடித்து ஈயாகப் பறக்கிறது. இப்படியே பலவகைப்பட்ட புழுக்கள் முட்டைவடிவமாகிப் பின்புபலவகைப்பட்ட பலநிறங்களுடைய வண்ணாத்திப் பூச்சியாக மாறுகின்றன. இப்படியே மழைக்காலத்தி லுண்டாகும் கம்பளிப் பூச்சிகளும் தம்மீதிருக்கும் ரோமங்களால் கூடமைத்துக் கொண்டு சிறிதுதினம் சமாதியிருந்து கறுப்புக்கோடுகளுடைய மஞ்சள் நிற வண்ணாத்திப்பூச்சியாக இருக்கின்றன. இப்புழுக்களின் உற்பத்தியை அண்டஜமாகவேனும், சராயுஜமாகவேனும் கொள்ளவேண்டியே இருக்கின்றது, சுவேதஜம் சந்தேகத்திற்கிடமே. மனிதர் மிருகாதிகளின் அக்கிலங்களிலும் புழுக்களிருக்கிறதாகப் பரீட்சித்தவர்கள் சொல்லுகிறார்கள். அப்புழுக்களே பிற்காலத்தில் மனித மிருகாதிகளாகப் பிறக்கின்றன. இவ்விதப்புழுக்களைச் சுவேதஜமாகக்கொண்டாலும் கொள்ளலாம். சுவேதமெனினும் சுக்கிலமெனினும் ஒக்கும். ஓணான், பல்லி, உடும்பு, பாம்பு, வண்டுகள், ஆமை, முதலை, விட்டில் முதலியன மண் மணல் முதலிய விடங்களில்

முட்டைகளை யிட அநேக ரறிந்திருக்கிறார்கள். வியர்வையி லுண்டாவதை விளக்கமுடியவில்லை. இப்படி ஓரறிவுமுதல் ஆறறிவுவரையில் உடைய உயிர்கள் பரம்பரையாக உண்டாகி வருவதை யாவரும் அறிந்திருக்க, இவைகள் இயற்கையில் பூதக்கலப்பால் உண்டாய் விடுகின்றன வென்றும், மந்திரத்தால் உண்டாய் விடுகின்றன வென்றும், நான்கண்டேன், செய்துகாட்டுகிறேன் செய்திருக்கிறேன் என்பவர் எவ்வளவு புத்திமான்களா யிருப்பார்களோ அவர்களே நினைத்துப் பார்க்கத்தக்கது. அவர்கள் சொல்லைநம்புவோர் அவரினும் மூட பிராந்தரென்பதில் என்ன தடை?

அறிவுடையானே! "அச்சில்லாமற் றேரோடாது ஆண்புடையானில்லாது பிள்ளையுண்டாகா" தென்னும், அனுபவத்திற்கு மாறாகச் சொல்லப்பட்டிருக்கும் கற்பனைக் கதைகளை நம்புவோராகியஅநேக கற்றபுத்திமான்கள் மலையரசன் மகளாகப்பார்வதிபிறந்தாளென்றும், மனிதப்பெண் சாபத்தால் நதியாகப்போனாளென்றும், பெண்ணுருவாக இருந்த இருஷிகள் மான்களாகிப் புணர்ந்தால் போகம் நீடிக்குமென நினைந்து அப்படிக்கே உருவெடுத்து புணர்ந்து கொண்டிருந்தார்களென்றும், அறியாமற் பாண்டு அவர்களை வேட்டை யாடினனென்றும், பெண்மான் பெண்ணுருவு கொண்டு அவனைச் சபித்தாளென்றும், இக்காரணத்தால் குந்திதேவி தன்புருஷனை விட்டுத் தூர்வாசர் மந்திரத்தால் தேவர்களாகிய யமனுக்கும், சூரியனுக்கும், இந்திரனுக்கும், வாயுபகவானுக்குமாக நான்கு புத்திரர்களைப் பெற்றாளென்றும், மந்திராதேவி அசுவனி தேவர்களுக்கு நகுல சகாதேவர்களைப் பெற்றாளென்றும், மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் சம்பர்க்கமும், கொள்வனைக் கொடுப்பனையும் உண்டாயிருந்த தென்றும், சந்தனு விஸ்வாமித்திரனும் ஊர்வசியாகிய தேவப்பெண்ணைப் புணர்ந்து சந்தானம் பெறச் செய்தார்களென்றும், சுகர் அக்கினிக்கட்டை மீது வீழ்ந்த இந்திரியத்திலிருந்தும், அகஸ்தியர் குடத்தில் வீழ்ந்த இந்திரியத்திலிருந்தும், அசுவத்தாமா குதிரைச்சாப்பிட்ட வீரியத்திலிருந்தும், மச்சகந்தி மீன் புசித்த வீரியத்திலிருந்தும், பட்சிமூக்கும் இரக்கையுமுடைய மனிதவுருவ கருடனும், அருணனும் காசிபர் கொடுத்த குதிரைமுட்டையோ அல்லது எருமுட்டையோ, அல்லது மந்திரமுட்டையோ, தவமுட்டையோ அதிலி

ருந்தும், உண்டாயினார்க ளென்றும்; கசியபமுனி புத்திரிகளிடத்தில் யானைகள், குதிரைகள், ஆடுகள், மாடுகள், ஒட்டைகள், கழுதைகள், பிறந்ததுபோதாமல், சப்பாத்திப்புதைகள் வேலமுட்செடிகள், மூங்கிற்புதைகள் கொடிகள் புதர்கள் கல்மலைகள் முதலியன பிறந்ததாகவும். பொய்கையாழ்வார், அல்லி அரசாணி முதலாயினோர் தடாகங்களிற் பிறந்ததாகவும், சுந்திரமூர்த்தி நாயனாரும், பறவையார், சங்கிலியார், நவவீரர்கள், கண்ணாடியிலும் இரத்தினங்களிலும் பிரதிபிம்பித்த பிம்பங்களிலிருந்து உண்டாயினார்களென்றும், சுப்பிரமணியரும், வீரபத்திரரும் முதல்வனாகிய சிவபிரானது பொறிகளிலிருந்து சிந்திய அக்கினிபொறிகளி ருந்தும் உண்டாயினார்க ளென்றும், பார்வதியின் உடம்பழுக்கி விருந்து விநாயகர் சமைந்தார் என்றும, விஷ்ணுவின் நாபிக்கமலத்திலிருந்து பிரமனும், இன்னதென்று குறிக்கக்கூடாத விடத்திலிருந்து மன்மதனும், உண்டானார்களென்றும், சொல்லுகிறார்கள். இதன்றித் திரிசசங்கு அரசன் அரிசசந்திரனை வாயாலோ அல்லது வேறே எந்தவழியாலோ பெற்றார் என்கிறார்கள். மேலும் யௌவனமென்னும் யவனன் நூறுமனைவிகள் வரையும புணர்ந்து புத்திரப் பேறில்லாமையால் புத்திரகாமேஷ்டியாகம் பிராமணர்களால் செய்வித்துமுனிவர்களால் கொடுக்கப்பட்ட மந்திர [illegible] கலச ஜலத்தை மனைவிகளுக்குப் புசிக்கக்கொடுக்க அவா [illegible] டுவிலக்கலாகிய அசந்தர்ப்பத்தால் கொள்ளாமல் வைத்திருந்ததை, மறந்து தானே அருந்தியதினால் அரசன் கற்பமாகி வயிறுகிழிந்து பிள்ளையைப் பெற்றும் தான்சாகாதிருந்தா னென்றும், அந்தகுழந்தையை யாகத்திற்கதிபதியாகிய எக்ஞதேவனென்னும் இந்திரன் தன் ஸ்தனபால்கொடுத்துக் காப்பாற்றினனென்றும, யாகபலத்தையும் மந்திரமகிமையையும மெய்யாக்கச்சொல்லுகின்றார்கள். விஷ்ணுவானவர் சொரூபமில்லா தேவர்கள் வேண்டுகோளாலும் மனித பக்த ஜனங்கள் பிரார்த்தனையாலும், அசுரர்களின் அக்கிரமத்தாலும் கிரமத்தாலும் தூணிலிருந்து பிறந்தாரென்றும், தசரதன்கொடுத்த யாக அவிசால் கற்பமாகிய கற்பிணிகளிடத்திலிருந்து சங்கும், சக்கரமும், ஆதிசேஷனும் துணைவராக இராமனாகப்பிறந்தானென்றும் மீன், பன்றி, ஆமை முதலிய வடிவங்களாகவும், அவதாரம் எடுத்தானெனக்கூறுவர். பிரமனோ மரீசி, அங்கிரசன், புலத்தியன், புலகன், கிருது, அத்திரி,

ஜனபதி, தட்சன், சரஸ்வதி, ஆகிய இவர்களைப் பெற்றதல்லாமல், பெண்வடிவாகவோ அல்லது ஆண்வடிவாகவோ, அல்லது ஜதை ஜதையாகவோ, இத்தனை யென்று குறிக்கக்கூடாத பிர்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களைப் பெற்றதும் போதாமல், பெண்ணுண் உருவங் கலந்த ஏக உருத்திரனையும், சனக சனந்தனாதி நால்வர்களையும் பெற்றானெனக் கூறுவர். இவர்களுக்கு யார் பால்கொடுத்து வளர்த்ததும் தெரியவில்லை. இதன்றி மார்க்கண்டேயருக்குச் சிவபிரான் லிங்கத்திலிருந்துபிறந்து யமனையுதைத்தாரென்றும் கூறுவர். சூரியபகவானானவர் யமனையும் நிமிஷம் கடிகை, ஓரையாதிய காலதூதர்களையும், சனியனையும், சித்திராபுத்திர கணிகனையும், சூரியவம்சத் தரசர்களில் முதன் மனிதனையும் பெற்றாரெனக்கூறுவர். சந்திரபகவான் புதனைப்பெற்று அதனால் சந்திர வம்சத்தரசர்களைக் கிளைக்கச் செய்தான் என்பர். அரசன் வீரியத்திற்கு மச்சத்தினிடமாகப் பிறந்த மச்சகந்தியானவள் வேதவியாசரைத் தாடியுடனும் தண்டு கமண்டலம் புலித்தோல்மான்தோல்களோடு யோகப்பட்டையும் மிதியடிக்கட்டையும் பெற்றாளென்றும் கூறுவர். கலைக்கோட்டு மஹாரிஷியைப் பெண்மிருகம் பெற்றதென்றும், கௌசிகரைத் தருப்பைதந்ததென்றும், நரியிலிருந்து சம்புகன் வந்தானென்றும், வல்மீகத்திலிருந்து வால்மீகன் பிறந்தானென்றும், முயலின் புட்டத்திலிருந்து கௌதமன் பிறந்தானென்றும், தரும்பிலிருந்து லவனுண்டாயினனென்றும், மலையிலும் பிரமனிடத்திலும் ஊர்வசியினிடத்திலும் வசிஷ்டன் உண்டாயினனென்றும கூறுவர். ஆழ்ந்து யோசிக்கும் அறிவாற்றலையுடைய அநக சிகாமணியே! இவ்வகைபபட்ட அசம்பாவிதப் பிறப்புகளைச் சொப்பன திருட்டியெனக் கொள்வதிலும் வேறாகக்கொள்வது ஞாயமாகவிருக்குமோ ? முன்சொல்லிய அண்டஜம், சுவேதஜம், சராயுஜம், உற்பீஜம் என்கிற யோனிமயக்கமாகப் புராணங்கள் கூறுகின்றன. முட்டையில் மனிதனும் மனிதனில் முட்டையும், கட்டையில் மனிதனும் மனிதனிற் கட்டையும், இஷ்டம்போல சமைத்துக் கொண்டதல்லாமல் உண்மையாக ஜனித்தார்களென்றுரைக்கலாகுமோ ? யாவராலும் அனுபவிக்கப்படுகிற பூமியைப் பூமாதேவியென்றும் இவள் விஷ்ணுவுடன் பேசினாளென்றும், ஓட்டஜலமாகவுடைய தக்ஷண தாம்பிரபரணி முதல் உத்தரகங்காநதிவரையிலுள்ள நதிகளைக் கங்காபவானி யென்னும் ஸ்திரீயென்றும் இவள் தேவலோகத்தில் இந்திரன் சபையில் வாயுபகவான்

உ. வே. சாமிநாதையர்

சுழற்சி சோதனையால்வஸ்திரம் சோதிக்கப்பட அவள்மீது ஆசை கொண்ட வருணபகவானுக்கு மனைவியாகச் சாபம் பெற்றுளென்றும், அதின்பின் அஷ்டவசுக்களைப் புத்திரராகப்பெற்றுப் பீஷ்மன் தவிர மற்றவர்களைக் கொன்றுளென்றும், இப்படிக்குச் சாபம் பெற்ற கங்கையானவள் தன்பால் முழுகிறவர்களுடைய பாவத்தைப் போக்க நதிவடிவாகியும் பால்தீர்த்தம், பாபநாசன தீர்த்தமாகிய குளங்களின் வடிவாகி அதன்பின் தீர்த்தங்களின் பாவங்களைப் போக்கக்காஞ்சியில்சர்வதீர்த்தக்குளமாகினுளென்றும்சொல்லுவர். மேலும் எக்னு, ஓம, பூஜாகாலங்களில் சாம்பிராணி கற்பூர பசுநெய் யாதிகளின் நற்கந்தமும், சுடுகாட்டிலிறந்த பிணங்களின் துர்க்கந்தமும் பெறச்சாபம் பெற்ற அக்கினிபகவான் அர்ச்சுனனுடன் பேசினுனென்றும் அநேகருக்குத்தரிசனமானு னென்றும், தனக்கு நேர்ந்தயாகத்தால் அஜீரணத்தைத் தீர்த்துக்கொள்ளக்காண்டாவனத்தைத் தகிக்க புகும்பொழுது இநதிரனும் பகையாளியாகிய வருணனும் புகாதிருக்க வரம் வேண்டினுனென்றும், அல்லது எவர்களோடும் பேசும்போது பிராமண உருவெடுத்தேயாசிக்கிறுனென்றும், சொல்லுகிறார்கள். அந்தியந்தாபாவரூப வாயுபகவான் வேண்டும்போது தேவரூபமும் மனிதபிராமணரூபமும் கொண்டு பேசி நவரசபாவங்களும் சுபாவமாக அறிந்த வாசனுஜன்ய ரூபவடிவனுகிய மனமெனும் ஆதிசேஷனேடு போராடினு னென்றும், மனே வேகத்திற்கு வாயுவேகம் தோற்கும் என்பது போலத் தோற்றுன் என்றும், ஒருபொழுதும் ஒருருவமுங் கொள்ளாத ஆகாயவாணி சங்கடம் நேர்ந்தபோது சகுந்தலை, தமயந்தி முதலாகிய தன்போலொத்த பெண்டுகளுக்கும், கற்பனு தேவர்களின் அடியவர்கள் மயக்கங்கொண்ட காலங்களிலும், ஸ்தலபுராணம் அடியார்புராணம் முதலிய நூல்கள் பாடப்புகும் வித்துவான்கள் முன்னிலையிலிருந்து தமிழும், தெலுங்கும், சம்ஸ்கிருதமும், ஆகிய பாஷைகளையறிந்து பேசுவதோடு, சிவன், பிர்மன், சுப்பிரமணியர் முதலிய தேவர்களுக்குச் சகாயமாகப் பாடுவோர்க்கு அடியெடுத்துக்கொடுக்கிறுளென்றும் கூறுவர். ஒற்றைச் சக்கர ரதமேறிக் கிழக்கு சமுத்திரத்திலிருந்து புறப்பட்டு, பச்சை நிறமுடைய பரியேழுகட்டிய இரதத்தைக் காலும் கையுமிலாத முடவனுகிய அருணன் ஓட்ட, பன்னிரண்டுமணி நேரங்கள் பிரயாணம் பண்ணி எதிர்த்துவரும் இராக்ஷசர்களின்பலத்தைப்பிராமணர்கள் விடும் அர்க்கியமென்னும்

ஜலக்கத்தியால் வெட்டி ஜயித்து மேற்கடலில் ஆழ்கிறானென்றும், இதே சூரியன் பிரளயகாலத்தில் பிராமணன்முதல் சர்வஜீவர்களை யும் எரித்துப் பஸ்மமாக்குகிறானென்றும், இவன் ஸ்திரீகளின்முக மாகிய சந்திரனைக் கண்டவுடனே சீதளவடிவமுடையவனாகி, தன் னாலுண்டாகிய நிழலெனும் சாயாதேவி, நீளாதேவி, முதலிய மாதர் களிடத்தில் அணுகிப் புணர்ந்து தேவர்களையும், சூரியவம்சத்தரசர் களையும், குந்திதேவியினிடமாகச் சந்திர வம்சத்தரசர்களையும், பெற்றானென்றும், அசுவரூபங்கொண்ட தேவியினிடம் அசுவனி தேவர்கள் பிறந்தார்களென்றும், சந்திரன் குருவினிடம் வாசிக் கும்போது அவர்மனைவியின் பாலாத்காரத்தால் குருபத்தினியைப் புணர்ந்து புதனைப் பெற்றான் என்றும், புதனாகப் பிறந்தவன் விஷ் ணுவென்றும், இச்சந்திரனே தான்புறப்படும் இராக்காலத்தில் தன் னோடுதித்து காணப்படுகிற அசுவனி, பரணி, ரோகணி முதலியநட் சத்திரங்களை மணம்புரிந்துகொண்டு கிருத்திகை யென்னும் பெண் ணிடமாகவே அதிபிரியமாக விருந்தபடியால் மற்றப்பெண்கள் தங்கள் தாதையினிடத்தில் முறையிட அவன்கோபங்கொண்டு சாபமிட க்ஷீணத்தன்மை யடைந்து சிவானுக்கிரகத்தால் விருத்தி அடைந்தும் காணப்படுகிறானென்றும், மண், நீர், அக்கினி, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்களாகிய இவ்வெட்டு ச டப்பொருள்களைப்புருஷனாகவும், பெண்ணாகவும், மனிதவம்ச பரம் பரையை உண்டாக்கிய தேவர்களாகவும், சுவேச்சையுடைய சர்வ ஞ்ஞராகவும், சர்வசக்தர்களாகவும், இக்கிரக நட்சத்திரங்களே மனிதர் தலைவிதியாக இருப்பதாகவும், கூறும் புராண இதிகாச கதைகள் பிரத்தியக்ஷம், அநுமானம், உவமானம், அர்த்தாபத்தி அநுபலப்தி, என்னும் பிரமாணங்களால் அளந்தறிந்து கொள்ள க்கூடியனவாகக் கொள்ளவிடமுண்டோ? இல்லை. ஐதீக அசம்ப வப் பிரமாணத்தால் கொள்ளத்தக்கனவாம் போலும்? இதுநிற்க, ஒரு புராணத்திற் கொருபுராணம் மாறாவும் கூறப்படுகின்றது. ஒன்றில் சிறப்பித்துக்கூறும் சுவாமியை, மற்றொன்றில் இழித்துக் கூறுவதினால் முடிவு அவரவர் கொண்ட விபரீதக் கருத்தாகவும், விடாமூர்க்கத்தனமாகவும் பரத்துவசண்டையாகவும் பலிதமாகின் றன. இவற்றையே ஸ்திரீகளும், மூடரெனும் சொற்கர்த்தமாகிய சூத்திரரும், கொள்ளவேண்டுமாம். அப்படிக்கொள்வது மிகுந்த புண்ணியமாம். வேறுநூல்களைக் கொள்ளுதல் பாதகமாம். இவை

யோகிய சீடனே! இவைகளைச் சத்தியமாகக் கொள்ளப் புத்திக்கு ஒவ்வுகின்றதோ? இதன்றிச்சடைச் சாம்பலாண்டியாகிய பலர் வேதத்தைப்பசு நூலென்றும், இல்லாதபுராணக்கற்பனை ருத்ராதியர்கள் சொல்லிய ஆகமங்களைப் பதி நூலென்றும், அவற்றால் சகலர், ஆகியவர்கள் சித்திக்கிறார்களென்றும், இதன்றி யானையும், பாம்பும் வல்லூறென்னும் கருக்குருவியும், நீர்க்காக்கையும், எலியும், ஞானமுடைய மனிதரைப்போல ஈசனை நோக்கித் தவஞ்செய்து, அவரோடு பேசித் தம் குறைகளைச்சொல்லி வரம்பெற்றனவென்றும், சொல்லுகிறார்கள். இவையும் புத்திக் கொவ்வாமலிருக்கின்றன. எலும்பு பெண்ணானதும், ஆண்பனை பெண்பனையானதும், சரீரம் ஆகாயமாய்க்கரைந்து போனதும், சிவலிங்கம் மனிதனை விழுங்கியதும், மோக்ஷாரோகணம் செய்வோர் தம்மோடு தமது பந்துக்களையும், தமது வீட்டுக்குமுன்னே பின்னே பக்கத்திலிருந்தமனிதர்களையும் அழைத்துக்கொண்டு தேகங்களோடு வழிதுறையிலாக் கைலாயத்திற் கெழுந்தருளிப்போன விஷயங்கள் நம்பத்தக்க நல்ல பிரமாணமாகுமோ? மாணாக்கனே! பலபலவாகப் பன்னிப்பேசுதலில் பிரயோஜனமென்ன? பிராமணன் முகத்திலும், க்ஷத்திரியன் புஜத்திலும், வைசியன் தொடையிலும், சூத்திரன் பாதத்திலும், பிறந்தார்களென்றும் அசம்பாவித சிருஷ்டியை நிலைநிறுத்தவும், மனிதரை வஞ்சித்து மலையும், காடும், கரையும் தேடி யலையவைக்கச்செய்த தேவர்களுக்கு மகிமையேற்றவும், சுயநயங்கோரும் சோம்பேறிச்சுவாமிகளும், மடமைநிறைந்தமடாதிபதிகளும், சத்கதிதேடாச் சைவசிகாமணிகளெனும் சாம்பலாண்டிகளும், மடமைபூண்ட மனிதமாடுகளுக்கு மறந்துபோகாதபடி மல்லாரும் தோட்களில் மாட்டும் சூட்டுக்கோல் சாமிகளும், ஸ்வரங் கற்பிக்கும் வைணவ ஜீயர்களும், போகப்பிரிய பாகவதர்களும், இதுவரைப் பாடுபட்டுக்கொண்டு வந்ததும்போதாமல், இன்னமும் பாடுபட்டுக்கொண்டு வருகிறார்கள். இங்கு நான் சொல்லப்போவதை உன்கூரிய புத்தியால் தீரவாற யோசித்துப்பார்ப்பாயாகில் வாசஸ்தானத்தையே வேதம் வசுக்களெனச் சொல்லுவதாக நீ தெரிந்து கொள்வாய். அஷ்டவசுக்க ளென்னும் பிருதிவி, அப்பு, அக்னி, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்களென்னும் எதிரில் காணும் எட்டும் ஜடப்பொருள்களாம். இவற்றில் மண், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் கடினப்பொருள்களாம்; ஜலமோ கோமளமென்னும் இள

கல் பொருளாம், நெருப்போ ஏதேனும் ஒருபொருளைப் பற்றி எரி க்கும் போது ஒளியோடுகூடிய ரூபமாகவும், பற்றாதபோது அரூ பமாகவும் போகும் பொருளாம்.

காற்றும் ஆகாயமுமோ அத்தியந்த அபாவரூபமுள்ள பொ ருள்களேயாம். இப்படி இருப்பவைகளைத் தெய்வங்களாகவும் பெண்களாகவும் புருஷர்களாகவும் சொல்லப்படுவதை அனுஷ்டி ப்பதால் ஒருவன் அஞ்ஞானியாவதல்லது, ஞானியாவதற்கிடமு ண்டோ? இதன்றி வருணாஸ்திரம் அல்லது மேகாஸ்திரம் அக்கினி யாஸ்திரம், வாயுவாஸ்திரம், சூரியாஸ்திரம், அர்த்த சந்திராஸ்தி ரம், நாகாஸ்திரம் ஜாக்கிரமென்கிற பிரமாஸ்திரம், சொப்பன மென்கிற நாராயணாஸ்திரம், சுழுத்தியெனும் ருத்திர பாசுபதாஸ் திரங்களாக எதிரிற்காணப்படும் எட்டு வஸ்துக்களேயும், அகார, உகார, மகாரமென்னும், சாக்கிர, சொப்பன, சுழுத்தி யவஸ்தா அபிமான மும்மூர்த்திகளையும் சொல்லப்பட்டிருக்கிறது. இதன்றி பாணப் பிரயோகஞ் செய்பவர்களாகிய சூரிய சந்திர வமிசத்தா சர்களும், அசுரர்களும், தேவர்களும், மந்திரபலத்தால் தங்கள் பாணங்கள் சர்ப்பமழையும், மாண்மழையும், அக்கினிமழையும், தேன்மழையும், ஜலமழையும், எறும்பு மழையும், மயில் மழை யும் சண்டமாருத காற்றைத் தடுக்கும் பர்வதமழைகளையும், செய் ய வல்லுனர்களாம். இப்பாணங்கள் பேசும் சாமார்த்தியமும், உயிர்க்கொலைசெய்த பாவ நிவாரணத்தின்பொருட்டுச்சமுத்திரஸ் நானம் கங்காஸ்நானமும் செய்யும் மனித சீலமும், மீளவும் தம திருப்பிடமாகிய அம்புறாத்தூணிற்கு வந்து குடியிருக்கும் புத்தி யும் உடையனவாம். இதனாலே சர்வசக்தனும் சர்வந்தரியாமியும் சர்வேஸ்வரனுமாகிய பகவானுக்கும் பாணத்திற்கும் மந்திரங்களு க்கும் அசுரருக்கும்அரசருக்கும் பூதங்களுக்கும் யாதொரு வித்தி யாசமின்றிச் சிருட்டிசெய்யும் சாமர்த்தியம் இருப்பதாகக் காணப் படுகின்றதல்லவா? இப்படி பகவானும் பாணுதிமற்றவைகளுக்கும் யாதொருவித்தியாசமும் இல்லையாகக்காணப்பட்டாலும், பிர்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ஜாதிபேதமாத்திரம் மனிதர்களினும், பூக்களினும், இரத்தினங்களினும் ச, ரி, க, ம, ப, த, நி, ச, எனும் சுரங்களினும், வெண்மை, செம்மை, பசுமை, கருமை வர்ண புஷ் பங்களினும், இலைகளினும், குதிரைகளினும், பசுக்களினும், பாம் புகளினும், நவதானியங்களினும் பேதம் இல்லாமற்போவது ஒரு

காலத்திலும் சம்பவித்தல் இல்லையாம். ஹா! ஹா! ஹா! இதல்லவோ அஷ்டாதச புராணங்களின் பூரண மகிமை. இவ்வித அசம்பாவசிருட்டியை ஒப்புக்கொள்ளவேண்டியவர்கள் யார்? சூத்திரரும் ஸ்திரீகளுமல்லவோ?

சிடனே! அசுரர் மந்திரமாதிகள் மாயாவல்லபத்தால் சிருட்டி செய்ய உலகம் வந்ததாகக்கொள்ள உனக்கிஷ்டமுண்டாகின்றதா? அசுரர்கள் பூமியைப்பாயாகச்சுருட்டிக்கொண்டு பாதளத்திலும், ஆகாயத்திலும், மேகத்திலும் ஒளித்துக்கொள்வார்களாம். அப்போது அவர்களைக் கொல்ல விஷ்ணுவும் சுப்பிரமணியரும், விநாயகர் வீரபத்திராதியோர்கள் அவதரித்தார்களாம். இப்படி புராணங்களெல்லாம் தேவாசுர சங்கிரமமாகவே எழுதப்பட்டிருக்கிறது. இராமாயணமும் அப்படியே பாரதமும் அப்படியே. ஆனால் துரியோதனன், பூர்வ ஜன்மத்தில் ராக்ஷஸனும். பூமியின் பொருட்டும் பூவையர்கள் பொருட்டும் பங்காளிகளோடு போர் புரிந்த போராட்டமே புண்ணியகதையாம். இராக்காலங்களில் தெருக்களில் ஸ்திரீ சூத்திரர்கள் பொருட்டுப்பிராமணரால் பிரசங்கிக்கப் படுகின்றன. வேதாந்தப் பிரசங்கங்கள் பாயகிருத்தியமாக யாவரும் மதிக்க இடமுண்டாகி இருக்கிறது. எதனாலெனில், வேதவேதாந்தங்கள் பிராமணரின் பொருட்டேயல்லாது யாவருக்கும் கொடுக்கவில்லையாம். கடவுள் ஸ்திரீ சூத்திரர்களுக்குக காதையும் வாயையும் கருதும் நெஞ்சத்தையும் மறந்து உண்டாக்கிவிட்டாற் போலக்காணப்படுகிறது. வேதபாராயணத்தை விக்கிரகங்களை தவிரச் சூத்திரன் கேட்டால் பாவம் வருமாம். சொன்னால் நரகப்பிராப்தியாம். வேதபாராயணத்தை ஒளிந்திருந்துகேட்ட சூத்திரன் காதில் நாராசங் காய்ச்சி விடவேண்டுமாம். அப்படி விட்டாற்றான் அப்பாவம் தீருமாம். சூத்திரன் பாபத்திற்காளாகாதபடி அரசன் அவனைப் பிராயச்சித்தம் செய்து காப்பாற்றவேண்டுமாம்.

ஐயோ! இந்த மனுநீதி செய்தவரல்லவா இரக்கமுடைய ஜீவகாருண்யர். இதன்றி வேதம்பாடம் செய்த சூத்திரன் தலையை வெட்டி எறிவதால் அவன் நரகம் தீர்ந்து சொர்க்கம் சேருகிறானும். ஆகையால் கற்ற சூத்திரனை இப்பிராயச்சித்தத்தால் கரையேற்று மரசனல்லவோ தன்னுயிர்போல மன்னுயிர்காக்கு மரசன்.

தற்காலத்தில் தேவர்களும் எங்கேவசிக்கிறார்களோ தெரியவில்லை. இக்காலத்து அரசர்களிடத்திற்கு நாரதர் வசிஷ்டராதி முனிவர்கள் வராமைக்குக் காரணம் தெரியவில்லை. நரசிம்மமூர்த்தி யணிந்த நிர்மாலியம் இந்திரன் மகனை சிட்சித்ததுபோலக் கோவில்சொத்துக்களைக்கொள்ளையடித்துக்கொண்டுபோன மிலேச்ச ரூணராகிய அரசர்கள் வலியையும், இக்காலத்திலுங்கொள்ளையடிக்கும் தருமபரிபாலன பிராமண சூத்திராதிகளின் வலியையும், தடுக்கும் வலியற்றுப்போன காரணம் தெரியவில்லை. கலியுகமாதலால் தேவர்கள் வேறே லோகத்திற்குப் போயிருக்கலாம். கலியுகமும் வேறு துரைத்தனமும்நேர்ந்ததினால் பிராமணர் மந்திரங்களுக்கு பலமற்றுப் போனதாகக் காணப்படுகின்றது. ஜயந்தன் அசத்தியை பிராமணர் எச்சில் அல்லவோ போக்கியதாகச் சொல்லப்படுகின்றது: பிராமணர் எச்சிலுக்கு அவ்வளவு வலுவிருக்க, அவர்மந்திரத்திற்கும் அவர் சொற்படி கேட்கும் தேவர்களுக்கும், அவர்கட்கு அதிகாரியாகிய பிராமணருக்கும், எவ்வளவு வலுவு இருக்கலாம். ஒன்றையும் காணேமே. தம்மைத்தெய்வமாவும் குருவாகவும் பூசிக்கும் இந்துக்களுடைய இயற்கை மானுஷீக சுதந்திரத்தைக் குறைத்து மூடராகவும் தாசராகவும் ஆக்கியது போதாமல் ஏனைச்சாதிகளுக்கும் அடிமைகளாக்கி ஏழைகளாக வாழக் கிருபைசெய் திருக்கின்றது அப்பிராமணர் மந்திராதிகள் சக்தியே போலும்? இவர்கள் செய்த உபகாரம் கற்ற புத்திமானாக விருக்கும் ஒவ்வொருவனும் கனவிலும் மறக்கமாட்டானென்று நினைக்கிறேன்.

இப்படியே உலகத்தில் பலமதங்கள் பலசாத்திரங்கள் பலவிதமான சிருட்டிகளைக்கூறுகின்றன. இவையாவும் உண்மையான அர்த்தாவாதமெனக் கொள்வதற்கிடமில்லை. பூர்வமே சாத்திரஞ் சொல்லுஞ் சிருட்டிக்கு உலகானுபவ சிருட்டி சிறிதும் உடன்படுதலில்லை. ஆதலால் உலகஞ் சிருட்டி எனல் ஒவ்வாது. உலகை வேதம் கானல் ஜலம், கயிற்றரவு, சொப்பனவுலகம், இந்திர ஜாலங்களுக்குச் சமமாகக் கூறியிருக்கிறது. அனேக புராணங்களும் உலகை மாயா சிருட்டியென இடை இடையே கூறுகின்றன. உலகைச் சிருட்டி யென்போர் உலகில் வெகு காலத்திற்குப் பின் பிறந்தவர்கள். உலகம் பிறந்தவிதம் உலகம் பிறவாமுன்னிருந்தவருக்குத் தெரியுமல்லாது, உலகம் பிறந்த பின்னுண்டான

வர்களா லறிந்துரைக்கத்தக்கதாதல் கூடாது. உலகைக்கடவுள் சிருட்டிக்கத்தக்க காரணம் யாதெனும் வினவிற்குத் தக்கவிடை கூறுவாரைக்காணேம். உணவுப்பொருள்களின்றி உயிர்வகைக ளாயுண்டாக்கினுரென்னும் நியமம் மறுக்கத்தக்கதாகிறது. உயிர் களுக்குப் பசிதாகாதி யில்லையாயின் உயிர்வகைகள் முன்னுதித்தி ருக்கலாம். அங்ஙனமோருயிரு மிருப்பதாக வனுபவம் பெறலரு மை. இதனுல் உயிர் உலகசிருட்டிக்குப் பின்னுண்டாயிருக்கவே ண்டுமெனு மறிவுதிக்கிறது. ஆகையாலெவரெழுதிய சிருட்டியு முத்தேசமே யொழியப்பரீட்சையி னிற்றலரிது. இந்துக்கள்கிரம சிருஷ்டி யுகபத்சிருட்டியென விருசிருட்டிகளை யொப்புகிறுர்கள். விண்டுவின் நாபியிலிருந்து பிரமனும் பிரமனிடத்திலிருந்து ஸப்த இருடிகளும் அவரா லுலகமும்உண்டானதாகவும் கூறுவதே கிரம சிருட்டி. ஆனுல் உலகிற் கிரமசிருட்டியிருப்பதாக ஆஸாஸத்திரப் பிரபஞ்சங்கொள்வோர்க்குத் தோற்றுகிறது. இதனையே மாயா வுலகமெனச் சொல்லப்படுகிறது. இதன்றி, நமசிவயவென்னும் பஞ்சாக்ஷரமந்திரத்தையும், நாராயணுயநமவென்னும் அஷ்டா க்ஷர மந்திரத்தையும், சரவணபவவெனும் சடாட்சரமந்திரத்தை யும், விநாயகாயவெனும் பஞ்சாக்ஷரமந்திரத்தையும், இராமசிவ வென்னும் துவியக்கர மந்திரத்தையும், பகவதி சரஸ்வதிஸ்ரீலக்ஷ் மி என்னும்மந்திரத்தையும்,குருமூலமாகச் சடங்குகளுடன் ஸ்மரி க்கலாகுமாம். ஆனுல் ஓம் நமசிவாய, ஓம் நமோநாராயணுய வெ னமேற்சொல்லிய மந்திரங்களுடன், ஓம் என்பதைக்கூட்டிப் பிரா மணன் தவிர மற்றவன் ஸ்மரிக்கில் பாபியாகிப் பாழாகப் போவா னும். ஓம் எனச்சபிக்கப்பிராமணருக்கே அதிகாரமுண்டாம்இப்ப டிக்குச் சொல்லுகிறவர்களும் இலக்கணமாதிய நூல்களில் ஜாதி வேற்றுமை ஏற்படுத்தியவர்களும் குழந்தைப்பருவத்தில் ஹரி யோம் நன்றாக வெனவும், ஹரி - நம - ஓம் - அத்து - சித்தம் என த்தமிழ்ப்பாஷை ஆரம்பத்திலும், ஓம் - நமசிவய - சித்தம் - நம: வெனத்தெலுங்குபாஷை ஆரம்பத்திலும், கற்றதையும் கற்பிப்ப தையும் மறந்தார்கள் போலும். ஐயோ ஜாதிபேதத்தையும், போ கபாக்கியத்தையும் விரும்பி அழிவிலாத வான்மாக்களுக்குத் தீரா மூடக் கரும துக்கத்தை ஏற்ற இவர்கள் என்ன பாடுபடுகிறுர்கள்? இதல்லவோ ஜீவகாருண்ணிய சைவவைணவ ஸ்மார்த்த வைதீக மதங்களின் பிரபாவம். இப்படிக்கல்லவோ லோகோபகாரமாக இருக்கவேண்டும். இதன்றி ஆலயங்களிலுள்ள ஆடம்பர ஸ்வாமி

களுக்கு மாங்கல்லியம் தரிப்பித்து தேவதாசிகளை பூதேவதைகள் தங்களுக்கு சககாரிகளாக வைத்துக் கொண்டாலும், மற்ற ஸ்திரீகளுக்கு புனர்விவாகத்தைத் தடுத்து பாக்கியம் பெற்று இந்திர போக பதவியிலிருக்கும் மேல்நகை யதிகமுடைய மோனகை அரம்பைபோல் தொடைகள் பருத்த இரம்பை, ஊருகளில் அதிக வலுவுடைய ஊர்வசி, திலதைலத்தாலும் திலக மாதிகளாலும் சிங்காரிக்கும் திலோர்தமையாகிய கைம்பெண் அவிசாரி கலியாணம் விரும்பாத கன்னிகைகளுக்கு சமுசாரிகளுக்கு பிறந்து சந்நியாசி ஆசிரமம் கைக்கொண்டு தனித்து புனிதராகும தலைமொட்டை பாலிய சந்நியாசிகள் லோகாபவாத மில்லாமல் லோகோபகாரமாக சககாரிகளாயிருந்து அனுபவிக்க ஆசிரமங்களும் விதித்திருக்கின்றார்களே. இதல்லவோ பரமாத்ம தருமம். இப்படிக்கல்லவோ தருமம் சம்ரக்ஷணை செய்யவேண்டும். இதனாலன்றோ வருணாச்சிரம தரும கருமங்களை மெய்ஞ்ஞான முணர்ந்த விவேகியும் அங்கிகரிக்க வேண்டு மென்பது. இதுபிராமணர் அனுஷ்டிக்கத்தக்கதே. ஆனாலும் பிராமணர் இவ்வாசிரம தருமங்கள் சூத்திரருக்கு இல்லையென்பதைத் தெரிந்திருந்தும் லாபத்தைக் கருதி சூத்திரர்களும் வேதவிதியைக்கடந்து சந்நியாசி யாசிரமம் பெறும்படி செய்விக்கிறார்கள்போலும். சோற்றுக்கும் பெண்போகத்துக்கும் குறைவின்மையால் ஆசிரம தருமத்தையும் பேத கருமத்தையும் சோம்பலுள்ள சூத்திரர்கள் பாதுகாத்து வருகிறார்கள்போலும். சூத்திரருக்கு கருமம் ஜாதி யல்லது வேறுண்டோ? பொதுவாக கருமமே எவர்க்கும் பிரதானம் என்பது என்ன கருமமோ தெரியவில்லை. ஜாதிபேதமும், சடச்சாமிகோவில் நேத்திரோற்சவமும், கர்ப்பூரமகிமைப் பொய்ப்பேச்சும், இறந்தாரையுந் துறந்தாரையுங்கரையேத்தும் பிராமணர்களைக்கொண்டு டம்ப கலியாணம் கல்லெடுப்பு கருமாந்திரம் காப்பது சூத்திர கருமம்போலும். உயிரோடிருக்கும்போது வேதந் தழுவி மோக்ஷம் பெற முயல அதிகாரந் தராத மந்திரங்கள் இறந்தாரைப் பிதிர்லோகத்தில் முன்னிறந்தோருடன் வாழ வுதவிபுரிவ ததிசயமேயல்லவா. அன்றியுஞ் சீடனே! சூத்திரன் கற்கக்கூடாது கேட்கக்கூடாது பாடஞ் செய்யலாகாதென்ற வேத கருமகாண்ட தாமஸகுணச் சூத்திரங்களையே மகிமையுடையதாக புராணங்களால் வரப்படுத்தப்பட்டிருக்கிறது. இதைப்பற்றிச் சிலது ஆழ்ந்தோசிக்கவேண்டி யிருக்கின்றது. இதனிடத்திலுள்ள மகிமை இகபர மோக்ஷ

முண்டாகக் கூடியதாக விருக்கிறதென யாவரும் நினைக்கிறார்கள். இதனிடத்தில் நேத்திரோற்சவ பாராக்காகிய வேடிக்கை யிருக்கிற தேயொழிய வேறொன்றில்லை. பூர்வம் நான் மானிடர் விரும்புவதும் அடைய வேண்டியதும் சித்திமுத்தியென உரைத்திருக்கின்றேன். அதில் சித்தியென்பது மணிமந்திரௌஷதமெனக் குறிப்பிட்டேன். இம்மந்திரமென்பது வேதகரும சூத்திரங்களாகவும், மணியென்பது நவதானிய நவபயிர்த்தினுசுகளாகவும், ஔஷதியென்பதற்கு அரசு மா முதலிய சமித்துகளாகவும் கொள்ளப்பட்டு, இவைகளாலும் பிராமணராலும் சுபவசுபகாலங்களில் சர்வசித்தியுங் கொடுக்கப்படுகிறதாக மூடஜனங்கள் பிரமிக்கிறார்கள். ஜாதக கருமமுதல் கலியாண கருமாதியந்திரம் செய்யப்படுங் கரும ஓமங்களால் பிராமணர் மனிதருக்குச் சித்தியளிப்பதாக பகட்டுகிறார்கள்; இவைகளில் நல்விதியால் நன்மையடைந்தவர் பேர்க தீய விதியால் தீமையடைபவர்கள் கோடானுகோடி யென்பதனுபவம். க்ஷணபங்குரமாகிய ஜீவசரீரங்கள் இம்மந்திரபலங்களைப் பெற்று வேதவித நூறு வருட தீர்க்காயுளாய்ப் பிழைத்தவர் பிழைப்பவரைக்காண்ட லருமை. தீர்க்காயுளும் வமிச விருத்தியு மற்றிருப்பாரை பிராமணவருக்கத்திலேயே அநேகரைக்காணலாம். சிசுக்கள் பாலியர் இறப்பதையும் யவ்வன ரிறந்து விதைவைகள் மொட்டை வேடச் சந்நியாசம் பெறுவதையு மறியார் மிகச்சிலரோ. ஆயினும் இம்மந்திர மணி யௌஷத ஆசீர்வாத பரிசம்பெறாத பலஜாதி இந்துக்களும் கிறிஸ்து மகம்மதியாராதி யோர்கள் வமிசவிருத்தி சித்தி வையகத்தில்லாது போகவில்லை. இதனால் பிராமண கருமத்தால் பயன் வேடிக்கை யல்லது பிரமைபலது வழக்க மிருதியென விளங்க வில்லையா? விளங்கினும் விடாதிருக்க ஜாதியார் நிர்ப்பந்தம் சகியாமையால் புத்திமானு மூடனாகி அவருடன் சேருகிறான். ஜாதியாரோ சூத்திரனுக்கும் ஸ்திரீகளுக்கும் விதித்த புராணங்களின் வலுவால் பொய்யென வச்சப்படுகின்றனர். வேதமோ ஓர் காலத்தொன்றும் மற்றோர்காலத் தொன்றாக நூதனமாய்ப் பிறப்பதல்ல. அநாதியென்று கொள்ளப் படுகின்றது. அதில் மனிதராயுள் ஏறக்குறைய 100 என விதிக்கப் பட்டிருக்கின்றது. இராமாயணத்தில் புத்திரனில்லாது 60000 வருடம் வாழ்ந்த தசரதனுக்கு முன் சொல்லிய பிராம்மண மந்திர யாக அவிசால் புத்திரப் பேறு உண்டாக்கினதாகச் சொல்லப்படுகிறது. இரா

மாயணமகிமை பிராம்மண மந்திர மகிமையாக விருக்கிறது. அப்படியே சந்தானமற்ற பாண்டுவின் மனைவிகள் தூருவாசரிடம் கற்ற மந்திரபலத்தால் விசித்தா புருடாமிசத்திற்கு வேண்டும் புத்திரரைப் பெற்றதாக விளக்குகிறது. அப்படியே ஆண்பிள்ளையாகிய வேனன் மந்திர ஜலத்தால் மகளைப் பெற்றதாகக் கூறப்படுகிறது. பிராமண கோபசாப மந்திரத்தால் மரணமும், மாண்டபிணத்தில் மற்றொருவன் ஜனனமும் விஷ்ணு புராணம் சொல்லுகிறது' அரிச்சந்திரனை திருச்சங்கு பெற்ற தாதிகள் இவ்வாறு பிரத்தியக்ஷத்தில் அவரவர் பிராரத்தத்தோடு போராடிச் சிறிதும் சித்தியளிக்காத மந்திரங்கள் இவ்வித அத்புத சக்தியடைந்திருந்ததெனல் சம்பவமேயோ? அசம்பவமோவென ஆராயச் சக்தியற்றிருக்கிறார்கள்.' வேதவேதாந்தம் படிக்கவு மாகா தென்றதனுலேயே யல்லது வேறில்லை. அன்றியும் பேதத்தில் மிகவும் பிரிய க்ஷத்திரிய வரசர்களோ தங்கள் லாபத்தைக் கருதி பிராமணரைக் காத்துவந்தால் அவர்களுக்கும் வேதவிதி அதிகாரங் கொடுத்து அவர்கள் விடும் பாணங்களாக மண்ணை நாராசாதி பாணங்களாகவும், ஜலத்தை வருணாஸ்திரமாகவும், நெருப்பை அக்கினியாஸ்திரமாகவும், வாயுவை வாயுவஸ்திரமாகவும், பிறைச்சந்திரனை அர்த்தசந்திரபாணமாகவும், சூரியனை சூரியாஸ்திரமாகவும், துரும்பையும், தூணையும், மலையையும், கடலையும் அவர்கள் மந்திரித்துவிட சர்வேஸ்வரர் செய்யும் சிருட்டியையும் செய்ததாகப் புகழப்பட்டிருக்கிறது. இராமன் துரும்பால் காகாசூரன் கண்ணைக் கெடுத்த கதைபோலொத்த விசேஷணங்கள் மந்திரத்தால் நேர்ந்ததாகக் கொள்ளப்படுகிறது பிராந்தியாகாது உண்மையோர்போதுமாகா. துரும்பு மந்திரபலத்தால் லவணன கதையுமிருக்கிறது. இதனால் மந்திரங்களாலும் பிராமணர் நெருப்பிலிடும் நவதான்ய பயிர் மணிகளாலும், ஸமித்தென்னு மோக்ஷதிகளாலும் வியாதிகள் நீங்குவதாகவும், பாவமன்னிப்புண்டாய் விடுவதாகவும், புத்திர சித்தி யுண்டாய் விடுவதாகவும், மோக்ஷமும், சுவர்க்கமும் தீர்க்காயுளும் உண்டாய் விடுவதாகவுங் கொண்டு, உலகர் ஜாதி மதமாதிகளை யங்கீகரித்தொழுகி, விவேகிகளையும் விவேகம் பெற முயல்வாரையும் தடுக்கப் பாடுபடல் மிக மூடத்தனமென நினையாதார் விவேகிகளுள் ளிராதொழியார்கள். இதனையே யன்றோ "விதியினுல் வாழ்வதலால் வேதத்தோர் தங்கள் மதியினுல் வாழ்வ

தொன்றில்லை" யெனக் கூறினர். "வேதத்தோர் தங்கள் மதி" யென்பது பிராமண கருமத்தா லெனலாம். அங்ஙனமாயின் உண்மை யாதோவெனின், வியாதி நீங்குவது அவுடதத்தினாலும், சுத்தியாலும், அளவுகடவா புசிப்பாலும், வசிக்குமிடத்தின் வசதியாலுமல்லது வேறொன்றா லென்றும் விளைதலில்லை. இதனை வெள்ளையர் கைக்கொண்டு விவேகிகளாய்ச் சுகிக்கிறார்கள். இந்துக்கள் இதற்கு முற்றுமுறணாக நடப்பதும் நடப்பிப்பதும் பக்தி சிரத்தையாக பாவிக்க புத்தியை பேதிக்கப் பாடுபடுகிறார்கள். சிலர் இது நியாயமாம் என அங்கிகரித்தபோதிலும் எல்லா ஜாதிகளுக்குமல்ல நமக்கே யுரியதென வெண்ணி மூடக் கொள்கையைப் பாதுகாக்கப் பாடுபடுகிறார்கள். அச்சில்லாமற் றேரோடுமா? ஆண்புடையா னில்லாமற் பிள்ளையுண்டாமா? எனு மனுபவ பழமொழி வேதமந்திர மாகாதென பலா அறிந்திருக்கும் அந்நியரால் மயங்குகின்றார்கள். பசியானது புசித்த வன்னததாலன்றித் திருப்திபெறாததுபோல, வியாதியானது ஔடததாலல்லது சாந்தியாகிவிடாது. இது ஆயுர்வேத முணர்ந்தார்க்கல்லது மற்றோர்க்குப் புலப்படாது. மருந்தாதி சிகிச்சையால் வியாதி சொஸ்தப்படலை பலரனுபவமாக வறிந்து வந்தாலும் பழக்கமிகுதியால் அப்பிரத்தியக்ஷ பிதுர்தேவதையாலும் பிதற்றல் மந்திரத்தாலும் உபாசனாமூர்த்தியாலும் தீர்ந்ததாக வெண்ணியும் சொல்லியும் பிரத்தியக்ஷத்தில் உபகரித்த வயித்தியரை வஞ்சிக்கிறார்கள். கருமவழக்கம் மெய்யைப் பொய்யாக்கியும், பொய்யை மெய்யாக்கியும், அழியாப் பெரும் புகழை யடைந்துவருவது கல்வியின்மையாலும், ஸ்திரீ சூத்திரர் வேத சிரவணஞ் செய்யலாகாதெனும் கட்டுபாடு மட்டின்றி யோங்கி வளர்ப்பதினாலுமாம். இதன்றி தெய்வானுக்கிரகமில்லாமல் வயித்தியனே யாவும் சொஸ்தப் படுத்துவ தாயிருந்தால் யாவரும் சொஸ்தப் படாமலிருப்ப தேனெனப் பல வஞ்சகரும் பிரமையை யதார்த்த மெனப் பழகி வந்த பலருங் கேட்கிறார்கள். அவர்கள் மந்திரம் ஜபம் தானம் விரதம் ஓமங்களும் மற்றும் பிராமண யந்திரத்தால் பிராணப்பிரதிஷ்டை பெற்ற தெய்வங்களும் நவக்கிரகங்களும் யாதும் பயன் செய்யாமல் யாவரும் ஏமாந்து நிற்கிறார்களே யிதற்கென்ன கெதி யென்றால் விதிக்கார் எதிர் நிற்பரெனும் சமாதானஞ் சொல்லுகிறார்கள். இந்த விதியை மருத்துவரிடத்தில் வைத்தலாகாதோ; வைத்தால் செய்நன்றி

யறிய வேண்டி வருவதோடு அப்பிரத்தியக்ஷ மந்திர - தந்திரத் திலும் அவர் மந்திரங்களாலுயிர் பெற்ற சாமிகட்கும், மகிமை புன்மை விளைய நேரிடுகிறது. அன்றிப் பிராம்மண மந்திரத்தால் பிராண பிரதிஷ்டை பெற்ற தெய்வங்கள் யாவருக்கும் வயித்திய மாதி செய்து சம்பாதிக்கும், அன்ன மாதி போக பாக்கியங்களை தமக்குயிரளித்த பிராம்மண ரனுபவிக்கக் கொடுத்து விடுகிறதே யொழிய தாம் புசிக்கிறதாக விருக்கவில்லை. இதனால் விக்கிரக சாமி கள் பூதேவதைகளாய், தம்மைக் குழந்தைகளைப்போல குளிப் பாட்டி சீராட்டி பாராட்டி, கலியாணாதிகள் வருடா வருடம் செய்து வைத்து, உற்சவாதி சிறப்பும் செலுத்தி வைக்கும், பிரா மணரை செய்ந்நன்றி மறவாது தமது கோயிலடுத்து வாழ, பந்து வாகக்கொண்டு மற்றவர்களைத் தூரத்திருக்க வைத்து, தஞ் சம் பாத்திய மெல்லா மவர்களுக் களித்து வருகிறது. அன்றிப் பிராம் மண மந்திரத்தால் உயிர் பெற்ற தெய்வங்கள், தம்மைத் தரிசிக்க வருபவர்கள் காணிக்கைப் பூஜா திரவியங்களை, பிராம்மணரிடத்து தஞ் சங்கல்பங்களைத் தெரிவித்தவர்கள், தயவை யடைந்த பிறகே காணிக்கைகளையும் பூஜா திரவியங்களையும் ஏற்று, அந்தஸ்திற் குத் தக்க மரியாதையும் செய்ய அர்ச்சகருக் காக்ஞை யளிக்கின் றது. இதனாலேயே திருமறைக்காடும், திருவாலங்காடும், கங்கை கரையும், இராமேசுர கடற்கரையும், மனக் குரங்கு கால்விட் டோட வதன் பிறகே, வோடுந் தொழிலாற் பயனுளதோ வொன் றாய் பலவா யுயிர்க்குயிராய், ஆடுங் கருணைப் பரஞ்சோதி யருளைப் பெறுதற் கன்புகிலை, தேடும் பருவ மிதுகண்டீர் சேரவாருஞ் சகத்தீரே" எனவும்; "சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம் பொருளை கைவந்திடவும் மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தை விட்டு பொய்வந் துழலும் சமயநெறி புகுத வேண்டாம் முத்தி தரும் தெய்வச் சபையை யடைவதற்குச் சேரவாரீர் ஜகத்தீரே" "காகமுறவு கலந்துண்ணக் கண்டீ"ரெனவும், "பண்ணேனுக்கான பூசை யொரு வடிவிலே" யெனவும் "உளியிட்ட கல்லையும் ஒப் பிட்ட சாந்தையும் ஊத்தையறப் புளியிட்ட செம்பையும் போற் றுகிலே" னெனவும், "இறைவனே நீயென்னுடலிடங் கொண்டாய்" யெனவும், "மலர்மிசை யேகினான் மாணடி சார்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்" எனவும், "யஃ-து-ஸர்வாணி-பூதாநி-ஆத்மனி-ஏவ- அனுபஸ்யதி-ஸர்வ பூதேஷு-ச-ஆத்மானம்-ததஃ-ந- விஜுகுப்ஸ

தே-எனவும், (இ-ள்) யஸ்து=எந்த ஞானியானவன், சர்வாணி=சமஸ்தமான, பூதானி=பூதங்களை, ஆத்மன்னேவ=ஆத்மாவினிடத்தில், அநுபஸ்யதி=பார்க்கிறானோ, சர்வே பூதேஷுச=சமஸ்த பூதங்களிலும், ஆத்மானம்=ஆத்மாவை, அநுபஸ்யதி=பார்க்கிறானோ (ஸஹ:=அந்த ஞானி) தத:=அந்தப்பிரகாரம் பார்ப்பதினாலேயே, நவிஜுகுப்ஸதே=நிந்திக்க மாட்டான். மூலம்= "அந்தந் தம: ப்ரவி சந்தியே அவித்யாமு பாஸதே; ததோ பூய இவதேதந மோய உவித்யாக்ரதா: ‖ (பதச்சேதம்)=அந்தம்-தம:-ப்ரவிசந்தி-யே-அவித்யாம்-உபாஸதே-ததோ-பூய-இவ-தே-தம:-யே-உ-வித்யாம்-ரதா: ‖ பதவுரை=யே=யார், அவித்யாம்=ஞானபின்ன கருமத்தை, உபாஸதே=அநுஷ்டிக்கிறார்களோ, தே=அவர்கள், அந்தந்தம:=காடவிருளை, ப்ரவி சந்தி=பிரவேசிக்கிறார்கள், யெ-உ=யெவராகுல், வித்யாயாம்=தேவதா ஞானத்தில், ரதா:=அன்புடையவர்கள், தே=அவர்கள், தத:=அந்த விருட்டிற் காணுனும், பூய:=விஸ்தார மாகிய, தம:=இருட்டில் பிரவசந்தி=பிரவேசிக்கிறார்கள் எனவும், உரைத்தலால் நேத்திரோற்சவஸ்வாமிகளும் மந்திரமாதி ஓமங்களும் அஞ்ஞானத்தையும் பிறவியையுந் தருவனவாக விருப்பதால், வேடிக்கை தருவதும் பராக்களிப்பதும் அதனோடு ஜாதி வேற்றுமையை ஸ்திரப்படுத்துவதும் தந்திரமும் காமக் குரோதாதி ஆணவம் விளைக்கும் அநர்த்தமும் வீண் செலவும் விருதாப் பிரயாசையும், அன்னியரா லவமானம் தருமிடமாகவும், சண்டையுமாகக் காணப்படுகிறதே யல்லாமல் சர்வத்திர சுகஸாதகமாகக் காணப்படவில்லை.

சீடனே! இப்படிக்கு நான் சொல்லி வந்ததால் நான் புராணங்களும், சில வேதவசனங்களும், மிருதிகளும் சொல்லுகிற பஞ்சயககிய மாதிகளையும், தேவதா விக்ரஹங்களையும், தூஷிப்பவனுகவும், நான் விரும்பாதவனுகவும், நானிருக்கிறே னென நினையாதே இவ்வுலகஞ் சிருட்டியல்ல, மாயாத் தோற்றமே யென்பவரின் மதவனுவையும், அவர்கள் வேத மாதிகளைக் கொள்ளும் வித்தையு முனக்கறிவிப்பான் வேண்டி நூற்களிலுள்ள பேதங்களையும், கொள்ளுவோர்களின் அபிமதமு மறிவித்தேன். ஆகுல் பஞ்சயக்யமாதிகளும், மந்திரங்களும், தேவர்களும், தேவாலயங்களும், உலகிலுள்ள எல்லோருக்கும் உரியதென்பதி லாக்ஷேபிப்பவர் மதத்தை யானும் வெறுக்கிறே னென்பதிற் றடையில்லை,

இந்துக்களிடத்தில் சமத்துவமில்லாத சண்டாள நடையை சற்றும் சம்மதிக்க, இஷ்டப்படுவனாக என்னை யான் நினைக்க வில்லை. சூரிய னும், சந்திரனும், நக்ஷத்திரங்களும், ஆகாயமும், வாயுவும், அங் கியும், ஜலமும், மழையும், பூமியும் தத்தம் செயலை எல்லாரிடத் திலுஞ் சமமாகவே செலுத்துகின்றன. தெய்வங்களு மாங்கே யெ வரிடத்திருந்தாலு மவரிடத்து கருணை செய்யு மென்பதை யாவ ரும் ஒப்பிக்கொள்ள வேண்டும். அங்ஙனமில்லை யெனல் ஒரு போது மொப்பக்கூடிய தாகு மெனல், எவர் மனசாக்ஷிக்கும் விருத்தமாம். தெய்வங்களுக்கும், மற்ற பஞ்ச பூதங்களுக்கும், சூரிய சந்திர நட்சத்திரங்களுக்கும், வேதங்களுக்கும், வித்தை களுக்கும், அறிந்ததை அபலார்க் குரைக்கும், குருத்துவ அதிகா ரங்களுக்கும், சுத்தத்திற்கும் உரியர் சிலரே யென்றும், யாவரு மல்லரென்றும் வழக்கில் வந்ததை வருவதையொப்புவோர் வஞ்ச கரும், வாசிப்பில்லாரும், சுகுண ரல்லாருமேயன்றி மற்றோரொப் புவாரென மற்றையோர் நம்பியிருத்தல் நியாயமாக விருக்குமோ ?

சுகுணனே ! கடவுளொருவ ருண்டென் உரைப்பவன் சத்தி யனும், விஷயாராய்ச்சியை மதிப்பவனும், தருமவானும், தயை யுடையானும், சாந்தியுடையவனும், அன்னியர் அறியாமையை க்ஷமிப்பவனுமாக விரானுயின் அவன் சுய நலப்பிரிய சோம்பேறி யே யல்லது தருமவானல்லன். வேடத்தால், சொல்லால், மாயா விசாரத்தினாலேயே உத்தமனாகி விடான். மேற் சொல்லிய தன் மையாரிடத் துண்டாயினு மவரால் யாவரும் சுகம் பெறத்தடை யில்லை யாதலால், அவர் குருவாகத் தடை என்ன? உத்தமனே ? வேதத்தில் "ஏகமேவாத்விதியம் பிரமம்" எனவுரைப்பதால் பர மாத்மாவைத் தவிர பிர்ம்மாண்ட வுருவ பிரபஞ்சமு மன்னியமாக விராமையால், ஜகம் பிரம்ம மெனவும், ஸர்வம் விஷ்ணு மயஞ்சகத் தெனவும், சிவமய மெனவும், கொள்ளவிடந் தருகிறது. இதனு லுலகம் மதத்தினர் கூறும் கிரம சிருட்டியென லொரு பொழுது மொவ்வாது. அன்றி யணுவிற் கணுவாய் மஹத்திற்கு மஹத்தா கியும், ஆதிகாரணமுமாகிய பரிபூரண ஆத்மாவில் ஆகாயமாதி பூத பௌதிகாதிகள் வேறாகி யிருத்தற்கு ஞாயமில்லை. உண்டென நிரூபிப்பார் நிரூபித்தா ரொருவருமில்லை; ஆயினு மறியாமையால் அன்னியமாகக் கொள்ள விதிக்கும் மதத்தினர்; உலகவர், ஜாதி யார் மூடப் பெண்களால் யாவரும் உலகையுந் தம்மையு மன்னிய

மாகவே மதித்து வருகின்றனர். புத்திமானே! நீ யிங்கு நான் சொல்லப்போகுஞ் சங்கதிகளை ஆழ யோசிக்க வேண்டியது. பந்தம் அல்லது பிறப்பு அல்லது அஞ்ஞானம் என வழங்கப்படுவது, ஜாதி-மத-ஆசார வேற்றுமையே யல்ல தில்லை. இதனால் ஒவ்வொருவனும் தன்னை உடலாக நினைக்க வேண்டி வருகிறது. உடம்பே தானல்லாது வேறென்னவென, சமயம் வந்த போது கேட்கும் புத்தி சாலிகள் உடம்பைக் கைலைக்கும், வைகுண்டத்திற்கும், வான லோகத்திற்கும், பிதுர் லோகத்திற்கும், போவதற்கு அனுப்புவதை விட்டு, சுடு காட்டிற்கும் இடு காட்டிற்கு மனுப்புவது ஏனோ? இது எவரு மறிந்த விஷயம். அன்றி உடலையே ஆன்மாவாக எண்ணியிருப்பவர், உயிர் போயது உயிர் போயது என வுரைப்ப தெற்றிற்கு? உடம் பல்லவே ஆத்மா; ஆன்மா வல்லவோ சுகதுக்க போகமான சொர்க்க நரகத்தி லனுப்புவதாகச் சொல்லப் படுகிறது. உடம்பு உயிரிழந்தபின் சுடு காட்டிற் சுடவும் இடுகாட்டிற் புதைக்கவும் உடன் படுதலை யாவரும் காண்கிறார்கள். சவத்திற்கு சுகதுக்க முண்டாவதாக விருந்தால் சுடவும் புதைக்கவு மாட்டார்களல்லவா? அன்றி உடம்பிறகுச் சரீரமென்று பெயரிட்டிருக்கிறது. ஜீரணமாவதை சரீரமென்று சொல்லுகிறார்கள். அன்றித் தகிக்கப்படுவதை தேக மெனச் சொல்லப்படுகிறது. யாராயினும் பிறந்தது முதல் பசிதாகாதி பெறு தாராக விருப்பதிலர். பசிதாகாதி யில்லாதரிருந்த தாகவும் சொல்லப்படுவது உண்மை யனுபவ மெனக் கொள்ள விடமில்லை. ஏகதேச வுதாரணம் எடுத்துக் கொள்வதினால் சகலருக்கும் பிரயோஜன முண்டாகாது. ஸ்ரீ சடகோபாழ்வார் இருந்ததாகச் செப்புவது "செவிக்குண வில்லாத போழ்து சிறிது வயிற்றிற்கு மீயப்படும்" எனும் திருக்குறள் நீதி நூற்கு சிரவண மனனஞ் செய்பவர்கள் புசிக்கார்கள், புசிக்கலாகா தென உரை பகர்வோர் வாதம் போன்றது. உணவின் றிரிபே உடலெனல் பரிஷ்காரம். தாய் தந்தைகள் உண்ட அன்ன சாரமே மாம்சாதி பொருள்களாக பரிணமமடைந்து, புருடனுக்குப் பதினாறு மாண்டில் சுக்கிலமாகவும், ஸ்திரீகளுக்குப் பனிரண்டா மாண்டில் சுரோணிதமாகவும் உண்டாகிறது. இச்சுக்கில சுரோணிதத்தால் மனித பிண்ட முருத்தரிக்கின்றது. பிண்டத்திற்குத் தாய் தந்தைகள் காரண மென்போர்கள் முதலை விட்டு லாபந் தேடுவோரைப் போன்றவர். பிண்டத்திற்குக் காரணம் சுக்கில சுரோணிதமாம்.

அவற்றிற்குக் காரணம் தாய் தந்தையருடல்களாம். அவற்றிற் கன்ன பானாதி புணர்வுப் பொருள்களே. அவற்றிற்கோ மண்ணீ ரென்னும் பூதக்கலப்புங் காரணமாக விருக்கிறது. ஓஷதிகளுக்கு மண்ணீர் எருவாதிகளின் சேர்க்கையின்றி விருத்தியுண்டாக விடமில்லை. பூமி கொழுமை ஜல சமூர்த்தி எருவும் கூடக்கலவா விடின் தாவர புற் பூடாதிகள க்ஷீணதசை யடைந்து பலித மற் றுப்போகின்றன. அதுபோன்று எவர் சரீரமும் அன்ன பானாதி யின்றேல் க்ஷீண மடையதக்கடையில்லை. மண்ணீரோ நெருப்பின் சகாயமின்றிப பயனளிப்பதில்லை. நெருப்போ வாயுவின்றி சுவா லித்தலில்லை. வாயுவோ ஆகாசமின்றித் தான் சலன மடைந்து, மற்றப் பொருள்களை இருப்பிடம் விட்டசைபிக்க விடம்பெ றுது. அன்றிச் சரீரம் தாய் வயிற்றினின்றும் பிறந்த போதி லும், அதிற் பிராண வாயுவி னியக்கமும், உதராக்கினியின் ஜா வாலிப்பும், அன்ன பானாதி கிரிகிப்பும், இல்லையாகிற் சுடுகாட் டிற்கே உரியதென்பதை யாவ ரறியார். இங்ஙன மிருக்க குழந் தைக்குத் தாய் தந்தையரே காரண மென்றும், அவற்றிற்குப் புராண பொய்க் கற்பனையா லேற்படுத்திய ஜாதியே அக்குழந் தைக்கு மென்று கொள்ளுவதும், சொள்ள விதிப்பதும் மோச மல் லது வேறென்னை. அன்ன பானாதி ஜீர்ண மடைவதை யாவரு மறிகிறோம். அதுபோலவே சரீரமும் மண்ணாக அலது சாம்ப லாக பூதங்களில் லயமாதலை யறிகிறோம். சரீரத்திற்கு நேர் கார ணம் தாய் தந்தைய ராதலின் அவரைக் கொள்ளாது முன்னும் பின்னு மில்லாதனவற்றைக் கொள்ளுதலேன்? கொள்ளுவது விப ரீதமும் விருதாப்பிரயாசையுமா மென்னின் மெய்யே, இதுபோல வே பிறந்த பிண்டத்திற்கும், தாய் தந்தையருக்கும், இயற்கையில் வாய்த்துள மானுஷீக ஜாதியைக்கொள்ளாது, முன்னும் பின்னும் பொருந்தாத பொய்க கற்பித பொய்ச்சாதி, பொய்க் கோத்திரம், பொய்ச் சூத்திரம், பொய்ம் மதங்களைக் கட்டாயத்தாற் கொள்ள விதிப்ப தேனோ? விதிப்பது முன்னோ ராசாரமும் சாத்திர சம் மத மெனின் இதுவும் பொருந்துமாறில்லை. | எங்ஙன மெனில் வைணவக் கிரந்தங்களின்படி விண்டு நாபியில் பிரமனும், பிரமனில் சத்த விருஷிகளும், இருடிகளிலிருந்து மற்றோரும் பரம்பரை யாய் வந்ததனால், விஷ்ணு குலம் வைணவ கோத்திரமென, யாவ ரையுந் தெய்வங்களாகக் கொள்ளாது, சூத்திரர்களை அடிமைகளா

க்கொள்ளவும், வித்தை ஞானம்-சீலம்-குருபட்ட மாதிகள் கொள்ள விடாமைக்குக் காரண மென்னையோ?

தன்னை விசாரித்தறிவதே சகல வனர்த்த நிவர்த்திக்கு ஏதுவெனல்.

சீடனே! நான் பூர்வ முனக்குத் தன்னை விசாரித்தறிவதே சகல வனர்த்த நிவர்த்திக்கு ஏதுவென உரைத்திருக்கிறேன். யாவருந் தன்னை யறியாமலா யிருக்கிறார்கள்; அறியாதிருந்தால் நான் பிராமணன், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் சூத்திரன், நான் வேளாளன், அதிலும் ஸ்மார்த்தன் ஆனால் குருக்கள் வம்சத்தானல்லன், ஜாதியில் வடமன், நான் வைஷ்ணவன், அதிலும் வடகலையான் தென்கலையானல்லன் நானமாத்துவன் முத்திரை குத்தி ஆனால் ராவ்ஜியல்லன். நான் நியோகி நான் வடக்கத்தியான் நான் நியோகியும் வடக்கத்தியானும் மச்சப் பிராமணனும் ஆகேன். தக்ஷணத்து ஸ்மார்த்தா வைஷ்ணவர் மாத்துவர்களில் மற்றவர்கள் குறைந்தவர்கள் அல்லது உயர்ந்தவர்கள் என வொருவரை யொருவர் தாழ்த்தியும் தங்களைப் பிறர்க்குத் தெரிவித்தும் நடந்து வருவார்களா? அப்படியே நான் க்ஷத்திரியன், அதிலும் சிங்கு, அதிலும் சூரிய குலத்தான் சந்திர குலத்தான் அல்லன், தெற்கத்திய பட்டராஜாவும் இராஜாவாகும் சாலிவாகன வம்சத்தானும் தாழ்ந்தவர்கள் நாங்களுயர்ந்தவர்களென்று சொல்வார்களா? நடப்பார்களா? அங்ஙனே நான் வடதேசத்து பனியா, கோமுட்டியும், பேரி செட்டியும், ஒத்தை மாடு, இரட்டை மாடு கட்டும் தைலவாணியச் செட்டியும, காஜுலா செட்டியும், சேணியச் செட்டியும், தேவாங்க செட்டியும், பூவைசிய கோண்டை கட்டி வெத்திலை கொடியார், வேளாஞ்செட்டி ரெட்டியு மல்லவெனச்சொல்லு வார்களா? இதன்றி நான் படையாட்க்ஷி, நான் வன்னியன், ஆகையால் நாங்களே க்ஷத்திரியரும் அக்னி கோத்திர பிராமணருமென சிலர் பறந்து நினைந்து சொல்வார்களா? இதன்றி நான் வண்ணான், நானப்பட்டன், நான் பள்ளன், நான் மள்ளன், நான் குள்ளன், நான் கள்ளன், நான் பூணூனூலுடைய செருப்பு தைக்கும் மோசி, நானும் பூணூனூலுடைய துணி தைக்கும் தர்ஜி, நானும் பூணூலணியும் பட்டுநூல்பாகவதன், நான் சாத்தானி பாகவதன், நான் ரெட்டி தாசரி பாகவதன், நான் கருடகம்ப தாசிரி பாகவதன், நான் பண்டார சன்னி

தான பரம்பர காஷாய குடும்பி, குல பண்டாரம் என இப்படி தங்களைக்குறைத்து கூறுது நடிப்பார்களா? இன்னும் சிலர் குறவன், மறவன், லம்பாடி, குருவிக்காரன், விறகு தலையன், வனுதி, இடையன், கடையன், எழுத்தறியா மடையன், எழுத்தும் கணக்கு மறிந்த சௌரப்பிராமண கணக்கன் ஆதிஆமசீர் கணக்கன் சாட்சிக் கணக்கன், நான தட்டான் தச்சன், விசுவகர்மா, வீரசைவன், எனத்தங்களைச் சொல்லிக் கொள்வார்களா என்னை. இவையெல்லாம் பகிர் முக வழக்கதால் சொல்லும் பாமர வழக்க வார்த்தைகள். இவை யெல்லாம் தம்மையறியாது பிதற்றும் சார மற்றோர் வார்த்தைகள். இவர்களெல்லாம் புத்தியில்லாதவர்களா? உலகத்தி லிருக்கிற எவரினும் நாமே புத்தி சாலியாவெனக் கேளமதே. மனிதனிடத்திலே அவித்தை ஆவரண மாயா மயக்கம் இருந்து புத்தி சாலியையும் புத்தியற்ற வனுக்கி வைத்திருக்கின்றது. இயற்கை சுதந்தர முடைய மஹம்மது நாற்பது வருடம் உலகிலிருந்த பின் உலக சிருட்டியை எழுதினர். மோசே ஆதாம் வமிசத்தில் நெடுங்காலத்திற்குப் பின் பிறந்து உலக சிருட்டியை எழுதினர். இந்துக்களிலோ முதல் மனிதனுகிய பிராமணனல் அங்கிரசாதி முனிகளுக்குச் சொல்லப்பட்ட தாக எழுதப் பட்டிருக்கிறது.

ஒவ்வொருவனு மேற்சொல்லியவைகளை நீக்கமுயல்வானேயாகில் தனது சுதந்திரமிழந் தொருவருக்கும் அடிமையாகி யிருக்கமாட்டான். இல்லாமையாற்றன் மனிதரினும் பலஜடப்பொருள்களினும் ஆண்டானை யேற்படுத்திக் கொண்டு தன்னை யடிமையாக்கிக் கொள்ளுகிறுன். இப்படிப்பட்ட குணத்திற்கே சூத்ரத்வமென்று பெயர். இச்சூத்திரத்வத்தை வித்தையாலும் ஆராச்சியாலும் பொய்வாழ்வி னிச்சையை யொழிக்கும் கிரயையாலும் போக்கிவிடலாம். இதற்கே ஸர்வாந்தர்யாமியெனும் சருவசாட்சியாகி, சருவேஸ்வரனும் சான்றோர்களும் மனசாட்சியாலும், மறுவறு வசனேப தேசத்தாலும் சகாயிகளாகின்றார்கள். மனச்சாக்கியே தெய்வமும், மறுவறு மொழியுடையாரே குருக்களுமாவர். மனிதன்பா லாவரணமில்லை, அவித்தையில்லை, மாயமோகமில்லை யென்போர் பகிர்முகப் பிரியர்களே. எப்படியெனில் எவரும் தன்முகமறியார்; பிறர் முகம் சாதாரணமாக வறிவர் இதனுல் தனதியற்கையை மறந்து பிறாது வேஷத்திலாசைப்படு

வர். ஆடை யாபரண வேற்றுமையாலே ஜாதியும், மயிராலும் பூச் சணவம மணிகளாலும் மதங்களாலும் வைதீக லௌகீகமும் கொள்ளப்படுகின்றன, உணவால் வேற்றுமை உயிர்கொலை புலை பே. பாஷை தேசத்தால் பல ஜாதிகளு முண்டாகலாம். இவை யெல்லாம் பஹிர்முகத்திற் காணும் முகத்தாலு முடையாலும் ஆசாரத்தாலும் வேற்றுமையாகக் காணப்படுகின்றன. பெண்ணுண் பேதம் சுந்தரம் விகாரமெனும் தோற்ற மியற்கையிலுண்டாகியது. ஆனால் அவயவபேதம் அணுவளவுங் கிடையாது. அங்கஹீனர்க் கவயவபேதமுங் காணப்படுகின்றது. தன்முகமு முதுகை யறியாததுபோலவே உடலிலிருந்து சுகதுக்கபோகமனுபவிக்கும் பொருளினிலக்கணமும் ஒருவரு மறியாமலே யிருக்கிறார்கள். ஆனால் வெளியில் காணப்படுகிற ஜாதி மத ஆசிரமம் ஆசாரபேதம் மானிடர்க்கவசியம். இதனாலே ஸ்திரீ புருடர்களாகிய மனிதர் யாவருக்கும் சீலமும், நற்குணமும், நல்லறிவும், கற்புடைமையும் விருத்தியாகின்றதென்பர். சில நற்குணாதிகள் சிலருக்கு விருத்தியாவது போலவே, ஜாதியாதியால் துர்க்குணங்களும் நூறு மடங்கதிகமாகிற தென்பதிலும் தடையில்லை. நற்குணநல் லொழுக்கம் கல்வியாலுண்டாவது போல, மூடப்பழக்கத்தாலுண் டாகுமென்னை முறட்டுப் பிடிவாதமாம் "மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடு" மென்றதனால் நீதிநூலாராலும் ஜாதியாதிகள் மனிதர் உயர்விற்கும் சுகத்திற்கும் உரியனவென் றேற்கப்பட்டிருக்கிற தென்பர். முதனூற்கொத்த சார்புநூல் புடைநூற்களுக் கருத்தங்கொளாது பின்னோன் கூறிய விகற்பில் பிரியங்கொண்ட சிலர் கூறும் அருத்தத்தைக் கொள்ளுவோரே நீதிநூற்களும் ஜாதியாதிகளை யேற்கின் றனவென்பர். பிறப்பொழுக்கம் என்பது மானிடப் பிறப்பொழுக்கமெனவறியார். எங்ஙனமெனில் "கடலுலகில் வாழு முயிரெழு பிறப்பினு மிக்க காட்சிபெறு நரஜன்மமாம்" எனவும்; "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிதுகாண்" எனவும், "அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" எனவும், "எழு பிறப்பும் தீயவை தீண்டா பழி பிறங்கா மக்கட்பேறுகப் பெறின்" "எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினு மக்குடியிற் கற்றோரை வருகவென்பார்" 'நாற்பாற் குலத்தின் மேற்பாலொருவன் கற்றிலனாயிற் கீழ்

ருப்பவனே" தாமரை பொன்முத்து சாமரைக்கோ ரோசனைபால் பூமறு தேன்பட்டு புனுகு சவ்வாதாமழன்மற், றெங்கே பிறந்தாலுமெள்ளாரே நல்லோர்க ளெங்கே பிறந்தாலு மென்" எனவும் இவைபோன்ற நீதிநூலும் அனுபவமு மறியாது, மூடப்பழக்கத்திற் குத்தாரமாக வேதாவதோர் வேதவாக்கியம் அல்லது ஓர் பாட்டலே விபரீதார்த்தமாக உதாரணங் கொடுப்பதால் பிரயோஜனமென்னை? ஒருயர்ந்த ஜாதியார் சீலம், நற்குணம், நல்லறிவு, கற்புடைமை முதலியன வுடையராயிருந்து மற்றவரை அவ்வாறு நடத்தித் தம்மோடொக்கக் கொள்ளுவாராயின், அல்லது கீழ் குலத்தான் மேற்குலத்தாரைப் பார்த்துத் தானே நற்சீல நற்குணங்களாற் றிருந்தி, மேற்குலத்தைச் சாரவரின் அப்போதவனைப்பார்த்துப் பொறுமையாதிய மேற்கொண்டு, அவனுக்குத் தீங்கிழைக்கவும் பழிக்கவு முடன் படாராயின், ஜாதியாதியர் யாவர்க்கும் பயனளிப்பன வென்னலாம். அங்ஙனங் கொள்ளல் பூரண பாண்டித்திய மில்லாக் குறைக் கல்வியாளராலும், மூடப்பழக்கமுடையாராலும், ஓர்போதும் சம்பவியாதென்கை சர்வானுபவம். ஆனால் ஜாதியால் பெண்களின் கற்பு காக்கப்படுகிறதென பகவத்கீதையிற் கண்ணன் அர்ச்சுனனுக்குச் சொல்லி போர் புரிவித்தானெனக் கூறுகின்றார்களே இஃதுண்மை யன்றோவெனின் உண்மையன்று. க்ஷத்திரிய ஜாதித்தொழிலால் பெண்கள் கற்பைக் காத்ததுண்மையானால் பதினொரு அக்ரோணி பெண்களும் புருடரையிழந்தமையால் கற்புடையராகியே யிருந்து விட்டார்களென யெவராகிலும் நினைப்பார்களா? உயர்குலத்தார்க்குத் தமது பெண்களிழிகுலத்தாருக்கு மனைவிகளாகாமற் காக்கப்பட ஜாதி வேலியாகவில்லையாவெனில் இல்லை. பொய்க்கும் விபசாரத்திற்கும் கொலைக்கும், குரோதத்திற்கும், தீராத்துயருக்கும் செய்குழியாக விருக்கிறது. எங்ஙனமெனில் ஜாதியென்பது மூடப்பெண்ணுக்கு முரட்டு சாவானை பலாத்காரத்தில் தேடிக்கொடுக்க, தாயாரத்தை முதலிய வதைபலதிகாரத்திற் கிடமாக விருக்கிறது. இதனாற்றான் தாய்க்குப் பிரியம் தனவான் தந்தைக்குப் பிரியம் கற்ற குணவான். மூடப்பெண்ணுக்குப் பிரியம் தன்சொற்படி செய்யும் மூர்க்கவான் பலவான் ரூபவானென தனவானாக விருப்பதால், தந்தை பிரியம் தலைபெடுத்தற் கிடம் பெறாமல், பெண்கள் சொற்படி புருடர் நடக்க வேண்டியிருக்கிறது. "ஸ்திரீ புத்தி ப்ரளயங்கரி" என்பதை யறிந்திருந்தும் எல்லாப் புருடரும் விதியினறிவுறுதிய

லனுபவிக்கிறார்கள். சொன்னால் வெட்கக் கேடெனவும் அழுகால் தூக்கக் கேடெனவுஞ் சொல்லி மாழ்கி, மானிகள் காலங் கழிக்கிறார்கள். அன்றி ஜாதியாவது பற்பழவிருந்திலும், கழியாதான மகோற்சவ காலத்தும், தங்கை தடக்கைகள் தமக்குண்டாம் மொண்டி முடங்களுக்கும் வழித்தேடிக் கொள்ளவும, ஓர் சகாயமாக விருக்கிறது. கொண்டவனை மருட்டுஞ் சண்டிகட்கும், விருத்த காரியாளான பிறது விபசாரித்தனத்தை வெறுத்து, பதிவிரதை பட்டர்தரித்து பகட்டிப்பேசுவளுக்கும், மிக்க பிரயோஜனகாமே. புருடனை வஞ்சிக்கவும், பொய்களை வளர்க்கவும், சூதுநற்றயல் புருடனைத் தோத்திரஞ் செய்யவும், மானத்திற் கஞ்சுறாள்பால மாரீசஞ் செய்யவும், இரவும் பகலும் எதிர்வீடு வீதிப்கத்து வீடுகளிலும், வாடையின்பாலிரு முள்ள அன்னியர்களையும் மற்றெவரையும், துச்சயாகத் தூறி தமது குற்றங்களை மறைக்க தற்புகழேற்றிப் பேசிக்கொண் டிருப்பதற்குதவுவதோடு யார்க்கும் ஆக தக்க பொது விஷயங்களை யடியோடு தொலைக்கவும், பெண்டுகள் சடங்குகளும் பெரியவம்புகளும பிரபலமாவதற்குவுபயோகமாகிறது அன்றி வாழ்க்கைத்துணை நல மங்கையர் கூட்டுவரென்பது போய், மூடமனைவியால அழுகைக் காஸ்பதம் அரியவர் சேர்க்கையென்பது யாவரு மறிந்தவைகதவனுபவம் இழவு கொண்டாடலே ஏதிபார்படிக்கும் படியெனபதற்கு ஒ பாரிகள் பாடிக்கொடுக்கும் சற்புத்திமான்களாகிய வித்துவான்கள் சாக்ஷி பகர்வார்கள். கலியாண மென்னுஞ் சொல்லுக் கருத்தம் கண்ணாளம் என்னுஞ் சொல்லின மருவுமொழியாகையால் அதற்கருத்தம சொந்தம் பாராட்டி கண்ணீர்விடும் சடங்குகளுக்கும், விரதங்களுக்கும், சாமிசன்னிதி தரிசனங்களுக்கும், வரிசைகள் வைக்கும் வரன்முறைகளுக்கும், தனக்குத் தேவையானவைகளைத் தேடிக்கொடுத்து, இரவும் பகலும தம்மிஷ்டம்போல் நடக்கவிடும் புருடனை சண்டைக்கிழுத்து, பூராண்பிம புருடனை பூராபட்டினியென்னும் விரதமேற் கொண்டு, கண்ணாத்திற போகசசெப்யும் பட்டியென்னும் விரதத்தைப் பாவைய ரனுஷ்டிக்க வேண்டியதெனும் பொருள்படுகிறதென முன் வாழ்ந்த முதுக் கிழவிகள்போதிக்கவும் ஜாதி யுதவுகின்றது.

அன்றியும் பெண்டுகள் கல்யாண கருமாதி சடங்குகளுக்கும், விரதங்களுக்கும், நோன்புகளுக்கும், சாமி தரிசன சன்னிதி

தரிசனங்களுக்கும் போய் பிசாசோட்டும் பூஜாரி கிலவிற்கும், பிள்ளை வரங்கொடுக்கும் பால்ய சந்நியாச பெரியவர் சேவைகட்கும், வரிசைகள் வைக்கும் வரன் முறைகளுக்கும். பூவாடைக்காரியின் பின் காவல் பூஜைக்கும், மாரி மஹம்மாரியின் வைரந்தீர் சாந்திக்கும், நவக்கிரக ராசியின் நற்பார்வை பூஜைக்கும், பிள்ளைக்கும், பெண்ணுக்கும், பெற்றோர் வீட்டாருக்கும், தனக்கும், பிற்காலத்தில் தன்னை யாதரிப்பாருக்கும், நாலுபேர் போல நாட்டு வழக்கம் போல் தேவையாம் பொருள்களைத் தேடிக்கொடுக்கப் பெண் கன்னி விட்டுக் கதறிய பூதவர் இஷ்டம் போலவா, புருடரை இழுத்து இராப்பகல் சண்டை கொடுக்க தங்கது ஜாதியன், புருடர்க்கடங்கி பின் முன்னறிந்து அநுகூலமானவை யாடவர்க்கு யற்றி, சுக ஜீவனஞ்செய்து சொற்ப வாழ் விகமென வெண்ணி நடக்க எள்ளளவேனும் துணை செயவல்லதிலிது. மூட ஜாதியால் பெண்டிர் தங்கவராவரோ? "கல்வியால் நல்லாள் கணவனுக்கினியவள் ஆவள்" ஜாதியால் ஆவது சடினமே! ஆகையால் ஜாதி மதம் சகலருக்கும் நன்மையென்பது ஓர் விதத்தாலும் ஒப்பத்தக்க தன்றாகும் மகுடமியாவாக்கு மொத்ததாகக் காணப்படவில்லை. யாவருக்கு மொரே தெய்வந்தா னுண்டே யொழிய அனேகந் தெய்வங்களில்லை யென்று சொல்லித்திரியு மவர்களும், மஹம்மது அல்லது கிறிஸ்து முதலிய யாவருக்கும் பொதுவாகிய வேதத்திற்கு பாஷ்ய மெழுதிய சங்கரா சாரியர் அல்லது இராமானுஜர் அல்லது மாத்துவா சாரியா நீலகண்ட சிவாசாரியர் முதலியவர்கள் எழுதிய அல்லது சொல்லியவைகளே உண்மையானவை யெனவும், மற்ற பொய் யெனவும் அந்தந்த வகுப்பபிமானிகள் சொல்லி மற்றையோரைப் பழிப்பதன்றி எவர்களையும விரோதியாது தங்கொள்கைகளை அன்னியருக்கு விளக்குவார்களல்லர். அன்றியும் சுண்ணாம்படித்து சுத்தி செய்த சுவரிற்றான் சித்திரமெழுத சீர்படு மென்பதுபோல சுன்னத் அல்லது ஞானஸ்நானம் சக்ராங்கிதம். முக்கிய கருத்துப் பிறருக்கு மொழிபா விரகசியம் பெரியோருக்கே மதம் பேசவும் கற்கவும் கூடுமெனத் தம்பக்கம் சாரத்தந்திரமும் சேர்ப்பவர்கள். கடவுளுக்குப் பிரியம் எல்லா வுயிரிடத்தும்' யாவரிடத்தும், அன்பும், அறனும், செய்ந்நன்றி யறிதல் அடக்கம் அவாவின்மை, புன்சொற் சொலாமை, சத்குணங்களே யல்லாமல் இவர்கள் சடங்கு பிரிய

மாகாது. அன்றியும் இம்மதத்தினர் யாவரும் உபாஸனு மூர்த்தி யென தியானிக்கத் தக்க ஒருருவத்தையு மேற்க வேண்டுமென் பவர். மஹம்மதிய ரங்ஙனங் கொள்வதைக்காணேம். ஆயினும் மஹம்மதரைப் போல மற்றோரை நிஷேக்கலாகா தென்பர் எல்லா ருங் கூறுந் தெய்வமொன்றேயெனக் கொள்ளில் மதமும் ஜாதி யும் இல்லா தாகையால் அதனை யொருவ ருருவம் அல்லதோர் அடையாளக் குறியுஞ் சேரப் பார்கள். லாயிலாஹா இல்லல்லா வென்பதனேடு மஹம்மதா ரஸூலல்லா வென்பதனால் குடுமி அல்லது தாடி முழு மொட்டை மயிர் வெட்டல் மயிர் முழுதும் ஈரவிடல், சடைமுடி தரித்தல் குடுமி யிருக்க மீசை தாடியைப் ஈக்க லென்னும் இவற்றேடு, நாமம், விபூதி, உருத்திராக்கம், கல், படிகமணி, துளசிக்கட்டை, தாமரைக்கொட்டை, கருமரக் கட்டை மணியல்லது கருநிற விதைகளின் மணி யிவைகளை அணிய அல்லது கையிற் ஜபமணியாக வைக்க போதிப்பவர்கள். எதைக் கொண்டெண்ணினும் கணக்கே முக்கிய மல்லது மற்ற வையாகா. இது நிற்க. தேவ தாரதம்மியம் இந்துக்களில் கொள்ளப் படுதல் அக்கிரமத்தினு மக்கிரமமாக விருக்கிறது. எங்ஙனமெனில் ஒரு சாரார் சுவாமியினருகிற் சென்று வணங்கவும், மற்றொரு வகுப்பார் சுவாமியின் கற்பக்கிரக மண்டபத்தி நின்று வணங்க வும், மற்றொருசாரார் இரண்டாம் பிராகாரம் மண்டபத்தி நின்று வணங்கவும், மற்றொருசாரார் சுவாமியின் மூன்றும் பிரகாரத்துட் புற நின்று வணங்கவும், மற்றொரு சாரார் பிராகார வெளியில் நின்று வணங்கவும், மற்றொரு சாரார் சுவாமி சன்னிதியின் எதி ர்வீதிக் கடையினின் றெதிர்நோக்கி வணங்கவும், வைத்திருப்ப தால் இக்கற்பனை ஜாதி வரம்பேற்படுத்தும் கடவுள் ஸ்தானம், பேத போதகதந்திர மாகவும், சூதுவை ஸ்தான மாகவும், சண் டைக்கும் அகங்காரவிருத்திக்கும், குரோதாபகத்திற்கும் ஆதார மாகவு மிருப்பதினல், தேவதாரதம்மியம் அக்கிரமமல்ல வெனலா காது. கிரமமென்பது கடவுளுக்கு அவரால் உண்டாக்கப் பட்ட வுயிர்களும் உடல்களும் ஒன்றேயாகும் என்பதே. உயிர்க்குயிரா யும் அணுவிற் கணுவாயும் அப்பாலுக் கப்பாலாயு முள்ள தேவா லயமே இக்கதியாயின், திரவிய தேட்ட விடத்திலும், கல்விக்கழ கத்திலும், தானம்பெறு மிடத்தினு மெப்படியிருக்கலாம். ஆகை யால் எல்லாமனிதருக்கும் மதமும் சாதியும் உதவுவதாகக் காண

ப்படவில்லை. கல்வியும் ஞானமும் சரீரசக்தியைக் காத்தலும் ஸார்த்தகமாக விருக்கிறது. ஐயோ! ஐயோ! ஐயையோ! ஏனோ வுலகவர் சற்று நிதானித்து யோசியாதவர்களாய், ஆசைவார்த்தை சொல்லுகிற அழும்பர்க் குட்பட்டு, அவசர புத்தியால் அவஸ்தைக் குட்படுகிறார்கள். கல்வியையும், சரீர சக்தியையும், திரவியத்தையும் காத்து எவனாகிலும் விடாத வூக்கத்தோடு தம்மொப்பார் யாவர்க்கும் நற்புத்தி நற்கல்வி நல்லொழுக்கம் போதித்து வருவானாகில் அவனிருப்பிடமே கைலையாதி பதவிகளாகவும், அவனை தான்மாவையே மோக்ஷானந்த முழுமுதற் கடவுட் சம்பந்த முடையதாக்கி, இம்மை மறுமை மும்மைகளின் பயனை யனுபவிப்பதாகும். விபசாரம் தேகசக்தியையும், திரவியத்தையும், சம்பாதிய நீட்டக் காலத்தையும் பாழாக்கலால், அது புரிபவன் வியாதியாளனும், தாரித்திரியனும், சோம்பேறியுமாவனதனால் பேர பழிழந்த பாவியென பெரியோரால் நிந்திக்கப் படுகிறான். இதைப் போலவே கட்குடியும் செய்தலால் அதைக் கனவிலு மறந்திருக்க கடவன். இல்லையேல் முன் சொல்லியதுபோல் நிந்திக்கப் படுவன். அதைப்போலவே பொய்ப் பேசுதலை பூரணமாய் விடுகிறபரியந்தம் பிறவித்துயர வலைப் பிரிய விடந்தராது. மெய்யே சிவபூஜை. மெய்யென்று மாகாது." யாமெய்யாக் கண்டவற்றுளில்லை யெனைத் தொன்றும் வாய்மையி னல்ல பிற" என்ற பெரியோரனுபவம் பிரகாது. கள்ளன் நெஞ்சம் கனவிலும் அச்சத்துடனிருக்கும். அன்றியும் கள்ளனை யுதைக்கக் கழுதைக்கும் சுதந்திரமுண்டு. கள்ளனை எவரும் காசுக்குமதியார், கள்ளன் மனைவியைக் கைம்பெண்ணென்பர். கள்ளனை திருட்டுக்கள்ளியு மதியாள். கள்ளனென்றுங் கனதரித்திரனே, கொலைக்கஞ்சானையால் கொல்லப்படுவனே. பொய் வஞ்சனைக்கு புகலிட மிவன் மனம். சூதனென்றேனும் தோல்வியையடைவன். வஞ்சகன் முகம் வெட்கி வாடாதிராது. துராசையுடையவர்க்கும் துயர்தரா துவிடா. பொய்யர் வாழ்வு பொய்வாழ்வாங்கடை ஆதரிக்கிற மெய்ப்பஞ்ஞானியாவன் மெய் இதனால் இவ்வகைபாவிய துர்க்கிரியைகளை தம்பாலில்லாது நீக்கலே தவமும் விரதமும் சாதிக்கும் நிட்டையுமாகும் அல்லாது மற்றவையாகா. நிட்டை மனது நிலைத்தலாம் அதனால் துட்ட குணங்களைத் தொலைத்திடல் வேண்டும். உட்கார்ந்து தொலைத்தெழுந்துடன்படல் நிட்டையாகாது. ஆதலால் எக்காலத்திலும், எல்லா விடத்திலும், துர்க்குண துர்க்கிரியைக் கிடந்தாதிருத்தலே நிட்டையாம். ஆகையால் எவரும் தன்னை இனறுலைனைத்

தீரவிசாரித்தறிய வேண்டும். எதிரிகள் செய்வதை யெள்ளளவும் விசாரணை யின்றிக் கொள்ளலாகாது. இறந்த பின் எங்காயினும் பிறக்க வேண்டியதே யல்லாமல் நிலையாக இருக்கவியலாது. புனர் ஜன்ம முண்டோ வென்னில் இச்சன்மம் வந்த வரலாற்றைச் சந்தேகமின்றி யறியின் உண்டென்பதும் இல்லை யென்பதுந் தானே தெரியும். இந்த ஜன்மம் தாய் தந்தையா லெனில் அவர்களெப்படி வந்தார்களெனக் கேட்க வேண்டிவருகிறது. அவர்களுமப்படியே யெனில் முடிவு யாதெனக் கேள்வி பிறக்கிறது. கடவுளா வெனில் ரதம்மியத்திற்கும். பிறப்பிக்க வேண்டியதற்கும் காரணம் ரிய வேண்டி யிருக்கிறது. அவரிஷ்ட மெனில் இனி வாராதெ பதற்கு ஆதாரமென்னை, தெரியவில்லை மேல் அன்னியர் செய்வதையும் சொல்லுவதையும் நம்புவதி லென்ன பிரயோஜனம். ஆகையால் அதையெல்லாம் தன்னை விசாரிக்க வேண்டியதே. தானென்பதை தேகமாகவே எல்லாரும் ஒவ்வொரு காலத்தில் என் தேகம பருத்தது என்தேகஞ் சிறுத்தது என்னுடம்புநோகிறது, என்னுடம்பு சௌக்கியமாக விருக்கிற தென்பதால் தேகத்தை உடைமைப் பொருளாகக் கொள்ளப்படுகிறது. எனது வீடென்று ஒருவன் சொன்னல் அவனை வீடென்று நாம் சொல்வோமா? அது போல உடம்பு தனதாயின் உடம்பு தானல்லவே. அன்றி உடம்பு மண்ணாக அல்லது சாம்பலாக மாறுவதை யாவரு மறிகிறோம். உடம்பினும் முகத்திலுற்றான் இன்னானென யாவருமறியலாம். முகமில்லை யாயின் அடையாள மறிய வியலாது. உடமபல்லவே சொர்க்க நரக பிதுர்லோகப் பிராப்தியை யடைவது. உடம்போடிருநதவனுககுப் பிறந்தபொழுது பிள்ளை பெண்ணென்ற போ மாத்திரமாகக் கொள்ளப்பட்டது. பிறகு பிறந்த காலத்தைப்பற்றி நட்சததிரங் கணிக்கப்பட்டு நாமகரணஞ் செய்கிறார்கள். இடையிற் றந்த நாமத்திறகுஇறந்தபின் செய்யும் திலதற்பணாதிபலன் முதலாளிக் கெங்ஙனஞ் சேரும். பேருக்குச் செய்யும் கருமாதிகளின் பயன் பெயரிட்ட பிராம்மணர்களுக்குச் சேர்வது யாவருக்கும் பிரத்தியக்ஷம். உடன் பிறந்த தேகத்தையு மொழித்துப் பெண்ணாண் பேதங் கடந்திருந்த முதலுக்கு, பெயருக்குச் செய்யுங் கருமபயன் பின்பற்ற லெங்ஙனம் கூடும்.

கிறிஸ்தவர்கள் நியாய தீர்ப்புக்கால பரியந்திரம் தேகி யெங்கிருப்பா னென்றால் பதில் சொல்வதில்லை. கல்லறையி லிருப்பதா

கச் சிலர் கருதுகிறார்கள். சரீரம் மண்ணானபின் கல்லறையி லெப் படி யிருப்பன். உடலோ டுயிரிருந்தாற் புதைப்பாரார்? இறந்தா லுயிரதி லெப்படியிருக்கும். மகம்மதியர்களோ ஜீவனைக் கல்ல றையி லிருக்கும் உடலில் பிரதிதினமும் யமதூதர் கொண்டுவந்து விட்டு, அவனைக் கேள்விகள் கேட்டு குரூரமாகத் தண்டிப்பார்க ளாம் மகம்மதியனாகாதவன் கதியை வாயால் சொல்ல முடியாது. இப்படி கயாமத் தென்னும் பிரளயகாலம் அல்லது நியாயத்தீர் ப்பு கால பரியந்திரம் தண்டிக்கப்பட்டு முடிவில் மகம்மதியன் குற் றத்தை மாத்திரம் க்ஷமிக்கப் பட்டு (பேஹெஷ்த்) என்னும் சொர் க்கத்தில் சேர்க்கப் படுகிறானாம். பாவ மிகுதியால் மகம்மதி நரகத்திற் கனுப்பினும் விடுதலை யுண்டாம் இல்லார் கதியோ வாதனையல்லா தில்லையாம். பாவியானவன் படவேண்டிய க த்தை விஸ்தரித்து வையாக்கப் பட்டிருக்கிறது. புண்ணிய வானுக் கிப் போதிப்பால் நன்மையே யன்றிப் பயமில்லை. இதுநிற்க பாத கமோ புலை, களவு கட்காமமென இந்துக்கள் யாவரு மதித்து ரைக்கின்றனர். களவு என்பது உடையா னறியாம லவன்பொ ருளை கிரகித்தலாம். கள்ளம், சூது, வஞ்சனை, மோசம் அடைக் கலம் வைத்த தறியே னென்னல், கடன் வாங்கி கொடாது தந்தி ரம் பேசல், நம்பிக்கை துரோகம் பிறன் மனைப்புகல், உள்ளதை மறைத்தல் ஓரஞ்சொல்லல், இவை யெல்லாம் ஒருவன் பொருளை கிரகிப்பதாக விருப்பதால் களவே யல்லது வேறில்லை. திருடென் பது கொள்ளையுமாகும். ஆனால் பெரும்பாலும் எஜமா னறியாம லெடுப்பதே திருடென தூலமாக மதிக்கின்றனர். இது நீங்கமேற் சொல்லிய நான்கும் அசுத்தப் பக்ஷத்தி லடங்கியதே யல்லாமற் பாதகத்தி லடங்கியதாக சொல்ல முடியவில்லை. ஏனெனில் யாவ ரும் உலகத்தில் தாது மூல ஜீவனென்னும் முப்பொருள்களையும் திராப்பசி தாகாதி பவரோகத்திற்கு மருந்தாகக் கொள்ளுகின்ற னர். உலகில் சாகபக்ஷண மாமிசபக்ஷண மிருகபக்ஷண கிருமி ஜலசரமாஞ் செடி யாதிகளைக் காண்கிறோம். உயிர்களில் மிருகங்க ளில் மாமிச பக்ஷணஞ் செய்வன போலவே பறவைகளிலும், பாம் பாதிய கீடங்களிலும் மீன்களிலும், செடிகளிலும், மரத்திலும், அருகில் வந்தவுயிர்களை ஆக்ரஹித் துண்பவைகளிருக்கின்றன எப்பிராணியும் தத்தந் தாயினிடமுண்டாகும் பாலையும் நெய்யை யும் சில மாமிசத்தையும் புசிப்பன வாகவேயிருக்கின்றன. இத னால் தாதுமூல ஜீவவஸ்துக்களை உயிர்க ளனுபவிக்கின்றன. ...வன்

பது மறுக்க முடியா வனுபவம், ஆனால் பால் நெய் தயிர் மோர் வெண்ணெய் ஜீவ சரீர பாகங்களே யாயினும் பிராணஹானி யின்றி கிடைக்காது. பிராணஹானி செய்யாமையே நல்லநோன் பேயாமென நீதிநூலோ ரோதுகின்றனர். உயிர்களுக்கு அன்னபா னாதியகப்படாமல் தடுப்பது உயிர் கொலையினும் நூறுமடங்கு ஜீவவதையாகும். கொலை சிறிது காலத் துன்பம். பசிதாகாதிகட்கு அனைவற்றை யுயிர்களுக்குத் தடுத்தலால் நெடுங்காலத் துன்பம். நீடித்தடைய விட்டதாகிற தென்றால் "அந்தணரென்போர் அறவோர்" எனக் கூறப்பட்டது. இதன்றி மனிதன் எவ்வகைப் பிறப்பினு முயர்ந்தவன். தேவரினு மேனான்தது வையமில்லை. தேவதேவ பமஹாதேவன் சான்னித்தியம் பெற்றவனாகையால் இவனின் மற்றெல்லாந் தாழ்ந்தவே. அவற்றை இவனது துன்பகாலத்து தின்று பசியல்லாத மற்றைய சரீர பீடைக்கவுஷதமாக வுபயோ கிக்க ஆயுர்வேதம் விதிக்கிறது. ஆதமவேதம் மனசுக்கு மருந் தேயொழிய மற்றதற்கல்ல. ஆயுர்வேத மக்க சௌகரியத்திற்காம் மனிதகொலையோ பாதகமே யெனவும் பிரமஹத்தி யெனவுங் கூறப்படுகிறது, எல்லாதேசத்து அரசராலும் மனிதராலும் இது ஏற்கப்பட்டிருக்கிறது. மற்றதைக் கொலையாக அரசாட்சியி லேற்கப் படவில்லை. புலைவிட்டதால் மனிதன் பெரிய குலத்தானாகி விடான் புலால் விடுதலால் அதற்குத்தக்க புண்ணியம் பெறுது போகான். இரக்கமெவர்க்கு மின்றியமையாக் குணமேயா மாதலால் புலால் புசியாமை புண்ணியமே. இனி பாதகமென்பது யாதோ வெனில் மூடப்பிராணிகளிடத் திரங்குவது போலவே மானிட ரெல்லாரிடத்திலும் தன்னுயிர்போல வெண்ணிக் கல்வி, செல்வம், சுசிகரம, ஞானம், ஈசுவரசேவை அன்னம், பானம், வஸ்திரம். பூஷணம், மரணம், சமமாகப்பெற இடந்தாமலே கருமபாசம். அதைவிட்டு மூடன், மூர்க்கன், வஞ்சகன், சோம்பேறி, துஷ்டன், விபசாரி, சோரன், சண்டினி, கூட்டிககொடுப்போனுக விருந் தாலுமவனைச் சாதிபாற் றம்மவனென்றும், தம்மினு முயர்ந்த வகுப்பானென்று மெண்ணி அவனை தமக்குச சமமாக்கி நீதி, நியாயம், கல்வி. ஒழுக்கம், சுசீலம் ஆதியநடை யானுயினும் அவனைப் பிறப்பாற் றாழ்ந்தவ னாகையால் தலை யெடுக்க விட லாகாதென நினைத்தல் ஜீவகாருண்ய மாகுமா? மனிதருக்கு மனிதன் செய்யும் கொடுமையைத் தவிர்ப்பதற்கே யரசாங்க மல் லாது மிருகத்திற்கு மனிதர் செய்வதைக் குறித்தன்று. ஆகையா

ல் பொய், சூது, வஞ்சனை பொறாமை, குல கருவம், மதகருவம், ஆசிரமகருவம், யௌவனகருவம், தனகருவ முதலியன வுடையாரை கீழானவ ரென்றும அவையில்லாரை மேலோரென்றும் பெரியோரென்றும் கொள்ள வேண்டியது. "நில்லாதவுமறை நிலையின வென்றுணரும் புல்லறிவான்மை கடை" யென இருப்பதால் உண்டியால் உடையால் பிறப்பால் ஒருவனு முயர்ந்தவனாகான். குணத்தாற்றான் உயர்ந்தவன் தாழ்ந்தவனுவான். "சிதம்பரத்தைப் பாராதவன் பறையன், பொய்யுரையாடுவோன் புலையன் ,,சிதம்பரமென்பது — (சித் அம்பரம்) அதாவ[illegible] [illegible]ஞகாயமெனல் பொருள் — மாமிச சரீராபி மானியாகி யி [illegible] ஞானமெய்யைக்கொள்ளாதவன் என நினையாமல் ஏதோ குயுக்திகளாக காட்டி மனிதனை மடையராக்கி [illegible]ருக்[illegible] தொட்லாம் மனிதனைத் தொட அல்லது சமமாக விடலாகதென்பவன் மட்டி சூத்திரனல்லாது மற்றவர் சூதறிகாரகள் வழக்கமானாலும் மூடமேற்கொள்ளல் முறைமையோகாது மாகாது. ஆகையால் நானென்பது பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திராதி ஜாதியாகாது. சைவ வைணவ சாக்தேய சௌர கபாலிகபௌத்த மகம்மதிய கிறிஸ்து மதமாகாது அ[illegible]மே ாலவே பெண்ணாண் என்னுந் தேகமாகாது. பிரமசாரி கிரகஸ்தன் வானபிரஸ்தன் சன்யாசி யோகி பைராகி நாகைஷா சித்தன் முதலிய ஆசிரமவேஷமாகாது. இவையாவும் வெளிவேஷததாலும் சொல்லாலும் வழக்கத்தாலும் நிரூபிப்பதல்லாது உள்ள வுடல்தத்துவத்தைக் கொண்டு நிரூபிப்பதாகா. சரீரமோ இந்திரியமின்றி விளங்காது. ஓர் பிராம்ஹணன் பறையனும் கிறிஸ்தவனும், மகம்மதியனும தாசிவீட்டில்ஜாதியற்றவனு மாகலாம். பிறப்பில் வந்த தேகம எங்குபோயினுமிருக்கும். ஜாதிமதங்கள் அதைபோல நில்லத்திரா. இதனுல் ஜன்மத்தால் மானிடத்வமே மெய்யாகிறது ஜாதியா லலை. உள்ளதாயினிருக்கும்; கற்பனை வழக்க மாகையால்வேறுகிவிடுகின்றது இந்திரியங்களோ தத்தமக்கு சம்பந்த முடையவற்றோடு சையோகமடைந்து உண்மை ஞானத்தை யுண்டாக்குகின்றனவென முன் சொல்லப்பட்டது. ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் பஞ்சபூதாம்ஸமாகச் சொல்லப்படுகின்றன. பிரிதிவுக்கு கந்த குணமும் ஜலத்திற்கு உரிசைகுணமும், தேயுவிற்கு விளக்குங் குணமும், வாயுவிற்கு வியாபிக்குங் குணமும, ஆகாயத்திற்கு கவகாசந்தருங் குணமுமிருப்பதால்; அக்குண குணங்களைக்கவரும் ஞா[illegible]முமவற்

திலமிசமெனக் கொள்ளவும் சொல்லவும் படுகின்றது. உண்மையில் ஞானம் வேறு, விஷயம் வேறும். விருத்திஞானம் ஞானேந்திரியத் துவாரா வெளிபோந்து, பூத சையோகசம்பந்த மடைந்தவற்றின் குணபரிணாமத்தை யடைகின்றது. உடம்பும் பூதசம்பந்த பௌதிகமாகையால் ஞானம் பூதகுணங்களை யுடம்பிலுங் கிரகித்து, பொறிவழியாகவும் அந்தக்கரண வழியாகவும் பொருட்களின் அல்லது பூதங்களின் றன்மைவடிவ பரிணாமத்தை யடைந்தவற்றைபோல விளக்குகின்றது. விருத்தி ஞானத்திற்கே ஸ்தானத்தால் ந்தக்கரண புறக்கரணமெனும் பெயர்களிடப் படுகின்

ல்லை. உண்மையில் ஞானம் பிறப்பது மிறப்பது

து நிற்க. நான்பார்த்தேன்; என் கண்பார்த்தது.

கேட்டேன்; என் கண்கேட்டது என, இவ்வாறே புறக்கரணந்தானாகவும் தனதாகவும், யாவராலும் கொள்ளவும் சொல்லவும் படுவதாலும், இந்திரியம் ஒன்றின்றொழிலை மற்றொன்றறியாமையாலும், ஐந்தாகக் கொள்ளப்படுதலாலும் நானென்று சொல்வதற்கில்லை. அன்றி உலகர் குருடனை, செவிடனை, திமிர்ரோகியை, மோப்பந்தெரியாதவனை, உரிசைதெரியாதவனைச் செத்தவனாக நினைக்கின்றார்களில்லை. செவிடன் ஊமையாகக் காணப்படுவதைப்போல குருடனில் செவிடனும் ஊமையுமிருப்பதாகப் பிரத்தியக்ஷமும் பிரஸ்தாபமுமில்லை. இதனால் கடவுளில்லை யென்பாருக்கு இதுபுத்தி புகட்டுகின்றது. செவிடன் கண்ணா லபாயமறிந்து விலகிக்கொள்ளுகின்றானாகையால், ஊமையாகவும் செவிடனாகவுமிருப்பதில் தோஷமில்லை யெனவும், குருடன் செவிடனுமூமையுமாகில் அபாயத்தினின்றும் விலக வழியில்லையென்றும், யாரோ ஒருவரறிந்து தண்டிக்கிறாரென மனிதரறிய விடமுண்டாயிருக்கின்றது. தண்டனையிலும் கடவுளை நீதியும் கருணையுந் தவிர்ந்தவராகக் கொள்ளற் கிடனில்லை. இனியிவ்விந்திரிய மைந்தும் மூர்ச்சையடைந்த காலத்திலும், ஜன்னிரோகத்திலும், குளோரிபாரமாதி மிகுமயக்கப் பொருள்களின் சம்சர்க்கத்தாலும் இன்மையாக உலகர்க்குக் காணப்பட்டாலும், அவனை யிறந்தவனாகக் கொள்கிறார்களில்லை. இதனால் இந்திரியங்களும், இறந்தவனுடைய தூலதேகமும் நானென்னுஞ் சொல்லுக்குப் பொருளாகக் காணப்படவில்லை. ஆனாற் பிராணவாயுவி னியக்கம் பெறானை இறந்தவனாகக் கொள்ளப் படிலது யாவருக்குஞ் சம்மதம். இதனால் நானென்பது பிராணவாயுவென நினைக்கவிடமுண்டாகிறது. பிரா

ணவாயுவோ நானெனை விவகரிக்கக் கூடியாதாத லருமை. இதனிய க்கத்தால் ஒலியும் எழுத்துக்களு முச்சாரணமு முண்டாகிறதெ னல் ஞாயமே. கிராமபோன் பெட்டியோ சரத்தியர் பாடும்பாட் டைக் காற்றால் பாடக் கேட்கிறோம். இதனால் காற்றால் எழுத் தாதிய துண்டாகிறதானாலும், காற்றோ சடப்பொருளாதலா லது வறிந்து செய்வதல்ல. ஞானமுடைய யேதோவொன்று முயற் சித்து சரீர அவயவ சகாயத்தால் எழுத்தாதி பாட்டுகளையும் பாடு கின்றது. அதை பூதகுண தத்துவமறிந்த வித்வான் யூகித்தறி ந்து, அப்பாடலையும் வார்த்தையையும் ஆகிய அழு பொலிகளை கிராமபோன் செய்ப ஞானததால் வி தனுபவம். இதனால் ஞானவடிவைப் பொருளெ ன விவகரிப்பமே அத்துக்காதிகளை யுணராது. அன்றி நித் ரையில் காற்றியமை பூமுழுமையும் வெளியி லந்தரத்தில் நடக்கும் விவகாரங்களை யுணர்வதாகக் காணோம், விழிப்புக் காலத்தில் பிராணயாமஞ் செய்வோர் தமக்கிஷ்டமான குறிப்புகாலவரை பிராணவாயுவை நிறுத்தவும் விடவும இழுக்கவுஞ் செய்கிறார்கள். விடலை இரேசகமெனவும், உள்ளிழுத்தலை பூரக மேனவும், இழுத் தையுள்ளும், விட்டதை வெளியிலும் தேவையானவரை நிறுத் தலை கும்பகமெனவும் வழங்குப. இதனால் வாயு மனத்தின தேவ லைக் கேட்பதாக விருத்தலால் மனமே யானெனலுக்குப் பொரு ளென்பர் சிலர். "மனம் ஏவமனுஸ்யாணும் காரணம் பந்தமோ க்ஷயோ" வென்றிருப்பதால் மனமே மனிதனும் பந்தமோக்ஷ காரணமுமா மல்லது வேறில்லை. மனம் நினைந்த பொழுதே எல் லாப் பொருள்களும் விளங்குகின்றன, இலையாகி லில்லையாதலால் மனமே யானெனறகுப் பொருளென்பர் பலர். மனத்தையணு வெனவும், நித்தியப் பொருளெனவும், இது ஆன்மாவோடுசை யோக சம்பந்தமடைந்தபோது இந்திரிய சம்பந்தத்தையு மடை ந்து, அவற்றிற்கு விஷயமாகும் பொருள்களையும விளக்குகின்ற தென்பர் தார்க்கிகர். சில ரிம்மனத்தையே மாயையெனவும் கூறு வார். "சோதிக்க மனமாயை தனையே வினலிடிமை சுகமாவ தெப்படி சொலாய் "எனவும், "எல்லாமும் வல்லதிம் மன மாயை யேழையா மென்னு லடக்க வசமோ" எனவும், கூறியவற்று லுணர்க. தத்துவ ஆராச்சியின் மிக்கோ ரிதை வாசனாஜன்னிய ஞானம் அல்லது ஸ்மிருதி என்பர். வாசனை யென்பது பூர்வானுபவ விருப்பாம். பூர்வானுபவமே பூத்து இர் திரியத்தாலும் காயமானது அறிந்த அல்லது நடத்திய விவகார

மாம். விவகார மென்றாலும் வியாபார மென்றாலும் ஒன்றேயாம். இதனால் ஒருவன் காதாற் கேட்டவைகளும், கண்ணாற்கண்டவைகளும், மூக்கால் மோர்ந்தவைகளும், நாக்கால் ருசித்தவைகளும், உடம்பின் போர்வையாகிய தோலால் பரிசித்தவைகளும், வாயாற் பேசியவைகளும், கையாற் கொடுத்தவைகளும், கொண்டவைகளும், கால்களால் நடந்தவைகளும், ஆண் பெண் குறியாகிய அவயங்களாலும் குதத்தாலும் கழித்தவைகளும் அநுபவமாம். முன்னடைந்த வநுபவங்களை விரும்பாதபோ தவைகள் அதிருஷ்டம் அல்லது வாசனை யென்றும் பெயர்களைப் பெறுகி ... ஸ்மரித்தல், விவகரித்தல் வேண்டல் செய்யும் ... சனை யினின்று நினைவெழுகின்றது. இன்னினை ... ஜன்யஞானம், அல்லது பழக்கத்தா லுண்டாய ... நினைப்பு, அல்லது மனம் ஸ்மிருதி எனச் சொல் ... படுகின்றது, மனமென வோர்பொருள் நித்தியமாக விருப்பின் எப்பொழுதும் நினைப்பிருக்க வேண்டும் அங்ஙன மில்லை. அந்நினை வில்லாமைக்குக் காரணம் மனம் சுழுத்தி காலத்தில் சுழிமுனையென்னும் நாடியில் ஆன்மசையோகம் பெறாது நீங்கி நிற்கிறதென தார்க்கிகர் கூறுவர். விபுவாகிய ஆன்மசையோகம் பெறாது மனம் வேறிடத்து நிற்க வெங்ஙன மிடம் பெறும். விபுவாகில் ஆன்மா ஏககாலத்தில் சொர்க்க நரக தேகமாதிய விடங்களி லிருப்பதாகக் கொள்ள வேண்டிவருகிறது. இது ஆஸ்திகருக்குச் சம்மத மாதலருமை.

ஆகையால் நித்தியமா யணுவா யோர் மனமிருப்பதாகக்கொள்ளுதலில் பயன் சிறிதுங் காணப்படவில்லை, விருத்திஞானம் வெளிப்போந்து பொருள்களின் குணப்பரிணாம வாகார மடைந்து விளங்குவதே யல்லது அநுபவமென்பது வேறல்ல. பொருள்களின் வரலாறறியாமையே யவித்தை யஞ்ஞான ஆவரண மல்லது வேறில்லை விருத்தி தனதியற்கையையும் தனது பிறப்பிறப்பு ... த்தி னியற்கையுஞ் சிந்தியாமையே மாயை என்னலாம். தானிருந்தும், தனதியற்கையை யறியவல்ல பொருள் வேறில்லா திருந்தும், தனக்குத்தான் வெளியாகாம லிருந்த வவசரத்தையே அவ்வியக்த மென்ப. இஃதான்ம சத்தியமே யல்லது ஆன்மாவினும் வேறன்று.

ஓம் தத் சத்

அநுபவாநந்த தீபிகையின்

மூன்றாம் திருமுறையாகிய

பாரத்பர விளக்கம் முற்றிற்று